தி. ஜானகிராமன்

# மரப்பசு

தி. ஜானகிராமன்

# மரப்பசு

காலச்சுவடு பதிப்பகம்

தி. ஜானகிராமன் **(1921-1982)**

தி. ஜானகிராமன் தஞ்சை மாவட்டம் மன்னார்குடியை அடுத்த தேவங்குடியில் பிறந்தவர். பத்து வருடங்கள் பள்ளியாசிரியராகப் பணியாற்றியவர். பின்பு அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வுபெற்றார். கர்நாடக இசை அறிவும் வடமொழிப் புலமையும் பெற்றிருந்தவர்.

1943இல் எழுதத் தொடங்கிய தி. ஜானகிராமன், ‘மோக முள்’, ‘அம்மா வந்தாள்’, ‘மரப்பசு’ உள்ளிட்ட ஒன்பது நாவல்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், மூன்று நாடகங்கள், பயண நூல்கள் ஆகியவற்றை எழுதினார். சிட்டியுடன் இணைந்து எழுதிய ‘நடந்தாய் வாழி காவேரி’ பயண இலக்கிய வகையில் முக்கியமான நூலாகக் கருதப்படுகிறது.

‘மோக முள்’, ‘நாலு வேலி நிலம்’ ஆகியன திரைப்படமாக்கப் பட்டுள்ளன. ‘மோக முள்’, ‘மரப்பசு’, ‘அம்மா வந்தாள்’ ஆகிய நாவல்களும் பல சிறுகதைகளும் இந்திய, ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

1979இல் ‘சக்தி வைத்தியம்’ சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அக்காதெமி விருது வழங்கப்பட்டது.

மரப்பசு | நாவல் | தி. ஜானகிராமன் | © ராஜாத்தி | முதல் பதிப்பு: மே 2016 | வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629001

marappacu | Thi. Janakiraman | © Rajathi | Language: Tamil | First Edition: July 2016 | Kalachuvadu Publications Pvt Ltd, 669 , K B Salai, Nagercoil, 629001

Print ISBN: 9789352440092

eBook ISBN: 9789352441716

# மரப்பசு

## ஆசிரியரின் காலச்சுவடு வெளியீடுகள்

நாவல்

மோக முள்

அம்மா வந்தாள்

செம்பருத்தி

உயிர்த் தேன்

வாழ்வியல் சித்திரம்

அபூர்வ மனிதர்கள்

சிறுகதை

கொட்டு மேளம்

சிவப்பு ரிக்ஷா

பயண நூல்

நடந்தாய் வாழி காவேரி (சிட்டியுடன்)

முழுத் தொகுப்பு

தி. ஜானகிராமன் சிறுகதைகள்

'மரப்பசு' தொடராக **1972 - 73**இல் கணையாழி யில் வெளிவந்தது**.**

# முதல் பாகம்

# 1

எதைப் பார்த்தாலும் சிரிப்பு வருகிறது. கலியாணப் பந்தலைப் பார்த்தால் சிரிப்பு. மணமகள் தலைகுனிந்து நாணத்திலும் அடக்கத்திலும் முழுகிப்போய் உட்கார்ந்திருக்கிறாள். அதைப் பார்த்தால் சிரிப்பு. அகலமார்பும் இடைச்சரிவும் வழவழத் தோலுமாக, மணமகன் அக்னியில் நெய்யை வார்க்கிறான். அதைப் பார்த்தால் சிரிப்பு. இதைப் பார்த்துக்கொண்டிருக்கிற கிழவர்களையும் நடு வயதுக்காரர்களையும் பார்த்தால் சிரிப்பு. இத்தனை இரைச்சல்களையும் கவனிக்காமல், சீவாளியைக் குழந்தைக் கடியாகக் கவ்விக்கொண்டு, ஆகாசத்திற்கும் பூமிக்குமாக நாயனத்தை வீசி வளைத்துக் கொண்டிருக்கிறாரே, அவரைப் பார்த்தால் சிரிப்பு. எதற்கு 'உம்'மென்று இந்த முகம்! இந்தக் கன்ன உப்பல்! நாயன துவாரங்களை இத்தனை கண்ணுங் கருத்துமாகத் தடவி, எந்த ஸ்வரசுத்தத்துக்கோ பயந்துகொண்டு வேதனைப்படுவதைப் பார்த்தால் . . . கலியாணத்துக்குக் கூடியிருக்கிற இத்தனை சாயல்களை, பற்களை, நெற்றிகளை, கால்களை, சிரிப்புகளை, புருவந்தூக்கும் கவலைகளை, முகங்களில் படர்ந்திருக்கிற பூசணி வெள்ளைகளை, தானே பேசுகிற குழந்தைகளை, வருடங்கள் கழிந்து சந்திக்கும் தாயாதிகளை - ஒன்றையும் பார்க்காமல் ஏன் இப்படி கண்ணை மூடி நாயனத்தில் வதைகொள்ள வேண்டும்?

யாராவது செத்துப் போய்விட்டார்கள் என்று கேட்டால்கூட சிரிப்பு வருகிறது. ஒரு சித்தப்பா செத்துப் போனதும், எல்லாரும் இடைகழியில் அழுதார்கள். எனக்குச் சித்தப்பாவைப் பார்த்து சிரிப்பு வந்தது. அவர் மார்பில் சாய்ந்து "என்னை விட்டூட்டு இப்படிப் போயிட்டேளே! எப்படி மனசு வந்தது? நான் என்ன பண்ணினேன் உங்களுக்கு?" என்று சித்தி சற்றைக்கொரு தடவை வீலென்று கத்துவாள். சித்தப்பா எங்கே போய்விட்டார்? இங்கேதானே படுத்திருக்கிறார்! ஒவ்வொரு கத்தலுக்கும் நான் சிரிப்பேன். "சித்தி பொய் சொல்றா" என்று இரண்டு தடவை சொல்லவும் சொன்னேன். அவள் பொய் சொல்கிறதாக யாருக்கும் புரியவில்லை.

"ப்போடி அந்தண்டே" என்று வேம்பு மாமி சீறி விழுந்தாள். வேம்பு

மாமியின் பிள்ளை முத்து அருகே வந்தான். "இப்ப சிரிக்கப்படாது" என்றான்.

"அப்படித்தான் சிரிப்பேன்."

"சிரிச்சா அறைவேன் ஓங்கி."

"நானும் அடிப்பேன்" என்று சிரித்தேன்.

"பேசாம இருடி கண்ணு!" என்றாள் அம்மா.

"இருக்கமாட்டேன்! நீங்க மாத்திரம் ஏன் அழறேளாம்!"

அழுத கண்ணை உருட்டி விழித்துக்கொண்டே அம்மா என்னை அள்ளியெடுத்துக் கொல்லைப்பக்கம் கொண்டு போனாள்.

அம்மா வெறுமே உருட்டி முழித்தாலே சிரிப்பு வரும் எனக்கு. அதுவும் அழுது பிச்சு என்று ஒட்டிக் கொள்கிற கண்ணை உருட்டினதும் இன்னும் சிரிப்பு வந்தது. கிணற்றடியில் கொண்டு நிறுத்தி, "இப்பல்லாம் சிரிக்கப்படாது. அசடு வழியாதே," என்று ஓசைப்படாமல் கிள்ளிவிட்டாள். கிள்ளு வலித்தது. அழவைக்கத் தானே கிள்ளுகிறாள்! மறுபடியும் சிரித்தேன்.

அம்மாவுக்கும் சிரிப்பு வருகிற மாதிரி இருந்தது. "எனக்குன்னு வந்து பொறந்தியேம்மா" என்று என்னைப் பின்கொல்லையில் தள்ளி, "போ தொலை, பெருமாகோயில், மேலக்குளம், புளியந் தோப்பெல்லாம் திரிஞ்சுட்டு வா" என்று கதவைச் சாத்திவிட்டாள்.

இதெல்லாம் குழந்தையாக இருந்தபோது; இப்பொழுது கூடவா என்றால் இப்பொழுதும் அப்படித்தான். சாவு, கல்யாணம் மட்டும் இல்லை. எதைப் பார்த்தாலும்தான். கதை படித்தால் சிரிப்பு, நாடகம் பார்த்தால் சிரிப்பு, உலகமே முரண், விச்சோடி, நொண்டி, குதர்க்கம் என்று சொல்லுகிறவர்களைப் பார்த்தாலும் சிரிப்பு. அவர்கள் பார்க்கிற, செய்கிற கதை, சித்திரம், நாடகம், ஆய்வு, அவர்கள் புறத்திலோ அகத்திலோ அணிகிற கலர்ச்சட்டை, வளர்க்கிற கரடி மயிர், மலட்டுக் கோபம், குடிக்கிற கஞ்சா - இதைப் பார்த்தாலும் சிரிப்பு. கோமளம்மாள் தானும் தன் குடும்பமும் உலகத்தை ஆளப் பிறந்தவர்கள், அதற்காகத் தங்களை மட்டும் தனி புத்தி சாதுர்யங்களுடன் ஆண்டவன் படைத்திருக்கிறான் என்று நம்புகிறாள். ஒரு படி அந்தஸ்து குறைந்தவர்களைக் கண்டால்

அவளுக்குப் பூரித்துக்கொண்டு வரும் - இந்த மட்டுமாவது தங்களுக்குச் சமமில்லாமல் படைத்தானே என்று. அதனால்தான் பத்து மாடி ஆபீஸ் கட்டிடத்தைக் கட்ட வந்திருந்த, சகலவித சாமக்கிரியைகளிலும் ஒரு பங்கை ஒதுக்கி, கணவர் ஒரு தோட்ட பங்களாவைக் கட்டிக்கொண்டு சிங்காரப்படுத்தியது, ஒரு பாத்தியமான செயலாகத் தோன்றுகிறது அவளுக்கு. பொறுக்கின விதை என்று யூதர்களோடு என்னையும் அவரையும் சுரேஷையும், சீமாவையும் பாமாவையும் லல்லியையும் சேர்த்துக்கொண்டாயே என்று பெருமாளிடம் அவள் வடிக்கிற நன்றிக் கண்ணீரைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. இத்தனைக்குமிடையே உடம்பே சரியில்லை என்று அவள் வகையில் கண்ணாடி டம்ளருடன் எட்டுவித மாத்திரைகளை கடுமுடுவென்று கடித்துக்கொண்டும் பல் படாமல் விழுங்கிக்கொண்டும், டீப்பாய் மீது பரப்பியுள்ள சுய எக்ஸ்ரே படங்களையும் இதயநாடி அலைகளையும் சோதிப்பதைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது; க்யூபிஸமும் சர்ரியலிசமும் நம் உடம்புக்குள்ளேயே இருப்பதை நினைத்து வியப்புறாமல் அவள் கவலைப்படுவதைப் பார்த்து நான் அழலாமோ? சிரிப்பதுதானே நியாயம்.

எனக்கு மூன்று நான்கு சிநேகிதிகள் இருக்கிறார்கள். கூந்தலைக் கட்டாத, பின்னாத, வெட்டியும் கொள்ளாத திரௌபதிகள். எதிர்பாராமல் இரவோ பகலோ எந்நேரத்திலும் வருவார்கள், போவார்கள். இரண்டுபேரை பாரிஸிலும் இரண்டு பேரை கிழக்கு ஜர்மனியிலும் சந்தித்துப் பழகின சிநேகம். ஆயுதப் புரட்சியில்லாமல் இந்த நாட்டில் வறுமையோ வர்க்கமோ அநீதியோ அகலாது என்று மூன்று மணிநேரம் பேசி, தோசை, முறுக்கு எல்லாம் காலி செய்துவிட்டு காரில் ஏறிப் போய் விடுவார்கள். மூன்று பேர் காஞ்சீபுரம், பங்களூர், காசி பட்டுப் புடவை தவிர வேறு அணிந்து நான் பார்த்ததில்லை. இலை மறைவில் நடக்கிற புரட்சி இளைஞர் கூட்டங்களுக்கும் இப்படியே தான் போவார்கள். வடிகட்டிவைத்த ராஜா அளவு சிகரெட்டுதான் குடிப்பார்கள். ஒருநாள் ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு மூன்று பேரும் திடீரென்று சொந்த ஊருக்குப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஒருத்தி அப்பா குஜராத்தில் பெட்ரோல் விற்கிற கோடீசுவரர். இன்னொருத்தியின் அப்பா இயந்திரங்கள் விற்கிற கோடீசுவரர். இந்த மாதிரி மொத்த வியாபாரிகளுக்குக் கடன்கொடுக்கிறவர் மூன்றாவது புரட்சிக்காரியின் அப்பா. மூன்று பேரும் பெண்கள் மூலமாகவே சிநேகமாகி, ஊருக்கு உடனே திரும்பி வராவிட்டால் சொத்து பாத்தியத்தை நீக்கிவிடுவேன் என்று கண்டித்துவிட்டார்கள் என்று பின்பு தெரிந்தது. ஊர்க்குருவி மூன்றும் பறந்துவிட்டது. நாலாவது பெண் புரட்சிக் கூட்டங்களின்

வாய்வேற்றுமைகளில் அலுத்துப்போய் இந்த நாட்டில் சுட்டுப் போட்டாலும் புரட்சி வராது என்று முடிவு செய்து ஒரு தொழிற்சாலையில் சட்டநுணுக்க அதிகாரியாகச் சேர்ந்துவிட்டாள். மார்க்ஸும், சேகுவாராவும், காஸ்ட்ரோவும், மார்க்குஸேயும், பெண்வேடம் தரித்து இப்படி ஓட்டம் பிடித்ததைப் பார்த்து வெகுநேரம் சிரித்துக்கொண்டிருந்தேன்.

இன்னொருவர் ஆண் நண்பர். நாற்பத்திரண்டு வயது. இந்த வயதில்தான் காதலிக்கும் உணர்ச்சி அவருக்கு முளைத்திருக்கிறது. சாப்பிடுகிற சமயத்திற்கு வருவார்.

"சாப்பிடுகிறீர்களா?"

"கையலம்பிவிட்டுத்தான் வரேன்."

"எங்க சாப்பாடு?"

"அங்க தான்."

வித்யா வீட்டிலேயா?"

"ஆமா, பிடிவாதம் பண்ணினா, இன்னிக்கு சாப்பிடலேன்னா நாளைக்குப் புளிச்சமோரிலே உப்புப் போடாத பச்சை வெண்டைக்காய் மோர்க்குழம்புதான் பண்ணிப் போடுவேன்னு பயமுறுத்தினா. நீ க்ரூடாயில்லெ புளியோரை பண்ணினால்கூட சாப்பிடறவனாச்சேன்னு பேசாம சாப்பிட்டு வந்துட்டேன் - இஹே" என்று அந்த நினைவில் உள்ளம் விம்மி வெடித்துவிடுவது போல் சிரிப்பார். நானும் சிரிப்பேன். இருபது வருடம். தனிமையின் சாரத்தைக் கண்டு திளைத்தவர். இப்போது . . . பாவம்.

இன்னும் எதையெல்லாமோ பார்த்து சிரிப்பு வருகிறது. சொந்தக் காரில் போகிறவர்களை, விமானங்களில் போகிறவர்களை, குழந்தையைப் பார்ப்பதுபோல் ப்ரிஜிடேரைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போகிறவர்களை, குழந்தையைக் குளிப்பாட்டுவது போலவே காரைக் குளிப்பாட்டிக் குளிப்பாட்டித் தடவி மெய்மறப்பவர்களை, போரில் படுகாயம் பட்டு தாகம் தாகம் என்று கண்காணாத மண்ணில் இறக்கிற இளைஞர்களை, அவர்கள் படங்களைப் பத்திரிகைகளில் போட்டு, பாட்டுப் பாடுகிறவர்களை, அந்தப் பாட்டுகளெல்லாம் தங்களைத்தான்

கடைசியாகச் சாரும் என்று மாலைகளுக்குள் புன்னகை பூக்கிற நடுகிழவயது ஆட்சித் தலைவர்களை - எதைப் பார்த்தாலும் சிரிப்பு வருகிறது.

இப்படிச் சிரிப்பாகச் சிரிக்கிறதென்றால் சித்தப்பிரமையா, மனநோயா? இருக்கலாம். நீயாகத்தான் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும். நீ யார்? ப்ராய்ட், யுங், காமு, ஸார்த், பிண்ட்டர், அடமோவ், ப்ரெக்ட், அயொனஸ்கு என்ற அடுக்குகிற பேர்வழியா?

கம்பன், மில்ட்டன், ஷேக்ஸ்பியர், தாகூர், பாரதி - இந்த மாதிரி நாட்டமா? அயன் ராண்ட், இர்விங் வாலஸ், ராப்பின்ஸ் என்று இளைப்பாறுகிற தொழில் நிர்வாகி அல்லது அரசியல்வாதியா? 'அந்நியமாதல்' கடையில் வாங்கின உடைந்த மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டிருக்கிற நீள்முடியா? அப்பாடா ஒய்வு கிடைத்தது என்று மூன்று நாள் படிக்க வேண்டிய பத்திரிகை - புத்தக மூட்டைகளை வைத்துப் படுத்திருக்கிற மனையாளா? வார, மாதப் பத்திரிகைகளை ஒன்றுவிடாமல் வாங்கிப் படித்து, புருவந்தூக்கிகளின் கிண்டலுக்கும் சாபங்களுக்கும் ஆளாகிற பாமர அப்பாவியா? அறிவே உயிர் என்ற வாழ்கிற சிந்தனையாளரா? அப்படியானால் அதில் எந்தப் பணத்தைக்கொண்டு பிழைப்பு நடத்துகிற அறிவாளி? கழுகுப் பணமா? கரடிப்பணமா? ட்ரேகன் பணமா? எது தந்த பணமோ என்று கண்ணை மூடிக்கொள்கிற பூனையினமா?

நீ யாராயிருந்தால் என்ன? பிடித்தால் கேள். அகம், அசூயை என்று எனக்குப் பட்டம் கட்டிவிட்டு நீ காதைப் பொத்திக்கொண்டாலும் சரி. நான் சிரித்துக்கொண்டுதானிருப்பேன்.

ஆனால் நீ ஆண்பிள்ளையாக இருந்தால், அப்படிப் போய்விட மாட்டாய். ஒரு கதை சொல்லுகிறேன். கதை இல்லை, நடந்தது. நான் பன்னிரண்டு வயசுக் குட்டியாக இருந்தபோது நடந்தது. வீட்டுக்கு எதிரே பெரிய குளம். குளத்திற்கு நாலுபக்கமும் தெருக்கள், நாலுபக்கமும் படிக்கட்டுகள். புண்யதீர்த்தம். தெளிந்த நீரும்கூட. அல்லும் பகலுமாக ஜனங்கள் குளித்தமணியமாக இருக்கும். கொக்கும் மடையானும் மீனுக்கு வட்டமிடும். திண்ணையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஒருநாள் சாயங்காலம் குளக்கரையில் ஒரே கூட்டமாக இருந்தது. ஓடிப்போய்ப் பார்த்தேன். கூட்டத்துக்கு நடுவில் யாரோ பெண் முழு அம்மணமாக நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள். இடுப்பில் குழந்தை. ஒரு கையில் சுருட்டின பச்சைப் புடவை. புரிந்துவிட்டது. இந்த மாமியைப் பார்த்திருக்கிறேன். அய்யங்கார் மாமி. எலிமென்டரி ஸ்கூலில்

வாத்தியாரம்மா. கறுப்புதான். ஆனால் வாட்டசாட்டம், பரந்த முகம். உருண்டு திரண்ட வலுவான உடம்பு. தொடை, கை, கால் எல்லாம் அச்சாரம் கொடுத்துப் பண்ணச் சொன்னாற்போலிருந்தது. அதைக்கூடப் பார்த்தேன். பாவம் புருஷன் இல்லையாம் - பைத்தியம் பிடித்துவிட்டதாம். பூண்டி மாமா பூண்டி மாமா என்று ஒரு கிராமத்து பணக்காரர் நாலு வீடுதள்ளி குழந்தைகளைப் படிக்க வைத்துக் கொண்டு குடியிருந்தார். அவர்ஒரு சாட்டைக் கம்பும் கையுமாக, "புடவையைக் கட்டிக்கிறியா இல்லையா இப்ப? ம். இல்லாட்டா ரத்தவிளாறா இழுத்துப்பிடுவேன் கம்பாலே" என்று ஓங்கி ஓங்கி வீசிக்கொண்டிருந்தார். "நீ என்னடா ஆம்படையானா எனக்கு! பிரமாதமா காய்தா பண்றியே" என்று அவள் திருப்பிக் கத்தினாள். பூண்டி மாமா கையை ஓங்கி ஓங்கி வீசினாரே தவிர, அடிக்கவில்லை. பளீரென்று ஒரு வீச்சு வீசியிருந்தால் அவள் அந்தக்கணமே குழந்தையைக் கீழேவிட்டு விட்டுப் புடவையைச் சுற்றிக்கொண்டிருப்பாள். எனக்கு என்னமோ, பூண்டி மாமாவும் கூட்டமும் அவள் புடவையைக் கட்டிக்கொண்டுவிடப் போகிறாளே என்று கவலைப்படுகிற மாதிரி இருந்தது. சிரித்தேன் - கண்கள் போகிற திக்கைப் பார்த்து. கூட்டத்தில் அத்தனைபேரும் ஆண் பிள்ளைகள் - என்னைப்போல இரண்டு மூன்று குட்டிகளையும் காய்கறி விற்றுவிட்டு வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு கிழவிகளையும் தவிர்த்து.

அந்தக் கறுப்பு அம்மணத்திற்கே இத்தனை ஈர்ப்பு என்றால் . . .

நீ என்ன அப்ஸரஸோ என்று கேட்பாய். அப்ஸரசுகளை நான் பார்த்ததில்லை. ஆனால் என்னிடம் கிட்டத்தட்ட ஒரு நாநூறு காதற் கடிதங்கள் இருக்கின்றன. சுமார் நாற்பது பேர் எழுதிய கடிதங்கள். இன்னும் உள்ள நானூறு ஐநூறும் அவர்கள் எழுதியவைதான். பின்னர் எழுதியவை. காதற் கடிதம்போல் தோன்றாவிட்டாலும், சொர்க்கங்களை அசைபோடுகிற கண்மூடல்கள். இத்தனையும் கண்ணாடிகள். நீ என்னை இத்தனையிலும் பார்க்கலாம். நானும் பார்த்துக்கொள்வேன், சிரிப்பதற்காக. நிலைக்கண்ணாடி (அலுத்துப் போகும்பொழுது, எப்போதாவது இவற்றைப் பார்ப்பேன். எனக்குச் சிரிப்பு வராத சமயம் நிலைக்கண்ணாடி) முன் நிற்கும்போதுதான். வலது வகிட்டை இடது வகிடாகவும் இடது மேலாக்கை வலது மேலாக்காகவும் காண்பித்து நம்மைப் பார்த்துச் சிரிக்கிற ஆள் அது. நீ ரொம்ப அழகு, நல்ல சிவப்பு, உன் புன்னகைக்கு ஈடே கிடையாது என்றெல்லாம் நம்மை முகமன் செய்து தலைசுற்றி ஆடவைக்கும் சோமரசம், அதனால் தான் பயமாயிருக்கிறது. சிரிப்பைத் தடுத்துக்கொள்ளவே பல சமயங்களில் கண்ணாடி முன்பு

நிற்பேன். முகம் போகும். நினைவு வரும்.

நாலு வயதுபெண் மொழுமொழுவென்று எங்கும் பழம் - கன்னத்தில், மார்பில், வயிற்றில், தொடையில், கணுக்காலில், பாதத்தில். இரட்டை நாடியா, ஒற்றை நாடியா, கால், கை எல்லாம் நீளமா, குட்டையா - சிறு இடையா, பெரு இடையா, என்றெல்லாம் ஜோஸ்யம் சொல்லமுடியாத சதை மூடின பருவம். சீப்புக்கு அடங்காமல் நுனி சுருள்கிற அடர்த்தி மயிர். இடுப்பில் பட்டுக்கயிறு. இடம் விட்டு ஒதுங்கின வெள்ளி அரசிலை, அம்மா அப்பா இரண்டு பேருமே அரசிலையை இழுத்து இழுத்து இடத்துக்கு நகர்த்திவிடுவார்கள். கவுன், பாவாடைகளைக்கூட இழுத்து ஏறிவதைப் பார்த்து அம்மாவுக்குக் கண் உருளும். அப்பாவுக்குப் புருவம் சுருங்கும்.

"பட்டிச்சிறுக்கி."

சிரிப்பாக வரும். அவர்கள் கோபத்தைப் புரிந்துகொள்ளாத மாதிரி சிரிப்பேன்.

"ஒரு எழவும் புரியாம என்ன சிரிப்பு? ஏமாத்திப்பிடுவன்டீ எல்லாரும், அசட்டுப் பொணமே" அம்மா.

சட்டை துணியெல்லாம் சிநேகிதமே இல்லை. காற்றுதான் நமக்கு சிநேகிதம். இந்த மாதிரி தோன்றும். ஆனால் வார்த்தைகள் இப்போதையவை.

அம்மா, கவுனையும் சட்டையையும் மாட்டி "போ" என்று திருப்பி நகர்த்திவிடுவாள். இடைகழியில் இரண்டையும் அவிழ்த்து, "உன்னோட டூ" என்று கதவு மூலையில் போட்டுவிட்டுப் போன பிறகுதான் உடம்பு உடம்பாகும். வாசல் பந்தலில் போய் நின்றவுடன் காற்று வந்து சேர்த்தி சொல்லும். அரசிலை ஒதுங்கி நிற்கும்.

"பெண் குழந்தைக்கு அரசிலை பின்னாடி தொங்கறாப்பல, இவனுக்கு எதுக்கு தம்புரா? அப்பனாணை, ஏழு ஜன்மத்துக்குச் சுருதி சேராத சாரீரம்" - கோபாலி சொல்கிற நகைப்பு. எந்தச் சுருதி வைத்தாலும் சேராமல் நகர்ந்துபோகிற துரதிர்ஷ்டக் குரல்களைக் கோபாலி வர்ணிக்கிற விதம்.

கண்ணாடியில் கோபாலி சில சமயம் அந்த நாலு வயசுக் குழந்தை மாதிரியே நின்று அழகு பார்த்துக்கொள்வார். அந்த மயக்கத்திலும்

கண்ணழகு போய்விடாது. பெரிய கண், மையிட்டாற்போன்று அடியிலும் ஓரத்திலும் ஒரு கறுப்பு. மையில்லை. பிறவி. இந்தக் கண்ணைப் பார்த்துப் பார்த்து வசமிழந்து . . . எத்தனை பகல்! எத்தனை இரவு! ஆனால் படு சுயநலம். "நிலாவுக்கு எப்படிக் கையும் காலும் முளைச்சுது" என்று என்னைப் பார்த்துக்கொண்டேயிருக்கும். வெளியே வீசும் நிலவின் மிச்சம் ஹாலின் இருளை விலக்கியிருக்குமோ - அந்த மயக்கில்கூட அந்தக் கண்ணின் ஓரக் கறுப்புத் தெரியும். காத்துக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். முகத்தைப் பார்க்கும், மேனியைப் பார்க்கும். ஆனால் ஞாபகம் எங்கோ, ராகம் பாடிக்கொண்டிருக்கும். கம்மல் குரல். சங்கீதம் பிரமாதமாக ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இது பாடுகிறதுதான் சங்கீதம் என்று ஒரு பிடிவாதம். கோபாலி பாட்டுக்கப்புறம்தாண்டா எந்தப் பாட்டும் என்று மற்ற பாட்டுக்களையே மறுக்கிற சில கிழங்களையும் நடுவயதுகளையும் எனக்குத் தெரியும். காத்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். குரல் கம்மல்தான் கேட்கும். ஐயோ, என்ன கம்மல், என்ன கம்மல்! எங்குமே கேட்காத கம்மல்! புடாப்பெஸ்ட் ஹோட்டல் ஒன்றில் ஹங்கரியை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாளிரவு ஒரு ஜிப்ஸி பாடுகிறாள் என்று அழைத்துப் போனார்கள். இந்திய சினிமாப் பாட்டுக்கூட பாடுவாளாம், மைக்கை ஏந்திக்கொண்டு மேஜை மேஜையாக நின்று பாடினாள். முதலில் குரலைக் கேட்டதும் உடம்பெல்லாம் கிளுகிளுத்து, முதுகு மையம் குளிர்ந்து சொடுக்கிற்று. அதே குரல். கோபாலியின் கம்மல் குரல்! கோபாலியே அவதாரம் எடுத்து வந்துவிட்டாரா! இந்த உலகத்தில் அதுபோல இரண்டே குரல்கள்தானா! "நிலாவுக்கு எப்படிக் கைகால் முளைச்சுது!" அழுதே தெரியாத கட்டைக்கு அழுகை வந்தது. அந்த மாதிரி இன்னொரு பிராணிக்குக் குரல் இருக்கிறதா? அப்படி ஒரு கோபம் வேறு. கண்ணாடி கண்ணாடியாக ஒயினை ஊற்றி நிரப்பினார்கள். ஹோட்டலுக்கு எப்படி வந்தோம் என்று இப்போதும் ஞாபகம் இல்லை. டாக்சியில் வாந்தி எடுத்தேனாம். காலையில் ஏழு மணிக்கு விமானம். ஆறு மணிக்குக் கதவை டபடபவென்று இடித்த பிறகு சுரணை வந்ததே தவிர, தலை நிற்கவில்லை. கண் பார்க்கவில்லை. பெட்டி படுக்கையெல்லாம் கட்டவில்லை. அவசர அவசரமாக அறையில் இருந்த துணிமணி சிங்கார சாமான்கள், புத்தகங்கள் எல்லாவற்றையும் அள்ளிப்போட்டுத் திணித்துப் பூட்டி என்னைக் காரில் போட்டு விமானத்திலும் ஏற்றிவிட்டார்கள். ஏதோ சொல்லி விடைபெற்றுக்கொண்ட ஞாபகம். விமானத்தில் உட்கார்ந்த பிறகும் கனவு. "நிலாவுக்கு எப்படிக் கை கால் முளச்சது?" ஊருக்கு வந்ததும் இதைச் சொன்னேன். அதற்குப் பதில் "நன்னா இருப்பளா? என்ன வயசிருக்கும்?" இதுதான். ஓங்கி அறையவேண்டும் போலிருந்தது.

"உன் ஆண்மையெல்லாம் இந்தக் கம்மலில் கரைஞ்சு உன்னைப் பேடியா ஆக்கிவிட்டதுன்னு நெனப்பேன் . . . ம் . . . கரைஞ்சு உருகி எதையோ சொல்றேன்."

"கோச்சுக்காதே. நான் என்னிக்குமே பொம்பளைதான். இல்லாட்டா இப்படி ராகத்தைத் தேடித் தேடி விலக்கி விலக்கி இண்டு இடுக்கெல்லாம் பார்க்க முடியாது. உன் மேல் விழுந்து நாய் பெரளறாப்பல பெரண்டுண்டிருக்கணும் . . ."

"ஆக, நான் பொண்ணு, நீ பொண்ணு - இந்த ராகம்தான் ஆம்பிளை?"

"நீளப் பேசிண்டே போகாதே. எனக்கு இதெல்லாம் புரியாது. நீ படிச்சவ, ஜாமட்ரி, பிலாஸபி இதெல்லாம் பேசுவே. உலகம்லாம் சுத்தறே. நான் வெறும் பாட்டுப் பாடற தற்குறி. கோபாலின்னு கையெழுத்துக்கூட போடத் தெரியாது. கோமாளின்னு போட்டுடுவேன். அதுசரி . . . இதைச் சொல்லு, ஜர்மனி ஜப்பான்லெ எல்லாம் பொண்கள்ளாம் உன் மாதிரி அழகாயிருக்கமாட்டாளாமே. மொத்து மொத்தென்று சீவின கர்ணாக் கிழங்கு மாதிரி இருப்பாளாமே. இந்த ஜிப்ஸியும் அப்படித்தான் இருந்தாளா சொல்லு . . . என்ன யோசிக்கறே! நான் யோகியா, போகியான்னா? பானாவுக்கும் யானாவுக்கும் ஒரு கோடுதான் வித்யாசம். வடக்குத்தி பாஷையிலேகூட அப்படித்தானாமே. அவசரமா எழுதினா ரண்டும் ஒண்ணுமாதிரி இருக்குமாமே . . . மோதிபாய் சொன்னா . . . அதுசரி, என்னை எல்லாம் நினச்சுண்டு ஒயினாக் குடிச்சேங்கறியே, ஒரு அரைகாலனாவது கையிலெ எடுத்துண்டு வரப்படாதோ . . ."

சிரிக்காமல் என்ன செய்ய?

"சிரிசிரி, நானும் சிரிக்கிறேன். அன்னவாசல் அம்மணி அம்மான்னு பேருதான். அரை அவுன்ஸ் தாக சாந்திக்கு வழியில்லேன்னு நானும் தாளம் போட்டுண்டு சிரிக்கிறேன்." கோபாலி உதட்டை விரலால் பொத்தினேன்.

அன்னவாசலைப் பற்றிப் பேசினால் எனக்குப் பிடிக்காது. பிறந்து வளர்ந்த ஊர்தான். பழைய ஒயின் வேறு, பழைய மோர் வேறு.

# 2

அன்னவாசலைப் பற்றிப் பிறர் பேசினால் ஊளை மோர்! நான் நினைத்தால் பழைய மது. கோபாலி பேசினால் இரண்டையும் கொட்டிக் கலந்தாற்போலாகிவிடுகிறது. தரம் போன கலவை - என் காதுக்கு.

அன்னவாசலில் சங்கர ஜயந்தி உற்சவம் நடக்கும்.

மாரியம்மன் திருவிழா நடக்கும். அருணகிரிநாதர் விழா நடக்கும். (பெருமாள் கோவில் உற்சவமும் பிசுபிசுவென்று நடக்கும் - நானும் இருக்கிறேன் என்று காட்டிக்கொள்ள.) அக்ரஹாரத்தில் ராதா கலியாணம் எல்லாம் வருடாந்தாரக் கோலாகலங்கள், ஆக மூன்று மாதங்களுக்கொருமுறை ஊர் திமிலோகப் படும். சங்கரஜயந்திக்கும் அருணகிரி விழாவுக்கும் கோபாலி வராமலிருக்கமாட்டார். வருடம் தவறினாலும் அவர் தவறுவதில்லை. அவரைக் கேட்க சுற்றுவட்டம் பத்து மைலிலிருந்து கூட்டம் கூடும். கூரைகளைப் பிய்த்து, தொற்றி, ஒண்டி, ஒடுங்கி, பதுங்கிக்கொண்டெல்லாம் கேட்கும். இரவு தெருத் திண்ணை, கோவில் திண்ணை திருவிழாப் பந்தல் என்று படுத்திருந்து, பலபலவென்று நடையிலோ, வண்டியிலோ திரும்பிப் போய்ச் சேரும்.

ஊர் அப்படியொன்றும் பெரிய ஊரில்லை. வேளாளத்தெரு, கள்ளத்தெரு, வலையர்தெரு, சேரி, அக்ரகாரம், முடுக்கு சாலியத்தெரு - எல்லாமாகச் சேர்ந்து நானூறு தலைக்கட்டு இருந்தாலே அதிகம். ஆனால் ஊருக்கு ஒருகால் மேற்கே காவிரியின் கிளை ஒன்று இரு கிளைகளாகப் பிரிந்து தெற்கும் வடக்குமாக ஊருக்கு ஓரம் கட்டிப் பாய்கிறது. ஈராற்றுப் படுகை. பூமி கொள்ளை சாரம். அதனால் ஊரெல்லாம் சோலை; நிழல். ஒரு கல் கிழக்கே இரண்டு ஆறுகளும் சூல்கொண்டவள் களைத்து மல்லாந்து கிடப்பதுபோல விலகிவிடுகின்றன. அதுவரையில் நிழல், படுகை வளம். அதோடு ஊரின் எல்லை முடிந்துவிடுகிறது. இந்தச் செழிப்புக்காகத்தான் அன்னவாசல் என்று பெயர் வைத்திருக்கலாம். அந்த நிழலில் சற்று ஒண்டத்தான் ஒரு நாயனாரும் அருணகிரியும் வந்திருப்பார்கள். பாடிவிட்டும் போனார்கள். அவர்களுக்கு வெகு காலம் முன்னாலேயே சிவனும் பெருமாளும் மாரியம்மனும் வந்து நிரந்தரமாகக்

குடியேறி விட்டார்கள். சிவன் கோயில் சுற்றில் கர்ப்பக் கிரகத்திற்குப் பின்னால் மாடம் கொண்ட லிங்கோத்பவரைப் பார்த்து அது சோழர் காலத்துக் கோயில் என்று அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கோயில் நிபுணர் சொல்லிவிட்டுப் போனார். ஒரு பதிகமும் இருந்ததா? உடனே ஒரு நாட்டுக்கொட்டை செட்டியார் வந்து நெருஞ்சிகளையும் அரசு வேர்விட்டிருந்த மதில்களையும் அகற்றி, திருப்பணியாற்றிவிட்டுப் போனார். இதே அம்மன் சந்நிதியில் ஒரு குண்டம். அம்மன் சக்தி வெகு உக்ரமாக இருந்ததாகவும், ஆதிசங்கரர் அங்கே வந்து யந்திர ஸ்தாபனம் செய்ததாகவும், அதுதான் அந்தக் குண்டம் என்றும் ஒரு சங்கராபிமானி சொல்லிவிட்டுப் போனார். உடனே சங்கரஜயந்தி உற்சவத்தைத் தொடங்கினார் கண்டு சாஸ்திரிகள்.

"கோபாலி பாடறதுதாண்டா சங்கீதம். அவன் சாரீரம் தான் சாரீரம்" என்று கண்டுதான் முதலில் சொல்லக் கேட்ட ஞாபகம், கண்டு நடத்திய சங்கரஜயந்தியில் பழசு, புதுசு, இளசு, கிழம் என்று யார் யாரோ பண்டிதர்கள் வருவார்கள். மாயை, அவித்யை, கயிற்றில் பாம்பு, சிப்பியில் முத்து, இரும்பில் நெருப்பு, குடத்தில் ஆகாயம் என்று அத்வைதமாகக் கொப்பளித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் பாட்டுக் கச்சேரி ஒன்றே ஒன்றுதான். கோபாலியைத் தவிர அங்கு யாருக்கும் மேடை கிடையாது.

அரசிலைப் பருவத்திலிருந்து அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் - அப்பா மடியில், அம்மா மடியில் உட்கார்ந்து கேட்டிருக்கிறேன். பாவாடை சட்டையோடு கேட்டிருக்கிறேன். சிற்றாடை மேலாக்குடன் கேட்டிருக்கிறேன். பன்னிரண்டு முழச் சேலையில் கேட்டிருக்கிறேன்.

கேட்டேனா, பார்த்தேனா?

கோபாலி வந்து மேடையில் உட்காருகிற சுருக்கு வருவது தெரியும். உட்கார்ந்திருப்பது தெரியும். உட்காருவது தெரியாது - கொண்டை மைனா கிளையில் வந்து உட்கார்வதுபோல.

பெரிய பரந்த முகம் - மருதமரம் மாதிரி ஒரு நிறம் சிவப்புமில்லை. மாநிறமும் இல்லை. தலையெல்லாம் சிறுசிறு அலையாக மயிர். குரல்தான் இப்படி காதுக்குள் புகுந்து என்னமோ செய்கிறதென்றால், ஆளுமா இப்படிப் புகவேண்டும்? அது அழகே இல்லை. கை, கால், மூக்கு, காது, கழுத்து ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பார்த்தால் ஒவ்வொன்றும் விகாரம் என்று கூடச் சொல்லவேண்டும். ஆனால் எல்லாவற்றையும்

ஒன்று சேர்த்து ஒரு பாந்தமாக மட்டுமல்லாமல் ஆளை அடிக்கும் சொப்பனமாக எப்படி ஆக்கினாள் ஒரு தாய்! அந்தக் கண் தான் அத்தனை சாதாரணங்களையும் அசாதாரணமாக ஆக்கிவிட்டது என்று தோன்றுகிறது மையிட்டாற்போன்ற கண் - கிண்டல் பண்ணுகிறது. கண், எங்கேயோ பார்க்கிற கண், கூட்டத்தையெல்லாம் பார்த்துக்கொண்டே எங்கேயோ போயிருக்கிற கண். உட்கார்ந்திருப்பதில்தான் என்ன அலட்சியம்! என்ன அகம்! நீங்கள்ளாம் யாரு, அஜங்களா என்று அத்தனை பேரையும் பார்த்து எள்ளுகிற பார்வை. அன்னவாசல் பெரிய பண்ணைகளை அவமதிக்கவே காப்புக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாற்போல ஒரு பார்வை! வயதாக ஆக எனக்கு இதெல்லாம் தெரிந்தது. சந்தோஷமாக இருந்தது.

அன்னவாசல்காரர்களுக்குக்கூட கொஞ்சம் பெருமையாக இருந்திருக்கும் - முக்கியமாக அக்ரகாரத்தார்களுக்கு. வருடத்துக்கு இரண்டு தடவை நம்மையும் துரும்பாக மதிக்க ஒரு பயல் வருகிறானே என்று.

அன்னவாசல் அக்ரகாரம் ஒரு 'ட' மாதிரி வடிவம். எழுபது எண்பது வீடு. எட்டுபேர் பெரிய நிலக்காரர்கள். மீதியில் முக்கால்பேர் நடுத்தரம். மீதிபேர் முதல் எட்டுக்குப் பண்ணைக் காரியஸ்தர்கள். ஒரு குருக்கள், ஒரு வைணவ பட்டர், இரண்டு புரோகிதர்கள். தினமும் இருபது பேராவது வண்டியைக் கட்டிக் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருப்பார்கள். இரண்டு வட்டி மூன்று வட்டி என்று பணம் கடன் கொடுத்து, வியாஜ்யம் போடுவார்கள். ஒரு ஏழுபேர் மூன்று சீட்டு ஆடிப் பணம் பண்ணுகிறவர்கள், இரண்டு பேர் வாரந்தவறாமல் பட்டணத்திற்குப் போய் குதிரைப் பந்தயம் ஆடிவிட்டு வந்துகொண்டிருப்பார்கள். பட்டணம் சீசன் முடிந்ததும் பங்களூருக்கும் போய் வந்து கொண்டிருப்பார்கள். வட்டிக்குக் கொடுப்பவர்களுக்குக் கள்ளத் தெருவில் பாதிப்பேரோடு வியாஜ்யம். வேளாளத் தெருவில் பாதிப்பேரோடு வார, குத்தகைச் சண்டை. இரண்டு ஆண்டுகளுக்கொருமுறையாவது இந்தச் சண்டைகளில் கை மறைகிற வேளையில் வயல்வரப்பில் நடந்து போகிறபோது ஒரு நடேசய்யருக்கோ, ஒரு சிதம்பரய்யருக்கோ அடிவிழும் - கத்திவெட்டும் விழும். அதைத் தொடர்ந்து பிரியாது, ஜாமீன் செலவு. கள்ளத் தெருவும் வேளாளத் தெருவும் இதே மாதிரி தங்களுக்குள்ளேயே வியாஜ்யம், வெட்டு என்று வீசிக் கொண்டிருக்கும். சாலியத் தெரு நாலு வீட்டுக்காரர்கள்தான் தறியில் அமர்ந்து அமர்ந்து சோகை பிடித்த மெலிவும் சில சமயம் சுரந்த காலுமாக ஊருக்குப் புடவையும் வேட்டியும் நெய்துகொண்டிருப்பார்கள்.

எத்தனையோ சண்டை, மனத்தாங்கல். கோபாலி வருகிற அன்று மட்டும்

எல்லாம் வாலைச்சுருட்டி முடங்கிக் கிடக்கும். மாரியம்மன் திருவிழாவுக்குப் பாதி வேளாளத் தெரு போகாது. கள்ளத் தெரு பாதி கட்டுப்பாடு. அருணகிரி விழாவும் சங்கர ஜயந்தியும்தான் ஊரைச் சேர்த்துவைக்கும். இல்லை, கோபாலி வந்து சேர்த்து வைக்கும்.

"அகோரம் பிள்ளெ, அன்னவாசக்காரன் அத்தனை பேரும் பெத்த தாயை - கள், உன்னையும் கண்டு சாஸ்திரியையும் தவிர" என்று அருணகிரி உற்சவம் நடத்துகிற அகோரம் பிள்ளையைப் பார்த்துச் சொல்லிற்றாம் கோபாலி ஒரு நாள். பிற்காலத்தில் என்னிடம் இதைச் சொல்லிற்று. அப்படிச் சொன்னால் நான் சந்தோஷப்படுவேன் என்று எண்ணம். நானா?

கண்டு சாஸ்திரிகளை எனக்குத்தான் நன்றாகத் தெரியும்.

என் அப்பா அவர் பண்ணையில்தான் காரியஸ்தர். கொண்டை மூங்கில் கழியைக் கமுக்கட்டில் இடுக்கிக்கொண்டு கண்டுவின் முப்பதுவேலி நிலத்தையும் ஒரு வரப்பு ஒரு முள்விடாமல் மிதித்துக்கொண்டு நாள் தவறாமல் கோலி, பார்த்து, காத்து வந்தவர். வாயில் மோதிர விரலையும் பாம்பு விரலையும் போட்டுச் சப்பிக்கொண்டு, அரசிலையும் அம்மணமுமாக கண்டுவை ஒரு பார்வை, ஒரு பேச்சுவிடாமல் பார்த்து சிரித்து வந்தவள் நான்.

கண்டுவை அத்வைதசாகரம் என்பார்கள். தர்ப்பை நுனி போன்ற புத்தி என்பார்கள். பளிச் பளிச்சென்று மின்வெட்டுகிற எண்ண விரைவும் கற்பனையும் பிறவியில் பெற்ற மேதை என்பார்கள். லேசாகப் புரிந்துகொள்ளும் வயது வந்தபோது இந்தச் சாயைகளை நானும் பார்த்திருக்கிறேன். இதெல்லாம் புத்திக்கு எட்டுகிறவை. ஆனால் என்னை முதலில் கட்டிப் போட்டது கண்ணுக்கு நேராகத் தெரிகிற அவர் தோற்றம்தான். நடு உயரம். மஞ்சள் ஓடிய வெள்ளை நிறம். பெரிய கண். எப்போதும் ஒரே பார்வை. சிரிப்பு கன்னத்திலும் உதட்டிலும்தான் தெரியும். கோவமும் அப்படித்தான். யோசனையும் அப்படித்தான். கண் மாறாது வாய், கன்னமெல்லாம் அசையும், மொட்டைத் தலை. பின்னந்தலையில் சின்ன பட்டுக்கயிறை முடிந்தாற்போல் ஒரு குடுமி. ஆனால் முழு மொட்டையாக ஒருநாள்தான். இரண்டு நாளுக்குள் மயிர் வளர்ந்துவிடும். முகமும் அப்படி, நெற்றியில் மூன்று பட்டை திருநீறு. மார்பில் எப்போதும் போர்த்த ஆறுமுழம் சேலம் குண்டஞ்சு. இடுப்பில் ஒரு பத்து முழம் சேலம் குண்டஞ்சு பஞ்சகச்சம். வாசலில் உள்ள சின்னத் திண்ணையில் வழவழªன்று ஒரு சிவப்பு சிமிண்டு சாய்மானம். காலையில் அதில் வலது கையை வைத்துக்கொண்டு உட்கார்வார். அம்மா என்

பல்லைத் தேய்த்துக் கொப்பளித்துவிட்டதும் நான் நேராக, அந்த வாசலுக்குப் போய் எதிர்த் திண்ணையில் சாய்துகொண்டு நிற்பேன். அவரைப் பார்த்துக்கொண்டே நிற்பேன். அவர் மடிமீது ஏறி உட்காரவேண்டும் போலிருக்கும். காலைத் தொங்கவிட்டு உட்கார்ந்து பின்னந்தலையால் அவர் மார்பை முட்ட வேண்டும் போலிருக்கும். அவர் மார்பையும் முதுகையும் இரண்டு கையாலும் கவ்வி சாய்ந்துகொள்ள வேண்டும் போலிருக்கும். அவர் கூப்பிடமாட்டார். மற்றவர்களைப் போல உள்ளங்கையை மல்லாத்தி மோவாயைப் பிடித்துக் கொஞ்சமாட்டார்.

அவர் எங்கு போனாலும் கூடக்கூடப் போவேன். குளிக்கப் போனால், சாப்பிடப்போனால், பூஜையில் உட்கார்ந்தால், பிரம்பு போட்ட சாய்வு நாற்காலியில் சட்டங்கள் மீது கால்களை நீட்டி அவர் சாய்ந்திருக்கும்போது, அப்படியே சீடர்களுக்குப் பாடம் சொல்லும்போது, எங்காவது ஊருக்குப் போக அவர் வாசலில் மாட்டு வண்டியில் ஏறும்போது - எப்போதும். ஒரு தடவை வாயில் விரலுடன் அவர் நாற்காலியில் சாய்ந்திருந்ததைப் பார்த்தேன். ஒரு சீடன் பஞ்சக்கச்சமும் இடுப்பில் கட்டிய மேல் வேட்டியுமாக சற்று ஒதுங்கி நின்று பேசிக்கொண்டிருந்தார். அப்படித்தான் எல்லோரும் பேசுவார்கள். பாடம் முடிந்ததும் யாரும் உட்கார்ந்திருக்கமாட்டார்கள். நின்றுவிடுவார்கள். இல்லாவிட்டால் திண்ணைக்குப் போய்விடுவார்கள் - உட்கார்ந்து கொள்ள, படிக்க, அவர் அன்று அப்படி சாய்ந்திருக்கும்போது, உடம்பெல்லாம் பளபளவென்று பழமாக இருந்தது. உள்ளங்காலில் மட்டும் நடந்த அழுக்கு. விறுவிறுவென்று கிணற்றுப் பக்கம்போய் ஓரத்தில் கிடந்த ஒரு துணியை நனைத்துவந்து சரக்கென்று அவர் பார்ப்பதற்கு முன்னால் உள்ளங்காலைத் தேய்த்தேன். "அட" என்று காலை இழுத்துக்கொண்டார். "என்ன பண்றே?"

"காலெல்லாம் அழுக்கு."

எழுந்தார், சிறிது கண்ணை அகட்டிப் பார்த்தார். என்னைச் சட்டென்று தூக்கிக்கொண்டார். மார்பையும் முதுகையும் கவ்விக்கொண்டு அவரைப் பார்த்துச் சிரித்தேன். பெரிய மாம்பழத்தை மார்போடு அணைத்துக்கொள்கிறது போலிருந்தது. குளிர்ச்சி, சமையலறைக்குப் போனார். மங்களத்தம்மா அவரை ஆச்சரியமாகப் பார்த்தாள். "என்னது!" என்றாள். "இது என்ன அதிசயம்!" எனக்குப் புரியவில்லை. இப்போது புரிகிறது. தனக்குப் பிறந்த குழந்தைகளைக்கூட அவர் தூக்குகிறதில்லையாம்.

"என்ன பண்ணித்து தெரியுமோ இது? நாற்காலியிலே சாஞ்சிண்டிருக்கேன். விறுவிறுன்னு கொல்லையிலே போய் . . ."

சொல்லி முடித்து என்னைப் பார்த்தார். கீழே இறக்கிவிட்டு என்னை மலர்ந்து பார்த்துக்கொண்டேயிருந்தார். ஒன்றும் பேசவில்லை. தலைமயிருக்குள் விரலைவிட்டு கோதிவிட்டார். பார்த்துக்கொண்டேயிருந்தார். எத்தனை நிமிஷம்! கோணிக் கோணி உடம்பை முறுக்கிக்கொண்டேன். வேறு எங்கோ பார்த்துக்கொண்டு நெளிந்தேன்.

ஏன் அப்படிப் பார்த்தார்?

ஏன் இன்னும் அந்தப் பார்வை இன்றும் எனக்குள் கண் மூடாமல் கிடக்கிறது?

"கல்கண்டு இருக்கா . .? ஒன்று எடுத்துக் கொடு. இன்னிக்கி முதல் நைவேத்யமா இருக்கட்டும்" என்றார்.

கல்கண்டு வந்தது.

"பெரிய கட்டியா இல்லையா?"

கொஞ்சம் பெரிய கட்டியாக வந்தது.

"இதே பழக்கமாயிடப்போறது" என்றாள் மங்களத்தம்மாள் கொடுத்துக்கொண்டே.

சரேலென்று திரும்பினார் கண்டு. மாமியின் முதுகு தெரிந்தது. கல்கண்டு டப்பாவை அலமாரிக்குள் திருப்பி வைத்துக்கொண்டிருந்தாள்.

"போடி மாட்டுப் பொண்ணே, போ" என்று என்னை லேசாக நகர்த்திவிட்டார்.

நான் கூடத்தில் முற்றத்து ஓரமாக இருந்த சந்தனக் கல்லண்டை நின்றேன். வெளியில் முற்றத்துப் பந்தல் வழியாக பணம் பணமாக விழுந்திருந்தது. மேலே கீற்று வரையில் வெள்ளிப்பொடி சுழன்று கொண்டிருந்தது. கற்கண்டை வாயில் போட்டுக்கொண்டு, அந்தப் பொடியை ஊதினேன்.

கண்டு சிறிது நேரம் கழித்து வெளியே வந்தார், என்னைப்

பார்த்துக்கொண்டே இடைகழியில் தன் அறைக்குப் போனார்.

அப்புறம் நாலைந்து தடவை அது சொப்பனமாக வந்திருக்கிறது. கண்டுவின் மாம்பழ உடம்பில் ஏறி அமர்ந்து சில்லென்ற கன்னங்களை மாற்றி மாற்றி தோள்மீது புதைத்துக்கொள்ளுகிற சொப்பனம்.

கண்டு ஊருக்குப் போயிருந்தால் வெறிச்சோடும். பொழுது போகாது. செடிக்கடையில் போய் நிற்பேன். செக்கு பாடும். அதைக் கேட்டுக்கொண்டிருந்தால் மயக்கம் வரும். இல்லாவிட்டால் சிரிப்பு வரும். செக்கு நின்றால், சாலியத் தெருவில் நாலு வீட்டு வாசலையும் அடைத்து பாவு திருத்துவதைப் பார்த்துக்கொண்டே பொழுதுபோகும்.

கண்டுவின் கடைசிப் பிள்ளை பாலன் அப்போதும் இப்போதும் வீட்டுக்கு வந்துகொண்டிருப்பவன்தான். முதலாளி வீட்டுப் பிள்ளை, அதுவும் கண்டுவின் பிள்ளை என்று எப்போதுமே மரியாதை உண்டு. ஆனால் திடீரென்று அம்மாவுக்கு ஒரு வெட்கமும் சேர்ந்துகொண்டது. பத்து வயது நடக்கும்போதுதான் காரணம் புரிந்தது. அவனும் கண்டு சாயல்தான். நிறம்தான். மொழுமொழுவென்று வெறும் மார்போடு மெல்லியதாக ஒரு மூன்று முழத் துண்டை அரையில் கண்டிக்கொண்டு வருவான். மார்பு மாதிரியே பின்பக்கம் இரண்டும் எடுப்பாகத் தெரியும். சிரிப்பாக வரும் . . .

திடீரென்று ஒரு நாள் இதெல்லாம் கசந்தது.

கண்டுவின் கடைசிப் பெண் பதினெட்டு வயதிருக்கும். பட்டணத்தில் என்ஜினியர் படிப்பு படித்துவிட்டு புதிதாக வேலையாகியிருக்கிறது. கணவனோடு ஊருக்கு ஒரு நாள் வந்தாள். ஒரு வாரத்திற்குப் பிறகு அந்தப் பையன் குளிர் குளிர் என்று படுத்தான். இரட்டை நிமோனியா என்றார்கள். ஆறாவது நாள் ஆளில்லை.

ஊர் மௌனமாக அவிந்து கிடந்தது. எனக்கு பயம். கண்டுவை வாசல் சாய்மானத்தில் காணவில்லை. உள்ளே சற்றைக்கொரு முறை புலம்பல். வருவோர், போவோர்கள், வண்டிகள் - எல்லாம் பேசாமல் ஒலிக்காமல் படமாக வந்து வந்து போயின.

பத்தாம் நாளன்று ஆற்றங்கரையில் மொலுமொலுவென்று ஒரு கூட்டம். துக்கம் விசாரிக்க வெளியூர் முகங்கள் ஒரு இருநூறு இருக்கும். இதைத் தவிர கள்ளத்தெரு, வேளாள - சாலியத்தெருவெல்லாம் குஞ்சும்

பெண்டுகளுமாகக் கூடியிருந்த கூட்டம் வேறு. அம்மா தடுத்ததையும் மீறித்தான் நானும் அந்த அழுகை ஊர்வலத்திற்குப் பின்னால், அம்மாவுக்குத் தெரியாமல் போனேன். கண்டுவின் பெண் தலையில் ஊரில் உள்ள ரோஜா, மல்லிகை, கதிர் பச்சை, மருவெல்லாம் சுமந்து கிடந்தது. நெற்றியில் கோணலும் மாணலுமாகத் தீற்றிய குங்குமம், ரத்த காயம் போலிருந்தது. குங்குமமாக இல்லை. இரண்டு வெள்ளை முட்டாக்கு விதவைகள் அவளை ஆளுக்கு ஒரு பக்கமாக அணைத்துக்கொண்டு நடந்தார்கள். கூட ஒரு பெண் கூட்டம். பின்னால் திமிதிமி என்று ஆள்பிள்ளைக் கூட்டம். ஆற்றங்கரையில் ஏற்கனவே கள்ள, வேளாளத்தெருக் கூட்டம் காத்திருந்தது. படிக்கட்டு ஓரமாகக் கல்நாகங்களும் பிள்ளையாரும் காத்த அரசமரம். மூன்று மாதங்களுக்கு முன்னால் செங்கொழுந்தாகத் துளிர்த்திருந்த அதே மரம் இப்போது கரும்பச்சையாக, ஒவ்வொரு இலையும் படம் எடுத்த பாம்புத்தலையாக, காற்றில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது.

ஊர்ப் பெண்டுகள் எல்லாம் வந்து அந்தப் பெண்ணின் கன்னங்களில் மஞ்சளைத் தீற்றித் தீற்றி நகர்ந்தார்கள். பிறகு பெண்ணை முழுக்காட்டினார்கள். ஒரு மணல் முட்டின் மீது துவண்டு கிடந்த கண்டுவை இரண்டு பேர் பிடித்து அழைத்து வந்தார்கள். சாஸ்திரிகள் ஒரு பதினெட்டு முழம் வெள்ளைப் புடவையை கொசுவி முறுக்கிக் கண்டுவின் கையில் கொடுத்தார்.

கண்டு தள்ளாடி பெண்ணை நோக்கி நடந்தார்.

"சாஸ்திரிகளே, இது வாண்டாம்னு சொன்னேனோல்லியோ?" என்று அந்த மேளனத்தில் கத்தி கிளம்புகிற மாதிரி ஒரு கூச்சல் கிளம்பிற்று. ஆற்றுவெளி நடுங்கிற்று.

கண்டுவின் கடைசிப் பையன் - அந்தப் பையன்தான் -

அப்படி வீலென்று கத்தினான். கண் ஓரத்தில் இரண்டு நெருப்பு முத்து, முஷ்டியாக மடங்கிய விரல்களுடன் கையிரண்டும் விறைத்து நின்றது.

கண்டு பின்னால் திரும்பி பையனை ஒருமுறை பார்த்தார். ஒரு மூன்று விநாடி. திரும்பி நடந்தார். பெண்ணின் கழுத்தில் வெள்ளைப் புடவையைப் போட்டார். உடனே பெண்ணை நாலைந்து பேராகத் தள்ளிக்கொண்டு ஆற்றங்கரையைவிட்டு நடந்தார்கள்.

பையன் கண்டுவையே பார்த்துக்கொண்டு நின்றான் பல்லைக் கடித்துக்கொண்டு இரண்டு கைகளையும் முன்னால் வீசினான். சட்டென்று நாலைந்து பேராக அவனை அம்மிப் பிடித்து, வீட்டைப் பார்க்க இழுத்துப் போனார்கள்.

சிலம்பம், கத்தி, வஞ்சம் என்று ரோஷப்படுகிற கள்ளத் தெருவார்கள் பூனைக்குட்டிகளாக நின்றுகொண்டிருந்தார்கள். வேளாளத்தெரு சோகை பிடித்தாற்போல் நின்றது.

கண்டு அத்வைதம் ததும்ப வீட்டுக்கு நடந்தார். நான் வீட்டில் கிடந்தேன்.

மூன்று நாள் கழித்து அடக்க முடியாமல் அங்குபோய் நின்றேன். அந்தப் பெண் மழுங்க மொட்டையடித்த தலையும் நார்மடிப் புடவையுமாக மயக்கம் போட்டாற்போல கூடத்து அறையில் சுருண்டு கிடந்தது. என்னைக் கண்டதும், மங்களத்தம்மா அறைக் கதவைச் சாத்தினாள்.

நானும் எங்கள் வீட்டுக்கூடத்து அறைக்குள் வந்து படுத்துக்கொண்டேன். சிரிப்பு வந்தது - கண்டுமாமாவை நினைத்து. அவருடைய உள்ளங்கால் தூசியை அவர் உடம்பு முழுவதும் தேய்க்க வேண்டும் போலிருந்தது. ரோஷமாக வியாஜ்யம் ஆடுகிற அக்ரஹாரம், கள்ளத்தெரு, சேரி, சாலியத்தெரு - இங்கெல்லாம் போய் பத்ரகாளி மாதிரி தித்திப் பல்லைக்காட்டிச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. அத்தனையும் மனதிற்குள்ளாகவே செய்துவிட்டேன்.

வாத்தியார்களெல்லாம் யுத்தவேலைக்குப் போய்விட்டார்கள் என்று ஐந்தாம் வகுப்பு மேலிருந்த மூன்று வகுப்புக்களை அந்த வருடம் இழுத்து மூடிவிட்டார்கள். கும்பகோணத்தில் பெரியப்பா வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டார்கள் என்னை. போகும்போது கண்டுவிடம் நான் சொல்லிக்கொள்ளவில்லை.

# 3

பெரியப்பா வீட்டுக்கு எதிரே குளம். நாலு பக்கமும் தெருக்கள். எதிர்க்கரையில் ஒரு கோவில். வீட்டுக்கு இரண்டு திண்ணை. மேலே ஒன்று. கீழே ஒன்று, கீழ்த்திண்ணையோரமாக சட்டமடித்திருக்கும். அதைப் பிடித்துக்கொண்டு நின்றால் பொழுது பறக்கும். எத்தனை சத்தங்கள்! காய்க்கறிக்காரிகள் கூவல், கழுகின் கூவல், நரையான், மடையானின் க்ராச்சு, ஸ்டேஷனுக்குப் போகிற வண்டிச் சலங்கைகள், ஓயாமல் துணி துவைக்கிற சத்தம். இரவு வந்துவிட்டால் மற்ற மூன்று கரைகளில் நிற்கும் விளக்கு வரிசையின் ஒளிகள் நீரில் நீண்டு ஆடி ஆடித் ததும்பும் நெளியல். கோவில் மணி, நாயனம், டமாரம் - எல்லாம் கேட்கக் கேட்க, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு திண்ணையில் படுத்துவிடத் தோன்றும்.

கண்டுவிடம் சொல்லிக்கொள்ளாமல் வந்ததை நினைத்து ஒரு அகம்பிடித்த பெருமை. அப்படி வரலாமா என்று அப்பா, அம்மா, ஊர்க்காரர்கள் எல்லோரும் என்னை ஒவ்வொருவராக வந்து கேட்கிறதுபோல, கடிந்துகொள்வது போல கற்பனைகள். அவர் ரொம்ப வருத்தப்படுகிறார் என்று அவர்கள் சொல்கிற செய்தி. நன்றாகப்பட்டு வெம்பட்டும் என்று நான் சொல்கிற வீம்பு. வந்து மூன்று மாதம் வரையிலும் இந்த நாடகம்.

ஆனால் ஒரு தடவை அம்மா வந்தாள். வாரத்திற்கொருமுறை அப்பா வருகிறார். கண்டுவின் ஒன்றுவிட்ட அக்கா வந்தாள். கண்டுவின் சீடர்கள் இரண்டுபேர் வந்தார்கள் - யாரும் கேட்க வேண்டுமே!

'ஏண்டி! கண்டுமாமாகிட்ட நீ சொல்லிக்கக்கூட இல்லையாமே?' இதைக் கேட்பதற்கு பதிலாக,

"பள்ளிக்கூடம்லாம் எப்படிடீ இருக்கு?" என்று உப்புரைப்பில்லாத கேள்வி.

கண்டு மாமாவே இதைப் பற்றிக் கவலைப்படவில்லையோ!

இருக்கலாம்.

காரியஸ்தன் பெண்தானே! இந்த அன்றாடங்காய்ச்சி சொல்லிக்கொண்டு போகாவிட்டால் யாருக்கு நஷடம்? நான் என்ன செய்திருப்பேன் தெரியுமா? எப்படி குழந்தே பேசாம போனே என்று இதற்காகவே வண்டி கட்டிக்கொண்டு வந்து கேட்டிருப்பேன், நீயாக இருந்திருந்தால். நீ இத்தனை படித்து என்ன பிரயோஜனம்? உலகம் எல்லாம் உன்னைக் கூட்டி நீ மகான், மேதை என்று பட்டம் எல்லாம் கொடுத்து என்ன பிரயோஜனம்? சீடர்கள் எல்லாம் கையைக்கட்டி உன் முன்னால் நின்று என்ன பிரயோஜனம்? சங்கர ஜயந்தியில் கோபாலி பாடும்போது உன் கண்ணிலிருந்து கரகரவென்று ஆனந்த பாஷ்பம் கொட்டி என்ன பிரயோஜனம்? பெற்ற பெண்ணுக்காக அழத் தெரியவில்லை. அது மொட்டையடித்து வெள்ளையுடுத்தி, சோகம்போட்டு அடுத்த அறையில் சுருண்டு கிடக்கிறது உனக்குத் தெரியவில்லை.

நீயா என் மாமனார்! முடியவே முடியாது. ஏழை வீட்டுப் பெண்ணானாலும் மூக்கும் முழியும், கன்னமும் கதுப்பும், நறுக்கும் தெறிப்புமாக இருக்கிறது - மாட்டுப் பெண் என்று பிடித்துப் போட்டுவைத்தால் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். வேலை வாங்கிக்கொண்டேயிருக்கலாம். அதுவும் கிடைக்காத இடம் கிடைத்திருக்கிறது என்று ஓடாக உழைத்துக்கொண்டிருக்கும். வெளியே போனாலும் எங்கள் வீட்டுக்கு வந்தது எப்படியிருக்கு பாரு என்று சொல்லாமல் காட்டிக்கொண்டேயிருக்கலாம். பணம் பெரிதில்லை ஆளும் குணமும்தான் பெரிசு எங்களுக்கு, அதனால் மற்ற பெரிய மனுஷர்களைவிட நாங்கள் இன்னும் உசத்தி என்று சொல்லியும் சொல்லாமலும் பீற்றிக்கொண்டிருக்கலாம்.

இந்த பாச்சாவெல்லாம் அம்மணிகிட்டே நடக்காது. நான் உன் வீட்டுக்கு வரவே மாட்டேன்.

குறட்டுச் சட்டத்தில் கையை வைத்து, குளத்தில் நெளியும் எதிர்கரை ஒளிகளைப் பார்த்துக்கொண்டு, கண்டுவோடு மனதில் நடத்திய வாதம் இது.

கண்டு வரமாட்டார். என்னைக் கேட்கவும் மாட்டார். கேட்டால் நான் அந்தப் பெண் மறுபடியும் மயிர் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அடம்பிடிப்பேன்.

"என்னத்துக்குடீ இப்படி வாசல்லெ வந்து நின்னுண்டிருக்கே? ஊர் பேர் தெரியாத ஊருன்னு நினைச்சியா? யாராவது கண்டு ஆத்திலே போய்

வம்பளக்கப் போறாடி!" என்றாள் அம்மா ஒரு தடவை வந்திருந்தபோது. இது இரண்டு வருஷம் கழித்து. மேலாக்கு அணியத் தொடங்கி ஒரு ஆறுமாதமாகிவிட்டிருந்த சமயம்.

"கண்டு உங்களுக்கு எசமான். எனக்கு என்ன?" வெடுக்கென்று நான் வீசினதைப் பார்த்து அம்மாவுக்கு உடம்பெல்லாம் ஆடிற்று. திண்ணையில் யாருமில்லை. அவளும் சன்னமாகத்தான் சொன்னாள். நானும் சன்னமாகத்தான் பதில் கொடுத்தேன்.

"நீ உருட்டி முழிச்சா ஆயிடுமா?" என்று குளத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டேன். அம்மாவைக் குதற அதுதான் வழி. நேராகப் பார்த்துப் பேசாமல், வேறு எங்காவது திரும்பிக்கொண்டு பேசினால் அவள் அகம் சீறிச் சீறி அடிக்கும்.

"நீதான் பேசறியா?"

"..."

"இத்தனை கத்துனுட்டியா வந்து ரண்டு வருஷத்துக்குள்ளே? இத்தனை கிறுவம் ஆகாதுடி."

"ஏன்? இந்தப் புள்ளையும் மூணு வருஷம் கழிச்சுச் செத்துப்போச்சுன்னு வச்சுக்கோ. நானும் அப்படித்தானே தலை மயிரெல்லாம் அவன் ஆத்மா கையிலே கொடுத்துப்ட்டு காமிரா உள்ளிலே மயக்கம்போட்டுக் கிடக்கணும் புளிப்பானைக்கும் ஊறுகா ஜாடிக்கும் நடுவிலே."

பதில் இல்லை - ஒரு இரண்டு நிமிஷம். நான் வாய்க்குள் சிரித்துக்கொண்டே குளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நீரில் சாயங்கால மஞ்சள் வெயில், நீரின் பாசியில் விழுந்து முலாம் பூசி அலையாடிற்று.

"நாளையோட உன் படிப்பு முடிஞ்சு போயிடுத்து. ரண்டு வருஷப் படிப்பிலே வாயிலே இத்தனை சனியன் வந்து சுமந்தது போரும்."

"நான் முழு ஸ்காலர்ஷிப்பிலே படிக்கிறேன். க்ளாஸிலே முதல் எல்லாத்திலியும், புஸ்தகம் நோட்டுகூட இனாமாக் கொடுக்கறா. நன்னாப் படிச்சுட்டு, வேர்வையோட கடலைமாவு வேகம் வீசற ஒரு ஏழை ஹோட்டல்காரனைக் கலியாணம் பண்ணிப்பேன். படிப்புச் சொல்லிக்கொடுப்பேன். கழுத்திலே வெத்துச் சரடோட நிற்பேன். கண்டு

ஆத்திலே போய் கழுத்திலே அட்டிகையும் காசுமாலையும் கையிலே வளையும் கொலுசுமா விலங்கு பூட்டிக்க மாட்டேன்."

"மகான்ரீ அவர்! குடும்பமே தெய்வாம்சம். இப்படியெல்லாம் அலட்சியமாப் பேசாதே. பராசக்தி கடாட்சம் பொங்கற குடும்பம். ஜாக்கிரதை. நாக்கு இத்துப்போயிடும்!"

"ஆமா - தெரியறது; வீட்டிலேதான் ஒரு பராசக்தியை மழுங்க சிரைச்சு வச்சிருக்கே."

"நான் நாளைக்குக் காலமே ஊருக்குப் போறேன்" என்று அம்மா எழுந்து போனாள். திரும்பி ஆளோடியில் நின்று "நீ நன்னாப் படிச்சு, ஒரு பரட்டையைக் கலியாணம் பண்ணிண்டு வெத்துச் சரட்டோடயே நில்லு" என்று கடைசி வார்த்தைகளைத் தழதழப்பாக உதிர்த்துவிட்டு உள்ளே போனாள்.

ஒரு ஐந்து மாதம் கழித்து வாராவாரம் வருவதுபோல, அப்பா ஒரு நாள் வந்தார். அன்று அமாவாசை. மளிகைக் கடைகள் அடைப்பு. பெரியப்பாவுக்குக் கணக்குப் பெட்டியிலிருந்து விடுமுறை. அவசர அவசரமாக பண்ணைக்காரியம், முதலாளி வீட்டுக் காரியம் என்று ஓடி மறைகிற அப்பா அன்று மசமசவென்று உட்கார்ந்திருந்தார். என்னவோ போலிருந்தார்.

திண்ணையில் உட்கார்ந்து இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சாப்பிட்ட எச்சில் இலைகளை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுக் கைகழுவிவிட்டுத் திண்ணையை ஒட்டிய அறையில் வந்து புத்தகத்தைப் பிரித்தேன்.

"ரண்டு நாளா மனசே சரியாயில்லேண்ணா" என்று அப்பா சொல்லிக்கொண்டிருந்தார்.

நாலைந்து நாட்களுக்கு முன் வாசல் சாய்மான ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த கண்டுமாமா சரேலென்று எழுந்து உள்ளே போனாராம். ஒரு காகிதத்தை எடுத்து சடசடவென்று ஏதோ எழுதினாராம். "தெருக் கோடியிலே விச்வம் வரான். விர்ருனு போய் இதை அவன்கிட்ட கொடுத்துவந்துடு" என்று அப்பாவிடம் காகிதத் துண்டைக் கொடுத்துவிட்டு மாடிப் படியேறிப் போனாராம்.

அப்பா விறுவிறுவென்று நடந்தார். பாதித் தெருவில் வந்த விச்வத்தை நிறுத்தி "இதை ஐயா கொடுக்கச் சொன்னா" என்று கடுதாசை நீட்டினாராம். விச்வம் உடனே இடுப்பில் வேட்டி இடுக்கில் செருகியிருந்த பையை உருவி மூக்குக் கண்ணாடியைப் பிரித்து மாட்டிக்கொண்டு படித்தாராம். முகத்தில் சட்டென்று ஒரு அரண்ட களை. அவமதிப்புக்காளான நிழல், சற்றுக் குழம்பி விழித்தாராம். நின்றாராம். சுற்று முற்றும் பார்த்தாராம். ஒன்றும் பேசாமல் திரும்பி நடந்து தெருக்கோடி திரும்பி மறைந்து விட்டாராம்.

மாடிக்குப் போய் நடந்ததைக் கண்டுவிடம் சொன்னாராம் அப்பா. அப்பாவுக்கு என்ன எழுதியிருந்தது என்று தெரியவில்லை. ஸம்ஸ்கிருதம்.

"எங்கிட்ட அஞ்சு வருஷம் வாசிச்சிருக்கான் - வாராவாரம் வந்து. கரைச்சுப் போட்டிருக்கேன். அப்பறம் யார் யார்கிட்ட வாசிச்சிருக்கலாம். போன மாசம் யாரோ "நீங்க அவா சிஷ்யனாமே"ன்னு கேட்டதுக்கு "அப்படின்னுதான் சொல்லணும். ரொம்ப காலம் புஸ்தகம் எல்லாம் சேர்ந்து பார்த்திருக்கேன் அவரோட"ன்னு சொன்னானாம். சிஷ்யன்னு சொல்லிக்க கூச்சப்படற குருதுரோகி ஏன் குத்துச் செங்கல் ஏறணும்? நீ இனிமே என் மூஞ்சியிலே முழிக்காதேன்னு எழுதியனுப்பிச்சேன். இனிமே ஒரு சமயம் நான் இல்லாதபோது வந்தாலும் நீ அவனை உள்ள வராதேன்னு சொல்லலாம். உனக்கு அத்தனை பாத்யம் இருக்கு" என்று அப்பாவிடம் சொன்னாராம் கண்டு.

உள்ளே கேட்டுக்கொண்டிருந்த எனக்கு ஒரு சின்னப் படம் பார்த்தது மாதிரி இருந்தது. விச்வம் கண்டுவைவிட மூன்று நாலு வயது சிறியவராக இருப்பார். அவ்வளவுதான். தட்சிணாமூர்த்தி மாதிரி வயதான சீடர்கள் கண்டுவின் மேதைக்கும் பிரக்ஞைக்கும் அத்தாட்சி. விச்வம் எங்கள் வீட்டுக்கு வந்து பலதடவை சாப்பிட்டிருக்கிறார். என்னோடேயே பேசி விளையாடியிருக்கிறார். கடுதாசியைப் பார்த்ததும் அவர் முகம் எப்படி ஆகியிருக்கும்?

எனக்கு ஓடிப்போய் அவருடைய மனதைத் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது. அவர் உள்ளங்கையை ஒரு கையால் பற்றி இன்னொரு கையால் அவருடைய தோளை வருடவேண்டும் போலிருந்தது. யார் குரு? யார் சீடன்?

அந்தக் கணத்திலிருந்து வெற்றுச் சரடுகூட என் கழுத்தில் ஏறக்கூடாது என்று வெளிச்சம் மாதிரி தோன்றிற்று. இந்த உலகத்தில் யாரையும்

தொட்டுத் தொட்டு, கையைப் பற்றிப் பற்றிப் பேசவேண்டும் போலிருந்தது. பார்க்கிறவர்களையும தழுவிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

எல்லோரையும் தொடப்போகிறேன். தழுவப் போகிறேன். யாரையும் நான் தொடாமல், பற்றாமல் பேசப்போவதில்லை.

அடிக்கடி அந்தக் காட்சி கண்முன் வந்துகொண்டேயிருக்கிறது - விச்வம் அவமானப்பட்ட காட்சி.

அது எப்படி நடக்கமுடியும் என்று ஒரு சந்தேகம் வேறு. நடந்தது காலை வேளை. வெள்ளையாக முற்றாமல், சூடு பிடிக்காமல் கொழுந்து வெயில் படர்ந்த காலை. தெருவில் இரு மருங்கிலும் தென்னை மரங்கள் உண்டு. சில வீடுகளுக்கு முன்னால் பன்னீர்மரம் - வேப்பமரம். தினைச்சிட்டுகள், வீட்டுக் குருவிகள் - எல்லாம் கீச்சிட்டுத் தத்துகிற மரங்கள். ஓரிரண்டு வீட்டு ஒட்டுக்கூம்பில் பேசும் குருவி. பேச்சுமில்லாத பாட்டுமில்லாத ஏதோ சொல்கட்டைத் திருப்பிச் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கும். கொல்லைப் புறங்களில் காட்டுப்புறா கூவுகிற வேளை. தூரத்தில் செக்கு பாடும் வேளை. லேசாகக் குளிர்ந்த காற்று வீசும் வேளை. இப்படி எங்கும் உயிராகத் தளிர்க்கும் சமயத்தில், வீட்டுக்கு வருகிறவனை வராதே, குத்துச் செங்கல் ஏறாதே என்று வெறுக்க எப்படி ஒருவனுக்கு மனசு இடம் கொடுத்திருக்கும்? இது எப்படி சாத்தியம்? காலை ஒலிகள் எப்படி காதில் விழாமல் இருந்திருக்கும்? காலை வெயிலின் தளிர் ஸ்பர்சம் எப்படி கண்ணில் படாமல் இருந்திருக்கும்? குளிர்காற்று எப்படி தோல்மீது படாமல் இருந்திருக்கும்? இதெல்லாம் படாத ஜடங்களுக்குத்தானே இப்படி வெறுக்கத் தோன்றும்? கண்டுவுக்கு எப்படி இதைச் செய்ய முடிந்தது? அத்வைதத்தில் காய்ந்து காய்ந்து சருகாகிவிட்டாரா?

கடுதாசியில் எரிகிற கோபத்தையும் வெறுப்பையும் பார்த்து, கோபம் கொள்ளாமல் முகம் விழுந்து திரும்பி நடந்த விச்வத்தின் உருவம் வந்துகொண்டேயிருக்கிறது. எல்லோரையும் தொடச் சொல்லுகிறது.

தொட்டுக்கொண்டிருக்கிறேன்.

நான் தொடாத ஆளில்லை.

பல்லாயிரக் கணக்கானவர்களைத் தொட்டிருக்கிறேன். பள்ளிக்கூடத்துப் பையன்கள் - பெண்கள், உறவுக்காரர்கள், கல்லூரி மாணவர்கள்,

மாணவிகள், ஆசிரியர்கள் - ஆசிரியைகள், தோட்டக்காரர்கள், டாக்சி டிரைவர்கள், கவர்னர்கள், ஹோட்டல்களில் பரிமாறுகிறவர்கள், மந்திரிகள், சாஸ்திரிகள், கடைக்காரர்கள், வீடு கூட்டுகிறவள் - நீளப் போய்க்கொண்டேயிருக்கும்.

யாரையாவது அறிமுகப்படுத்தும்பொழுது அவர்கள் கையைக் கூப்பினால் ஓங்கி அறைய வேண்டும் போலிருக்கும். என்ன கைகூப்பல்! கையைப் பிடித்துக் குலுக்கினால் என்ன? தோளைத் தொட்டு, புஜத்தைப்பற்றிப் பேசினால் என்ன?

ஒருமுறை - ஒரு ஆறேழு வருஷம் கழித்து கோபாலியோடு - ஒரு மலையாளத்துக் கோயிலுக்குப் போயிருந்தேன். போத்தி ஈரத்துண்டோடு அர்ச்சனை செய்தார். தீபாராதனை செய்துவிட்டு தேங்காய்மூடி பூக்கள், என்று பிரசாதங்களைக் கொண்டுவந்தார். பிடி என்றார். எல்லோரும் புடவைத் தலைப்பையும் மேல் துண்டையும் நீட்டிக்கொண்டு நின்றார்கள். போத்தி வீசி வீசி எறிந்தார். எங்கள் அர்ச்சனை முறை வந்தது. கர்ப்பூரம் காட்டி பிரசாதம் வந்தது. தலைப்பை நீட்டாமல், போத்தி எறிவதற்கு முன்னால், போத்தியின் இரண்டு கைகளும் படும்படியாகத் தொட்டுப் பற்றி பிரசாதங்களை வாங்கிக்கொண்டேன்.

ஒரு உக்ரமான முறைப்பு.

நான் சிரித்தேன்.

"நான்தான் கொடுத்தூண்டிருக்கேனே."

மீண்டும் சிரித்தேன்.

"என்ன பரிகாசமா இருக்கா? ஏன் சிரிக்கறயள்?"

"ஸ்வாமியைத் தொட்டுத் தொட்டு அனுபவிக்கிறீர்களே? நான் உங்களையாவது கொஞ்சம் தொடலாமேன்னு தொட்டேன்."

கொஞ்சம் உயிருள்ள போத்தி போலிருக்கிறது.

அவிவேகியை, பேதையை எதிர்ப்பட்டிருக்கிற கருணையோடு சிரித்தார். ஏதோ அனாவசியமாக இளகிவிட்டதுபோல மறுகணம் புருவம் சுளித்தது. அப்படியே இறங்கி முழுகப் போய்விட்டார்.

"என்னமோ தவறிப்போய் கைபட்டுடுத்துன்னு சொல்லப்பட்டதோ? வேணும்னு தொட்டேன்னு வேற சொல்லணுமா?" என்றார் கோபாலி.

"நான் வேணும்னுதானே தொட்டேன். என்னத்துக்கு மறைக்கணும்?"

"போயும் போயும் இவனையா தொடணும்?"

"ஏன் தொடப்படாது? யாரைப் பார்த்தாலும் தொடாத வரையில், சரியாப் பார்க்காததுபோல இருக்கு எனக்கு. இவன் என்ன? நான் எல்லாரையும்தானே தொடறேன், தொடப் போறேன்."

"விரதமா எதாவது - இத்தனை பேரைத் தொடணும்னு?"

"இத்தனை பேரைன்னு இல்லை, எல்லாரையும், இந்த உலகத்திலே பிறந்திருக்கிற அத்தனை பேரையும் ஒரு தடவை தொட்டுடணும். கையைக் குலுக்கிடணும்."

"தொட்டு, குலுக்கி? சரி அதனாலே என்ன?"

"ஒண்ணும் இல்லெ. தொடறதே போரும். அப்பறம் என்ன ஆகணும்?"

"என்ன, ஸ்பர்ச தீட்சை கொடுக்கப் போறியா எல்லாருக்கும்."

நான் பதில் சொல்லவில்லை.

ஒரு பட்டுப் புடவை புரட்சிவாதி சிநேகிதியைப் பற்றிச் சொன்னேனே - அவள் ஒரு நாள் தாறுமாறாகக் கத்தினாள்.

"என்னமோ, புதுசா புரட்சி பண்றதாக எண்ணமோ - உலகத்திலே எல்லாரையும் தொடணும்னு ஆசையா இருக்கு. அன்பாக் கொட்டணும் போலிருக்கு. உலகம் எல்லாம் அன்பாப் பொழியணும் அப்படி இப்படிங்கறியே . . . எல்லாரும் இப்படி தாறுமாறா தழுவிண்டு கட்டிப்புரண்டுதான் ஆத்மப் புரட்சியைக் காணணுமாக்கும்? என்னமோ பெரிய தத்துவம் கண்டுபிடிச்சாப்பல இது என்ன உபதேசம்? இந்த ஆஷாடபூதித்தனம் எல்லாம பிடிக்காது எனக்கு."

"பாலா, நான் ஒரு தத்துவமும் சொல்லலெ. உபதேசமும் பண்ணலெ. ஆஷாடபூதித்தனமும் பண்ணலெ. ஆத்மப் புரட்சி, சரீரப் புரட்சி - இதெல்லாம் நான் பேசவே இல்லெ. எனக்கு என்னமோ மனசிலே

படறதைச் சொல்றேன். உன் மாதிரியெல்லாம் எனக்கு ஆத்மா, மனசு எல்லாம் இருக்கோ இல்லியோ சந்தேகமா இருக்கு. எனக்கு இருக்கறது இந்த உடம்புதான். எனக்கு எல்லாரையும் தொடணும் போலிருக்கு. உனக்குக் கண்ணாலெ பார்த்தாப் போரும். சிரிச்சாப்போரும். எனக்குப் போறல்லே, தொட்டாத்தான் எனக்கு யாரையும் கொஞ்சமாவது புரிஞ்சுக்க முடியும் போலிருக்கு. பிறத்தியாரும் என்னைத் தொட்டாத்தான் எனக்கு கொஞ்சம் திருப்தியா இருக்கு. யாராவது என்னைத் தொடாத பேசிட்டுப்போனா எனக்கு என்னமோ விட்டுப் போனாப்போல, குறையா இருக்கு. இதிலே புரட்சி என்ன, ஆஷாட பூதித்தனம் என்ன? எனக்கு அது தேவையாயிருக்கு. நீயும் என் மாதிரி இருக்கணும்னு சொல்லலியே நான்."

"அது எப்படி? நீ என்னைத் தொட்டா, நான் தொடப்படாம எப்படி இருக்க முடியும்?"

எனக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

அவளையும் பார்க்கிறபோதெல்லாம், தொட்டுப் பற்றியிருக்கிறேன். கையைப் பிடித்துக்கொண்டே பேசியிருக்கிறன். கட்டையைத் தொடுகிறமாதிரி இருக்கும். சில சமயம் ஜன்னியைத் தொடுகிறமாதிரி இருக்கும். பாலா பார்க்க லட்சணமாயிருப்பாள். மூக்கு முழி என்று பெண் பிள்ளைகள், சம்பிரதாயமாக வர்ணிக்கிற அழகு, ஒல்லி, கொஞ்சம் பெண்மை. வெட்கம்கூட அவ்வப்போது தெரியும். ஆனால் எனக்குத் தெரிந்து இருபது ஆண் பிள்ளைகளாவது அவளிடம் கொஞ்ச வந்து திடீரென்று விலகி ஓடியிருக்கிறார்கள். திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை என்று சூள் உரைத்தாற்போல ஒதுங்கிப் போயிருக்கிறார்கள். ஆண் குருவி பேடை பேடையென்று கல்லுக் குருவியைக் கொஞ்சிக் கொத்தி அலகை உடைத்துக் கொண்டாற்போல எனக்கு ஒரு தோற்றம், ஏழை மக்களின் பசியைத் துரத்தி, அவர்கள் குறையின்றி வாழப் புரட்சி செய்யப் போகிறவளைத் தொடும்போது ஜோன் அவ் ஆர்க்கைப் பார்த்ததுபோல் அந்தக் காதலர்கள் மிரண்டார்களோ என்னவோ?

# 4

விச்வம் மூளிப்பட்டதைக் கேட்டபோது ஒரு வாரம் அந்த நினைவு மிகத் தீவிரமாக வந்து வந்து வதைத்துக்கொண்டிருந்தது. பெண்ணை மொட்டையடித்ததைப் போல மறுபடியும் அப்படி ஏதாவது செய்யமாட்டார் என்று நான் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேனா? நடுத்தெருவில் ஒருவனை அவமானப்படுத்த யாருக்கு என்ன உரிமை இருக்கிறது!

அந்த வேதனையில் ஒரு வாரத்திற்குமேல் இரவு தூக்கம் பிடிக்கவில்லை. சற்று கண்ணயர்ந்தால், ஏதோ மாடு வந்து என்னை மிதித்துவிட்டுப் போகிறதுபோல சொப்பனம். குருவும் சுக்ராசார்யாரும் வந்து விச்வத்தின் மீது தர்ப்பைகளை மந்திரம் போட்டு ஏவி அவை பாம்பாக அவரைச் சுற்றிக்கொள்வதுபோல் ஒரு சொப்பனம்.

இப்போது நன்றாக ஞாபகமிருக்கிறது. இந்த ஒரு வார பத்து நாள் வதை - கெட்ட சொப்பனங்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் தூக்கம் லேசாகத் தெளிந்து அரைமயக்கமாகக் குளத்தின்மீது வட்டமிடும் நரையானின் கூச்சலைக் கேட்டபோது யாரையோ தைரியம் சொல்லிச் சொல்லிப் பாடுகிற மாதிரி இருந்தது. கண்ணாடியில் என்னைப் பார்த்துக்கொள்கிற மாதிரி இருந்தது. பலநாள் காய்ச்சலடித்து விட்டவுடன் பளபளவென்று கண்ணும் குறுத்துப் பொலிவுடனும் முகத்தோலும் புதுமைபெற்று மின்னுமே, அந்த மாதிரி ஒரு பொலிவு. எனக்குக் காசிராமன் ஞாபகம் வந்தது. என் வகுப்பில் படிக்கிற பையன், திடீரென்று ஒன்றரை மாதம் பள்ளிக்கூடம் வரவில்லை. டைபாயிடு என்றார்கள். மீண்டும் ஒரு நாள் இளைத்துக் கறுத்து வந்தான். பரீட்சை வந்தது. முடிந்தது. விடுமுறை விட்டார்கள். இரண்டு மாதம் கழித்து மீண்டும் பள்ளிக்கூடம் போனபோது காசியும் வந்தான். ஆனால் காசியா என்று கண்டுபிடிக்க சிறிது நேரம் பிடித்தது. மொழுமொழுவென்று, ஒரு இரண்டு பங்கு சதை - வளர்த்தியுடன், துளி உயரமாகவும், சட்டையும் கால் சட்டையும் சற்றுப் பிதுங்குகிறதுபோலிருந்தான். ஒரு மூன்றுநாள் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டேயிருந்தேன்.

அதே புனர்ஜன்மம் எனக்கும் வந்துவிட்ட மாதிரி இருந்தது.

நெற்றியை யாரோ தொட்டார்கள், விழித்தேன். பெரியம்மா பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

"உடம்பு கிடம்பு வலிக்கிறதா அம்மணி?"

"இல்லே பெரியம்மா."

"நீ இத்தனை நாழி தூங்கமாட்டியேன்னு பார்த்தேன் . . . இந்தா காப்பியைச் சாப்பிடு."

"பல் தேச்சுட்டு சாப்பிடறேன், பெரியம்மா."

"பரவால்லெ - சாப்பிடு."

பெரியம்மாவின் கையைப் பற்றினேன். அழுத்திப் பிடித்துக்கொண்டேன். கண், முகம் மீதெல்லாம் எடுத்துவைத்துக் கொண்டேன். பெரியம்மாவின் பெண்ணும் ஐந்து வயதுப் பையனும் வந்து உட்கார்ந்துகொண்டார்கள். அவர்களையும் தடவிக்கொடுத்தேன்.

பையன் சிரித்தான்.

கையை எடுத்ததும், தானே என் கையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டான்.

பெரியம்மாவின் பெண்ணின் கையையும் பற்றினேன்.

காசிராமனைப்போல நானும் வேறு ஜன்மம் எடுத்துவிட்டேன் போலிருக்கிறது. பெரியம்மா, அவளுடைய குழந்தைகள் இத்தனை பேரும் புதுமாதிரியாக என்னைத் தொடுவது போலிருந்தது.

அன்றுமுதல் பெரியம்மாவோடு, கோயில் கடைகண்ணி என்று போகும்பொழுதெல்லாம், அவள் கைவிரல்களைக் கோத்துக்கொண்டேன். பள்ளிக்கூடத்திலும்தான். தொடுகிறது ஒரு மாயமாக, ஒரு பேச்சாக இருக்கிறது. ஏன் இத்தனை நாள் யாரையும் தொடாமலிருந்தோம்? தொட்டிருந்தால் இன்னும் எத்தனையோ பேர் நண்பர்களாகியிருப்பார்கள். கைவழியாக என்னென்னமோ சொல்லியிருக்கலாம்.

பையன்களைத் தொடமுடியவில்லை. தொடத் துடித்தது. ஆனால் வாய்ப்பில்லை. தனித்தனியாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் பெஞ்சுகள். திடீரென்று அன்று தோன்றிற்று - ஏன் இப்படி பெஞ்சுகளையும் கக்கூஸ்மாதிரி பிரித்துப் போட்டிருக்கிறார்கள் என்று.

"ஏன், கையைப் புடிச்சுப் பிடிச்சுண்டு பேசறே!" என்றாள் காமினி. அவள் ஜட்ஜ் வீட்டுப் பெண். பள்ளிக்கூடத்திற்குக் காரில் வருவாள். காரில் திரும்பிப் போவாள்.

"நீ ஜட்ஜ் வீட்டுப் பெண்ணோல்லியோ? காக்காய் பிடிச்சு வச்சிருந்தா சௌகர்யமா இருக்குமேன்னுதான். உனக்கு இஷ்டமில்லேன்னா விட்டுடறேன்" என்று வரக்கென்று கையை இழுத்துக்கொண்டேன்.

"கோபமாப் பேசறியே."

"நானா? நான் தொட்டு உனக்குன்னா கோபம் வந்தது?"

"ஷட்டப்" என்று கத்திவிட்டு அந்தப் பெண் உடனே என்னை அணைத்துக்கொண்டது. "நீ வீட்டுக்கு வா" என்றது பிறகு.

"எதுக்கு?"

"எங்கப்பா ஜட்ஜு - அவரைக் காக்கா பிடிக்கத்தான். நீ ஒரு தடவை எங்கப்பாவை வந்து பாரு போரும். அப்பறம் காக்கா பிடிக்கறதுக்குப் பதிலா கால் கையெல்லாம் முறிச்சுட்டுப் போயிடுவே."

"ஐயையோ."

"ஆமா, செஷன்ஸ் ஜட்ஜ் ஆனதிலேருந்து எங்கப்பாவுக்கு ஸ்வாமி மாதிரி ஆயிட்டதாக எண்ணம். வீட்டிலேயும் ஜட்ஜ் மாதிரியே இருப்பார். கோர்டிலேகூட போய் பார்த்திருக்கேன் - அவரை. அவரே என்னை பெரிய கோர்ட்டுக்கெல்லாம் அழச்சிண்டு போயிருக்கார். அந்த கோர்ட்டிலே ஒரு வக்கீல் வாள்வாள்னு யாரோ திருடன் வந்த தெருவிலே பூந்துட்டாப்போல இரைஞ்சு குரைச்சுண்டேயிருந்தார். எதிரே உட்கார்ந்திருந்த அஞ்சாறு ஜட்ஜும் இப்படி ஒரு பக்கம் ஒண்ணு பாத்துண்டிருந்தது. அப்படி ஒரு பக்கம் பார்த்துண்டிருந்தது. ஒண்ணு பூனை மாதிரி கண்ணை மூடிண்டிருந்தது. ஒண்ணு பென்சிலைக் கடிச்சுண்டேயிருந்தது. இன்னொண்ணுக்கு மூலம். நாற்காலியிலே இப்படியும் அப்படியுமா உடம்பைத் திருகிண்டு மூஞ்சியைச் சுளிச்சுக்கிண்டே கேட்டுண்டுருந்தது.

பாத்தா வேடிக்கையா இருக்கும். தங்களைப்போல உலகத்திலே ஒருத்தருமே கிடையாது. இதைவிட ஒஸ்தி வேலையே கிடையாதுன்னு எல்லாம் மனசுக்குள்ளே பீத்திக்கிண்டு உட்கார்ந்துண்டிருக்கும், எங்கப்பாவும் அப்படித்தான் இருப்பர்."

"ஏன் உங்கப்பாவைப் பத்தி இப்படியெல்லாம் பேசறே? உன்னை வெறுமே வெறுமே கோச்சுப்பாரா?"

"என்னைக் கோச்சுக்க மாட்டார். அம்மாவைக் கோச்சுப்பர், கோச்சுக்கவும் மாட்டார். அம்மா பேசறபோது அம்மா கண்ணையே பார்த்துண்டிருப்பர், அம்மா தப்பாப் பேசறோமோன்னு பயந்துண்டு இன்னும் தப்பு தப்பாவே உளறிக் கொட்டிண்டேயிருப்ப, ஒரு ஜட்ஜு வேலை வந்துடுத்துன்னு இதுக்கு எத்தனை கர்வம் பாருன்னு நெனச்சுப்பேன்."

"ஒரு தடவை தொட்டுப் பேசினதற்காக, இந்தப் பெண் எவ்வளவெல்லாம் கக்கிவிட்டதென்று நான் நினைத்துக்கொண்டேன். அந்தப் பெண் எனக்கு மிகவும் சிநேகமாகிவிட்டது அன்று தொடங்கி. அப்பா அம்மாவைப் படுத்துகிறார் என்பதற்காக, அதற்கு எல்லா ஜட்ஜுகள் மீதும் கோபம். தினமும் காலையில் பத்திரிகை படித்துவிட்டு ஏதாவது ஒரு தீர்ப்பை எடுத்துக்கொண்டு "இந்தப் பைத்யம் எல்லாத்தையும் ஜட்ஜுன்னு போட்டிருக்கா பாரு" என்று சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கும்.

இந்த மாதிரி பல பெண்களை நான் தொட்டுத் தொட்டுத் திறந்திருக்கிறேன்.

கடைசியில் ஒரு பையனும் கிடைத்தான். என் வகுப்புத்தான். கடைசி பெஞ்சியில் உட்கார்ந்திருப்பான். கொஞ்சம் விஷமக்காரன். தப்பு விஷமம் இல்லை. யாரைப் பார்த்தாலும் அப்படியே சித்திரம் வரைந்துவிடுவான். வகுப்பில் அதைச் செய்ததற்காக காட்டான் கோபாலய்யர் அந்த நோட்டைக் கிழித்தெறிந்து அவனை ஒரு நாள் முழுவதும் வெளியே நிறுத்தியிருந்தார். ஒரு தடவை ஒரு வாரம் வரவில்லை. பிறகு வந்தவனை ஏதோ சரியாக பதில் சொல்லவில்லை என்று அருகே வரச்சொல்லி கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டு, பெஞ்சுமீது ஏறச் சொல்லியிருக்கிறார். பத்து நிமிஷத்தில் வகுப்பு முடிந்தது, எல்லோரும் சாப்பாட்டுக்குக் கலைந்தார்கள். அந்தப் பையன் மட்டும் முன் பலகை மீது தலையை வைத்துப் படுத்துக் கண்ணை மூடிக்கொண்டான்.

அருகே போனேன். நெருங்கிப் பார்த்தேன். பொட்டு நாளம் தக்தக்கென்று துடித்துக்கொண்டிருந்தது. இடது கையால் பொட்டைத் தொட்டு, வலது கையால் அவன் கையைப் பற்றினேன்.

விழித்தவன் என்னைப் பார்த்ததும் மிரண்டு ஒதுங்கி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ஏன் படுத்துண்டிருக்கே? சாப்பிடப்போகலெ?"

"இல்லெ, தலையை வலிக்கிறது."

"வாத்தியார் அடிச்சதா?"

"ஆமாம். போனவாரம் மணல்வாரி அம்மை போட்டிருந்திச்சு. அதான் வல்லெ. முந்தாநாத்தான் தலைக்கு தண்ணி போட்டாங்க, இப்ப சார் அடிச்சாங்களா, விண்ணுனு தெறிக்குது."

"நீ அப்படியே சாஞ்சுக்கோயேன் பெஞ்சிலே, நான் தலையை அழுத்திவிடறேன்."

"பரவாலெ. சரியாப் போயிரும்."

"இல்லெ. நான் வேணும்னா ஹெட்மாஸ்டர் ரும்லே பஸ்ட்ஏய்ட் பாக்சிலேர்ந்து தலைவலி மருந்து வாங்கிண்டு வரேன்."

"பரவால்லெ" என்று அவன் ஒரு மந்த சிரிப்புடன் வகுப்பு வாசலைப் பார்த்தான். நானும் திரும்பிப் பார்த்தேன். நாலைந்து பையன்கள் வேடிக்கை பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தார்கள். அடுத்திருந்த ஜன்னலில் என் வகுப்புப் பெண்களே இரண்டுபேர். ஒருத்தி ஜட்ஜின் பெண், ஜட்ஜு மாதிரியே அவள் பார்க்கிறது போலிருக்கிறது. ஜாடை காட்டினேன். பையன்களை விலகிக்கொள்ளச் சொல்லி, உள்ளே வந்தாள். அவளிடம் சொன்னதும் ஓடிப்போய் தலைவலித் தைலத்தை வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள்.

அவன் பொட்டில் தேய்த்தேன். எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"பேரு சரியாத்தான் வச்சிருக்கு - காட்டான் கோபாலய்யர்னு. இதகள்ளாம் ஏன் வாத்தியார் வேலைக்கு வரது. போலீஸ் வேலைக்குப்

போய், எங்கப்பாவுக்கு முன்னாலெ கோர்ட்டிலே போய்னா நிக்கணும்."

அந்தப் பையன் போதும் போதும் என்று நாணிக்கொண்டே ஒதுங்கிக்கொண்டான். அவனுக்கு வேடிக்கை பார்க்கிறவர்களைப் பார்த்துக் கவலை.

"அம்மை போட்டு தலைக்கு ஜலம் விட்டுண்டிருக்கறது வாத்தியாருக்குத் தெரியுமா?"

"என்னமோ தெரியலெ. அம்மை போட்டுனா லெட்டர் எழுதக் கூடாதாம்? லீவு லெட்டர் கொடுக்கலெ."

"பரவாயில்லெ. எதுக்கும் ஹெட்மாஸ்டர்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி வச்சா நல்லதுதானே. நாளைக்கு இதே மாதிரி வேற யாரையாவது அடிச்சு . . ."

"வாண்டாம்."

"ஏன் வாண்டாம்?"

"வாண்டாம்."

"நாங்க போய் சொல்லலாமா?"

"வாணாம்."

ஜட்ஜின் பெண் என்னைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிற்று.

"ஏன்?"

"கோளிச்சொல்லின்னு வேற சத்தம் போடுவாங்க சார்" என்று வெள்ளைப் பல்லோடு மொச்சை மொச்சையான குறுநகையுடன் நாணினான் பையன்.

அதோடு தீர்ந்துவிட்டது.

முழுவதும் தீரவில்லை.

பிற்பகல் காட்டான் சார் வகுப்புக்குள் நுழைந்து உட்கார்ந்ததும், "என்ன நாரதர் வேலையெல்லாம் நடக்கறாப் போலிருக்கு" என்றார் பெண்கள்

பெஞ்சுகளைப் பார்த்து.

முதலில் எனக்கு திக்கென்றது.

"என்ன பதிலைக் காணும் . .? உங்களைத்தான் கனம் அம்மணி அம்மாள்."

"என்னையா சார்?"

"ஆமாம் - உங்களையேதான். நாரதர் வேலையா? நாரதி வேலையா?"

"நர்சு வேலை சார்" என்றேன்.

பையன்கள் சிரித்தார்கள்.

"அது ரைட், அப்பறம் நாரதர் வேலை என்னத்துக்கு?"

"செய்யலியே."

"செய்யறதாகத் தூண்டிவிட்டேளோ இல்லியோ?"

"ஆமாம் சார்."

"என்னது! ஆமாம் சாரா!"

"ஆமாம் சார். நாளைக்கு இன்னும் வேற யாரையாவது நீங்க அடிச்சு, உங்களை வேலையைவிட்டு டிஸ்மிஸ் பண்ணாம இருக்கணுமேன்னுதான். சரியா படிக்கலேங்கறதுக்காக பையன்களை அடிச்சா, வாத்தியார்களை டிஸ்மிஸ் பண்ணலாம்னு சொன்னா. அதான் சார் பயமாயிருந்தது" என்று உதட்டை அனுதாபத்துடன் பிதுக்கினேன்.

"அப்படியா?" என்று சிறிது நேரம் என்னையே பார்த்தார் குருநாதர்.

"சரி உட்காரலாம்" என்றார் பிறகு.

உட்கார்ந்தேன்.

பையன்கள் வாத்தியாரையும் என்னையும் பார்த்து வகுப்பு முழுவதும் ஒரே நமுட்டுச் சிரிப்பாகத் தோரணம் கட்டியிருந் தார்கள்.

பக்கத்து முழங்கை இடித்தது. ஒரு நோட்டு லேசாக நகர்ந்தது என் பக்கம். "நீ எங்க வீட்டுக்கு வா, எங்கப்பாவிடமும் இந்த மாதிரி பேசணும். நான் பார்க்கணும்" என்று ஜட்ஜின் பெண் எழுதியிருந்தது.

மூன்று நாள் கழித்து பள்ளிக்கூடம் போனபோது காம்பவுண்டுச் சுவர்ப் பக்கம் ஆங்காங்கு சின்னச் சின்ன கும்பலாகப் பையன்களை நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நானும் இரண்டு குட்டிகளுமாக என்னவென்று பா£ர்க்கப் போனோம்.

"அம்மணி சண்முகநாதனை வைத்துக்கொண்டிருக்கிறாள்."

"அம்மணி சண்முகநாதன் வைப்பாட்டி."

"தலைவலியா, அம்மணி தடவித் தீர்ப்பாள்."

இந்த மூன்று விளம்பரங்கள் தாரில் திரும்பத் திரும்ப, காம்பவுண்டு சுவர், எங்கள் வகுப்புச் சுவர், கொல்லையில் ஒரு சுவர் இங்கெல்லாம் எழுதியிருந்தது.

லேசில் அழியாத தார் எழுத்து.

நிச்சயமாக அப்போது சிரிப்பு வரவில்லை. குபீரென்று வயிற்றில் ஒரு கணப்பு. கண் பறந்தது. கக்கூசுக்குள் போனேன். விசும்பி விசும்பி அழுதேன்.

"அம்மணி, அம்மணி" என்று குரல் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஜட்ஜின் பெண் கதவைத் திற . . . ஏதாவது பண்ணிக்கொண்டு விடாதே அம்மணி."

" . . . "

"அம்மணி."

". . ."

"தகரக் கதவு உலுங்கிற்று.

"அம்மணி."

"ம்."

"கதவைத் திற."

"திறக்கிறேன்."

திறந்ததும் இன்னும் நான்கு பெண்களும் நின்றுகொண்டிருந்தார்கள். இன்னும் அழ விடுகிற பார்வை. அதைப் பார்த்ததும் நறுக்கென்று கண்ணைத் துடைத்துக்கொண்டேன். விறுவிறுவென்று விறைப்பாக நடந்தேன். தலைமை ஆசியரிடம் போய் "என்னை செக்ஷன் மாற்றுங்கள் சார், காட்டான் கிளாசில் நான் இருக்க முடியாது" - கத்தவில்லை, உறுமினேன்.

"அப்படீன்னா?"

"அப்படின்னா அப்படித்தான்."

"என்னது?"

"உடனே மாத்தணும். இல்லேன்னா, உங்களையும் சேர்த்து சந்தியிலே இழுப்பேன். ஏன்னா, உங்க அஜாக்ரதையாலெதான் இந்த மாதிரி இந்தக் காட்டான் வாத்யாருக்கு எழுத முடிஞ்சுது."

"அவரா இப்படியெல்லாம் பண்ணியிருப்பார்ங்கறே."

"அவர் கையில்லை. அவர் செலவழிச்சு வாங்கிக் கொடுத்த தாரும் அனுப்பின பையன்களும் ப்யூன்களும்."

"அபாண்டமா, விசாரிக்காம சொல்லப்படாது."

"நான் உங்ககிட்ட இதை நிரூபிக்க வரலெ, சார்! நான் செக்ஷன் மாறணும்."

"உனக்கு யார் பிடிக்கிறதோ அந்த செக்ஷன்லெ போய் உட்காரு."

இதைச் சொன்ன குரலைக் கேட்டபோது, நான் ஒரு சமயம் கலியாணம் பண்ணிக்கொண்டு எனக்குப் பிள்ளை குட்டிகள் பிறந்தால், அதை நிச்சயமாக ஒரு வாத்தியார் உத்தியோகத்திற்கு விடுவதில்லை; அதுவும் நிச்சயமாக எங்கள் ஜில்லாவில் விடுவதில்லை என்று கத்தி அவர்

மூக்கைக் கடிக்க வேண்டும் போலிருந்தது.

அந்த ஆண்டு மனசு, வீடு எல்லாம் அல்லோல கல்லோலப் பட்டது. காட்டான் மீது விசாரணை நடந்துகொண்டிருந்தது. சம்சாரத்தை ஆட்டிவைக்கிற ஜட்ஜுகூட போலீசுக்குச் சொல்லி உளவு கண்டுபிடிக்கச் சொன்னாராம். கல்வி இலாகாவிலேயே விசாரித்தார்கள். காட்டானுக்கு வேலை போய்விட்டது.

அன்னவாசலில் என் மானம் காற்றாகப் பறந்தது. என்னைப் பார்த்ததும் கிழம், சிறிசு எல்லாவற்றிற்கும் வாயிலிருந்து ஜொள் சொட்டுவதைக் கண்டேன். பள்ளிக்கூடத்திலும், பையன்கள் மட்டும் இல்லை. வாத்தியார்கள்கூட என்னைத் தனியாகப் பார்த்தால் ஒரு இழை சிரிப்பார்கள். வீட்டுக்கு வந்து வாசல் குறட்டில் நின்றால், தெருவோடு போகின்ற நாலைந்து பையன்கள் எதிரே வீட்டு வாசலைப் பார்த்துக்கொண்டு பேசுவார்கள். இந்த மாதிரிப் பெண்களுக்குக் காதும் காதுமாகக் கலியாணம் பேசி, ஹைதராபாத்திலிருந்தோ, டில்லியிலிருந்தோ, பம்பாயிலிருந்தோ, ஒரு நடு வயது தலைமை குமாஸ்தாவுக்கோ அல்லது 'அதே' மாதிரியான தாயாருள்ள ஒரு பிள்ளைக்கோ கோயில் சத்திரம் என்று ஒரு முகம் தெரியாத இடத்தில் தாரைவார்த்து, மொட்டைக் கடுதாசி வருவதற்கு முன்னால் ரயில் ஏற்றிவிடுகிற வழக்கம்.

பெரியம்மா ராஜாத்தி மாதிரி நின்றாள். அம்மாவிடம் சொன்னாள். "இத பாருங்கோ - இது எங்கிட்ட வளர்ந்த குழந்தை. இதுக்குக் கல்யாணம் பண்றதும் பண்ணாததும் என் இஷ்டம். இது படிக்கப்போறது. நீங்க இதை எனக்கு ஸ்வீகாரம் கொடுத்துட்டதாக நினைச்சிண்டு ஊருக்குப் போகலாம்."

அம்மாவும் அப்பாவும் ஊருக்குப் போனார்கள். செக்கின் பாட்டு மறைந்தது. கண்டுவின் முகம் மறைந்தது. திருவிழா, உற்சவம், பஜனை எல்லாம் மறைந்தது.

பெரியம்மாவின் கையைப் பிடித்துப் படுத்துக்கொண்டிருந்தேன், நல்ல தூக்கம்.

# 5

பெரியம்மா சொன்ன வேகத்தையும் தீர்மானத்தையும் நினைத்து நினைத்து வியக்க வேண்டும்.

"நீங்க இதை எனக்கு ஸ்வீகாரம் கொடுத்துவிட்டதாக நினைச்சிண்டு ஊருக்குப் போகலாம்."

இதை அவள் சத்தம் போட்டுச் சொல்லவில்லை. முகத்திலும் விகாரம் இல்லை. கண்ணில் மட்டும் ஒரே ஒருகணம், ஒரு கணத்திலும் கணம் - கூராக ஒரு ஒளி. வாசலில் தினம் ஒன்பது மணிக்குப் போகிற டாக்டரின் குதிரை வண்டியில் கூண்டோரமாக விளக்கு மாட்டுகிற எஃகுப் பட்டம் பளபளவென்று தெரியும். ஓடுகிற வேகத்தில் எப்பொழுதாவது ஒரு நொடி, அதில் வெயில் பட்டு திரும்பி குறட்டில் நிற்கிற என் கண்ணை சுரீர் என்று குத்தும். பிறகு ஐந்து நிமிஷம் கண்ணே பொட்டையாகிற குத்தல். அந்த மாதிரி ஒரு ஒளி, ஒரே நொடி - அந்தக் கண்ணில் பறந்து, மறுகணம் இருந்த இடம் தெரியவில்லை. அது மட்டுமில்லை, பெரியம்மா வழக்கம்போல சிரித்தாள். அந்த ஒரு கண மௌன வெறி பலித்துவிட்ட எக்களிப்பில் வந்த சிரிப்போ என்னவோ.

அப்பா - அம்மா ஊருக்குப் போனதும் பெரியம்மாவிடம் சொன்னேன், "போற போதெல்லாம் சமத்தாயிருடா குழந்தேன்னு சொல்லுவா. இந்தத் தடவை சொல்லலெ" என்று.

"தன் குழந்தையாயிருந்தா சமத்தாயிருக்கணுமே பிறத்தியார் வீட்டிலேன்னு கவலையாயிருக்கும், இனிமே என்ன?"

மறுபடியும் சிரிப்பு.

என்னை சமவயதாக ஏற்றுக்கொண்ட சிரிப்பு. பெரியம்மாவின் சிரிப்பைக் கேட்காதவர்கள் பரம ஏழைகள்.

சின்னது பெரியது, மேல் கீழ், உயர்வு தாழ்வு - இது தெரியாமல் இருந்தால்தான் அப்படிச் சிரிக்க முடியும். இதைக் கண்டுபிடிக்க

எத்தனையோ காலமாயிற்று எனக்கு.

எனக்கும் சிரிப்புதான் தோழி. விவரம் தெரிந்ததிலிருந்து சிரித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் பெரியம்மாவின் சிரிப்பு தானாக வருகிற சிரிப்பு. அதற்கு ஒரு அர்த்தமும் கிடையாது - சந்தோஷத்தைத் தவிர. அதனால்தான் பெரியப்பாவுக்கும் பிரச்னையே இல்லை என்று தோன்றுகிறது.

பெரியப்பாவுக்குப் படிப்பு அதிகம் இல்லை. ஆறாவது வரையில் படித்தாராம்.

"பிராமணனாப் பொறந்த வினை - செட்டி கடையிலே உக்காந்து கணக்கு எழுதறேன், இல்லாட்டா வயல்லெ இறங்கி உழுதுண்டிருக்கலாம்" என்பார்.

பெரியப்பாவுக்கு சின்ன சம்பளம்தான். ஆனால் நான் படித்த பொருளாதார சாஸ்திரங்களுக்கெல்லாம் தப்பு உதாரணம் அவர். அதாவது நாகரிகம் இல்லாத மனிதர். தேவை கிடையாது. பரப்பு கிடையாது. கடை அனுபவத்தின் பலத்தில் சொந்தக் கடை வைக்க ஆசைப்படவில்லை. சொந்த வீடு கட்டிக்கொள்ளத் திட்டம் இல்லை. காலையில் எழுந்து குளித்ததும் முக்கால்வாசி நாள் கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்வார். சில நாள் "கொண்டா காபியை" என்பார், குளித்தவுடன்.

"ஜபம் ஆயிடுத்தா?" என்பாள் பெரியம்மா.

"இன்னிக்கு பண்ணலெ."

"ஏன்?"

"சும்மா என்னத்துக்குத் தொந்தரவு பண்ணனும் அவரை தினம் தினம்? எனக்குப் புளிச்சுப் போயிடுவரோன்னு கவலையாயிருக்கு" என்று என்னைப் பார்த்துக் கண்ணை சிமிட்டுவார்.

கடைகட்டி இரவு வீட்டுக்குத் திரும்புகையில், வழியில் பழைய புத்தகக் கடையில் அரையணா ஒரு அணாவுக்கு இங்கிலீஷ் துப்பறியும் நாவல்கள் வாங்கி வருவார். இரண்டு மூன்று இரவுகளில் படித்து முடிப்பார். இப்படியே அவருக்கு இங்கிலீஷ் அறிவும் வளர்ந்துவிட்டது. சற்று கன, ஆழ புத்தகம் எல்லாம் நான் கொண்டுவந்து கொடுத்தால் படிப்பார். இந்த மாதிரி ஏதாவது பழைய கடையில் வாங்கிவரக் கூடாதா என்றால்

"இதையெல்லாம் எதுக்கு விலை கொடுத்து வாங்கணும்? ட்ராஜடி வேணும்னா எங்க செட்டியாரைப் பார்த்துண்டேயிருந்தால் போரும். போன ஆடியோட இருபது லட்சம் பாங்கியிலே நிகரமா சேர்ந்துடுத்து. மனுஷன் ஒரு நாளைக்கு புருவம் உயராமல் இருந்து நான் பார்க்லெ. மூத்த பிள்ளை பைத்தியம், இரண்டாவது பிள்ளையோட பொண்டாட்டி ஆத்திலெ விழுந்து தற்கொலை பண்ணினூடுத்து. மூணாவது பிள்ளை குடிச்சிண்டே, சாரங்கபாணித் தெருவோட கிடக்கான். சொத்திலெ என் பங்கைக் கொடுன்னு வியாஜ்யம் போட்டிருக்கான். உனக்கு ரைட் கிடையாது - எல்லாம் என்னோட சுயார்ஜிதம்னு இவர் கட்சி ஆடிண்டிருக்கார். வக்கீல் அய்யங்கார் பீஸ் பணத்தை வச்சுண்டே புது வீடு வாங்கிப்ட்டார். காமெடி வேணும்னு நான் அதுக்கும் புஸ்தகம் வாங்க வாண்டாம், உங்க பெரியம்மாதான் சிரிச்சிண்டேயிருக்காளே" என்று கண்ணைச் சிமிட்டுவார். அவருக்கு எதற்கும் கண்ணைச் சிமிட்டுகிற பழக்கம்.

கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டியே நான் எது கேட்டாலும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

முதல் பெண்ணுக்குத் தன் மாதிரியே ஒரு கடைப் பையனுக்குக் கலியாணம் முடிந்துவிட்டபோது எனக்குச் சிறிது குறையாக இருந்தது, கேட்டுவிட்டேன்.

"ஏன் என் மாதிரிங்கறே? அவன் ஜவுளிக் கடையிலேன்னா ஸேல்ஸ்மன்!"

"கொஞ்சம் நல்ல இடமாப் பார்க்கப்படாதா?"

"இவன்தான் மலிவாக் கிடைச்சான். நான் என்ன பண்றது. நீங்க கலியாணம் பண்ணிக் கொடுத்துடுங்கோ போரும்னு இவன்தான் சொன்னான். இவன் அப்பாவும் எங்க ஷட்டகர் - அதான் உங்க பெரியம்மாவோட மூத்த அக்காளோட எஜமானர் மாதிரி ஐ.ஏ.எஸ்.ஸைப் பெத்திருந்தா, சும்மா இருப்பாரா? ரொக்கமா முப்பதாயிரம் கொடு, ஒரு கார் வாங்கிக் கொடு, ப்ரிஜிடேர் வாங்கிக் கொடு, பொண்ணுக்கெல்லாம் பட்டுப்புடவை வாங்கிக் கொடு, கலெக்டர்கள், செக்ரடரி, மினிஸ்டர்லாம் ரிசப்ஷனுக்கு வருவா அதனாலெ ரண்டாயிரம் பேருக்காவது ஏற்பாடு பண்ணனும்னு கேட்டிருப்பார். ஷட்டகர் பையன் கலெக்டர். ஜில்லாவெல்லாம் ஆள்றான். ஆனா தானா பார்த்து ஆசைப்பட ஒரு பொண்ணு கிடைக்கலெ. ஓவர் வொர்க்கோ என்னமோ - இதுக்கெல்லாம்

போது இருந்திருக்காது. ஜாதகம் பார்த்துப் பொண்ணைப் பார்த்து சரின்னான். அப்புறம் எல்லாம் எங்கப்பா அம்மாவைக் கேட்டுக்குங்கோன்னு அடங்கின பிள்ளையா இருந்துட்டான். ஷட்டகரும் உங்க பெரியம்மாவோட அக்காவும் நன்றாகத் திருகிப் பிழிஞ்சாளே பார்க்கணும் கரும்பு மிஷின் மாதிரி - அப்படியே கீழே ப்ரிஜிடேரும், ரொக்கமும் நகையும் அஞ்சு செட்டு ட்ரஸ்ஸும் வெள்ளிப் பாத்திரமுமா வந்து கொட்டித்து. நான் இதுக்கெல்லாம் எங்கே போவேன்? ஆளைப் பார்த்தா நல்ல ஆம்பளையா இருக்கான். நிச்சயம் பண்ணியாச்சு."

"பாரு பெரியம்மா - உங்க அக்கா பிள்ளை கலெக்டர், உன் மாப்பிள்ளை ஜவுளிக்கடைப் பையன்.

"நாமெல்லாம் போனா, சிணுங்காம, ஒண்ணுக்கு நூறு புடவையா எடுத்து விசிறுவன். நன்னா பார்த்துப் பொறுக்கி வாங்கலாம். வாங்காதபோனாலும் கோச்சுக்க மாட்டான்."

"பாத்தியா" என்று உதட்டால் பெரியம்மாவை எனக்குக் காட்டிக் கண்ணைச் சிமிட்டினார் பெரியப்பா.

"என்ன பாத்தியா? எங்க அக்கா புருஷன் வாத்யார்தானே. என்னம்மோ அவரே நன்னா கவனிச்சு சொல்லிக் கொடுத்து பிள்ளையை ஐ.ஏ.எஸ்.ஸிலே தேற வச்சார். அவருக்குக் கஷ்டப்பட்ட கொடுமை. சம்பந்திகிட்ட கறந்தார். அந்தப் பையன் அப்படியிருப்பானா என்ன? அவனுக்குப் பிள்ளை பொறந்தா இப்படியெல்லாம் வாயைத் திறந்து கேக்கமாட்டான். பொண்ணைக் கொடுக்கறவாளே தானே செஞ்சிடுவா! கவர்மெண்டிலே பெரிய உத்யோகம் பண்றவா வாயைத் திறந்து கேப்பாளா!" என்றாள் பெரியம்மா.

"பாத்தியா!" என்றார் பெரியப்பா.

"என்ன பாத்தியா? புதுசா அதிகாரம் - பணம் வரதுக்கும், அதிகாரம் பணம் உள்ளவாளுக்குப் பிள்ளையபாப் பொறக்கறதுக்கும் வித்யாசம் இல்லையா?"

"பேரன் பேத்தியா இருந்தா இன்னும் விசேஷம்."

"ஆமா - எங்க தாத்தா வாத்யார், எங்க பாட்டி வாத்யார் பொண்டாட்டின்னெல்லாம் அதுகளுக்கு ஏன் தெரியணும்?" என்றாள்

பெரியம்மா. அர்த்தம் இல்லாமல் சிரிக்கவும் சிரித்தாள்.

"இதெல்லாம் என்னத்துக்கு வீண் பேச்சு? நான் பத்திரிகை அடிக்கப்போறேன். டின்னருக்குன்னு சீட்டு தனியா வைக்கப் போறதில்லை. அந்த சீட்டு அனுப்பிச்சவாளுக்குத்தான் சாப்பாடுன்னு சொல்லவும் போறதில்லெ. செட்டியார் நம்மாத்து கலியாணத்துக்குன்னு காமெடியா இருக்கேன்னு சொல்லியிருக்கார். ஜாமான் எத்தினி வேணும்னாலும் அனுப்பறேன். சாப்பாட்டிலே மிச்சம் புடிக்காதீம்னு சொல்லிட்டார். போருமா . . ?

அது கெடக்கட்டும். இதை எல்லாம் கேட்டு எங்க ஷட்டகர், அவர் பிள்ளையெல்லாம் நீ தப்பா நெனச்சுனூடாதே, அவன் இந்த ஜில்லாவுக்கு மேஸ்ட்ரேட்டா வந்தா, உன்னை ஒண்ணும் செய்ய வேண்டாம்னு சொன்னா நிச்சயமாகக் கேப்பன்" என்றார் பெரியப்பா.

"என்னது! என்ன சொல்றேள் பெரியப்பா?"

"சேரி, குடியானத்தெருன்னு ஊர் ஊராப் போய் மீட்டிங்கிலெ நீ பேசறியோல்லியோ, கவர்மெண்டுக்கு விரோதமா. ஒரு சமயம் உன்னைப் போலீஸிலே புடிச்சாலும் கேஸ் நிக்காம நம்ம ஷட்டகர் பிள்ளை பாத்துப்பன்னு சொல்றேன்."

எனக்குத் தூக்கிவாரித்தான் போட்டது.

"நான் சொல்றது சரிதானே!" - பெரியப்பா.

"எதுக்கு உங்க ஷட்டகர் பிள்ளைக்கு தாட்சண்யம்? அவர் கடமையைச் செய்யட்டுமே" என்று கத்திமேல் கால் வைத்தேன்.

"என்னது!" என்றாள் பெரியம்மா. "என்னடி அம்மணி?"

"உலகத்திலே ஏழையே இருக்கப்படாதாம். பணக்காரா பணம் சொத்து எல்லாம் பிடுங்கி ஏழைகளுக்குக் கொடுக்கணுமாம். மாசாமாசம் எக்ஸ்கர்ஷன் எக்ஸ்கர்ஷன்னு போறாளோல்லியோ அம்மணி - இதைத்தான் ஊர் ஊராப் போய்ச் சொல்லிண்டிருக்கா. ஆனா உனக்கு ஜவுளிக் கடைப் பையன் மாப்பிள்ளையா வந்தா வருத்தமாயிருக்கு அவளுக்கு."

இனிமேல் அசடு வழிவதில் அர்த்தமில்லை என்று தோன்றிற்று.

"உங்களுக்குப் பிடிக்காட்டா, நான் போகலெ பெரியப்பா" என்றேன்.

"என்ன பயமுறுத்தியாறது குழந்தையை?" என்றாள் பெரியம்மா.

"குழந்தையா! பணக்காரா எல்லாரையும் சேர்த்து தேங்கா முடியறதுபோல முடிஞ்சு, மூக்கு காதையெல்லாம் சீவி அவா சொத்தையெல்லாம் ஏழைகள்கிட்ட கொடுக்கப்போறா . .! நமக்கு லாபம்தானே?"

"ரக்தபீஜன் மாதிரி சாய்க்க சாய்க்க கிளம்பிண்டேயிருப்பா அவா. அப்ப என்ன பண்ணுவியாம்?" என்றாள் பெரியம்மா என்னிடம்.

"என்ன பெரியம்மா?"

"சாமுண்டேச்வரி ரக்தபீஜனை அடிச்சா ஒவ்வொரு துளி ரத்தத்திலேர்ந்து ஒரு ரக்தபீஜன் கிளம்பிண்டேயிருந்தான். ஒருத்தன் இருந்த இடத்திலே லட்சம் பேராயிடுத்து. அப்பறம் ரத்தம் கீழே விழாம இன்னொரு தேவி குடிச்சா. ஓஞ்சுது. இது என்னடி பைத்தியப் பேச்சு? வரதாவூர்லெ மூணு வருஷம் ஒரு ஆளைக் கொன்னுட்டு, கிட்டநின்ன சாட்சிகள், போலீஸு எல்லாருக்கும் பணத்தை அள்ளி வீசினான். தருக்கா பிருக்கான்னு சாட்சி சொல்ல வச்சு எல்லார் மண்டையையும் குழப்பித் தப்பிச்சுனூட்டான். கடைசியிலே அவனோடதானே சேந்துண்டா எல்லாரும் . . ." என்று சொல்லித் திடீர் என்று சிரித்தாள் பெரியம்மா.

"என்னது? கலியாணம் கலியாணம்னு ஆரமிச்ச பேச்சு ரக்தபீஜங் கிட்ட வந்து நிக்கறது!"

"நீதானே கொண்டுவந்தே" - பெரியப்பா.

"இல்லே, நீங்கதான்" என்று பேச்சை மாற்றியும் விட்டாள் பெரியம்மா.

பெரியப்பா கண்ணைச் சிமிட்டினார்.

# 6

இரவு கொல்லைத் தாழ்வாரத்தில் அரிக்கேன் விளக்கிற்கு முன் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வரி மங்குகிற நினைவு. பெரியப்பாவுக்கு எப்படி நம் சேரிப் பயணம் எல்லாம் தெரிந்தது?

கண்டிக்க என்று தனியாக ஒரு 'செஷன்' வைத்துக்கொள்ளாமல், பேச்சோடு பேச்சாக விட்டுவிட்டாரே! கண்டிக்கிறாரா, உடன்படுகிறாரா - ஒன்றும் புரியவில்லை. நான் சொல்லாமல் அவராகக் கண்டு பிடித்ததால் எனக்குக் குறுகுறுப்பு. புத்தக வரிகள் தெரியவில்லை. பெற்ற குழந்தைகளுக்கு இருக்கிற கட்டுப்பாடு எனக்கு இல்லை. ஸ்வீகாரக் குழந்தைகளுக்கு இருக்கிற சுதந்திரமும் சுவாதீனமும் வீடு நிறையக் கிடந்தன.

சுவர்மீது பல்லி பிடித்துக் தின்னுகிற பூச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வேறு ஏதோ பல்லி தாழ்வாரத்து இரப்பில் சற்றைக்கொருதரம் சிக்சிக்சிக்கென்று அடித்தது. அம்மா ஞாபகம் வந்தது. ஒவ்வொரு கௌளி சொல்லுக்கும் அம்மா விரலால் தரையில் தட்டுவாள். இப்பொதெல்லாம் அம்மா அதிகம் வருவதில்லை. சென்ற தடவை வந்து நாலு மாதமாகிவிட்டது.

"நிறைய மார்க்கெல்லாம் வாங்கறயாமே" என்று என்னைப் பார்ப்பாள். அவளுக்கு என்னைப் பார்க்கிற பழக்கம். நாலுபேரோடு பேசும்போதுகூட என்னைத்தான் பார்த்துக்கொண்டிருப்பாள். என் முதுகு, தோலுக்குக்கூடத் தெரியும் அது. ஊர் சமாசாரம் எல்லாம் பெரியம்மாவிடம் சொல்லுவாள். பார்வை மட்டும் படிக்கிற என்மீது.

"கண்டுமாமா பிள்ளைக்குக் கலியாணம் நிச்சயம் பண்ணிருக்கு. பொண்ணும் அவள் மாதிரியே பெரிய வேலையாம் - அக்கௌண்ட் ஆபீசராமே, அந்த மாதிரியாம் . . ."

எனக்கு அம்மாவின் கண்ணைவிட வயிற்றைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஜ்வாலை ஏதாவது தெரியுமோ என்று பார்க்க.

"என்ன புண்யம் பண்ணினாளோ மகராஜி!" என்றாள் அம்மா.

அம்மா சொன்ன இன்னொரு செய்திதான் எனக்கு நினைக்க நினைக்க பயமும் கிளுகிளுப்பும் ஊட்டிற்று.

அன்னவாசலில் பக்கத்து வீட்டில் ஒரு பெண் வந்து அடிக்கடி கொல்லைத் தாழ்வாரத்தில் அரிசி புடைத்துக்கொண்டிருப்பாள். நான் படிக்கிற இந்தக் கொல்லைத் தாழ்வாரம் மாதிரியே ஏறக்குறைய அமைப்பு. அதனால் அவள் ஞாபகம் அடிக்கடி வருகிறது, நல்ல அட்டைக் கறுப்பு அவள். சீராளி சீராளி என்று கூப்பிடுவார்கள். நல்ல உயரம். அவள் காலையும் தோளையும் சொருக்கு முடிச்சையும் தோல் வழவழப்பையும் பார்த்துப் பார்த்து மயங்கியிருக்கிறேன். அப்படி ஒரு கடைசல் உடம்பு. நடந்து வரும்போது காலை நீட்டிப்போட்டு நடந்து வருவாள். புடைக்க உட்கார்ந்தால் தொடையும் காலும் நீளமாக மடங்கியிருக்கும். ஒரு பார்வையில் என்னென்னமோ சொல்லிவிடுகிற கண், கூடைக்குள் முழங்கையை விட்டு இடுக்கி அவள் வாசற்படி தலையில் இடித்துவிடாமல் சற்றுத் தாழ்ந்து நிலையைக் கடந்து வருவதையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். கையில் கண்ணாடி வளை இரண்டு மூன்று ஜோடி. காதில் மேல்வளைவில் ஒரு பச்சைக்கல் கூம்பு ஆடும். பலமான பலமில்லை. காலையில் உட்கார்ந்தால் இரண்டு மூன்று மூட்டையென்று இளைப்பாறாமல் புடைத்துத் துப்புரவாக, உமி, நொய்யெல்லாம் பிரித்துக் கூட்டி வைத்துவிட்டு, வந்த மேனியோடு துடிப்போடு நிமிர்ந்து வீட்டுக்குப் போய்விடுவாள். அவளை உள்ளூரிலேயே ஒரு சோப்ளாங்கிக்குக் கட்டிக் கொடுத்தார்கள். ஒல்லியாக, உயரக் கட்டையாக, இரைந்துகூட பேசத் தெரியாத ஒரு சோனி.

கள்ளக் குடும்பத்தில் இப்படி எங்கு ஒரு சோனி வந்து பிறந்தான் என்று எனக்கு யோசனையாக இருக்கும். கட்டிக் கொடுத்து மூன்றே மாதத்தில் அவளுக்கு ஒரு ஆசைநாயகன் வந்துவிட்டான். அடுத்த வீட்டிலேயே பண்ணையாள் அவன். ஆறு மாசத்தில் ஊரறிந்த சேதியாகிவிட்டது. அதற்காக அவளும் கவலைப்படவில்லை, அவனும் கவலைப்படவில்லை. அந்த சோனியும் கவலைப்படவில்லை. கட்டிக்கொடுத்தவர்களின் பிசகு என்று ஊரும் ஒத்துப்போய்விட்டது.

அந்த ஆசைநாயக மருதமுத்து ஒருநாள் கொல்லையில் அவள் கூடை புளியை வைத்து அரிவாள் மணையில் கொட்டை அரிந்துகொண்டிருந்தவளோடு பேசிக்கொண்டிருந்தானாம். என்ன

பேசினார்களோ, என்ன மனஸ்தாபமோ என்ன கோபமோ, திடீரென்று அரிவாள் மணையைப் பிடுங்கி ஓங்கி அவள் மணிக்கட்டில் போட்டுவிட்டு ஓடிவிட்டானாம் அவன்.

'மணிக்கட்டு அறுந்து, துளியூண்டு ஒட்டிண்டு தொங்கறது. குடியைக் கெடுத்த பாவி மவனே'ன்னு சத்தம் போட்டா. அறுந்த கையை அப்படியே புடிச்சு ஒட்ட வச்சுண்டே நடந்து, தெருவுக்குப்போய் வண்டியைப் பூட்டச் சொல்லி, அதுவரைக்குக் காத்து உட்கார்ந்திருந்து ஆஸ்பத்திரிக்கு போயிருக்கா சீராளி. ஒரு மயக்கமா, ஒரு படுக்கையா? அப்படியே வண்டிக் கூண்டிலே சாஞ்சிண்டு, தாயார் பிடிச்சுக்க இறங்கி கட்டில்லேபோய் படுத்திருக்கா. வெட்டுப்பட்டு இரண்டு ஜாமம் ஆகியிருக்கும், வண்டியெல்லாம் ரத்தம். தாவாரம் எல்லாம் ரத்தம். இத்தனை நெஞ்சுரமாப் போனாளே, அந்தக் கை ஒட்டிக்கப்படாதோ! இனிமே பிரயோசனப்படாதுன்னு துளி ஒட்டிண்டிருந்த கையையும் பிச்சு எடுத்து கட்டுப்போட்டு இன்ஜக்ஷன் போட்டு படுக்க வச்சுட்டாரம் டாக்டர், பாவிக்கு விரல் இத்தனை இத்தனை நீளம் இருக்கு. போச்சு. ரண்டு மாசத்துக்கெல்லாம் வேலைக்கு வந்துட்டா. அதைன்னா சொல்றேன். உடம்பான உடம்பா அது?"

அம்மா மாய்ந்து போய்ச் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த மாதிரி சொல்லக்கூட வரவில்லை எனக்கு.

எனக்கு சீராளியின் அழகுப் பலமும் அகலவில்லை. இவளைக் கொஞ்சம் படிக்க வைத்திருந்தால் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருப்பாள் என்று தோன்றிற்று. ஆனால் அதையெல்லாம் விட அவள் குளிக்கிறபோது படுத்திருக்கிறபோது, சோறு பரிமாறும்போது; அந்த மருதமுத்துவோடு இருக்கும்போது - எப்படியெல்லாம் இருப்பாள் என்று நானே மனசில் படம் போட்டுப் பார்த்துக்கொண்டிருப்பேன். அந்த மாதிரி பலத்தோடு, களைப்புத் தெரியாத சக்தியோடு நானும் இருந்தால், கொஞ்சம் மேனி சிவந்து, படித்துமிருந்தால், அவள் பேச்சுக்கும், முகவெட்டுக்கும், பலத்துக்கும் எப்படியெல்லாம் இருந்திருப்பாள்!

அரசல் புரசலாக அவள் நடவடிக்கை ஊர் காதில் விழுந்தும் விழாததுமாக, கள்ளத்தெரு, அக்ரகாரம் - இரண்டு தெருக்களிலும் சிறிது நடுவயதுக்காரர்களும் இளைஞர்களும், முக்கியமாக நடுவயதுக்காரர்கள் ஏக்கமாகப் பார்ப்பதுண்டு அவளை. ஏதோ அவளிடம் வாயைக் கொடுத்து இரண்டு மூன்று நாள் கழித்து வயல்வரப்பில் இருட்டுகிற சமயத்துக்கு மருதமுத்துவின் கையில் செம்மையாக அடி தின்றதும் உண்டு.

நான் அவளையே நினைத்துக்கொண்டு அரிக்கேன் சுடரை இரட்டையாக்கி வெறித்துக்கொண்டிருந்தேன். திப்பென்று தூக்கிப்போட்டது.

"இன்னுமா படிக்கிறே?"

பெரியப்பா.

"பைனல் பரீட்சைக்கு மூணு மாசம் இருக்கே இன்னும். பேசாம படுத்துக்கோயேன்."

"நான் இனிமே கொஞ்சம் அதிகமாப் படிச்சுத்தான் ஆகணும் பெரீப்பா."

"படி. நான் வாண்டாம்ங்கலெ . . ."

இன்னும் ஏதோ சொல்லப்போவது போலிருந்தது. ஆனால் சொல்லவில்லை.

"உங்களுக்கு யார் சொன்னா?" என்று உடனே கேட்டுவிட்டேன்.

"எது?"

"நான் மீட்டிங்கிலே பேசறது!"

"அதையா நெனச்சிண்டு உக்காந்திண்டிருக்கே. இதான் படிப்பா?" என்று சிரித்தார் பெரியப்பா.

"நான் சொல்லியிருப்பேன் உங்ககிட்ட, சொல்றதுக்கும் என்னமோ போலிருந்தது" என்றேன்.

"நீ பேசு குழந்தே. ஆனா பரீட்சை படிப்புக்கெல்லாம் இடைஞ்சல் வராம இருக்கணுமோல்லியோ. அதுதான் சொன்னேன்."

குரல் அவர் மன்னிப்பு கேட்பது போலிருந்தது. நான் சிரித்தேன். அதாவது தொண்டையைக் கட்டின வருத்தத்தை அப்படி மாற்றிக்கொண்டேன். எனக்கே ஆச்சரியம், எப்படி அழுகையை இப்படி மாற்றிக்கொள்ள முடிகிறதென்று. இந்த மாதிரி சமயத்தில் அம்மாவானால் அழுதிருப்பாள். இன்னும் நாலுபேரை நினைத்தும் பார்த்தேன். எல்லாரும் கலங்கியிருப்பார்கள். நான் யாரைக் கொண்டிருக்கிறேன்? அப்பாவையா?

அம்மாவையா? தாத்தா, பாட்டிகூட அப்படியில்லை. ஒரு சமயம் கொள்ளுத் தாத்தாவைக் கொண்டிருக்கிறேனோ! அறுபது வருஷம் முன்னால் கிஸ்திக்காரன் அவரை ஒரு தடவை அடிக்கடி தொந்தரவு செய்துகொண்டிருந்தானாம், விளைச்சலே இல்லை. விளைந்த நெல்லும் சாப்பாட்டுக்கே காணவில்லை. அடுத்த தவணை சேர்த்துக் கொடுத்துவிடுவதாகச் சொல்லிப் பார்த்தாராம். அவன் மசியவில்லை. சரி வாரும் தரேன் என்று சொல்லி ஊர்க் குளத்தங்கரைக்குப் போனதும் அவனைக் குண்டுக்கட்டாத் தூக்கிப் பந்தாக வளைத்து வீசி நடுக்குளத்தில் எறிந்துவிட்டு திரும்பி வந்துவிட்டாராம். அந்தக் கொள்ளுத் தாத்தாவைக் கொண்டுவிட்டேனா நெஞ்சுரப்புக்கு!

பெரியப்பா சொல்லிக்கொண்டிருந்தார்.

"பள்ளிக்கூடத்தை விட்டு வாங்கடான்னு பசங்களை காந்தி கூப்பிட்டபோது அப்ப வேறொருத்தன் ஆண்டுண்டிருந்தான். இப்பத்தான் நமக்கு அது இல்லையே. இன்னும் ஜாக்ரதையான்னா இருக்கணும்."

"நான் இனிமே ஒழுங்காப் படிக்கிறேன்" என்று சட்டென்று சொல்லிவிட்டேன்.

"நான் அதைச் சொல்லலே குழந்தே. நீ முதல்லெ பாஸ் பண்ணிடுவே அது தெரியும். நான் அதைச் சொல்லலே. நீ வச்சிருக்கிற புஸ்தகம்லாம் பார்த்தேன். எனக்கு ஒரு அட்சரம்கூட புரியலெ. இதெல்லாம் படிச்சுட்டா, நீ சேரியிலே படிக்காதவா கிட்ட போய்ப் பேசறே? பத்து வருஷம் முன்னாலெ செட்டியார் கோயில்லெ ராமாயணம் சொல்றேன்னு ஒருத்தர் வந்தார். நான் எல்லார் மாதிரி ராமன் காட்டுக்குப் போனான், மானைத் துரத்தினான்னு அத்தைப் பாட்டி கதை சொல்ல வரலெ. ராமாயணமே பெரிய வேதாந்தக் கடல்னு சொன்னார். அப்புறம் ஒரு அஞ்சு நாள் ராமன்னு தத்துவம், சீதைங்கற தத்துவம், தண்டகாரண்யம்னு ஒரு தத்துவம், பரசுராமன்னு பரசுங்ற ஒரு தத்துவம், அயோத்தின்னு ஒரு தத்துவம்னு சொல்லிண்டேயிருந்தார். ஆறாநாள் நானும் செட்டியாரும் கடைப்பையன்களும்தான் கதை கேட்க இருந்தோம். கணேசம்பிள்ளை அம்மா யோகாம்பாச்சி மாத்திரம் கண்ணை ஈரத்துணியால துடைச்சுத் துடச்சுண்டு உக்கார்ந்திருந்தா. அந்த மாதிரி இருக்கு நீ படிக்கிற அபேதவாதி புஸ்தகம்லாம். நீ இதையெல்லாம் படிச்சிட்டு பேசினா, எப்ப நம் ஊர் ஏழையெல்லாம் சாப்பிடப் போறான் ஏப்பம்விடப் போறான்?"

பெரியப்பா கண்ணைச் சிமிட்டினார்.

எனக்குச் சிரிப்பு வந்தது. சொன்னேன். "எனக்கும் இந்த புஸ்தகம்லாம் புரியலெ பெரியப்பா. பொதுவா எதாவது சொல்லிட்டு வந்துடுவோம். நிமிண்டி நிமிண்டிக் கேட்டா பதில் சொல்லத் தெரியாது. அப்படிக் கேட்காதபடி பேசிட்டு வந்துடுவோம்."

"சரி, படுத்துக்கோ - நாழியாச்சு."

அரிக்கேன் விளக்கை எடுத்து, கொல்லைக் கதவைத் தாழிட்டு உள்ளேவந்தோம். பெரியப்பா, அவருடைய பெஞ்சில் படுத்துக்கொண்டார்.

கீழே பெரியம்மாவின் பக்கத்தில் படுத்தேன், தூக்கம் இன்னும் கொள்ளவில்லை.

பெரியப்பா சொன்னதை நினைத்து சிரிப்பு.

இந்த பெரியப்பாவைப் புரிந்துகொள்ள ஏன் இத்தனை நாளாயிற்று?

பத்து நிமிஷம் கழித்து மெதுவாக "பெரியப்பா" என்று கூப்பிட்டேன்.

"ம்."

"செட்டியார்தான் சாப்பாட்டிலெ மிச்சம் பிடிக்காதேன்னு சொன்னார். நான் ஒரு கச்சேரி வையுங்கோங்கறேன், கேட்பேளா?"

"கச்சேரியா? - கோர்ட்டுக் கச்சேரியா?"

"போங்கோ பெரீப்பா . . . பாட்டுக் கச்சேரி?"

"பாட்டுக் கச்சேரியா? எல்லோரும் சிரிப்பன் வழிச்சிண்டு - பயலுக்கு வந்த பவுஷைப் பார்றான்னு."

"சிரிக்காம இருக்கறதுக்குத்தான் நாம் இருக்கோமோ? நாம்ம அந்தஸ்துக்குத் தகுந்தாற்போல நாம் பண்ணிக்கிறது."

"என்ன சதிரா, மோளக் கச்சேரியா, சீட்டுக் கச்சேரியா?"

"கோபாலி பாட்டுக் கச்சேரி."

"நீ பேசாம தூங்கு. அவன் உச்சாணிக் கொம்புலெ உக்காந்திருக்கான்.

ம்ஹ்றம் கச்சேரி பண்ணணுமான்னு ஒரு சிரிப்பு சிரிப்பன், மானம் போயிடும்."

"சிரிச்சா ஓங்கி அறைவேன்."

"என்னது?"

"ஆமா, நான் போய் கேக்கப்போறேன். எங்கப்பா பெரீப்பா பொண்ணுக்குக் கலியாணம். வந்து பாடறேளான்னு."

"என்ன சேரின்னு நினைச்சியா? நீ பாட்டிலே நுழஞ்சு எனாமா பேசிட்டு வராப்பல? இல்லெ கோவில் கச்சேரியா?"

"கேட்டுப் பாக்கறது. அன்னவாசல் சோம்பேறிகளுக்கெல்லாம் வருஷம் தவறாம பாடறேளே, எங்கப்பா பெரியப்பா ஏழை, பாடுவேளான்னு கேக்கறது."

பெரியப்பா குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். பொய்க் குறட்டை.

# 7

காவேரி ஓரமாக, தெரு, தெரு மண்ணில் செருப்பு புதைந்தது. பெரியப்பா சொன்னதெல்லாம் ஞாபகமில்லை. ஞாபகம் வந்தாலும் சட்டையில்லை. காலேஜில் சேர்ந்த முதல் வருடத்திலிருந்தே பழகி விட்டது. ஏதாவது ஒரு சங்கத்திற்குக் காரியதரிசி, துணைத் தலைவி, பொக்கிஷதாரி, உதவி சபாநாயகி என்று தற்பேத்தி ஆகிவிட்டது. வக்கீல்கள், டாக்டர்கள், முனிசிபாலிட்டி மெம்பர்கள், பேராசிரியர்கள், சின்ன சங்கீத வித்வான்கள், கடைக்காரர்கள் - யார் வீட்டிலும் புகுந்து புறப்படுகிற வித்தை பழகிவிட்டது.

தெருவில் நுழைந்ததும் வீட்டு அடையாளம் யாரோ இரண்டு மாமிகள் சொன்னார்கள். "அவரைத்தான் பார்க்கணுமா?" என்று கேட்டும் வைத்தார்கள்.

"ஆமாம்."

"அவர் ஊரிலே இருக்காரோ, என்னமோ."

"முக்காவாசி நாள் ஊரிலேயே இருக்கமாட்டாரே அவர்."

"யாருடீ?" என்று மேல் திண்ணையில் குரல், ஜபமாலையும் கையுமாக ஒரு நார்மடிப் பாட்டி.

"கோபாலி."

"யாரு கேக்கறா?"

"நான் போய்ப் பார்க்கறேன். கால்வாசி நாளுக்குள்ள இன்னிக்கு இருந்துதுன்னா" என்று நடந்தேன்.

உடனே ஒரு சந்தேக பயம். "ஸ்வாமி - இன்னிக்கு அவர் கட்டாயமா இருக்கணும்" என்று மனசுக்குள் என்னறியாமல் குரல்.

மாலை வேளை. வாசல் திண்ணை ஒவ் வொன்றிலும் ஒரு மாமி, இரண்டு

பெண்கள், அல்லது இரண்டு பாட்டிகள் - சோப்புப் போட்டு அலம்பிய முகங்கள் - பூ வைத்த தலைகள். மாலை வந்ததைச் சொல்ல மஞ்சள் வெயில் தேவையில்லை. திண்ணையைப் பார்த்தால்போதும், தெருவுக்கு நான் புதிது, கண் கண்ணாக என்னை மேய்கிறது.

தக்தக்கென்று எனக்குள் குதித்து சிலிர்த்தது சிறு அச்சம். இந்தக் கண்களால் இல்லை. வேறு எதோ பயம். அதனால் தொண்டையில் ஒரு உலர்வு.

என்ன இது!

வாசல்படி ஏறினேன். செருப்பைப் கழற்றினேன். இடைகழியைக் கடந்து எட்டிப் பார்த்தேன்.

கூடத்தின் ஓரத்தில், முற்றத்தில் ஒரு காலைத் தொங்கவிட்டு மரச்சீப்பால் தலையை அழுத்தி வாரிக்கொண்டிருந்தாள் ஒரு அம்மா.

கோபாலியின் மனைவியா!

"இருக்காரா?"

"யாரு?"

"கோபாலி."

"நீங்க யாரு?"

"காலேஜிலே படிக்கிறேன்."

"சீலூ" என்று என்னைவிட்டுக் கண்ணை எடுக்காமல் ஒரு சத்தம். ஒரு பையன் ஓடி வந்தான் முன் அறையிலிருந்து. "அப்பாகிட்ட போய்க் கேட்டுட்டு வா. யாரோ, காலேஜிலேருந்து வந்திருக்காளாம். பார்க்கணுமாம்."

பையன் மேலே ஓடினான். "எதுக்குப் பார்க்கணும்?"

"கச்சேரி சம்பந்தமா."

"காலேஜிலேயா?"

"இல்லெ."

"பின்னே?"

என் கால் வாசல் பக்கம் இழுத்தது. அவர் இல்லை என்று சொல்லியிருக்கக் கூடாதா? சரி. "இப்ப பார்க்க முடியாதாம். இன்னொரு நாளைக்கு வரச்சொல்றா அப்பா" என்று பையன் வந்து சொல்லுவான் என்று நம்பிக்கை, "இப்ப பார்க்க சௌகர்யமில்லேன்னா, இன்னொரு நாளைக்கு வறேன்" என்று வார்த்தைகள் நாக்கு நுனிக்கு வந்துவிட்டன.

"வரச்சொல்றா" என்று பையன் ஓடிவந்தான்.

"போங்கோ, அழச்சிண்டு போடா சீலு."

"வாங்கோ."

மாடிப்படி ஏறி -

முதல் மாடி.

மீண்டும் மாடிப்படி - இரண்டாவது மாடி. எனக்கு விஷமம் தாங்கவில்லை - பயத்திற்கு நடுவில். இந்த மனைவியிடமிருந்து ஒரு மாடி, இரண்டு மாடி. ஏழு மாடி தள்ளியேதான் இருக்க வேண்டும்.

எப்படி இவளைக் கோபாலி கலியாணம் செய்துகொண்டார்? எப்படி இந்த முகத்தை நெருங்கி, கிட்ட, மூச்சு படப் பார்க்கிறார் - கண்ணை மூடிக்கொள்கிறாரா?

அந்த அம்மாளின் முக அமைப்பு குரங்கு முக அமைப்பு. கொஞ்சம் சிங்கம் மாதிரியும் இருந்தது. சிரிக்க முடியாத முகம். சிரித்தால் இன்னும் சிங்கமாக ஆகிற முகம். பார்த்த மாத்திரத்திலேயே திக்கென்றது. நான் மலைத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். கேட்ட நாலைந்து கேள்விகளுக்குக்கூட முகத்தைப் பார்த்து ஜாக்ரதையாகப் பதில் சொன்னேன். இனம் புரியாத வயதில் அவர் தலையில் கட்டிவிட்டார்களா இவளை? இது என்ன முகம்! மாடிப்படியேறும்போது நான் என்ன செய்தேன்? அழுதேனா, சிரித்தேனா, மண்டைக்குள் புழு நெளிவதுபோல் கலங்கினேனா?

"போங்கோ" என்று கையைக் காட்டிவிட்டுக் கீழே இறங்கினான் பையன்.

மொட்டை மாடியைக் கடந்து ஒரு அறை. நடுவில் ஊஞ்சல், அதில் கோபாலி ஒரு காலைத் தொங்கவிட்டு உட்கார்ந்திருந்தார்.

கீழே ஒரு பெண். அவள் எதிரே தம்புரா படுத்திருந்தது. எதிர் சுவரோரமாக ஒரு பையன் நின்ற வாக்கில் பாக்கு சீவி ஊஞ்சலிலிருந்த தட்டில் வைத்துக்கொண்டிருக்கிறான்.

"வாங்கோ," என்றார் கோபாலி. அவ்வளவுதான். என் உடம்பு முழுவதும் அவர் கண்ணாக ஆகிக்கொண்டிருந்தது. தோலை கடந்து புகுந்தது.

கண்ணைத் தாளாமல் தம்புராவைப் பார்த்தேன். பாதிப் பாட்டில் அது சாய்ந்துபடுத்திருக்கிறது என்று தெரிந்தது. பாட்டு அந்த அறைக்குள் நிசப்தமாகப் புகைமாதிரி வளைந்து வளைந்து வருகிற இடை மௌனம்.

"பூட்சு ஸ்டாக்கிங்கெல்லாம் கீழேயே கழட்டி வச்சுட்டு வந்தியா?" என்று கேட்டார் கோபாலி.

"என்னது! நான் பூட்சே போட்டுக்கலியே?"

"வண்டியிலே வந்தியா?"

"இல்லியா நடந்துதான்."

"ஆச்சரியமாயிருக்கே; இந்தத் தெரு மண்ணிலே வந்தா, கால் இப்படி துடைச்சுவிட்டமாதிரி இருக்கு . . . அதுக்காக காலை மறச்சுக்கவாண்டாம்."

அதற்குள் அந்த அம்மாள் - அவள் பெண் இல்லை - முப்பத்தைந்து வயதிருக்கும் - காலை நாசுக்காகப் புடவையால் நன்றாக மறைத்துக்கொண்டாள்.

"அது சரி, நீங்க யாரு எனன்னே கேக்கலியே. காலேஜிலே படிக்கிறியா . . . ரொம்ப பார்த்த ஜாடையா இருக்கே."

"எனக்கு அன்னவாசல்."

"எப்படீ! அன்னவாசலா!" எதற்கு இத்தனை கண்ணகலல்!

"கண்டு மாமா காரியஸ்தரோட பெண்."

"எப்படி! கண்டு மாமா காரியஸ்தானா? நடேசன் பொண்ணா . .! ரொம்ப அழகாயிருக்கு! இத்தனை சொல்லிண்டா அப்படி எட்டி நிக்கறே . . ? நீயும் காரியஸ்தின்னு எண்ணமோ . . .

வா இப்படி - இப்படி வந்து உட்காரு . . . "

"பரவாயில்லெ."

"நீ பரவால்லென்னா. எனக்குப் பரவா இருக்கு . . ." என்று எழுந்தார் கோபாலி. அருகே வந்தார். ஒரு கையால் முதுகை வளைத்து மேல் கையை அழுத்தி அணைத்து ஊஞ்சலில் உட்காரவைத்தார். தோளைப் பிடித்து அழுத்தி மேலே சாய்த்துக்கொண்டார்.

"நடேசன் பொண்ணா. கொஞ்சம் வளந்துட்டா, பெரிய பொம்மனாட்டியா ஆயிட்டதாக நெனச்சுனூட்டியாக்கும்."

விடுபட்டு விலகவும் முடியவில்லை. விலகவும் பயமாயிருந்தது.

"என்ன முழிக்கறே . .? இந்த வயசிலேர்ந்து பார்த்துண்டிருக்கேன்" என்று உள்ளங்கையைக் குப்புறத்தி ஊஞ்சல் மட்டத்திற்குக் கீழே, சிஷ்யையிடம் காண்பித்தார் கோபாலி.

சிஷ்யை அம்மாள் ஒரு பார்வை பார்த்தாள். 'நான் ஏதாவது கேட்டேனா?' என்கிற பார்வை.

"கீழ போய் காபி வாங்கிண்டு வாடா டேய்" - பாக்கு சீவின பையன் ஓடினான்.

வரிசையாகக் கேள்விகள். "பெரியப்பாவாத்துலெதான் இருந்துண்டு படிக்கிறியா? இத்தனை வருஷமா, இந்த ஊரிலே இருந்துண்டு, இப்பத்தான் வரத் தோணித்தா . .? என்ன படிக்கிறே . . .

பி.ஏ.யா? ஏப்பா . . ."

கோபாலி கொண்டாடின ஞாபகம், இந்த வயசு என்று காட்டின அடையாளம் - எல்லாம் பொய். அவர் என்னைச் சரியாக எப்போதும் பார்த்த ஞாபகம் இல்லை. நான் பெரியவளான பிறகு - சிற்றாடை பாவாடையை விட்டபிறகு - ஊருக்குப்போய் தூர இருந்து இரண்டு கச்சேரி கேட்டிருக்கிறேன்.

குழந்தை குழந்தை என்று வாய் அரற்றுகிறது. கை குழந்தையை அணைக்கிறதாகப் படவில்லை . . . ஆனால் அதையும் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை.

தள்ளி உட்கார்ந்து நிமிர்ந்து பார்த்தேன். அந்த அசட்டு அணைப்பு அணைத்த உடம்பும் கண்ணும் இல்லை. மேடை மேடையாகத் தெரிந்தது. கண்முன் இருப்பவர்களை அழித்துவிட்டு அது பாடுகிற லயிப்பு, சிம்மம் மாதிரி சபையை ஆள்கிற தோரணை - சபையைப் பார்க்காமல், தன் உள்ளே பார்த்துக்கொண்டு, சபையை ஆட்டிவைக்கிற தன்னறியாமை. ஒரு தடவை கச்சேரியில் பின்னால் யாரோ பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு, இரண்டு மூன்று தடவை திரும்பிப் பார்த்தது அது - சுட்டெரிக்கிற ரௌத்ரம் கண்ணில். சற்று அடங்கிய குசுகுசுப்பு மீண்டும் பேச்சாக உயர்ந்ததும், திரும்பி "நான் இன்னிக்கு பாடட்டுமா, வாண்டாமா?" என்று ஒரு கேள்வியாக வெடித்து, பாதி பாட்டை அவசர அவசரமாகப் பாடி முடித்து "பவமான" என்று மங்களம் பாடி முடித்துவிட்டது. கச்சேரி தொடங்கி அரை மணிகூட ஆகவில்லை. கண்டுவைப் பார்த்து அஞ்சலியுடன் "பெரியவா பொறுத்துக்கணும். பின்னாலெ ரொம்பப் பெரிய வாயா ஆயிடுத்து முடிச்சுட்டேன். எனக்கும் வருத்தம்தான்" என்று மன்னிப்புக் கோரிவிட்டு, மறுநாள் காலையில் அதே பக்க வாத்யத்துடன் கண்டுவின் வீட்டுக்கூடத்தில் பூஜை அலமாரிக்கு முன் உட்கார்ந்து பாடத்தொடங்கி, உச்சிவேளை வரையில் பாடி தன்னையே கரைத்துக்கொண்டுவிட்டது. எனக்கு அப்போது பாவாடைப் பருவம்.

"என்ன பேசவே காணும்?"

சிரித்தேன்.

"என்ன?"

"நீங்க ஒரு தடவை . . ." என்று ஆரம்பித்து அந்தக் காட்சியை ஒப்பித்தேன்.

"நீ இருந்தியா அப்ப?"

"ரொம்ப ஞாபகம் மாதிரி பிடிச்சு இங்க கொண்டு உட்கார்த்தி வச்சேளே."

"சொல்லுங்கோ, சொல்லுங்கோ" என்றாள் கீழே இருந்த சிஷ்ய அம்மாள்.

"நடேசன் வாயிலா துடுக்கா ஒரு வார்த்தை வராதே" என்று என்னைப் பார்த்தது கோபாலி.

"பதில் சொல்ல முடியாட்டா, அப்பா சாது, அம்மா சாது" - சிஷ்ய அம்மாள்.

"இவா யாரு தெரியுமோல்லியோ, கடைத்தெருவுக்கு - உங்க தெருவிலேர்ந்து - போற வழியிலே சோமேச்ரய்யர், ஹைகோர்ட் வக்கீல்னு அழுக்கா ஒரு போர்டு தொங்கும் - வாசல்லெ வியாஜ்யக்கார வண்டி ரெண்டு மூணு எப்பவும் அவுத்துப் போட்டிருக்குமே - நீ பார்த்ததில்லே! அவாளோட சம்சாரம். ஆனா இவா பீஸ் வாங்கிக்காமலே பேசுவா . . . சங்கீதம்னா உசிரையே விட்டுடுவா . . ."

"நான் உசிரை விட்டப்பறம்தான் சங்கீதம் வரும் எனக்குன்னு சொல்றார்" - சிஷ்ய அம்மாள் சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

"என்ன?"

"நாழியாச்சு. நாளைக்கு வரேன்."

"நான் குறுக்கே வந்துட்டேன்னு நினைக்கிறேன்" - நான்.

"அடாடா நீயும் போயிடாதே" என்று என் முழங்காலைக் கையால் அழுத்தினார் கோபாலி. முழங்கால் மூட்டில் மோதிரம் அழுந்திற்று. வைர வட்டத்துக்கு நடுவில் மரகதக்கல்.

"காபிக்குப் போனானே - மாடு வாங்கப்போயிட்டானா - எத்தனை நாழி! நீ போய்ப் பாரு சித்தெ."

"அதுக்காகவும்தான் எழுந்துண்டேன்."

சிஷ்ய அம்மாள் மொட்டை மாடியைக் கடந்து கீழே இறங்கினாள்.

"நன்னா ஞாபகமிருக்கு எனக்கு. யாரோ பின்னாலெ பேசிண்டிருந்தான்னு கோபம் வந்துதுன்னா, கச்சேரியை முடிக்கலாமோ? மகா அபசாரம். ரத்திரி ஒரு மணியாச்சி. ரண்டு மணியாச்சு தூக்கம் வல்லெ. பகவானுக்காகப் பாடறபோது இது என்ன அகம்பாவம்! யார் கேட்டா என்ன, கேக்காட்டா என்ன? ராத்திரி ரண்டு மணி இருக்கும் எழுந்துண்டு கண்டுவாத்திலே போய்க் கதவை இடிச்சேன், எழுந்து

ஜன்னல் வழியாலெ 'யாரு'ன்னார். நான்தான்னேன். பரபரன்னு வந்து கதவைத் திறந்தார். கால்லெ விழுந்து நமஸ்காரம் பண்ணினேன். காலமே கச்சேரி பண்ணப்போறேன். பெரியவா அனுமதி கொடுக்கணும்னு நின்னேன். இதுக்காகவன்னு உபசாரமா எதோ சொல்ல ஆரமிச்சார். சரி தூக்கத்தைக் கெடுத்துட்டேன், நாளைக்கு பேசிக்கலாம்னு வந்துட்டேன். மறுநாள் விடிகாலமே குளிச்சு என்னை ஒழிடா கிருஷ்ணான்னு வேண்டிண்டு வந்து பாட உட்கார்ந்துண்டேன். அன்னிக்கி தேவ காந்தாரி பாடி, மோகனம் பாடி - எவன் பாடமுடியும்? நான் பாடலே அதுக்குச் சொல்றேன். ராகங்கள்ளாம் அதுகளா பாடிண்டுது. என்னைப் போட்டு மிதிச்சுண்டு அதுகளா பாடிண்டுது. இல்லாட்டா எந்தப் பய அப்படிப் பாட முடியும்? இவன்தான் பாடமுடியுமா? கூடம், ரேழி, கொல்லைக்கட்டு சமையல்கட்டு முத்தம் - எல்லாம் தலையாத் தெரிஞ்சுது. கண்ணைக் கண்ணை மூடிக்க வேண்டியிருந்தது . . .

மத்தியானம் ஒரு மணி ஆச்சு. களைப்பு சளைப்பு இல்லே.

"ஆஹா ஆஹாவென்று கூடம் முழுவதும் பித்துப் பிடிச்சு அரடித்து அன்னிக்கி அன்று - தேவகாந்தாரி பாடினப்பறம் பிடில் வாசிக்குதே கோபு - வாசிக்கணுமே - பிழிஞ்சு பிழிஞ்சு அழுதது. 'கோபாலி - சாட்சாத் கோபாலன்டா நீ. நான் வாசிக்க மாட்டேன். என்னை ஔமானப் படுத்தாதே'ன்னு ஜரிகை அங்கவஸ்திரத்தாலே கண்ணைத் துடச்சுண்டுது. அதுக்கு என்னைச் சொல்றதாக எண்ணம், அது சொன்னதுதான் நிஜம். கோபாலன்தான் பாடினான் . . ."

இப்பொழுதும் கோபாலன்தான் பேசுகிறானா என்ன? நானும் அழிந்துபோய் அந்த அடைக்கலத்தில் ஒன்றிவிட்டது போலிருந்தது.

மறுகணம் - எங்கோ யாரும் புகமுடியாத தன் உலகத்தில் வாழ்கிற ஆத்மா, வெளியே வந்து தன் ரகசியங்களையெல்லாம் காட்ட என்னை உள்ளே அழைத்துப் போனது போலிருந்தது. ஒரு தடவை லெனினும் டாஸ்டாவ்ஸ்கியும் எங்கள் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுக் கொல்லைத் தாழ்வாரத்தில் என்னோடு உட்கார்ந்து பேசுவதுபோல் சொப்பனம் கண்டிருக்கிறேன். நேருகூட ஒரு தடவை சொப்பனத்தில் வந்திருக்கிறார். வயல் வெளிக்கு நடுவில் போகும் தென்னைகள் ஓரமிட்ட சாலையில் ஒரு மதகில் உட்கார்ந்து பேசியிருக்கிறார். அதெல்லாம் கனவு. இங்கு என் கண்ணால், காதால், உடம்பால் கேட்கிறேன். கிட்டத்தட்ட முதல் பழக்கம்தான். ஆனால் நெடுநாள் உறவாக உட்கார்த்தி, தொட்டு, தன்னைத் திறந்து காட்ட . . . நான் யார்?

"அன்னிக்கி மாதிரி அப்பறம் அழிஞ்சேபோக முடியலெ" என்றது கோபாலி.

கையை நீட்டி அவர் கையைப் பற்றி அழுத்தினேன்.

ஒரு பத்து வினாடி இருக்கும். என்னையே பார்த்தது. எழுந்து நின்றது. மெதுவாக என்னை இழுத்து நிறுத்தி வைத்தது. கதவோரமாக நகர்ந்தது. இரண்டு கைகளிலும் மிருதுவாகப் புதைந்தது உடம்பு. மிருது அழுந்தி இறுகிற்று. முதுகில் இருந்த கை இறங்கி கீழே பரத்தி அழுந்திற்று. கண்ணிரண்டும் மெத்தென்றது. உலர்ந்த உதடு நனைந்து, ஏலக்காயின் மணம் சுள்ளென்று நொந்தது.

மூச்சு முட்டிற்று. மார்பில் வலி. மெதுவாக விடுவித்துக் கொண்டு மொட்டை மாடிப்பக்கம் போய் நின்றேன். கொல்லையில் காவேரி. இளம்பச்சையாகத் தண்ணீர். நாணல் கூட்டம். நாணல் பூக்கள். நெடுகிலும் வாழைத் தோப்பு. மேற்கே புதுப் பாலம். கிழக்கே பழைய பாலம். குளிர்காலம். எதிர்கரை நாணலுக்கப்பால் குடிசைகளிலிருந்து புகை, சிள்வண்டுச் சத்தம், யாரோ இரண்டு பயல்கள் கூச்சலும் கூவலுமாக, நீந்திக்கொண்டு கிராம்புத் தலையை உலுப்பினார்கள். வெள்ளைப் பல்.

வந்து அரைமணி ஆகவில்லை. பேசத் தொடங்கி ஒரு நாழியாகவில்லை . . .

பழகினால்தானா? பார்த்துப் பார்த்துப் பேசிப் பேசித் திறந்துகொண்டால்தானா?

கோபாலி அறையைவிட்டு வருவது தெரிந்தது. மாடிப்படியண்டை நின்று, கீழே பார்த்து ஒரு சத்தம். "காபி வரப்போறதா இல்லியா - சீலு - குஞ்சாளீ . . ."

திரும்பிவந்து என்னிடம், "மட்டி ஜடங்கள் - மசமசன்னு - குந்தளத்தோட சுருக்கும் போயிடுத்து."

நிமிர்ந்து பார்த்தேன்.

"குந்தளம் உன் மாதிரியே இருப்ப. கொஞ்சம் உசரம் கம்மியா. உனக்கு என்ன வயசு?"

"இருபது முடியப் போறது."

"அவளுக்கு இருபத்திரண்டு. காரியம் செய்யறாப்போலவே இருக்காது. ஆனா நிமிஷம் பண்ணிப்பிடுவ எது சொன்னாலும். சமைச்சான்னா, சமைக்கறாப்பல இருக்காது. ஒரு பரத்தல், ஒரு கரண்டி சத்தம் - பேசப் படாது: சமத்து தலைச்சன் பொண்ணாப் பெத்தான்னு சொல்லுற வழக்கம். என் பொண்டாட்டி சமத்துதான். ஆனால், நான்தான் அங்குள்ள கலியாணத்தைப் பண்ணி அசடா நிக்கறேன் - மொட்டை மாடியிலே - வந்தவாளுக்குக் காபி வரது வரதுன்னு பாச்சை காட்டிண்டு."

மறுபடியும் மாடிப்படியண்டை போய் ஒரு சத்தம் -

"குஞ்சாளீ . . ."

எதோ சத்தம் பதிலுக்கு வந்தது.

"வரதா . . ? எப்ப?"

கோபாலிக்கு ஒரு பெண் பிறந்து, கலியாணம் ஆகிப் புருஷன் வீட்டுக்குப் போயாயிற்றா!

"என்னைக் கேட்டா - நான் அதை மாத்திச் சொல்லுவேன். சமத்து கடைக்குட்டி பெண்ணாப் பெத்தாண்டானு சொல்லுவேன். நாப்பது வயசிலே பொண் பொறக்கணும். அறுபது வயசு வரையிலே வீட்டோட இருக்கும். இருபத்தஞ்சு வயசிலெ

பெண்ணைப் பெத்தா, இப்படிக் கத்திண்டு கிடக்க வேண்டியது தான் மடக்குக் காபிக்கு."

"இதோ வந்துடுத்துண்ணா" என்று குரல் கேட்டது. பாக்கு சீவின பையன் வெள்ளி கூஜாவைத் துணியால் பிடித்துக்கொண்டு வந்து, இடது கையில் இருந்த டவரா டம்ளர் ஜோடிகளையும் ஊஞ்சல்மீது வைத்து ஆற்றத் தொடங்கினான்.

நாற்பத்தேழு வயதா . . ? கணக்குப் போட்டுக்கொண்டிருந்தேன்.

அதுவும் பெருமையாக இருந்தது.

"நீ பாடுவியோ?" - கோபாலி.

"எதுக்காக?"

"பின்னே எப்படி கலியாணம் ஆகும்?"

உதட்டை முறுக்கிக் கோணங்கி காட்டினேன். "ரண்டு தியாகராஜ கீர்த்தனையையாவது கொலை பண்ணாட்டா, எப்படி கலியாணத்துக்குத் தயாராக முடியும்? இல்லே, நட்டவங்கிட்ட தைதை கத்துண்டு அரங்கேத்தம்னு ரண்டு சினிமாக் கொட்டாயிலியாவது சாணி மிதிக்கணும், இல்லாட்டா அம்மி மிதிக்கிறது எப்படி?"

"நான் ஆபீசராத்துப் பெண்ணா. . ? அதுவும் எனக்குப் பாட, ஆடத் தெரிஞ்சா இஞ்ச வந்திருக்கவே மாட்டேன். நானே என் பெரியப்பா பொண்ணு கலியாணத்துக்கு ஆடியிருப்பேன்."

"பெரியப்பா பொண்ணுக்கு? கலியாணமா?"

"அதுக்குத்தான் வந்திருக்கேன் நான்."

"எதுக்கு?"

"பெரியப்பா பெரிய மனுஷர். சம்பளம் இருநூறு ரூபாதான். சின்ன கலியாணம்தான். எனக்கு நீங்க வந்து பாடணும்னு ஆசை. சொன்னேன். பெரியப்பாக்குத் தூக்கிவாரிப் போட்டுது. அவன் உச்சாணிக் கொம்பிலே உட்கார்ந்திருக்கான். ம்ஹும், கச்சேரி பண்ணனுமான்னு ஒரு சிரிப்பு சிரிப்பன். மானம் போயிடும்னு சொன்னார்."

"நான் பேசி இழுத்துண்டு வரேன்னு வந்தியாக்கும். எப்ப கலியாணம்?"

"சித்திரை மாசம்."

"கிட்டாணி, கீழே போய் டைரியை எடுத்துண்டு வா."

கிட்டாணி நார்த்தாங் குருவிபோல வேர்வைக்கால் சிமிண்டுத் தரையில் குயிக்குயிக்கென்று கீச்சிட விரைந்தான்.

"சித்திரை மாசம் என்ன தேதி?"

"இன்னும் வைக்கலெ."

"எந்தத் தேதி வச்சாலும் நான் வந்து பாடணுமோ?"

"உங்களுக்குக் கச்சேரியில்லாத தேதியாய்ப் பார்த்து வச்சுக்கறோம்."

"ரொம்பப் பேசாதே. எனக்காக சனிக்கிழமை செவ்வாக் கிழமைன்னு கலியாணம் வச்சுக்கமாட்டா. பணம் கொடுப்பரா பெரியப்பா - கச்சேரிக்கு இல்லெ. இந்தத் தெருவிலேர்ந்து ஒத்தமாட்டு வண்டிக்காவது சத்தம் கொடுப்பாரான்னேன்."

காபியை மடமடவென்று ஊற்றி விழுங்கிவிட்டு அவர் கையைப் பிடித்துக் குலுக்கினேன். இந்தத் தடவை நானாக அந்த உடம்பைப் பிடித்து அணைத்துக்கொண்டுவிட்டேன். பெரியப்பா மீது விரல் பட்டாலே தொட்டாச்சுருங்கி - உடம்பு உள்ளே இழுத்துக்கொள்ளும். இத்தனை காலமாக அங்கே தின்ன சோறு, கேட்ட பெரியம்மாவின் சிரிப்பு, குழந்தைகளின் முகப்புதைவு -

எல்லா பாரங்களையும் இந்த உடம்பில் இறக்கவேண்டும் போலிருந்தது.

"டயரி வந்துடப் போறது."

விலகிக்கொண்டேன்.

"சித்திரைமாசம் கலியாணம். உனக்கும் பரீட்சை முடிஞ்சுடும். நீ ஊருக்குப் போயிடுவியாக்கும்?"

டயரி வந்தது. "கிட்டாணி குறிச்சு வச்சுக்கோ. சித்திரை மாசம் இவாத்துலெ கலியாணம். பொதுவாப் போட்டு வச்சுக்கோ. தேதி எப்ப தெரிஞ்சாலும் அதுக்குத் தகுந்தாப்போல மத்த கச்சேரி . . ."

"விலாசம் எப்படி எழுதறதுண்ணா?"

"எழுதேண்டா - பெரியப்பாவாத்து கலியாணம்னு எழுது. எனக்கு எழுத வராது. படிக்கத் தெரியும்."

"தெரியும்."

"என்ன தெரியும்?"

"நீங்க ஒரு தடவை ஊலே கச்சேரி பண்றபோது, எதோ பாடச் சொல்லி ஒரு சீட்டு வந்துது. நீங்க அதைப் பார்த்து, நெத்தியைச் சுளிச்சு, வெள்ளெழுத்து, நீர் வாசிச்சு சொல்லும்னு பிடில்காரர்கிட்ட கொடுத்தேள்."

கிட்டாணி குனிந்து சிரிப்பை மழுப்புவது தெரிந்தது.

"அச்சுன்னா வாசிச்சுடுவேன். கையெழுத்து கூட்டெழுத்தா எழுதறாளா, புரியறதில்லெ . . . எழுதிட்டியாடா?"

"ஆச்சுண்ணா."

"சரி, கொண்டு வையி."

கிட்டாணி போனான்.

"திருப்திதானே?"

பதிலும் சொல்லவில்லை. தலையையும் ஆட்டவில்லை. வெறுமே முகத்தைப் பார்த்தேன்.

பிறகு ஒரு சின்னப் பேச்சு நடந்தது. எனக்குள் - அவர் காதில் விழாமல் - கிசுகிசுவென்ற குரலில். "கீழே தலையை வாரிண்டிருந்தாளே அந்த மாமி யாரு?"

"அவதான். வேற யாருன்னு நெனச்சே."

"ஆனா உங்க அவ மாதிரியே இல்லையே - அனுமாருக்கு ரொம்ப பாட்டுக் கேட்கப் பிடிக்குமாமே. அதை நினைச்சா இந்த மாமி கையைப் பிடிச்சேள்!"

"பதினாறு வயசிலே கச்சேரி பண்ண ஆரமிச்சேன். முதல் பத்து கச்சேரிக்குள்ளவே ஓகோகோன்னுது ஜனங்கள்ளாம் - வந்துட்டாண்டா ஒரு சுட்டி, அடிச்சு நொறுக்கன்னு - இந்தப் பாட்டே புதுசு புதுசுன்னு சிறுசுகள்ளாம் வந்து மொச்சுது. அப்பாவுக்குக் கவலையாப் போயிட்டுது. ஒரு பெரிய மனுஷன் பொண்ணைக் கொடுக்கறேன்னு வந்தான். வைரமும் தங்கமுமா அப்பி இவளைக் கொண்டு நிறுத்தினா, ஆச்சு. நீ நினைக்கிறாப் போல அத்தனை விகாரமாவா இருக்கு?"

"விகாரம் இல்லே. உடம்பு கைகால்லாம் நன்னாத்தான் இருக்கு. முகம் கொஞ்சம் பார்க்கும்படியா, பார்த்தவுடனே துளி, கொஞ்சம் குளுமையா இருக்கப்படாதோ - கோபத்திலே முகம் விகாரமாயிடும். ஆனா சிரிச்சா, வருத்தப்பட்டா, வலியா இருந்தா, களைப்பா இருந்தா - எப்படின்னே சொல்ல முடியாது போலிருக்கே - இந்த முகத்திலே பிராணி

சிரிக்கிறாப்போல, அழறாப்போல . . ."

"முகம் எப்படியிருந்தா என்ன, உடம்புதான் விறுவிறுன்னு இருக்கே - போராதா - மனுஷாளுக்குள்ள ஏது வித்தியாசம் இடுப்புக்குக் கீழே?"

"நான் ஒத்துக்க மாட்டேன். இடுப்புக்கு மேலே வித்தியாசம் இருந்துதுன்னா கீழேயும் நிச்சயமா இருக்கத்தான் இருக்கும்."

எல்லாம் கழுத்துக்குள் நடந்த பேச்சு. ஆனால் நான் சொன்ன கடைசி வார்த்தையைக் கேட்டு வந்த சிரிப்பு கழுத்தை விட்டு வந்துவிட்டது.

"என்ன?"

"ஒண்ணுமில்லே."

"சொல்லு."

"ஒண்ணுமில்லே."

"படிக்கத் தெரியாம, எப்படி இந்த கீர்த்தனையெல்லாம் பாடம் பண்ணினேன்னு சிரிக்கிறியா?"

"ஆமாம்" என்று சொல்லிவைத்தேன்.

"ஆமாம்னு பொய் சொல்றதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. நான் ஓட்டை வாய். அதனாலே இந்த மாதிரி மலையை முழுங்கிட்டு ஆனா வெறும் தண்ணி சாப்பிட்டாப்பல உட்கார்ந்திருக்கிறவாளைக் கண்டா, எனக்குப் பிடிக்கிறது . . . எதுக்குச் சிரிச்சே?"

"ஒண்ணுமில்லெ . . . நான் வரேன். பெரியப்பாகிட்ட சொல்றேன் நீங்க ஒத்துனுட்டேள்னு. சந்தோஷத்திலே நாலு நாள் அவாளுக்குத் தூக்கமே வராது."

"அந்தப் பாவம் வேறயா - அதுசரி, எதுக்குச் சிரிச்சேன்னு சொல்லாமியே நழுவறியே."

"இன்னொரு நாளைக்குச் சொல்றேன்."

"இவ்வளவு நாணிக்கோணிப்பானேன் அதுக்கு . .? என்னிக்கி சொல்லப்

போறே?"

"பத்திரிகையிலே உங்க கச்சேரின்னு போடலாமா?"

"நிச்சயமாப் போடு. ஒத்துண்டதுக்கு சந்தோஷம்னு ஒரு லெட்டரும் போடு. ஒரு சமயம் வராம இருந்துட்டேன்னா, அபிடவிட்டு வேணுமோல்லியோ?"

"சரி . . . வரட்டுமா?"

"அப்புறம் எப்ப பார்க்கறது? பி.ஏ. பாஸ் பண்ணினப்பறம் என்ன பண்ணுவே?"

"மேலே படிக்கணும்னு ஆசை. அதுக்கு மெட்ராஸ் போகணும்,

திருச்சிராப்பள்ளி போகணும், சிதம்பரம் போகணும். சம்பளம் இல்லாம கிடைச்சுடும். ஆனா எங்க இருக்கறது - சாப்பிடறது? அதுக்குப் பணம்? பெரியப்பா என்ன சொல்றாளோ - முடியாட்டா வேலைக்குப் போயிடுவேன் . . . அதுக்கு இப்ப என்ன கவலை?"

"அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்."

"நீங்க கேட்டேள். சொன்னேன். ஆனா நான் கவலைப்படறதில்லெ. அதெல்லாம் அன்னவாசல்லெ விட்டுட்டேன். எங்கம்மா வந்து பாட்டிக்குத் தெவசம் வரதுன்னா மூணு மாசம் முன்னாலெயே கவலைப்பட ஆரமிச்சுடுவ. தெவசம் வரது தெவசம் வரதுன்னு தினமும் மூணு தடவை சொல்லணும். ரண்டு புரோகிதனைக் கூப்பிட்டு எள்ளும் அரிசியும் தலையிலே போட்டு சோத்தைப்போட இவ்வளவு என்ன கவலைன்னு கேட்டேன். தெவசம்னா கவலைப்படணும்டீன்னு சொன்னா அம்மா. அதிலேர்ந்து நான் ஒண்ணுக்கும் கவலைப்படறதே இல்லெ."

"உனக்குக் கவலையே கிடையாது?"

"கிடையாது."

"பாஸாகணும், அப்பறம் வேலையாகணும், கலியாணம் ஆகணும்."

"ஒரு கவலையும் கிடையாது."

"ஏதாவது இசைகேடா நடந்துதுன்னா, அதைப்பத்தியும் கவலைக் கிடையாது."

குனிந்துகொண்டே உதட்டை முறுக்கிக் கோணங்கி காட்டினேன்.

"இன்னிக்கி ராத்திரியோட உனக்கு ஜன்மம் சரின்னு சொன்னாக்கூட கவலைப்பட மாட்டேன்."

"போரும் போரும். சமத்துன்னு நெனச்சேன். கிளம்பு. நாழியாச்சு" என்று முதுகைப் பிடித்து லேசாகத் தள்ளிற்று கை. மாடிப்படியிறங்கினேன்.

கூடத்தின் வழியே போகும்போது கோபாலியின் சம்சாரம் என்னை கட்டையாகப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"குஞ்சாளீ - அன்னவாசல் நடேசய்யர் பொண்ணு. குந்தளம் மாதிரியே இருக்கா பாரு. ஆனா அவளைவிட நூறு பொல்லாது. ஒரு தேங்காமூடி கச்சேரி செட்டில் பண்ணிப்பிட்டா."

குஞ்சாளி அம்மாள் தேங்காய்மூடி அப்படியே கையில் வைத்துக் கடிப்பது போலிருந்தது எனக்கு.

முகத்திலிருந்து சட்டென்று கண்ணை உடம்புக்குக் கொண்டு வந்தேன். நிற்கிற வாக்கில் இப்போது பார்க்க முடிந்தது. உடம்பு சாதாரணமாகத்தான் இருந்தது. சிவப்புத்தோல். திடீரென்று மாடியில் கழுத்துக்குள் நடந்த பேச்சு ஒலித்தது.

கொல்லைப்பக்கம் காலை அலம்புவது போல் போய்விட்டு அடங்கின சிரிப்பை அவிழ்த்து முழுவதும் சிரித்துவிட்டு கதவைத் திறந்தேன்.

உள்ளே வந்தேன். தெருவில் இறங்கினேன். வீட்டுக்குப் போகிறவரையில் கதையில் எழுதுகிறார்களே, அந்த மாதிரி ஸ்வாமிக்குக் கண் கிடையாது என்று நினைத்துக்கொண்டே நடந்தேன். ஸ்வாமிக்கு இந்தமாதிரி தப்பெல்லாம் செய்யமுடியும் என்று தத்துவஞானிபோல் அவரைக் கிண்டல் செய்துகொண்டே வந்தேன்.

ஸ்வாமி ஒன்று நினைக்க, நாம் ஒன்று நினைக்க வேண்டாமா? நான் விடமாட்டேன்.

# 8

கலியாணக் கச்சேரிகளில் வித்வான் மட்டும் தாயில்லாப் பிள்ளையாகப் புலம்புவது வழக்கம்.

அவரைத் தவிர மற்ற எல்லாரையும் கேட்டுக் கொண்டிருக்கும் வழக்கம் யாருக்கும்.

பெரியப்பா வீட்டுக் கலியாணத்தில் கோபாலியைத் தவிர வேறு யாரையும் யாரும் பார்க்கவுமில்லை. கேட்கவும் இல்லை. கச்சேரியைத் தொடங்கி இரண்டு பாட்டைப் பாடிவிட்டு கோபாலி தம்புராவையும் பிடிலையும் சற்றுக் கையமர்த்தி, "நான் என் பாட்டைப் பாடியாச்சு. இனிமே நீங்க யாரு எது பிடிச்சாலும் கேட்கலாம். தெரிஞ்சாப் பாடறேன்" என்று, முக்கிய மாக முன்னால் உட்கார்ந்திருந்த குழந்தைகளையும் பெண்களையும் பார்த்துச் சொல்லிற்று.

முதலில் அதைக் கேட்டு ஒன்றும் புரியாதது போல் ஒரு மௌனம்.

"ம் -" என்று கையை மல்லாத்தித் தூண்டிற்று.

குழந்தைகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பெண்கள் மற்ற பெண்களைப் பார்த்து நாணச் சிரிப்புச் சிரித்தார்கள்.

"நீங்களும் கேக்கலாம்" என்றார் வித்வான் பெண்களைப் பார்த்து.

"ஏண்டா உங்களுக்கு என்ன பாடணும்?"

கோபாலி சிரித்தது. "நான் வேற புரியாத பாட்டெல்லாம் பாட ஆரமிச்சுடுவேன்" என்று பயமுறுத்திற்று.

"கண்ணே பாப்பா" என்றது திடீரென்று ஒரு பெண் குழந்தை.

"அப்படிச் சொல்லு." பக்க வாத்யங்களைக் கண்ணால் உத்தரவிட்டு "கண்ணே பாப்பா, முட்டாயி

வாங்கித் தருகிறேன் நானே . . . கண்ணே பாப்பா, கண்ணே பாப்பா, கண்ணே பாப்பா . . ."

வாய் மட்டும் பாடவில்லை. கண், தலை, கை எல்லாம் சேர்ந்து பாடின. அபிநயப் பாட்டு. அந்தப் பாட்டு முடிய கிட்டத்தட்ட பத்து நிமிஷம் ஆகிவிட்டது.

முடிந்ததும் தலைக்குத் தலை குழந்தைகள் கிளம்பிவிட்டன.

ஒன்றிரண்டு தெரியாது என்று சொன்னதைத் தவிர மீதி அனைத்தையும் பாடிவிட்டது கோபாலி.

அதுவரையில் பெண்களுக்குப் பொறுக்கவில்லை. குழந்தைகளைப் பார்த்து முகத்தைச் சுளித்தார்கள். "பசங்க சொல்றத்தையே பாடிண்டிருந்தா, நாங்க எப்ப கேக்கறதாம்?" என்றாள் ஒரு பெரியம்மாவின் ஒன்றுவிட்ட தங்கை.

"நான் முதல்லேயே உங்ககிட்ட கேட்டுண்டேனே."

மாமாங்க ஓடம், மங்களாம்பா ஊஞ்சல், காவடிச் சிந்து என்று திரௌபதி புடவையாக வந்துகொண்டிருந்தது. அதே அபிநயத்துடன் அதே கண் வீச்சுகளுடன் அதே குழைவுகளுடன் ஒவ்வொரு பாட்டும் போய்க்கொண்டிருந்தது. கணவர்கள் இருப்பதுகூட ஞாபகமில்லாமல் அல்லது சட்டை செய்யாமல் பெண்கள் மலர்ந்து கிடந்தார்கள். அன்ன வாசலிலிருந்து வந்து,

ஓரமாக நின்றுகொண்டிருந்த வேலை, சுமை வண்டி அரைவண்டி ஆட்களையும் கோபாலி விட்டுவைக்கவில்லை. கூத்துப் பாட்டு, நாடகப் பாட்டு, கிட்டப்பா பாட்டு, சுந்தராம்பா பாட்டு, பல்லக்குப் பாட்டு, சித்தர் பாட்டு - ஒன்றையும் விட்டுவைக்கவில்லை.

சங்கீதக் கச்சேரியாக இல்லை. மணப் பெண்ணையும் பிள்ளையையும் சாக்காக வைத்துக்கொண்டு பெரியவர்கள் அடிக்கிற கும்மாளமாக அந்தப் பெரிய கூட்டம் முழுவதும், சிரிப்பும், கைகொட்டுமாக அதிர்ந்தது. பாடுகிறபோது மட்டும் மந்திரக் கட்டாக நிசப்தம். முடிந்ததும் பத்து தெரு சன்னலைத் திறந்த இரைச்சல்.

கோபாலி ஆண்களைச் சட்டை செய்ததாகத் தோன்றவில்லை. பெண்களும் குழந்தைகளும்தான் அதன் கண், பாட்டு, மனது

அனைத்தையும் இழுத்து வைத்திருந்தது போல் பட்டது. போகப் போக, நேராக உட்கார்ந்திருந்த உடல்கூட குழந்தைகளையும் பெண்களையுமே முழுவதும் பார்க்க வாகாகத் திரும்பியிருந்தது. ஒரு பத்து பன்னிரண்டு ஆண் கண்களில் ஒரு சலிப்பு - சிரமப்பட்டு மறைத்துக்கொண்ட கோபம். அதில் ஒருவர் ஏதோ சொல்லி சிரித்து மழுப்பிக்கொண்டு எழுந்து வாசலுக்குப் போனார். பெரியப்பா, கடை முதலாளிச் செட்டியார், கடைப் பையன்கள், அன்னவாசல் ஆட்கள், இன்னும் சில கிழ ஆண்கள், நடுவயதைக் கடந்த ஆண்கள், நாலு பரமார்த்தி ஆண்கள் - இவர்கள்தான் இந்தக் கும்மாளத்தில் ஒன்றிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். செட்டியார் தாளமே போட்டுக்கொண்டிருந்தார்.

மாலை ஆறுமணிக்குத் தொடங்கிய அமளி. மணி பதினொன்று.

கோபாலி கடிகாரத்தைப் பார்த்தது.

"உங்களுக்குப் பசிக்கலியா?" என்றது கூட்டத்தைப் பார்த்து.

"எப்படிப் பசிக்கும்?" என்று பெண் கும்பலிலிருந்து ஒரு குரல்.

செட்டியார் ஒரு ஆள்காட்டி விரலை அசைத்து பலே என்று வாயால் சொல்லாமல் தலையைப் பொம்மைமாதிரி ஒரு கால் நிமிஷம் ஆட்டிக்கொண்டிருந்தார்.

"இங்கியும் அப்படித்தான். குழந்தைகள்?" என்றது கோபாலி.

ஒரு சின்ன இரைச்சல். பிறகு கந்தனுக்குக் குறத்தி பாடின தூதுப்பாட்டோடு மங்களம் பாடிற்று.

சாப்பிட்டுவிட்டு ஒரு மணி வரையில் அரட்டை அடித்தது. பிடில்காரரும் மிருதங்கக்காரரும் சற்று ஒதுங்கி மரியாதையாக உட்கார்ந்தே பேசிக்கொண்டிருந்தார்கள். கோபாலி எதையும் செய்யும், ஆனால் ஏனென்று கேட்க நமக்கு ஏது வக்கு, புரிந்துகொள்ளத்தான் புத்தி ஏது என்று சொல்வது போல் பேசாமல் கண்ணெடுக்காமல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். குழந்தைகள் சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். பெண்கள் சற்றுத் தள்ளி உட்கார்ந்து அவரோடும் தங்களுக்குள்ளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இந்தமாதிரி ஒரு கச்சேரிகூட நான் கேட்டதில்லே" என்றாள் பெரியம்மா.

"நானும் பண்ணினதில்லெ. இனிமேலும் பண்ணப்போறேனோ என்னவோ - இனிமே நீங்க இன்னொரு கலியாணம் வச்சுக் கூப்பிட்டாத்தான்! கூப்பிடுவேளோல்லியோ! கச்சேரின்னா இப்படித்தான் பண்ணணும். ஆனா யாரு விடுவா? கச்சேரின்னு பரிட்சை வைக்கிறவாகிட்ட இப்படிப் பாடமுடியுமா என்ன?"

நடுநிசி ஒரு மணிக்குத்தான் எழுந்தது கோபாலி. பெரியப்பா வைத்த ஜரிகைப் பட்டையும் அங்கவஸ்திரத்தையும் மாப்பிள்ளை கையில் வெற்றிலை பாக்கு வைத்துக் கொடுத்து பெரியப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சொன்ன வாக்குத் தவறாமல் ஒற்றை மாட்டு வண்டிக்கு மூன்று ரூபாய் சத்தம் வாங்கிக்கொண்டு, பிடில், மிருதங்கக்காரர்களுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய் அதே செலவுக்காகக் கொடுத்துவிட்டு, வண்டியில் ஏறிக்கொண்டது. அன்ன வாசலிலிருந்து இரண்டு பெரிய மனிதர்கள் காரில் வந்திருந்தார்கள். வண்டியிருக்கே வண்டியிருக்கே என்று தாங்கள் என்னவோ அபசாரம் செய்வதுபோல் முந்தி முரண்டி வந்தார்கள். "இன்னிக்கு நான் பேசின வண்டி ஒத்த மாட்டு வண்டிதான்" என்று வண்டியில் ஏறி கம்பித் தாழை மாட்டிக்கொண்டது கோபாலி.

நானும் பெரியம்மாவும்தான் கடைசியாகப் படுக்கப் போனோம். மாடிப்படியில் "உன்னாலேதாண்டி கண்ணு" என்று பெரியம்மா என்னை இறுகத் தழுவிக்கொண்டாள்.

கச்சேரி நடந்த அரண்மனை சத்திரத்து மாடிக் கூடத்தில் பெரிய ஜமக்காளத்தின் மீது சிறுமூச்சும் பெருமூச்சும், முழங்காலும் பாதமும் மல்லிகைக் கசங்கலுமாகப் படுத்துக் கிடந்த வரிசைக்கு ஓரமாகப் படுத்துக்கொண்டேன்.

கண்ணை மூடினேன். கோபாலி, குழந்தைகள், பெண்கள் - எப்போதும் கச்சேரியில் உட்கார்ந்தால் அகம்பாவமும் அசட்டையும் உருவாக உட்கார்கிற கோபாலி இன்று தன்னை மறந்து குழந்தைகளோடு குழந்தையாக, பெண்களோடு பெண்ணாக அடித்த கூத்து.

எனக்குக் கிருஷ்ணன் நினைவு வந்தது. கிருஷ்ணனைச் சுற்றிப் பெண்களும் குழந்தைகளும்தான் கொட்டமடித்தார்கள்.

ஏசுநாதன் ஞாபகம் வந்தது. பெண்களும் குழந்தைகளும் அவனை மொய்த்துக்கொண்டிருந்தார்கள்.

போகாதே போகாதே என்று பிருந்தாவனத்தில் கணவர்கள் மனைவிகளைப் பூட்டிவைத்து வதைத்தார்கள்.

இருக்காதே இருக்காதே என்று ஆண்களெல்லாம் சேர்ந்து சிலுவையில் அறைந்தார்கள்.

இன்று கச்சேரியில்கூட அந்தக் கணவர்களின் முகங்கள் நிறைய இருந்தன.

கோபாலியின் முகம் - அதன் முடியலை, நெற்றியழகு, வாயழகு, உடல்கட்டு, அதன் உடம்பைச் சுற்றி வீசுகிற குழந்தைத்தனம், மடக்கி மடக்கி இழுத்து அணைத்துக்கொள்கிற ஏதோ வேகம் - இத்தனையையும் கண்டு கச்சேரி கேட்டுக்கொண்டிருந்த அன்ன வாசல் ஆண்கள், மற்ற ஆண்கள் - எல்லாம் நெருஞ்சி முள்மேல் நின்றுகொண்டிருந்ததுபோல் தோன்றுகிறது.

கோபாலி இனிமேல் இந்த மாதிரிக் கச்சேரி பண்ணாதாம்.

இதே வீட்டில் இன்னொரு கலியாணம் நடந்து கூப்பிட்டால் தானாம்!

சிரிப்பாக வந்தது. யாருக்குக் கலியாணம் . .? இந்த மாதிரி கடுகடுக்கிற ஆண்கள் உலகில் இருக்கும்போது? பூட்டிவைக்கிற, சிலுவையில் அறைகிற ஆண்கள் இருக்கும்போது, யாருக்குக் கலியாணம்?

அரைத் தூக்கத்தில் எழுகிற கேள்விகளா இவை? குழந்தை கள், பெண்கள், சிரிப்பு, ஆட்டம், பாட்டு, சிலுவை, குழல், கதவுச்சங்கிலி நாதாங்கியில் மாட்டுகிற சத்தம், பூட்டு பூட்டுகிற ஓசை, ஆணி ஓசை, சுத்தி ஓசை, கோபாலி வீட்டு மொட்டை மாடி, மேனிக் கொதிப்பு, ஒரு குரங்குப் பெண் தேங்காய் மூடி யைப் பல்லில் வைத்துக் கடிக்கிற உறுமல் . . .

அரைத் தூக்கமா, முழுத் தெளிவா என்று புரியவில்லை.

மறுநாளும், மற்ற நாட்களிலும் இந்தமாதிரி அரைத் தூக்கமா முழுத் தெளிவா என்று புரியாத போதை.

கலியாண அமளி முடிந்து மூன்று நாளைக்குப் பிறகு கோபாலிக்கு நன்றி சொன்னதற்காகப் போனபோது - அந்த சிஷ்ய அம்மாள் வழக்கம்போல் உட்கார்ந்திருந்தாள்.

"அண்ணாவுக்கு ரொம்ப வருத்தம்" என்றாள் அந்த அம்மாள்.

"என்ன?"

"நேத்திக்கி ராத்திரி திருச்சிராப்பள்ளிகிட்ட கோவில் கச்சேரியாம். அது உங்க பெரியப்பா பொண்ணு கலியாணக் கச்சேரி மாதிரி அமையலையாம்." அந்த அம்மாளும் கச்சேரிக்கு வந்திருந்தவள்.

"அப்படீன்னு நான் சொல்லலே. இவாளே என் மனசை அறிஞ்சுண்டு சொல்றா."

"கண்ணே பாப்பா முட்டாய் வாங்கித் தருகிறேன் நானேன்னு சங்கதியெல்லாம் போட்டுண்டு பாடறதைக் கேக்கற சபை இல்லியாம அங்க?"

"இது பரிகாசமா, நிஜமாப் பேசற பேச்சா?" என்றுதான் எனக்குக் கேட்கத் தோன்றிற்று.

"பரிகாசமும் இல்லை. வேற மாதிரியும் இல்லெ. ஏதோ தோணித்து சொல்றேன்" என்றாள் அந்த அம்மாள்.

எனக்கு அந்த அம்மாள் சொல்வது புரியவில்லை.

"எனக்கு அன்னிக்கி ராத்திரி தூக்கமே வரலெ. அன்னிக்கு ஒரு வாண்டு வேலைக்காரன் பாக்கியில்லாம எல்லாருக்கும் சந்தோஷம் பிச்சுண்டு வந்தது. எப்படி கேட்டதெல்லாம் பாடினார் பார்த்தேளான்னு எல்லாம் ரண்டு நாள் குதிச்சுது."

"எனக்கும் அப்படித்தான் இருந்துது - என்ன இது புது அவதாரமா இருக்கேன்னு நினைச்சுண்டேயிருந்தேன். எங்க இவர்கிட்ட சொன்னேன். அவர் காலமே முகூர்த்தத்துக்கு வந்துட்டுப் போயிட்டார். ராத்திரி கட்சிக்காரன் வருவன்னு கச்சேரிக்கு வரலெ. சொன்னேன். அவர் சிரிசிரின்னு சிரிச்சார். அப்பவும திடீர்னு வேற யாருக்குடீ இப்படி மனசு, தைரியம் எல்லாம் வரும், நான் வந்து பார்க்காத போயிட்டேன்னேனு சொன்னார். அவர் புத்திசாலியோன்னா."

"என்ன பதிபக்தி - ஆகா! ஆகா! - நீ இப்படிச் சொன்னேன்னு நான் அவர்கிட்ட சொல்றேன். ஜட்ஜுகிட்டவும் சொல்றேன்." - கோபாலி.

நான் முறைத்துப் பார்த்தேன்.

"இப்ப நீ என்ன அம்மா கட்சியா?"

"ஏதாவது நல்லதா சொல்ல வந்தா இப்படித்தான் ஏதாவது சொல்லி கெடுக்கறது."

"சரி, தப்பு - நீ என்னமா நெனச்சே. கச்சேரியைப் பத்தி உன் அபிப்ராயம் என்ன? நீ பி.ஏ. படிச்சிருக்கியே."

"இதுக்கு பி.ஏ. படிக்க வாண்டாம். நான் அன்னிக்கி ராத்திரி கிருஷ்ணனையும் ஏசுநாதரையும் நெனச்சுண்டிருந்தேன்."

"எப்டீ! எப்டீ!"

"ஆமா. கிருஷ்ணனைச் சுத்தி பொம்மனாட்டிகளும் குழந்தைகளும் மொச்சுகிண்டேயிருந்தா. ஏசுநாதரைச் சுத்தியும் அப்படித்தான் இருந்தது."

"அப்படியா? எனக்கும் ஒரு கோயில் மாதாகோயில்னு கட்டி வச்சுடலாம்னு பார்க்கறே - ஏண்டா ராஜா! . . . கிருஷ்ணன் பதினாயிரம் பொண்டாட்டியோட இருந்தான். இந்த மாதிரி எல்லாப் பசங்களும் கிளம்பிடப் போறாளேன்னு அவருக்குக் கோயில் கட்டி வச்சா எல்லாரும். அவர் அவதாரம். அவர் என்ன வேணும்னாலும் பண்ணுவர். நீயும் கிடந்து அலையாதேன்னு நான், நீ, எல்லாரையும் கோவிலுக்கு வெளியிலே நிறுத்தி வச்சா. இப்ப நான் யார்ருன்னா, 'ஒரு தினுசு.' உள்ளே விடாதே, பந்தல்லை வச்சு பாடச் சொல்லி, காசைக் கொடுத்து அப்படியே போகச் சொல்லு! அப்படித்தானே வக்கீல்வாள் சம்சாரம்?"

"இப்பல்லாம் அவ்வளவு மோசம் இல்லெ" என்று யாரையோ சமாதானப்படுத்துவதுபோல் சொன்னாள் சிஷ்ய அம்மாள்.

"மோசமோ நாசமோ - எல்லாம் இப்படியேதான் இருக்கும். விட்டுடுவாளா? அப்பாவுக்கு உடையவள் அம்மா. அம்மாவுக்கு உடையவர் அப்பா. உனக்கு உடையவர் சோமேச்வரய்யர். அவருக்கு உடையவள் நீ. எனக்கு உடையவள் குஞ்சாளி. அவளுக்கு உடையவன் நான். அம்மணிக்கு உடையவன் - ஓகோ, நீ இன்னும் பாக்கி இருக்கிறாயா?"

வழக்கம்போல உதட்டை முறுக்கிக் கோணங்கி காட்டினேன்.

"ஆகக்கூடி, சுகம் சந்தோஷம் எல்லாத்தையும் பானை பானையாகக் குடிக்கிறதுக்குப் பதிலா, குறும்பை வாங்கியாலே குந்துமணி எடை எடையா நாக்கிலே சொட்டிக்கணும். ஆனா, நான் சொன்னா வக்கீல் சம்சாரம் நீ அடிக்க வருவே. கிருஷ்ணன்தான் கீதை சொன்னான். ராமன் சொல்லலே. ஏன்னா கிருஷ்ணன்தான் பானை பானையாகச் சாப்பிட்டவன். யோகீச்வரன்னு பேர் வச்சு அவனை ஒதுக்கி வச்சாச்சு. உளறியடிச்சிண்டு அவசர அவசரமா ராமனையும் படைச்சாச்சு. தியாகராஜ ஸ்வாமி காதிலே விழுந்தா நொறுக்கிடுவர். அவர் பாட்டைப் பாடித்தான் பொழப்பு நடந்துண்டிருக்கு . . . சரி கிட்டாணி அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லேன்னு தஞ்சாவூர்லெ இறங்கிண்டான். நீங்க போய் அம்மணி அம்மாளுக்குக் காபி வாங்கிண்டு வரலாம்."

சிஷ்ய அம்மாள் எழுந்துவிட்டாள். நான் வேண்டாம் என்று பூதஞ்சி பண்ணிக்கொள்ளவில்லை.

"சரியாவே படிக்கத் தெரியாதுன்னு சொல்லலெ நீங்க?"

"என்னது திடீர்னு?"

"ஏதாவது பேச ஆரமிச்சா, பரிகாசமாக் குரலை மாத்திக்க வாண்டாம்!"

"படிக்காட்டா என்ன? கிருஷ்ணன் மாதிரியே நானும் தத்தாறி. அதனாலெதான் கிருஷ்ணன்தான் சரின்னு படறது. ராமனைப் புரிஞ்சுக்க முடியலெ. இதுக்கு என்ன பிரமாதப் படிப்பு வேண்டிக் கிடக்கு, நீதானே கிருஷ்ணன் பேச்சை ஆரமிச்சே. நீ சொன்னதைப் பிடிச்சிண்டு நான் ஆலாபனை, பல்லவி எல்லாம் பாடி முடிச்சேன். இது என்ன பிரமாத வித்தை!"

"அதனாலெதான் அம்மணிக்கு உடையவன்னு வாயிலே வந்தது போலிருக்கு."

"குஞ்சாளி மாதிரியே பேசறியே!"

அதைக் கேட்டதும் எனக்கு வந்தது கோபமா, இரக்கமா அலட்சியமா - புரியவில்லை. துவண்டுபோய்விட்டது உள்ளும் புறமும். கோபாலி அப்படியே வாரி எடுத்துக்கொண்டது.

நாலு பக்கமும் கையும் உதடும் உடலுமாக பொழுது நசுங்குவது போலிருந்தது.

புதைவுக்குள் பெரியப்பா, பெரியம்மா, அப்பா, அம்மாவைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"எனக்கு ஒண்ணும் வாண்டாம்" என்று காதண்டை கேட்டது.

கை விலகிற்று.

"மொட்டை மாடியிலே போய் நிக்க வாண்டாம்."

ஏன் என்று கேட்காமல் நிமிர்ந்து பார்த்தேன்.

"மெட்ராஸ் வீட்டிலெ மொட்டை மாடி கிடையாது. காவேரி, அக்கரையெல்லாம் இல்லெ. ரோடும் காம்பவுண்டும்தான் தெரியும். மெட்ராஸ்லெ வீடு வாங்கியாச்சு. எல்லா சங்கீதக்காரனும் அங்க உட்கார்ந்திண்டிருக்கான். நான் மாத்திரம் இங்க இருந்துண்டு என்ன பண்றது? தியாகராஜரா, புரந்தரதாஸரா - சொம்பை மாட்டிண்டு, விழுந்ததைப் பொங்கி சாப்பிடறதுக்கு."

சொல்லிக்கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்தது கோபாலி. "உக்காரு இப்படி."

தலையை கோதிக்கொண்டு உட்கார்ந்தேன்.

"புது மாம்பலத்திலே வீடு வாங்கியாச்சு. மாடி இருக்கு. ரண்டாவது மாடியில்லெ. நீ ஹாஸ்டல்லியும் இருக்கலாம். இல்லெ, தெரிஞ்ச மனுஷா இருக்கா. அவா வீட்டிலெ இருந்து சாப்பிட்டுண்டு படிக்கலாம். காலேஜிலே படிச்சாலும் படிக்கலாம். இல்லாட்டா பாட்டும் படிக்கலாம் சோமேச்வரய்யர் சம்சாரத்தோட பாட்டு வாத்தியார்கிட்ட. எப்படியும் பெரியப்பா வீட்டிலெ இருக்கிறது முடியாது. கோபாலிக்குப் பாட்டுத்தானே உசிரு, பொழப்பு எல்லாம் - ரண்டும் உனக்குக் கிடையாதுன்னு சொல்லி பெரியப்பா வீட்டோட இருப்பேன்னு சொன்னா." கோபாலியின் வாயைப் பொத்தினேன்.

"பெரியப்பாகிட்ட நானே சொல்லப்போறேன். நானே படிக்க வைக்கப் போறேன்னு."

"எனக்குப் பாட்டு வராது?"

"நீ பாடியே நான் கேட்டதில்லையே!"

"வரும்னுதான் தோண்றது."

அடுத்த மாதம் வெகு சீக்கிரம் வந்துவிட்டது. ஆனால் அந்த ஹாஸ்டல் வாசம் ஒரு வருடம் நீடிக்கவில்லை. திருவல்லிக்கேணிக்கும் கோபாலி வீட்டுக்கும் தினம் தினம் ஒரு பிராயாணம்.

இந்த வீட்டில்தான் பாட்டு நடந்தது. படிப்பு முடிந்தது. ஆட்டம் தொடங்கிற்று. பாண்டி பஜார் வீதியிலிருந்து தெற்கே கிளைத்து நீள்கிற தெருவில் இடது பக்கம் திரும்புகிற தெரு. காம்பவுண்டு வீடு.

மாடியில் ஜாகை. வாசலில் இருந்து மாடிப்படி ஏறியதும் பெரிய ஹால், அதன் இரண்டு பக்கமும் வாசலைப் பார்க்கிற இரண்டு அறைகள்; ஒவ்வொரு அறைக்கும் மூன்று பக்கமும் ஜன்னல். இடது அறையின் ஜன்னலை ஒரு சீமைப்பலாவும் வேம்பும் இலையால் தழுவும். வலது பக்கம் ஜன்னலையும் பால்கனியையும் ஒரு சப்போட்டாவும் மாமரமும் தழுவும். மான் தோல் போல வெயிலைப் புள்ளி புள்ளியாகத் தூவியிருக்கும். சில சமயம் சிறுத்தைத் தோல்மாதிரி உறுமிற்று இதே கோலம்.

# 9

உச்சி வேளை தவிர காலையும் மாலையும் முற்பகலும் பிற்பகலும் இது வெயில் வாழும் அறை. தங்கவட்டம் வெள்ளி வட்டமாக முதிர்ந்து மறைந்து மீண்டும் வெள்ளி வட்டமாக முளைத்து பசும் தங்கமாகத் தணிந்து தேயும் காட்சி சக்கரம். தேய்ந்து மறையும் வட்டங்கள் மீண்டும் நாளை நிச்சயம் தோன்றப்போகும் தைரியம் எனக்கு. அதனால்தான் போட்டி போட்டேன் போலிருக்கிறது.

வெயில் வட்டங்களைப் பார்த்துப் பார்த்து ஒரு வெறி. வட்டங்களை எண்ணி எண்ணிப் பார்க்கிற வெறி. புதிது புதிதாகக் கிரணங்கள் தோன்றி, புதிய புதிய வட்டங்கள் இந்த அறையைத் தழுவுவதாக ஒரு நிச்சயம். நீள்வட்டம், முழுவட்டம், சிறிது இலை போன்ற மழுப்பிய வட்டம். கன்னத்தைக் கிள்ளி இழுத்தாற்போன்ற வட்டம். யாரோ அழுத்தி பாதி வட்டமாகக் குறைந்த வட்டம்.

ஒரு நாள் வட்டங்களை எண்ணிப் பார்த்த பொழுது, இந்த அறையில், சூரியன் மறைந்த, அரவம் தூங்கிய இரவில் தூங்காமல் கிடந்த ஆண்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருந்தது. நாற்பத்து நான்கு எண்ணினேன். ஜன்னல் இலைகள் அசைய அசைய இரண்டு வெள்ளி வட்டங்கள் நடு நிழலை ஒதுக்கிவிட்டுக் கூடி நீள் வட்டமாகும். சற்றுக் கழித்து அது பிரிந்து, ஒரு வட்டம் வேறு பக்கத்திலிருந்து வட்டத்தோடு கூடும். மனம் கொள்ளாத காட்சி. கூடியுள்ள இரு வட்டங்களிலிருந்து ஒன்றைப் பிய்த்துத் தன்னோடு சேர்த்துக்கொள்ளக் காத்திருக்கும் மூன்றாவது வட்டம். அறை முழுவதும் இப்படிக் காத்திருக்கும் வெறிகளும் விழிப்புகளுமாகப் பரந்து கிடந்தன என்னைப் பார்த்துக் கற்றனவா? அவைகளை பார்த்து நான் கற்றேனா?

பிற்பகல் வேளைகளில் வட்டம் புறப்பட்ட திசையைத் திரும்பிப் பார்த்திருக்கிறேன். இலைகளூடே கண்ணில் பாயும் ஊசி வெயில். ஒரு நாள் ஒரு பார்வையில் குந்தி தேவியின் வேட்கை புகுந்து ஆட்டிற்று. திறந்த மாடி இல்லாவிட்டாலும் இரண்டு பேர் படுக்கிற அளவுக்கு பின்பக்கம் ஒரு திறப்பு. கைகால் அலம்பகொள்ளக் கட்டியிருந்த திறப்பு.

விறுவிறுவென்று அங்கு போய் உட்கார்ந்துகொண்டேன். வெயிலிலேயே புடவைத் தலைப்பைப் போட்டுப் படுத்தேன். கர்ணனே உள்ளுக்குள் ஆலவித்தாகத் திரண்டு அமைவதுபோல், கன்னம், மோவாய், துடை, வயிறு எல்லாம் விறைத்துச் சுருங்கித் துவண்டன. ஏதாவது நேர்ந்தால், அது சூரியனால்தான், பலனும் கர்ணனாகத்தான் இருக்கவேண்டும் என்று வானை வளைக்கும் ஆசையாக, உள்ளும் புறமும் புடைத்துக்கொண்டன.

அப்போது கூப்பிடு மணி அடித்தது. எழுந்து போக மனமில்லை.

முடியவுமில்லை. வெயிலோடு வெயிலாக ஒன்றியிருந்த புட் குரலுக்கு அவசுருதியாக மணி இரைந்தது. கண்ணை இடுக்கி சூரியனைப் பார்த்தேன். வேர்த்து ஊற்றிக்கொண்டிருந்தது. தரையின் சூட்டில் ஒட்டி, புடவை பின்பக்கம் கணுக்கால் முதுகெல்லாம் நனைந்திருந்தது. கண்ணை மூடி உள்ளே பரந்த செவ்வானத்தையும் கரும் வடுவாக அலைந்த சூரியனையும் பார்த்துப் படுத்துக்கொண்டேயிருந்தேன். மணி, மீண்டும் மணி, மீண்டும் . . . மீண்டும் . . . மீண்டும் . . .

எழுந்து மெதுவாக நகர்ந்து முன் தாவாரத்தில் இரும்புக் கிராதி வழியாக "யாரு?" என்று அலுத்துக்கொட்டினேன்.

கண் பார்வையில், பின்னாலேயே நகரும் உருவம் தோன்றி நிமிர்ந்து பார்த்தது. கோபாலி. கீழே இறங்கிக் கதவைத் திறந்தேன்.

என்னை ஏற இறங்க மாடிப் படியிலேயே பக்கத்தில் நின்று பார்த்தது. சிரித்துக்கொண்டே முன்னால் ஏறி வந்தேன்.

படி ஏறி ஹாலுக்குள் வந்ததும் மறுபடியும் ஏற இறங்கப் பார்த்தது கோபாலி. பிறகு பின்பக்கம் காலலம்பப் போவதுபோல் போய், வீட்டின் கொல்லைப் பக்கத்தில் இறங்கிப் பின் படிக்கட்டைப் பார்த்தது.

"சந்தேகம் தீர்ந்துபோச்சா?" என்று அருகில் வந்தேன்.

கையைத் தொட்டுப் பார்த்தது, முத்திட்ட வேர்வையைப் பார்த்தது. உடலின் நனைவைப் பார்த்தது.

"எங்கேயிருந்தே?" என்று கேட்டது.

"நான் கேட்டதுக்கு பதில் இல்லையே."

"என்ன?"

"கொல்லைப்படியெல்லாம் போய் ஏன் அப்படி ஆத்திரத்தை மறைச்சிண்டு பார்க்கணும்?"

"இப்ப சந்தேகப்படறது நானா, நீயா?"

"பின்னே வந்த உடனே அங்கே போய்ப் பார்ப்பானேன்?"

"கொஞ்சம் போனா, கட்டிலுக்கடியிலெல்லாம் பார்த்தேன்னு சொல்லுவே. இல்லியா?"

"நான் சொல்லலே. வேணும்னா பார்த்துக்கலாம்."

இது நடந்தது இந்த வீட்டுக்கு வந்து ஆறு மாதம் கழித்து.

காலேஜில் மேல் படிப்பு - திருவல்லிக்கேணியில், சாயங் காலம் பாட்டு சிட்சை. அதற்கு தினமும் மாம்பலம் வரவேண்டும். இந்த அலைச்சல். படிப்பும் கலைந்தது. எது முக்கியம் என்று தெரியவில்லை. பாட்டா, காலேஜ் படிப்பா? எதற்காகப் படிக்கிறேன் என்றும் புரியவில்லை.

சாயங்காலம் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் பாட்டு வகுப்பு நடக்கும் - கோபாலியின் வீட்டில்.

நாலைந்து மாதம் அவர் பாட, நான் திருப்பிப் பாடிக்கொண்டிருந்தேன். அதாவது சோதித்துக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் திடீரென்று நான் பாடுவதைக் குறுக்கிட்டு சொன்னார் அவர்.

"பாட்டு சொல்லிக் கொடுக்கறதுக்கு ரண்டு வழி இருக்கு. ஒண்ணு, இப்ப நீ சொல்லிக்கிறாப் போல பஜனை வழி. அதாவது நான் பாட, நீ பின்னாடி பாடறது. ரண்டாவது, நான் பாடிண்டேயிருப்பேன். நீ கேட்டுண்டே இருக்கறது. நன்னா மனசு, கண்ணு எல்லாத்தையும் என்மேல் திருப்பிக் கேட்டுவிட்டு, அப்பறம் நீ கொஞ்சம் பாடறது. நான் திருத்தித் தருவேன். நீ அப்புறம் போய் உன் ரூம்லே வாய்விட்டுப் பாடணும். மனசுக்குள்ளியும் பாடணும். உனக்கு எது பிடிக்கிறது."

"பின்னாலெ சொன்னதுதான்."

"நீ நல்ல மேதாவி. இப்படித்தான் சொல்லுவேன்னு தெரியும்."

சிரித்தேன்.

மறுநாளிலிருந்து கோபாலி தானே பாடும். ஒரு ராகத்தை எடுத்து, ஒரு மணி நேரம் பொழிந்து கொட்டும். கோபாலியை ஆள் கண்ட சமுத்திரம் என்று சொல்லுவார்கள். ஒரு நாலாயிரம் ஐயாயிரம் ஜனம் இருக்கிற கூட்டத்தைக் கண்டால், அது சமுத்திரமாகப் பொங்கும். நூறு இருநூறு என்ற சபைக் கூட்டங்களில், அதுவும் உத்தியோகஸ்தர்களும், மந்திரிமார்களும், தொழில் - கடைக்காரப் பிரமுகர்களும் முன்னால் உட்கார்ந் திருக்கிற சின்னக் கூட்டங்களைக் கண்டால், அதற்குப் பிரசவ வேதனை. பெரிய கூட்டத்தை, முகம் தெரியாத, இனம் தெரியாத கூட்டத்தைக் கண்டால், மிக மரியாதையாகக் கண்ணை மூடிக்கொள்ளும்.

ஆனால் ஒன்றியாக உட்கார்ந்திருந்த பெரிய கூட்டமாகி விட்டேன். அதன் முகத்தின் பரவசத்தைப் பார்த்தால், ஆள்கண்ட சமுத்ரமாகப் பட்டது. கண்ணை முடிக்கொண்டு, தன்னையும் மறந்து, இந்த ஒன்றிக் கூட்டத்தையும் மறந்து எங்கோ போய்விடும். அல்லது நானும் இல்லாத ஏகாந்தம் என்று நினைத்துக் கொண்டுமிருக்கும். இரண்டுமாக எனக்குத் தோன்றுகிற வழக்கம். நடுநடுவே - அதாவது ஒரு சுற்று முடிந்ததும் கண்ணைத் திறந்து பார்க்கும். அந்த சுற்று பத்து நிமிஷமாகவும் இருக்கும். அரை மணியாகவும் இருக்கும். ஒரு நிமிஷமாகவும் இருக்கும். அந்தப் பார்வையில் பெரிய மலைமாதிரி ஒரு நன்றி.

யாருக்கு என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு நன்றி.

எனக்குத்தான் என்று சில சமயம் தோன்றும். ஆனால் கோபாலி அவ்வளவு சின்னப் பிராணியா என்று ஒரு மாற்றுக் குரல் தோன்றி என்னைத் தலையில் அடிக்கும். அறைக்கு வந்ததும் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுவேன். நிலைக் கண்ணாடி இல்லை. இரண்டு முகம்கொள்ளுகிற கண்ணாடி. அந்த அளவில்கூட எனக்குத் தெரிந்தது.

நான் அழகுதான். கோபாலி என் கண்ணில் ஆடுகிற நுட்பத்துக்கு, கேலிக்கு, ஒட்டிவிடுகிற பரவசத்துக்குத்தான் இப்படிப் பொங்கியிருக்கும் என்று நிச்சயமாகத் தெரியும்.

ஆனால் அந்த நன்றிக்குப் பிறகு ஒரு ஏக்கம். எனக்குப் புரிந்தது.

முதல் வருஷ கோடை விடுமுறை முடிகிற சமயத்திற்கு ஒரு நாள் மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் சொல்லிற்று.

"இனிமே நான் பொறுத்திண்டிருக்க மாட்டேன். எம்.ஏ. படிச்சது போரும். நீ படிச்சு என்ன பண்ணப் போறே?"

"எனக்கும் தெரியலெ."

"உத்யோகத்துக்குப் போறதாக எண்ணமோ?"

"நான் ஒண்ணும் எண்ணலெ. படிக்க வச்சாறது. படிச்சிண்டிருக்கேன். பாட்டு சொல்லிக் கொடுத்தாறது. பாடிண்டிருக்கேன்."

"கோச்சுக்கமாட்டியே."

"எதுக்கு?"

"உனக்குக் கச்சேரி பண்ண வராது."

"நான் நினைக்கவும் இல்லெ பண்ணணும்னு."

"உனக்கு நாட்டியம் நன்னா வரும். 'ஏனிந்தப் பசப்பல் சாமி'ன்னு பாடறதுக்கு ஆடறாளே பரம்பரையா, அவாள்லாம் தங்களுக்குத்தான் ஆடத் தெரியும்னு நெனச்சிண்டிருக்கா. ஒத்தனுக்கு மாலைபோட்டு சமையல், பிரசவம் எல்லாம் பண்றவாளுக்கெல்லாம், "ஏனிந்தப் பசப்பல் சாமிக்கு" எப்படி கண்ணைச் சுருட்றது, எப்படி வச்சுக்கிறதுன்னுகூடத் தெரியாதுன்னு எண்ணும்;

கர்வம். உங்க பொண்டுகளுக்கெல்லாம் என்ன தெரியும் - மோர் கொழம்பு பண்ணுவாங்க. நீங்க கன்னிகாதானம் பண்றப்ப, பக்கத்திலே நின்று உத்தரணியில்லாம் உங்க கையிலே தீர்த்தம் வாப்பாங்கன்னு சொல்லுவ சாரதா. அத்தனை ஏறிக் கிடக்கு அவளுக்கு. உன்னைக் கொண்டு நிறுத்தி அவ மண்டையிலே ஒரு போடு போடணும்னு எனக்கு ஆசை. அவ பாப்பார தாசின்னு உன்னைக் கூப்பிட்டாளோ, அது இந்த நூறு எம்.ஏ.க்கு சமமா இருக்கும்."

வீட்டுக்குள் சிரித்திருந்தால் தெரு கேட்டிருக்கும். ஆனால் அலை இரைச்சலில் என் சிரிப்பு சித்திரக்குள்ளன் மாதிரி ஓடியிருக்க வேண்டும்.

"கோபமா?"

". . ."

"உன் சிரிப்புக்கு என்ன அர்த்தம்னு புரியாதே - கோபமா, சந்தோஷமா, சம்மதமா, ஆட்சேபணையா, குத்தலா, யதார்த்தமா? ஒண்ணும் புரியற வழக்கம் இல்லையே."

"நிறுத்த வாண்டாம்."

"நான் உனக்காக ஒரு வீடு பேசப் போறேன். மாடியிலே ஜாகை. நீ வந்து பாரு. இன்னும் அட்வான்ஸ் கொடுக்கலே. வந்து பாரு. பிடிச்சதுன்னா, அங்க நீ வந்துடலாம். மாம்பலத்திலேர்ந்து தினமும் போய் படிக்க முடிஞ்சுதுன்னா படி - இல்லாட்டா. . ."

"பிராம்மண தாசியா ஆயிடு."

"ஆமாம். பட்டணத்திலே ஜார்ஜ் டவுன்லெ பெரிய செட்டிமார் வீடுகள் என போய் 'செட்டியார்வாள், இருக்காளா'ன்னு கேட்டா, அவர் சம்சாரம் வந்து 'கூத்தியா ஊட்டுக்குப் போயிருக்காங்களே'ன்னு சந்தோஷமா சொல்லுவாளாம். அந்த மாதிரி குஞ்சாளியும் சொல்லிட்டுப் போறா - கௌரவமா?"

"பாடறாப் போலவே - பேசப்படாதோ?"

"நிஜமாப் பேசினா, மறைக்காம கொள்ளாம, கோபம் வரது."

"கோபம் இல்லே. உங்களுக்கு அவசரம் தாங்கலெ."

"அதை முன்னாலேயே சொல்லித்தானே ஆரமிச்சேன்."

எனக்கு உண்மையில் கோபம் வரவில்லை. கோபாலிக்கு இப்படித்தான் பேச முடியும் - தெரியும். ஆனால் என்னை சிஷ்யையாகப் பிடித்துவைத்து, முன்னால் உட்கார்ந்து பாடுகிற முகம்தான் எனக்கு முன் நின்றது, நிற்கிறது.

எனக்கும் அவசரம்தானோ என்னவோ.

இரண்டு வாரத்துக்குள் வீடு பேசியாகிவிட்டது. அதற்கும் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அதில் கொண்டு என்னைக் குடிவைத்தது கோபாலி.

மாடிக்குப் பின்பக்கத்திலேயே ஒரு அறை. அங்கே ஒரு வேலையாள் - கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க, வீட்டு வேலை செய்ய. நானே எனக்கு சமையல்காரி. வீடு பிடித்ததற்கு முதல்காரணம், இந்த அறைதான். அன்று முன் மாலை - நான்கு மணி இருக்கும் - மான்தோலை விரித்தாற் போல் நிழலும் வெயிலும் புள்ளிபோட்டிருந்தது. நடு ஹாலில் நின்றேன். உட்கார்ந்து பார்த்தேன், பின் பக்கமும், முன் பக்கமும் ஜன்னல்களில் நீல, பச்சைக் கண்ணாடிகளாக மாறி மாறிப் பதித்திருந்தது. தென்னை மட்டைகளையும், கொல்லைப் பக்கத்து மாமரத்திலைகளையும் கிளைகளையும் அந்தக் கண்ணாடி வழியாகத்தான் பார்த்தேன். ஜன்மாந்தரத் தொடர்பு மாதிரி இழுத்தது.

"சொப்பனத்திலே இந்த மாதிரி இடம் கிடைச்சா, கண்ணையே திறக்கமாட்டேன்" என்று சொன்னேன்.

மீண்டும் இரண்டு பக்கங்களிலும் உள்ள முன் அறைகளைப் போய் மாறி மாறிப் பார்த்தேன் - மான் தோல் வெயிலை.

சொல்லவும் சொன்னேன்.

"தனியா இருக்கிற ரிஷிகளுக்கு மான் தோல்தான் சரணம்" என்றது கோபாலி.

குடி வருவதற்கு முன்னாலேயே இரண்டு கட்டில்கள், ஆள் உயரத்திற்கு நிலைக்கண்ணாடி பொருத்திய ஒப்பனை மேஜை, ஹாலை அடைத்து நிரப்பும்படியாக அளவு எடுத்த நாலு சுருட்டுப் பாய்கள், நாலைந்து அகல மெத்தைகள், அண்டா, சமையல் பாத்திரங்கள், குக்கர், பாய்லர், படிக்க மேஜை விளக்குகள், படுக்கையில் படிக்கிற விளக்குகள் . . .

நான் குடிவருகிற அன்று எல்லாம் இடத்தில் வைத்திருந்தது.

குடிவந்தது காலையில்.

அன்று மாலையே வேலய்யா தட்டு கட்டையோடு வந்துவிட்டார். பாடம் தொடங்கிவிட்டார்.

ஹோட்டலிலிருந்து எடுப்புச் சாப்பாடு வந்தது. கோபாலியும் சேர்ந்து சாப்பிட்டது.

வீட்டுக்குப் போகவில்லை.

அதன் மேலெல்லாம் ஜவ்வாதும் புனுகுமாக வாசனை.

"இப்ப குஞ்சாளி மாமிகிட்ட வந்து செட்டியார் - இல்லே பாகவதர்வாள் எங்கேன்னு கேட்டா, என்ன பதில் சொல்லுவா மாமி?" என்று கேட்டேன்.

"வேலைக்காரன் தூங்கட்டுமே" என்று மெதுவாக பதில்.

"என்ன பயம், மாமியே சொல்றபோது நீங்க சொல்லப்படாதா?"

வேலைக்காரன் தூங்கிவிட்டான். கீச்சுக் குறட்டை தாழிட்ட பின் கதவைக் கடந்து, கண்ணாடி ஜன்னல் வழியாகக் கேட்டது. நான் தூங்கவில்லை. கோபாலி தூங்கவில்லை. சுவர்க்கோழி தூங்கவில்லை. வெள்ளை மேகம் தூங்கவில்லை. மர இலைகள் தூங்கவில்லை.

நடுநிசிக்கு மேல் மரம் தூங்கிற்று. சுவர்க்கோழிச் சத்தம்கூட இல்லை. இலை தூங்கும்போது, கோபாலியும் தூங்கிக்கொண்டிருந்தது - துவண்டு, மல்லாந்து.

நான் தூங்கவில்லை. நல்ல விழிப்பு. முறுக்கு விழிப்பு.

திரும்பிப் பார்த்தேன். தூங்குகிற உடம்பிலிருந்து புனுகு மணம்.

கோபாலிக்கு என்னைவிட இரண்டு வயது கூடுதலான ஒரு மகள் இருக்கிறாள். ஒரு பையன் இருக்கிறான். சிறு வயது கலியாணம். இந்தப் புனுகு மணம் அதையெல்லாம் சொல்லி என்னைக் கிச்சு சிச்சு மூட்டிற்று.

கிச்சு கிச்சு மூட்டினால் சிரிக்கிறது மரியாதைக்கு. வருகிறது என்னவோ கோபம்தான்.

நடுநிசி கழிந்து வெகுநேரம்.

ஒரு மங்கல் நிலா. காற்றில் ஒரு இறுக்கம். பிற்பகல் வந்த கடற்காற்று, திரும்பிக் கடலுக்குப் போய், இறுக்கம் மட்டும் மிச்சம்.

குளிக்கிற அறையில் புடவையை விழுத்துவிட்டு, அண்டா நீரை மொண்டுமொண்டு விட்டுக்கொண்டேன். அண்டா முழுவதும் தீர்கிற வரையில் குளித்துவிட்டு தலையை நன்றாகத் துவட்டி, வேறு புடவையை உடுத்திக்கொண்டதும் காற்றின் இறுக்கம் தளர்ந்தது போலிருந்தது. கண்ணாடி முன் நின்று நுனிமுடிச்சு போட்டுக்கொண்டேன்.

தொழலாமா என்று ஒரு ஆசை.

நான் தொழுதது இல்லை. பள்ளிக்கூடத்தோடு போய்விட்டது. யாரைத் தொழுகிறது, எதைத் தொழுகிறது என்று காலேஜில் சேரிக்கு என்னோடு வந்து சமத்துவம் சகோதரத்துவத் தோழர்கள் சொல்லுவார்கள். ஏழைதான் கடவுள். மக்கள்தான் கடவுள். பதினைந்து வயதில் விநாயகர் அகவல், சௌந்தர்ய லஹரி, திருப்பாவை, ஊமையைப் பேசவைத்த காஞ்சி பஞ்சசதி - என்னும் மாட்டு வாகன, எலி வாகன, மயில் வாகன, கருட வாகன, சிங்க வாகன, தாமரை வாகனக் கடவுள்களையெல்லாம் - பெரியம்மா குடிவைத்த கடவுள்களை - எல்லாம் ஏழைகளுக்கு முன்னால், மக்களுக்கு முன்னால், அவர்கள் பசிக்கு முன்னால் சொக்கப்பனையாக அடுக்கிக் கொளுத்திவிட்டேன். அவர்கள் இருந்த இடங்களில் இப்போது கட்டைக் கரியும் புகையுமாக நெடி வீசிற்று.

முன்னறையில் மறுபடியும் வந்து பார்த்தேன். புனுகு மணத்தில் கோபாலியின் முப்பது வருடக் குடும்ப வாழ்க்கையின் வாடை வீசிற்று. குளத்தையும் ஏரியையும் தூர்த்து, குடியிருப்புகள் முன்னால் முனிசிபாலிட்டி வண்டிகள் ஆயிரம் ஆயிரமாய் வந்து குப்பை கொட்டும். காலையும் மாலையுமாக, நாள் நாளாகக் கொட்டிக் கொட்டி, அந்த இடத்திலிருந்து வெதவெதப்பு நெடி வீசும்.

மூன்று நாளைக்கு ஒருமுறை கோபாலி வரும். பாடும். சாயங் காலம் வேலய்யா வரும்போது வரும்; கூடவே பாடம் முழுவதும் இருக்கும். பாட்டிலைத் திறந்து விஸ்கி சாப்பிடும். சாப்பாடு சாப்பிடும். பாடும். சேஷ்டைகள் பண்ணும். தூங்கிப்போய்விடும். நான் விழிப்பேன், குளிப்பேன், பெரியம்மாவின் துதிப்பாடங்களின் சொக்கப் பனை நெடியை நினைப்பேன். வந்து படுப்பேன்.

தூக்கம் வராது.

தூக்கம் வராதது ஒரு பழக்கமாகவும் ஆயிற்று.

கோபம் வரும். மீண்டும் வந்து கோபாலியைப் பார்ப்பேன் - தூங்கும் கோபாலியை.

ஆச்சரியமாக இருந்தது, வெறுப்பு வரவில்லை. சுருதி சேர்த்துவிட்டு ஏன் வாசிக்க மறந்துபோய்விட்டது இது என்று தோன்றிற்று ஒரு நாள்.

கோபாலியோடு கச்சேரிக்கெல்லாம் போயிருக்கிறேன். தங்கள் வாத்தியப் பெட்டிகளைச் சிஷ்யர்களைக்கூடத் தூக்க விடாத வித்வான்களைப் பார்த்திருக்கிறேன். ஊதும் குழலையும் வருடும் விரலையும் வேற்றான் ஊதவும் வருடவும் விடாத வித்வான்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் சுருதி சேர்த்துவிட்டு அவர்களே வாசிக் க மறந்து போனதில்லை.

இங்கு வேடிக்கையாக இருந்தது.

ஆறு மாதமாயிற்று. அன்று தூங்க முடியாமல் வெயிலில் கர்ணனைப் பெறப் போவதுபோல, சூரியனை அணைவதுபோல் படுத்திருந்தபோதுதான் கோபாலி வந்து கூப்பிடு மணியை அழுத்திற்று. நான் எழுந்திருக்கவில்லை.

அன்றுவரையில் ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை; வராத மனம் அன்று வந்தது - அந்த சந்தேகத்தைப் பார்த்து.

கோபாலியின் பார்வையில் இந்த சந்தேகத்தை எப்போதாவது கவனித்ததுண்டு. பாடத்தின்போது அவருடைய தோழர்கள், ரசிகர்கள் வருவார்கள். அவரையே பாடச் சொல்லிக் கேட்க வருவார்கள்.

கோபாலி திடீர் என்று மேதையின் சேஷ்டையுடன், குழந்தைக் கபடத்துடன் அவர்களை அப்புறப்படுத்திக்கொண்டு வெளியே போகும். சிரிப்பு வரும்.

ஆனால் இந்த வெயிலில் கிடந்த முயக்கில் வந்தது சிரிப்பு இல்லை. வெறுப்பும் இல்லை. சண்டிப் பிடிவாதம். என்ன செய்வாய் பார்ப்போம் என்று.

# 10

சண்டிப் பிடிவாதம் பண்ணும் இயல்பு இல்லை எனக்கு. அது இப்பொழுதுதான் குருவி விட்டையில் பதுங்கிச் சுவரிடுக்கில் விழுந்த அரச வித்தாக எதிர்பாராமல் முளைக்கத் தொடங்கிற்று. அதைக் கொண்டு போட்டது பெரியம்மாவாத்தானிருக்க வேண்டும்.

பெரியம்மாவுக்கு மாசத்துக்கு இரண்டு கடிதங் கள் எழுதாவிட்டால் உட்கார்ந்திருக்கிற தரையை யாரோ இழுத்து அந்தரத்தில் தொங்கவிட்டாற் போலாகிவிடும். என்னைப் பார்க்கவே கைக் காசைச் செலவழித்துக்கொண்டு பெரியம்மாவும் பெரியப்பாவும் இரண்டு தடவை வந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நானும் கிறிஸ்மஸுக்கும் கோடை விடுமுறைக்கும் ஊருக்குப் போய்த் தங்கிவிட்டு வந்திருக்கிறேன். கோடை விடுமுறையில் பத்து நாள் இருந்துவிட்டு, பாட்டுப் பாடம் வீணாகப் போகிறது என்று திரும்பி ஓடி வந்தேன். அந்தப் பத்து நாள் பிரிவு தாங்காமல்தான் கோபாலி அந்தப் பேச்செல்லாம் பேசியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

இந்த வீட்டுக்கு வந்து ஒரு மாசம் பொறுத்திருந்துவிட்டு பெரியம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"பெரியம்மாவுக்கு அநேக நமஸ்காரம். நான் இப்போது வேறு வீட்டுக்குக் குடிவந்துவிட்டேன். நீ வந்து ஒரு முறை என்னைப் பார்த்துவிட்டுப் போகவும். நீ மாத்திரம் வந்தால் போதும். நிச்சயமாக பெரியப்பா இப்பொழுது வரவேண்டிய அவசியம் இல்லை. மறு தபாலில் நீ வருகிற வண்டி என்ன வென்று எழுதவும். மாம்பலம் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போகிறேன்."

கடுதாசியைத் தபாலில் சேர்க்கும்பொழுது சற்று நெஞ்சு வலித்தது. கல்லாங்காய்ப் படுத்திக்கொள்ள இருக்கிற நெஞ்சம் திரவத்தைப் பிழித்து வெளியே எறிவது போலிருந்தது. பெற்ற அம்மாவையும் அப்பாவையும் உதற பெரியம்மா கை கொடுத்தாள். அந்த இரண்டு பேரையும் புதுக் கத்தரிக்கோலால் நறுக்குவது போல நறுக்கி எறிந்துவிட்டேன். அதிலிருந்து பெரியம்மா பெரியப்பாதான் எல்லாம்.

பெரியம்மாவிடமிருந்து கடிதத்திற்குப் பதிலாக தந்தியே வந்தது.

"இன்று இரவு பாஸ்ட் பாஸஞ்சரில் புறப்பட்டு வருகிறாள் பெரியம்மா. மாம்பலம் ஸ்டேஷனில் சந்திக்கவும் - பெரியப்பா."

காலையில் எழுந்திருக்கும் பொழுதே சென்னையின் அபூர்வமான புழுக்கம். இது ஒன்றுக்காகத்தான் பட்டணத்தின் மீது கசப்பு. காலையில் மனிதனை எழுப்பும் பொழுதே வறுத்துக் கொண்டேயா எழுப்பும் ஒரு ஊர்! நெஞ்சில் இருந்த புழுக்கம் தான் இப்படி காற்றும் குளிர்ச்சியும் செத்த புழுக்கமாக வந்து சூழ்கிறதா?

வண்டியில் இருந்து இறங்கும்பொழுதே பெரியம்மா "இதோ இருக்கேன்டீ குழந்தே" என்று சிரித்துக்கொண்டே கத்தினாள். அதாவது அப்போது வண்டி, முழுவதும் நிற்கவில்லை. மெதுவாக நகர்ந்து நிற்க ஆயத்தம் செய்துகொண்டிருந்தது. நான் ஜன்னல் ஜன்னலாகக் கழித்துக்கொண்டே வந்தேன். அபயம் கொடுப்பதுபோல் பெரியம்மாவின் குரல் கத்திற்று. திரும்பிப் பார்த்தேன். ஜன்னலில் தலையை நீட்டிச் சிரித்தாள் பெரியம்மா. பெருநடையாக நடந்து நின்றேன்.

இறங்கினதும் இறங்காததுமாக, "நீ மாத்திரம்தான் வந்திருக்கிறாயா?" என்றாள் பெரியம்மா. கேட்டுக்கொண்டே ஏற இறங்க என்னைப் பார்த்தாள்.

"வேறு யாரு வரப்போறா?"

"என்னடி சமாச்சாரம்? கடுதாசைப் பார்த்தவுடனே எனக்கு ஒண்ணுமே புரியலெ கொஞ்ச நாழி. பொத்துன்னு விசுப்பலகையிலே உட்கார்ந்துனூட்டேன். சமைக்கவும் ஓடலே. வயறெல்லாம் அள்ளிப் பிடுங்கித்து. ஒரு ரசத்தை மாத்திரம் பண்ணி, நைவெத்யம் பண்ணிட்டு, கிடுகிடுன்னு கடைத்தெருக்கு நடந்தேன். பெரியப்பாவைத் தனியாக் கூப்பிட்டு லெட்டரைக் காமிச்சேன். பெரியப்பாவுக்கு கண்ணிலே முட்டிண்டு வந்தது. சரி இன்னிக்கே ராத்திரி புறப்படு. நான் தந்தி கொடுத்துடறேன்னு சொன்னா. பகவானே பகவானேன்னு புலம்பிண்டு வந்தேன். என்ன நடந்ததுடி?"

"ஒன்னுமில்லேம்மா. பதறாதே. முதல்லெ வீட்டுக்குப் போவோமே."

"ஒன்னுமில்லையோன்னா? நன்னாச் சொல்லு ஒன்னு மில்லேன்னு."

கை ரிக்ஷாவில் ஏறி வீடு வந்தோம்.

படி ஏறி மாடிக்குப் போனோம். பூட்டைத் திறந்து உள்ளே போனோம்.

போனதும், பின் கதவைத் திறந்து ஆளைக் கூப்பிட்டு மார்க்கெட்டுக்கு அனுப்பினேன். கோபாலி வீட்டுக்கும் போய் பெரியம்மா வந்திருக்கும் செய்தியைச் சொல்லச் சொன்னேன்.

அவன் திரும்பி வர ஒரு மணி நேரமாவது பிடிக்கும்.

நான் காபி போட்டு முடிக்கிற வரையில் பெரியம்மா வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஜோடிக் கட்டில் முன் நின்றாள். ஆள் உயரக் கண்ணாடி முன் நின்றாள். அதன் மடியில் உள்ள அணி மேஜை முன் நின்றாள். பீரோவைத் திறந்து தாங்கிகளில் தொங்கும் பட்டுப் புடவைகளைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அணி மேஜை மீது வைத்திருந்த சந்தன அத்தர், புனுகு ஜவ்வாதுச் சிமிழ்கள், சாயங்கள், வெள்ளை மாவுகள், முகக் குழம்புகள் - எல்லாவற்றையும் திறந்து திறந்து முகர்ந்தாள்.

நடு ஹாலில் காபி டவரா டம்ளர்களையும், காபியையும், பிஸ்கட்டுகளையும், இரண்டு மூன்று பேடா வில்லைகளையும் கொண்டுவைத்து உட்கார்ந்தேன். பெரியம்மாவைக் கூப்பிட்டேன்.

கடைக்கண்ணாலேயே பெரியம்மா புதிரில் கிடந்து விழிப்பது தெரிந்தது.

"காபி சாப்பிடு பெரியம்மா."

"வீடு ரொம்ப அழகாயிருக்கே" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள் பெரியம்மா.

"கோபாலி வெளிக்கு என்ன சொல்லிண்டிருக்கார் தெரியுமோ பெரியம்மா? என் ஸ்வீகாரப் புத்ரி, ஸ்வீகாரப் பொண்ணுன்னுதான் வரவா போறவாகிட்டல்லாம் சொல்லிண்டிருக்கார்."

"வெளிக்குன்னா?"

"யாராவது ஒருத்தர் வயத்திலெதான் பொறக்க முடியும். யாராவது ஒருத்தருக்குத்தான் ஸ்வீகாரக் குழந்தையா இருக்க முடியும் . . . நீ காப்பியைச் சாப்பிடு."

பெரியம்மா ஒரு பேடாவையும், பிஸ்கத்தையும், காப்பியையும் சாப்பிட்டு முடிக்கிற வரையில் நான் மேலே தொடரவில்லை. முன்னாலேயே சொன்னால் அவளுக்குக் குமட்டிக்கொண்டு வந்திருக்கும்.

பெரியம்மா சாப்பிட்டு டம்ளரைக் கீழே வைத்தாள். சுற்றிச் சுற்றி வளைக்கத் தொடங்கினேன்.

"ஒரு வயிற்றிலேதான் பிறக்க முடியும் ஒருத்தராலெ. பலராமர் ஒருத்தர்தான் இரண்டு பொம்மனாட்டி வயித்திலெ இருந்தார். தேவகி வயத்திலெ ஏழு மாசமோ என்னமோ இருந்தாராம். அப்புறம் பகவான் அந்த கர்ப்பத்தை இழுத்து, வசுதேவரோட முதல் பெண்டாட்டி ரோகிணி கோகுலத்திலெ, நந்தன் பாதுகாப்பிலெ வளர்ந்திண்டிருந்தாளாமே, அவ வயத்திலெ கொண்டு வச்சாராம். சாதாரண மனுஷாளுக்கு இதெல்லாம் எப்படி முடியும்?"

"நீதான் சாமி பூதம்லாம் கிடையாதுன்னு சொல்லுவியே."

"அதனாலதான் சொல்றேன். அதே மாதிரி உனக்கும் பெரியப்பாவுக்கும்தானே நான் ஸ்வீகாரப் பொண்ணு. கோபாலிக்கும் எப்படி இருக்க முடியும்? அதுபாட்டுக்குச் சொல்லிண்டு அலையறது - காலை, பகல், சாயங்காலம் எல்லாம் ஸ்வீகாரப் பொண்ணு பொண்ணுன்னு. இருட்டினப்புறம்தான் அதுக்கு ஞானம் பிறக்கிறது."

"ஸ்வீகாரப் பொண்ணு இல்லேன்னா?"

"ஆமாம்."

"அதுதான் ஞானமா?"

"நிஜம்."

"நிஜமும் இந்த ஞானமும் ஒண்ணாயிடுமா?"

"நிஜத்தைத் தெரிஞ்சுக்கறதுதானே ஞானம்?"

"அவனை வாரிக்கொண்டு கொளுத்த."

"என்னையும் சேர்த்துச் சொல்லு."

"என்னடி உளர்றே?"

"எனக்கு இந்த மாதிரி இருக்கறது பிடிக்கும்னு தெரிஞ்சிண்டு தானே அவர் உங்க கண்ணிலெல்லாம் மண்ணைப் போட்டு இங்கே அழைச்சிண்டு வந்தார். நானும் உங்க கண்ணிலெ மண்ணை அள்ளிப் போட்டுண்டே இருந்தேன் நம்ம வீட்டுக் கலியாணத்துக்கு அவர் வந்து பாடினதே அதுக்காகத்தான். நீ மாடிப்படியிலே வந்து "எல்லாம் உன்னாலதான்"னு என்னை அணைச்சிண்டே பாரு, அப்ப உங்கிட்ட சொல்லி உன் மனசைக் கெடுக்க வாண்டாம்னு இருந்திட்டேன். அப்பவே தீர்மானம் ஆனதுதான்.

பெரியம்மா என்னையே சிறிது நேரம் பார்த்தாள். அம்மா பார்ப்பது போலிருந்தது. அந்தப் பார்வை உள்ளே புகுந்து என்னை சிலாம்பாகச் சருக் சருக்கென்று குத்திக்கொண்டிருந்தது.

"நல்ல வேளையா, பெரியப்பா வர வேண்டாம்னு எழுதினியே அதுவரையில் சமர்த்துதான்."

". . ."

"நீ மனசிலெ கொஞ்சங்கூட வேதனைப் படறாப்பலவே தெரியலியே."

"கொஞ்சம் கொஞ்சம் இருக்கு பெரியம்மா. சின்ன வயசிலேர்ந்து தீர்மானமா இருக்கேன். கண்டு பொண்ணுக்கு மொட்டையடிச்சதைப் பார்த்ததிலேர்ந்து, கண்டு சிஷ்யனை முகாலோபனம் பண்ண மாட்டேன்னு அப்பாகிட்ட லெட்டர் கொடுத்து நடுத் தெருவிலேயே திருப்பி அடிச்சதிலேர்ந்து, கலியாணம் மரியாதைக்கெல்லாம் அர்த்தமில்லேன்னு ஜபம் பண்ணிண்டே நன்னா மனசைப் பிடிச்சுவச்சிண்டு வந்தாச்சு. நீ பெரியப்பாவைக் கலியாணம் பண்ணிண்டு என்ன பெரிய சுகத்தைக் கண்டே? அம்மா அப்பாவைக் கலியாணம் பண்ணிண்டு என்ன சுகத்தைக் கண்டா? இதுவரையில் கலியாணம் பண்ணிண்டு தூணோடு திருடனைக் கட்டி வச்சாப்பல, புருஷத் தூணோடு பொம்மனாட்டியும், பொம்மனாட்டித் தூணோடு புருஷனும் கட்டிப் போட்டுண்டு என்னத்தைக் கண்டுவிட்டா? திருடனைக் கட்டிவச்சா, திருடினது திருடினதுதானே? இனிமே அவன் திருடாம இருப்பான்னு என்ன நிச்சயம்? எனக்குத் திருட இஷ்டமில்லே. நான் இஷ்டப்படி இருக்கப் போறேன். சுதந்தரமா இருக்கப் போறேன். நாமெல்லாம் சந்தோஷமா இருக்கப் பிறந்திருக்கோம். எனக்குக் கோபாலி. கோபாலி பிடிக்கலேன்னா வேற யாராவது."

"இப்படியெல்லாம் பேசறவா, ஒருத்தருக்கும் கண்ணை உறுத்தப்படாதுன்னு தனித் தெருவிலேன்னா போய் இருக்கணும் - இருக்கா."

"நான் இப்ப தனி வீட்டிலெதான் இருக்கேன். ஒரு மாசம் நல்ல தனியா இருந்துட்டேன். அதுக்கு முன்னாலே பாதித் தனி. ஆனா எப்பவும் தனி. அதுவும் இந்த ஒரு மாசத்திலெ தனியா இருந்தப்பவும், யாரோடவும் சேந்து இருக்கப் பிடிக்கலெ. என் உடம்பு உண்டு, நான் உண்டு. என் மனசு உண்டு, என் ஆத்மா உண்டு."

"ஆத்மா இருக்கறதுகூட தெரியுமா உனக்கு?"

"அது என்னமோ - ஆனா நான் சந்தோஷமா இருக்கேன். சிரிச்சுண்டே இருப்பேன். யோசிச்சுண்டே இருப்பேன். தனியா இருந்தா எல்லாம் ஒண்ணு ஒண்ணா மனசுக்குப் புரிஞ்சுண்டேயிருக்கு."

"நீ பித்துப்பிடிச்சுப் புலம்பறாப்பல இருக்கே ஒழிய, நீ நிஜமா ஒண்ணும் சொல்றாப்பலவே படலெ எனக்கு . . . நான் இப்ப சொல்றேன். கொஞ்ச நாழி மனசை சரி பண்ணிண்டு, போனது போச்சுன்னு என்னோட புறப்பட்டுடு. இப்ப ஒண்ணும் ஊர் சிரிச்சுப் போகலெ. நீ பாட்டுக்கு வந்துடு. ஒரு கலியாணத்தைப் பண்ணிண்டா இந்த வேதனையெல்லாம் சரியாயிடும். உங்கப்பா அம்மா உன்னைக் கைவிட்டுட்டான்னு உனக்குக் கிடந்து அடிச்சுக்கறது. வளர்த்தவா நாங்க, என்ன இருந்தாலும் அப்பா அம்மா மாதிரி ஆயிடுவாளான்னு கிடந்து அடிச்சுக்கறது. அதுதான் இப்படிப் பாயை பிராண்டறாப்போல குமையறே கிடந்து. இப்ப சொல்றேன். வயித்திலெ பொறந்துதுகளையெல்லாம் பொருட்டா நினைக்கலேடி குழந்தே. உன்னை அதுகளுக்கு மேல வச்சிண்டிருக்கேன். என் சதையைப் பிச்சிண்டு வந்தாப் போலதான் உன்னைப் பார்க்கற போதெல்லாம் உடம்பு கிளுகிளுக்கிறது. நாங்கள்ளாம் உங்கிட்டே விட்டேத்தியா இருக்கோம்னு எப்படி நினைக்க முடியறது உன்னாலெ. ஒரு நாள் ஒரு க்ஷணம்கூட அப்படி இருந்ததில்லே நான். இருக்கவே முடியாதே. என் பொண்ணாக்கூட சில சமயம் நினைக்கத் தோணுதுடி. ஆயிரம் வருஷமா சிநேகமாயிருக்கறாப்பல, ஜன்ம ஜன்மமா சிநேகமா இருக்கற ஒட்டுதல்னு ராத்திரியெல்லாம் நினைச்சிண்டிருப்பேன். நீ இப்படி கஷ்டப்பட்டா தாங்குமா?"

"நான் கஷ்டப்படறதாக நீதான் சொல்லிண்டேயிருக்கே."

"உன்னைப்பாத்தா நீ கஷ்டப்படாதது மாதிரி தோணலியே. இந்தக் கட்டிலையும் கண்ணாடியையும் பார்த்தா உனக்கு சந்தோஷம் வந்துடும். எனக்கு நம்பவே முடியலெடீ குழந்தே!"

"பெரியம்மா, குழந்தே குழந்தேன்னு புலம்பாதே. ரண்டு கட்டில் இருக்கு பார்க்கலியா?"

"அதுக்காக என் குழந்தை இல்லேன்னு ஆயிடுமா?"

"பெரியம்மா, நான் சொல்றேன் கேளு. தனித் தெருவிலே இருப்பான்னு நீ சொன்னே பாரு. அப்படி நான் வந்துட்டதாக தீர்மானம் பண்ணிக்கோ. அதுலெ அடியெடுத்து வச்சா, அதுக்கு ஆசாரம், தர்மம் எல்லாம் வேற. அந்தப் பக்கத்திலேர்ந்து பார்க்கறவாளுக்கு எரிச்சலா வரும் - அது தனி லோகம்னு சமாதானமும் அடைஞ்சுக்க முடியும். அது மாதிரி நீ சமாதானம் அடைஞ்சுக்கோ. எனக்கு இதுக்கும் அதுக்கும் வித்தியாசம் தெரியலெ. உங்க பக்கம் இருந்துண்டு மனசிலெ, ரண்டு தெருவிலி யும் குடியிருக்கறவாதான் முக்காலே மூணுவீசம் பேர். தனியா தெரு கட்டி வச்சதினாலேதான் தகராறெல்லாம் வந்துட்டுது. நீ கொஞ்ச நாழி யோசிச்சு பாரு . . ."

பெரியம்மா என்ன யோசித்தாளோ - பொலபொலவென்று கன்னமெல்லாம் மௌனமாக வழிந்து ஓடிற்று. மடியில் விழுந்தது. பொட்டு பொட்டாகத் தாடை விளிம்பில் தொங்கிற்று. தலைப்பால் துடைத்துக்கொள்வதைக்கூட உடனே செய்யவில்லை.

நான் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். முதல் வருஷம் கலியாணம் ஆன தன் பெண் புக்ககம் போன அன்று அவள் இருந்ததும் இதுவும் ஒன்றாகவே என் கண்ணுக்குப் பட்டிருக்க வேண்டும்.

எனக்கு என்னென்னமோ ஞாபகம் வந்தது. பெரியம்மாவே என்னை ஒருமுறை திருச்சிக்குப் பக்கத்தில் ஏதோ ஊருக்கு அழைத்துப் போயிருக்கிறாள். அங்கே ஒரு மடத்து சந்யாசி தனக்குப் பின்னால் குட்டி அதிபதியாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துப் பட்டம் கட்டினார். பெரியப்பா குடும்பத்திற்கு வேண்டிய சின்ன மடமாம் அது. கிழ சந்யாசி ஒரு பத்து வயதுப் பையனை அதற்காகத் தேர்ந்தெடுத்திருந்தார். பையன் பளபளவென்றிருந்தான். சிறு பிராயத்தின் பூத்தோல். அவனுக்கு மொட்டையடித்து, ஒரு குளத்தில் முழுகச் சொல்லி, தண்ணீர் காலில் படப் படித்துறையில் நிற்கவைத்து காவித்துணியையும், தண்டத்தையும்

அவனிடம் கொடுத்து தீட்சை கொடுத்தார் கிழத் துறவி. அதைப் பார்த்துவிட்டு என்னமோ எனக்கு அழுகை அழுகயாக வந்தது. அவன் இனி மேல் வீட்டுக்குப் போகக் கூடாதாம். அப்பா அம்மாவைப் பார்கக் கூடாதாம். விளையாடப் போகக் கூடாது. சாப்பாடு கிழவர் சொன்னபடிதானாம். சினிமா, டிராமாவெல்லாம் அவன் போகக் கூடாதாம். தெருவில் நடக்கக் கூடாதாம். தினமும் மூன்று நான்கு வேளை குளிக்க வேண்டுமாம். கடைக்குப் போக முடியாது. காசு கொடுத்து பெப்பர்மிட் சாக்கலேட் வாங்கித் தின்ன முடியாது. காசைத் தொட முடியாது. பள்ளிக்கூடம் போக முடியாது. இதையெல்லாம்விட அந்த சின்னக் குழந்தை மயிரையும் வெள்ளை வேட்டியையும் நிஜாரையும் இழந்தது என்னைக் குலுக்கிற்று. பெரியம்மாவையும் குலுக்கிவிட்டது. பெரியம்மா சுதாரித்துக்கொண்டு அவன் கரையேறி வந்ததும், வயசைப் பார்க்காமல் தெரு மண்ணில் விழுந்து கும்பிட்டாள். நானும் கும்பிட்டேன். "இதுதாண்டி அந்தப் பையனோட தாயார்" என்று தெரு மூலையில் நின்றுகொண்டிருந்த ஒரு அம்மாளை விழுந்து கும்பிட்டாள். கும்பிடும் போதும் கண்ணீர். நானும் விழுந்து கும்பிட்டேன். பெரியம்மாவின் கண்ணில் இப்பொழுதும் அதே கண்ணீர்தானோ என்னவோ!

ஏசுவுக்கு மணம் செய்வித்து கன்னிமாடத்தில் புதல்விகளைச் சேர்க்கும் பெற்றவர்களின் அழுகையா?

அழ அழ எனக்கு மனது தன்னைத்தானே இறுக இடித்துக் கொண்டது.

இதெல்லாம் சுவருக்கு, ஆற்றுக்கு அந்தப் பக்கம் நிற்கிற வாழ்வின் புலம்பல் - நான் இந்தப் பக்கம் வந்துவிட்டேன். இதெல்லாம் வேறு காலம் விடும் கண்ணீர். நான் அதில் நனைய உடம்பையோ மனதையோ காட்ட விரும்பவில்லை. பெரியம்மாவின் கண்ணீருக்கு எத்தனை நீளக் கையிருந்தாலும் என்னைத் தொட முடியாது.

உசிதத்தைச் சற்று ஒதுக்கி, "ஓடிப் போன பெண்ணை என்ன சொல்லுவா. அந்தப் பெண்ணே எனக்குப் பொறக்கலே, இல்லே செத்துப் போயிட்டுதுன்னு நினைச்சுண்டு உட்கார்ந்திருக்கோம்பா பெத்தவா. நீ அந்த மாதிரி நினச்சுக்கோ பெரியம்மா. இல்லாட்டா அந்தப் பையனுக்குக் காஷாயம் கொடுத்த அன்னிக்கி முன்னே ஒரு தடவை அழுதியே - அது மாதிரின்னு நினச்சுக்கோ" என்று முடிவாகச் சொன்னேன்.

பெரியம்மா வெறிக்க ஒரு மூன்று நிமிஷம் பார்த்திருப்பாள்.

"அப்படியே நினச்சுக்கறேன்."

"நீ அதுக்காக சாப்பிடாம போயிடாதே, கோச்சுண்டு."

"எனக்கு என்ன கோபம்? நான் நன்னா சமைச்சு, உனக்கும் போட்டு நானும் சாப்பிட்டுத்தான் போப்போறேன்."

எனக்கு நாக்கு நுனியில் வந்துவிட்டது பழமொழி - அரிசிப் புழு தின்னாதவர்களும் இல்லை, அவுசாரி கையால் சாப்பிடாதவர்களும் இல்லை. நாக்கை மடக்கி அதை நெஞ்சுக்குள் தள்ளிவிட்டேன்.

பெரியம்மா தானே சமைத்தாள். சம்பிரமமாகச் சமைத்தாள். நாக்கு ஒட்ட, ரசம் குழம்பு எல்லாம் வைத்தாள். எனக்குப் போட்டுத் தானும் சாப்பிட்டாள்.

பிற்பகல் நன்றாகத் தூங்கினாள்.

நானே அவளை எழும்பூரில் ரயிலுக்குக் கொண்டுவிடப் போனேன். புறப்படுவதற்குமுன் "கோவில் இருக்கா இந்த ஊரிலே?" என்றாள்.

சிவா - விஷ்ணு கோவிலுக்கு அழைத்துப் போனேன். வெளியே நின்றுகொண்டிருந்தேன்.

பத்து நிமிஷம் ஆயிற்று பெரியம்மா வெளியே வர.

எழும்பூர் ரயிலில் ஏறி உட்கார்ந்ததும், "நீ போய்ட்டு வாயேன். வண்டி கிளம்ப இன்னும் முக்கால் மணி இருக்கு. நீ எதுக்காக காத்திண்டிருக்கணும்?" என்று உத்தரவு கொடுத்தாள். நல்ல வேளையாகச் சொன்னாளே என்றிருந்தது. இரண்டு நிமிஷம் தயங்கிவிட்டு விடைபெற்றுக்கொண்டேன்.

## 11

பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு வரும்பொழுது, காற்று பழைய காற்றாக வீசிற்று. எதிரே உட்கார்ந்திருந்தவர்களுக்கு நேற்றைப் போலவே வேட்டி, கட்டை, கால் சட்டை, உடம்பு, செருப்பு, முகம் எல்லாம். எனக்கு எல்லாம் புதிதாகப்பட்டது. காற்று, பஸ்ஸின் சத்தம், பேச்சுகள், ஒரு பெண்ணின் தலையிலிருந்து வீசிய மல்லிகை மணம் - எல்லாம் அப்போது பிறந்தன போலிருந்தது. என் உடம்பே புது உடம்பாக இருந்தது. யாரும் அடையாளம் கண்டுகொள்ளாத புது ஊராக மாறிவிட்டது சென்னை. இனி நான் என்ன வேண்டுமானாலும் நினைக்கலாம், செய்யலாம். நேற்று, இன்று, காலை, பிற்பகல், மாலை, பெரியப்பா, பெரியம்மா, குழந்தைகள், குளக்கரை, கண்டு, அப்பா, அம்மா, அன்னவாசல் எல்லாம் எங்கோ தொலைவாக, முன்னைக் கனவுகளாகிவிட்டன.

அப்படி நினைத்துக்கொண்டுதான் தூங்கினேன்.

மறுநாள் காலையில் கோபாலிக்குச் சொல்லி யனுப்பி நடந்ததையெல்லாம் சொன்னேன்.

"நேத்தி சாயங்காலத்தோட பழைய அம்மாமி ரயில் ஏறிப் போய்ட்டா, பெரியம்மா ரூபத்திலே. இனிமே எனக்குப் பிறந்த ஊர், வளர்ந்த ஊர் எல்லாம் இதுதான். சொந்தக்காரர்களும் கிடையாது."

"கல்லு மாதிரி இதோ உட்கார்ந்திருக்கானே அவனும் கிடையாதா?" என்றது கோபாலி.

அதன் உள்ளங்கையைப் பற்றி அழுத்தினேன். பற்றிக்கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

அதற்கு என்ன தோன்றிற்றோ?

கள்ளக் குரலில் சாப்பிடுகிற நேரம் வரையில் பாடிக்கொண்டேயிருந்தது. நான் கேட்டுக்கொண்டே ஒரு வற்றல் குழம்பையும் கறியும் செய்து முடித்த பிறகு கோபாலி இங்கேயே குளித்தது.

இங்கேயே வைத்திருந்த ஒரு வண்ணான் மடியைக் கட்டிக் கொண்டது.

"ஆகாஹா" என்று எதையோ மறந்துவிட்டார்போல நின்றது.

"என்ன?"

"குளிச்ச உடனே ஸ்வாமிகிட்டே பத்து நிமிஷம் நிப்பேன். ரண்டு சுலோகம் சொல்லுவேன்" என்றது.

என்ன செய்கிறது?

"நீ சாப்பிடு. நான் முடிஞ்சா வந்து சாப்பிடறேன். இல்லாட்டா சாயங்காலம் வந்து சாப்பிடறேன்" என்று சட்டையை மாட்டிக் கொண்டு விறுவிறுவென்று செருப்பை மாட்டிக்கொண்டு பறந்தது.

"ரண்டு பேருக்கு சமைச்சு வைச்சிருக்கேனே."

"வெந்நீர் கொட்டி வை நீ சாப்பிட்டுட்டு. எனக்கு நீர் கொட்டின சாதம், வடு மாங்கா, வற்றல் குழம்பு எல்லாம் பிடிக்கும்" என்று சொல்லிக்கொண்டே படியிறங்கிற்று.

"வெளியூருக்குப் போனா, இப்படி வீட்டுக்குப் போக முடியுமா?"

"அப்ப கையிலே படம் இருக்குமே!"

நான் சிரித்துக்கொண்டே நின்றேன். நல்ல பசியாக வேறு இருக்கும். ஒரு நாலு மணி நேரம் பாட்டாக முனகித் தீர்த்திருக்கிறது. கள்ளக் குரலானாலும் பாட்டு பாட்டுதான். தீயை விசிறிவிடுகிற பாட்டு.

ஸ்வாமி! படம்! பெரியம்மா!

நான் மட்டும் தனியாக நிற்பது போலிருக்கிறது.

வேண்டாவரியாகச் சோற்றைத் தின்றுவிட்டுப் படுத்தேன். சனிக்கிழமை அன்று.

மாலை நான்கு மணிக்கெல்லாம் கூப்பிடு மணி அடித்தது. மாடிப் படி இறங்கிக் கதவைத் திறந்தேன். ரிக்ஷாக்காரனிடம் கூலி கொடுத்துவிட்டு, கீழே இறங்கியிருந்த வீட்டுத் தாழ்வாரத்தில் வைத்திருந்த ஒரு பார்சலை

எடுத்துக்கொண்டுபடி ஏறிற்று கோபாலி.

"என்னது?"

"சொல்றேன்."

உள்ளே வந்ததும் பார்சல் கயிறுகளை அவிழ்த்தது. ஒரு தியாகராஜர் படம், ஒரு கிருஷ்ணன் படம், ஒரு ராமன் படம்.

"ஏ பச்சையப்பா - எங்க போய்ட்டான்? பச்சையப்பா? சரி, சுத்தி - சுத்தி கொண்டுவா. ஆணி, ஆணி கொண்டு வா." -

அதட்டல் மாதிரி - ஒரு அவசரக் குரல். கூழாங்கல்தான் கிடைத்தது.

அவசர அவசரமாகப் பின் தாழ்வாரத்தில் ஆள்காரனின் வேட்டி உலர்த்தும் ஆணிகளைச் சுவரிலிருந்து பிடுங்கி - ஹாலுக்கு நடுவில் - தியாகையர் படத்தை நடுவிலும், ராமன், கண்ணன் படங்களை இரு பக்கங்களிலும் ஆணியடித்து மாட்டிவிட்டு, கீழே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தது கோபாலி.

"ஸ்வாமி படம் ரண்டும் சின்னதா இருக்கேன்னு பாக்கறியா? அப்படித்தான். பக்தன்தான் பெரியவன், ஸ்வாமியை விட. அவனுக்குக் கைலாகுக் கொடுத்துண்டு நிக்கணும் இந்த ரண்டு பசங்களும். அதுக்குத்தான் இந்த ரண்டு படங்களையும் சின்னதா வாங்கினேன். ராமனும் கிருஷ்ணனும் ஊருக்குப் பெரியவன். எனக்கு இந்த சொம்புப் பாட்டுக்காரன்தான் பெரியவன். உனக்கு சாமி கிடையாது. எனக்குத் தெரியும். நீ வேணுன்னா ஒரு திரைபோட்டு மறச்சு வச்சுடு - பார்க்க வாண்டாம். நான் வர்றபோது திறந்துக்கறேன். உனக்கு ஒருத்தருமே உறவு கிறவு இல்லேன்னு சொன்னியே. அதுக்காக மாட்டி வச்சிருக்கேன். உனக்கு இல்லாட்டா, எனக்கு - உன்னைவிட இவன்தான் எனக்கு உறவு. பதில் பேசாதே" என்று சிரித்தது. வழக்கம்போல ஆளைக் கிடத்தும் புன்னகை. அப்பா, என்ன அழகு!

உட்கார்ந்து இரண்டு பாட்டும் பாடிற்று. "ஸ்வாமி, ராமா, கிருஷ்ணா, நீ நம்ம வீட்டிலெ இருக்காப்போல இந்த வீட்டிலெயும் எப்பவும் குடியிருக்கணும்" என்று மார்பை இரண்டு தடவைத் தட்டி "இங்கே எப்பவும் இருக்காப்பல, இங்கேயும் இருக்கணும்" என்று சொல்லிவிட்டு எழுந்தது. "சரி, நான் இன்னிக்கு இனிமே இருக்கமாட்டேன். நாளைக்குக்

காலமே வரேன், பத்துமணி சுமாருக்கு. ரண்டாவது நாள் விச்சித்தி இருக்கப்படாது. நாளைக்கு வந்து ரண்டு புஷ்பத்தைப் போட்டு ரண்டு பாட்டு பாடிவிடணும்" என்று எழுந்துபோய்விட்டது.

அன்றிரவு மார்க்ஸும் லெனினும் வந்து, செம்பும் முண்டாசுமாக பாண்டிபஜாரில் பாடிக்கொண்டு உஞ்சவிருத்தி செய்துகொண்டு நடந்த தியாகராஜரை, ஏதோ தினத்தாள் சுருளைக் காலுக்கடியில் கொடுத்து இடறி விழச் செய்கிறது போல சொப்பனம். வருத்தம். சிரிப்பு.

காலையில் ஒன்பது மணிக்குக் கூப்பிடு மணியடித்தது. பத்து மணி சுமார் என்று ஒன்பது மணிக்கு வந்துவிட்டது கோபாலி. அப்போதுதான் குளிக்கத் தயாராகிக்கொண்டிருந்தேன்.

படியிறங்கிக் கதவைத் திறந்தேன்.

பெரியப்பா!

"வாங்கோ பெரியப்பா!"

"வந்தேன்" - ஒரு செயற்கைச் சிரிப்பு. மனதில் படாத சிரிப்பு, மனதில் படாத முக மலர்ச்சி - புகை படர்ந்த அரிக்கேன் கண்ணாடி மாதிரி ஒரு இருண்ட வெளிச்சம்.

"வாங்கோ பெரியப்பா."

# 12

ஒரு கணக்கு சொல்லுவார்கள். இருபது முப்பது ரோஜா இதழ்களை அடுக்கி அழுத்தி வைத்து சரக்கென்று ஒரு குண்டூசியைப் பாய்ச்சினால் ஒரு இதழைத் துளைக்க எத்தனை நேரமாயிருக்கும்? பெரியப்பா அத்தனை நேரம்தான் என்னைப்

பார்த்தார். உடனே வேறு பக்கம் திரும்பிக்கொண்டு விட்டார். இது முழு உபமானம். நொடிக்கு மட்டும் இல்லை. அவர் கண்ணுக்கும்தான். ரோஜாக்குளுமை, கோபம், வேதனை, கடூரம்.

மாடிப்படி ஏறிவந்தும் என்னைப் பார்க்க வில்லை. பெரியம்மாவைப்போல வீட்டைப் பார்த்துக்கொண்டிருந்தார். அறைகளைப் பார்த்தார். மரங்களைப் பார்த்தார். கட்டில்களைப் பார்த்தார். அணிமேஜைகளைப் பார்த்தார்.

"உட்காருங்கோ, பெரியப்பா. காப்பி கலந்துண்டு வரேன்."

"எல்லாம் ஆயிடுத்து."

பச்சையப்பனைக் கூப்பிட்டு இரண்டு ரூபாயைக் கொடுத்து, மார்க்கட்டுக்குப் போகச் சொல்லி, அப்படியே "அங்கேயும்" போய்ச் சொல்லிவிடு என்று கண்காட்டிவிட்டு, காபி கலக்கப் போனேன். பெரியப்பா பேசத்தானே வந்திருக்கிறார்.

"இங்க வா . . . நான் போகணும்."

"காப்பி கலந்துண்டு வரேன்."

"காப்பி சாப்பிட்டாச்சு."

எதிரே நின்றேன்.

"நீ இப்ப கட்டிண்டீருக்கே பாரு - இதே புடவை, ரவிக்கையோட, என்னோட கிளம்பணும். வீட்டைக் திறந்து போடுவியோ, பூட்டுவியோ,

எனக்குத் தெரியாது - இப்படியே என்னோட கிளம்பி வரணும்."

தலையைக் குனிந்து நின்றேன்.

"காதிலே விழுந்ததா இல்லையா . .? என்ன இன்னும் கிளம்பலெ?" - அதட்டல்.

"கிளம்பப் போறியா இல்லையா?"

". . ."

"நீ உசிரோட இருக்கணும்னா, இப்பவே புறப்படு."

"எனக்குத்தான் உசிர் இல்லியே."

"என்னது?"

"பெரியம்மாகிட்ட சொன்னேனே - நான் செத்துப் போய்ட்டேன்னு நெனச்சுக்குங்கோன்னு."

"அதை மாத்திரம்தான் சொன்னியா?"

இப்போது இருபது இதழின் ஊடே பாய்கிற நேரமும் இல்லை. ஒரு இதழையே ஊசி குத்தி வதைத்துக்கொண்டிருந்தது. பெரியப்பா ஒரு புதுக் கண்ணையே வாங்கி மாட்டிக்கொண்டிருப்பது போலிருந்தது. நான் இதுவரை பார்க்காத கண்.

பேசாமல் நின்றேன்.

"என்கிட்டவும் பெரியம்மாட்ட பேசினாப்போலவே பேசப் போறியா?"

"வேற என்ன சொல்றது? நிஜத்தைத்தானே சொல்லணும்?"

"என்ன சொன்னே? நிஜம் சொல்றியா? நிஜம் சொல்றியா? நிஜமா சொல்றே - " ஒவ்வொரு 'நிஜமும்' நெருங்கி நெருங்கி வந்தது. என் கன்னத்தில் பளார் என்று ஒரு அறையாகச் சத்தம் கேட்டது. ஒரு அறை இல்லை. மாறி மாறி மாறி மாறி மாறி மாறி - இரண்டு கன்னங்கள் - தலை, முதுகு - எங்கும் விழுந்துகொண்டிருந்தது. நிஜம் நிஜம் நிஜம் என்று ஒவ்வொரு அடியும் உறுமி உறுமி விழுந்தது.

கையிலிருந்த பையை வீசி எறிந்துவிட்டுத்தான், பெரியப்பா தொடங்கியிருந்தார்.

"நிஜம் - நிஜம்? - ம் . . ."

இரண்டு கைகளாலும் தலைமயிரை இறுகப் பற்றிக் குலுக்கினார். முகத்தின் அருகில் முகத்தைக் கொண்டு வந்தார். அடித் தொண்டையில் - சுவருக்கப்பால் கேட்டுவிடாமல் நிஜம் நிஜம் என்று வாய் முழுவதையும் பல்லெல்லாம் தெரிய அகட்டிக் கமறினார் - மாடு கமறுகிற தொண்டை. அப்படியே சிறிது நேரம் கண்ணும் பல்லும் விழித்துக்கொண்டே நின்றன.

நான் முனகக்கூட இல்லை.

அப்படியே பின்னாலேயே தள்ளிக்கொண்டே போனார். சுவர் மூலையில் வைத்து இரண்டு கைகளையும் வளைத்துப் போட்டு இறுக நொறுக்கி விடுவதுபோல் அணைத்தார். விலா எலும்புகள், மார்பு, தோள் எல்லாம் நொறுங்கிவிடுவதுபோல் நெருங்கிக் கூம்பின - அந்த அணைப்பில் சட்டென்று இறுகிய அணைப்பு விலகிற்று.

வெறித்துப் பார்த்தார்.

"இப்ப புறப்பட்டுடு."

தலையை அசைத்தேன். மாட்டேன் என்று வாயைத் திறந்து சொல்லவில்லை.

கோபத்தில் திருதராஷ்டிரன் பீமனை அணைப்பதாக இரும்புத் தூணை நொறுக்கினான். ஆனால் குந்தியையை திரௌபதியையோ அணைக்கவில்லை.

தலை கிடந்த அலங்கோலத்தில், விரல்கள் பதிந்த கன்னநோவில், நுரையீரலும் இதயமும் விலா எலும்புகளும் நொறுங்கிய மூச்சடைப்பில் எனக்கு ஒருதடவை புன்சிரிப்பு சிரிக்க வேண்டும் போலிருந்தது . . . சட் . . . பெரியப்பாவின் பிரியம்தான் இப்படிப் பேயாடியிருக்கிறது. அந்த நினைப்பில் அந்தப் புன்சிரிப்பு சாம்பலாயிற்று.

தலையைக் கோதிக்கொண்டேன். குளிக்கிற அறைக்குள் போய் முகத்தைக் கழுவி, சடசடவென்று சீப்பால் சீவி, கண் கொட்டுகிற நேரத்தில் புடவையை மாற்றிக்கொண்டு நெற்றிக்கு வைத்துக்கொண்டேன்.

கூப்பிடு மணி.

சரேலென்று ஓடினேன்.

சட்டென்று பின்னலைப் பிடித்து இழுத்துப் பின்னால் தள்ளிவிட்டார் பெரியப்பா.

"நான் போய் திறக்கறேன்."

"நான்தான்" என்று திமிறினேன்.

பெரியப்பா கழுத்துப் பள்ளத்தில் விரலை வைத்து அழுத்திக் கொண்டிருந்தார். உயிர் போகிற வலி.

"வாத்தியார் வந்திருக்கார். விடுங்கோ பெரியப்பா."

கூப்பிடு மணிக்கு மீண்டும் அவசரம்.

பெரியப்பா ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மாடிப்படிக்குப் போய்விட்டார்.

ஓடிப்போய் படியின் கைச் சுவரைப்பற்றி குனிந்து பார்த்தேன்.

கதவு திறக்கும் சத்தம்.

"அட, நீங்களா! எப்ப வந்தேள்?" - கோபாலியின் குரல்.

"இப்பத்தான்." தாழ்ப்பாள் சத்தம் முன்னால் கோபாலி ஏற, பின்னால் வந்தார் பெரியப்பா.

"எங்கே இப்படி, திடீர்னு?" என்றார் கோபாலி.

"இதுக்குத்தான்" என்றார் பெரியப்பா. பளார் பளார் என்று கோபாலியின் கன்னத்திலும் அவர் கை பதிந்தது.

"என்னது! என்னது!" கோபாலி அதன் கையில் இருந்த இலைப் பொட்டணம் நழுவி விழுந்துவிட்டது.

நான் தடுக்கக் குறுக்கிடவில்லை.

"அம்மிணீ என்ன இதெல்லாம்!" - கோபாலிக்குக் கண்ணில் ரத்தம் கட்டிக்

கிடந்ததுபோல் ஒரு சிவப்பு.

"அம்மிணி என்ன அம்மிணீ - எங்கிட்ட பேசு. எப்பேர்ப்பட்ட பொண்ணு. அவளை அவுசாரியா அடிக்கணும்னு எப்படி மனசு வந்தது உனக்கு? உன் குருநாதன் இதையா சொல்லிக்குடுத்தான். அப்படீன்னா அவன் எதுக்காக இங்க இருக்கணும்" என்று பெரியப்பா மீண்டும் பாய்ந்தார். கோபத்தின் வெறி பலம்தான். இல்லாவிட்டால் தியாகையர் படம் அப்படிக் கையோடு பிடுங்கிக்கொண்டு வந்திராது. அதை ஹால் மூலையைப் பார்க்க வீசினார் பெரியப்பா. அடுத்த கணமே ராமர் கிருஷ்ணர் படங்களும் கழன்று சமையல் அறைக்குப் போகும் நிலைக்கு ஒன்றும், பின் தாவாரத்துக்குப் போகும் நிலைக்கு ஒன்றுமாகப் பறந்தது.

"மளிகைக் கடைக்காரா . . . " என்று மெதுவாகக் கூப்பிட்டது கோபாலி.

மறுபடியும் பாயப் போனார் பெரியப்பா.

"கிட்டக்க வராதே . . ." என்று ஒரு விழி. கோபாலிக்கு ஏற்கெனவே பெரிய கண். இப்பொழுது விழிமட்டும் ரப்பைகளை விட்டு விலகித் தனியாக கருவட்டமாக நின்றது.

பெரியப்பா சட்டென்று நின்றார்.

கோபாலி சொல்லிற்று.

"நான் தப்பு பண்ணினேன். உன்னை எமாத்தினேன். இந்தப் பொண்ணை ஏமாத்தலெ. உன்னை ஏமாத்தினேன். அதற்காகத்தான் நீ அடிச்சதை வாங்கிக்கிண்டேன். இந்த மூணு படத்தையும் இருந்த இடத்திலெ மாட்டிப்பிடு. இல்லெ, மூணையும் எடுத்து மரியாதையாகக் கொண்டு சுவரோரமாச் சாத்திவிடு. இப்ப உடனே எடுத்துக்கொண்டு வைக்கலியோ என்ன ஆகும்னு சொல்ல முடியாது. ஏதாவது ஒரு உசிருதான் இருக்கும் இங்க. எங்க ஊர் வாசி என் உடம்பிலே ஓடறது. எங்க ஊர் பிராமணனுக்கெல்லாம் பாப்பாரக் கள்ளன்னு பேரு. கள்ளத் தெரு ஆளோட சிலம்பம் ஆடற பிராம்மணன் அத்தனை பேரும். அமாவாசை அன்னிக்குப் பழேது சாப்பிட்டுட்டு, தீவட்டிக் கொள்ளைக்குப் போனான் எங்க ஊர்லெ ரண்டு பிராம்மணன் போன தலைமுறையிலே. எங்க வீட்டு ஒரு வீடு போட்டு அடுத்த வீடு. அந்த குணம் ஒரு வீடு தாண்டி எங்கிட்ட வர நாளாகாது."

"உங்கிட்ட வல்லேன்னு சொல்றயா?" என்றார் பெரியப்பா.

"நான் உன்னை படத்தை மரியாதையா எடுத்து எங்கிட்டத் தரச் சொன்னேன். பதில் பேசச் சொல்லலே."

நான் படங்களை எடுக்கப் போனேன்.

"அம்மிணீ."

கோபாலி என்னை வெறித்தது.

"அவர் தப்பை அவர்தான் தீர்க்கணும். அவர் வீசி எறிஞ்சுது படம் இல்லெ."

நான் பெரியப்பாவைப் பார்த்தேன்.

பெரியப்பா தட்தட்டென்று நடந்தார். மாடித் தளம் அதிர்ந்தது. படங்களை எடுத்து சுவரோரமாக ஒன்றன் மீது ஒன்றாகச் சுவரில் சாத்தி வைத்தார்.

"இப்ப வந்து என்னை வந்து அடியும். நான் பதில் பேசாம வாங்கிக்கிறேன்."

"நான் உன்னைத் தவறிப்போய்த் தொட்டுட்டேன். உன்னைத் தொட்டாலே பாவம். அம்மணி, நீ வரப்போறதில்லியா?"

தலையை அசைத்தேன்.

"அம்மணி வரமாட்டா. நான் மொசப்பயல்னு எனக்கே தெரியும். அவ அதுக்காக வந்து இருக்கலெ என்னோட. அது உனக்குப் புரியாது. உனக்கு புளி, பருப்புதான் புரியும்."

"சீ, வாயை மூடு" என்றார் பெரியப்பா.

எனக்குத் திக்கென்றது. அவருடைய கோபம், வெறியெல்லாம் அடங்கி, ஒரு அலட்சியமாக, அருவறுப்பாக முகம் முழுவதும் படர்ந்தது.

"அம்மணி, நீ சொன்னது சரி. நீ செத்துதான் போய்ட்டே. நான் சமுத்திரத்திலெ போய் ஸ்னானம் பண்ணிட்டுத்தான் ஊருக்குப்

போப்போறேன்" என்றார் பெரியப்பா. பையை எடுத்துக்கொண்டார். கீழே இறங்கிப் போனார்.

எனக்குக் கீழே போய்த் தாழிடத் தோன்றவில்லை. கோபாலி அவசர அவசரமாக குளிக்கிற அறைக்கு ஓடிற்று. மூன்று நிமிஷம் கழித்து சொட்ட சொட்ட வெளியே வந்தது. தலையைத் துவட்டி பீரோவைத் திறந்து ஒரு வெண்பட்டுப் புடவையை எடுத்து இடையில் சுற்றிக்கொண்டது. படங்களை மீண்டும் மாட்டிற்று.

அடி வாங்கியபோது கீழே நழுவி விழுந்த இலைப் பொட்டலத்தை அவிழ்த்து ஜாதி மாலைகளை மூன்று படங்கள் மீதும் சாத்திவிட்டு நின்றுகொண்டே, "ராராம இன்டிதாதாக" என்று பாடத் தொடங்கியது.

அநுபல்லவியைப் பாடும்பொழுது பாட முடியவில்லை. குரல் நடுங்கி நடுங்கி விழுந்தது. சற்று நிறுத்தி, இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் பாடத் தொடங்கிற்று.

நான் உள்ளே போய் உலை நீர் வைத்து கறிக்கும் குழம்புக்கும் நறுக்கிக்கொண்டிருந்தேன்.

பாட்டு நின்றுவிட்டது.

சற்றுக் கழித்துக் காலோசை கேட்டது.

கோபாலி வந்து உட்கார்ந்துகொண்டது. என்னைப் பார்த்தது.

"என்னது!"

நிமிர்ந்தேன்.

"என்னது கன்னமெல்லாம் இப்படித் தடிச்சு! உனக்கும் நடந்ததா மண்டலப்படி!"

"பத்து மடங்கு . . . இப்பதான் வலிக்க ஆரம்பிச்சிருக்கு உடம்பெல்லாம்." சிரித்தேன்.

கோபாலியும் சிரித்தது. கன்னமிரண்டையும் அருகே வந்து தடவிக் கொடுத்தது. நானும் தடவிப் பார்த்தேன். கிழக் கன்னம் போல விரல் ஏறி இறங்கிற்று.

"இப்படி ஒரு பெரியப்பாவை நான் பார்த்ததில்லெ."

"கறி அப்பறம் நறுக்கலாம்" என்று அரிவாள்மணையைத் தள்ளி நகர்த்திவிட்டு, அப்படியே என்னைச் சாய்த்து என் தலையை மடிமீது வைத்துக்கொண்டது கோபாலி. என் கன்னத்தைப் பார்த்தது. தடவிற்று.

"இது என்ன கோபம்!" என்று வியந்தது.

"இல்லெ - பாசம். பெரியப்பா இத்தனை பிரியம் வைக்க முடியும்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது எனக்கு. அவருக்கும் அதைக் காண்பிக்கவும் தெரியலெ இத்தனை நாளா. போயும் போயும் இப்படி காண்பிக்கும்படியா ஆயிடுத்து."

இதைச் சொன்ன பிறகுதான் எனக்குக் கண்ணில் ஒரு சொட்டு புறப்பட்டது. ஒரு நீர்த்துளியில் சூரியனும் உலகமும் பிம்பப்படுவதுபோல, என் கண்ணுக்குத் தெரியாத அந்த துளியில் பெரியப்பா, பெரியம்மா, அவர்களின் குழந்தைகள், வீடு, குளம், அந்தக் கலியாணம், அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை எல்லாம் பிம்பங்களாகி நின்றன. ஒரு நாளுமில்லாத திருநாளாக வாயை விட்டு அழ வேண்டும்போலிருந்தது. தலையைத் திருப்பி அந்த மடிமீதே முகத்தைக் குப்புறத்திக்கொண்டேன். முதுகு குலுங்குவதைப் பார்த்து, கோபாலி தலையைக் கோதிற்று; தடவிக் கொடுத்தது. அதற்குச் சமாதானமும் சொல்லத் தெரியவில்லை. ஆனால் அந்த உள்ளங்கை அது பாடுகிற பாட்டையெல்லாம் மிஞ்சிப் பொழிந்தது.

அப்படியே எழுந்து மூக்கைச் சிந்தி, முகத்தைக் கழுவித் துடைத்துக்கொண்டு வந்தேன். அரிவாள்மணையை நகர்த்திக்கொண்டேன்.

"நான் ஊருக்கே திரும்பிப் போயிடட்டுமா - பெரியப்பா பெரியம்மா சொல்றாப்போல" - சிரித்துக்கொண்டேதான் கேட்டேன்.

"இப்ப உன் மடியிலே என் தலையை வச்சிண்டு அழணுமா?"

திடீர் என்று ஞாபகம் வந்தது.

"அம்மணி அதுக்காக வந்து இல்லே. உனக்குப் புரியாதுன்னு பெரியப்பாகிட்ட சொன்னேளே, என்னது!"

கோபாலி பதில் சொல்லவில்லை.

பச்சையப்பனின் குரல் கேட்டது. மார்க்கெட்டுக்கும் கோபாலி வீட்டுக்கும் போய் வந்துவிட்டான்.

# இரண்டாம் பாகம்

# 1

அம்பலத்திற்கு வராமல் ஒரு ஆட்டமா? கோபாலி நண்பர்களை ஏவிற்று. சீடர்களை ஏவிற்று. விசிறிகளை ஏவிற்று. பெரிய மனிதபக்தர்களை ஏவிற்று. அது லட்சியமில்லாமல் செலவு செய்ததுபோல, மற்றவர்களையும் இழுத்துவிட்டது. பத்திரிகைகளை அழைத்து எழுதச் சொல்லிற்று. எழுதினார்கள். ஒப்புக்கு எழுதினார்கள். மனதில் பட்டதை எழுதி னார்கள். உண்மையை எழுதினார்கள். எழுதிவிட்டு என்னைச் சுற்றிச்சுற்றி வந்தார்கள். கோபாலியோடு வந்துகொண்டிருந்தவர்கள் கோபாலியில்லாமல் தாமாக வந்தார்கள். சில சமயம் தனியாக வந்தார்கள். கிழவர்கள் வருவார்கள் - நடுவயதுகள் வரும், சிறிசுகள் வரும். சிறுசுகள் என்றால் நான் நூற்றுக் கிழவி மாதிரி மாதிரி பேசுவதாகத் தோன்றும். நூற்றுக் கிழவியின் அனுபவத்தை நினைத்துக்கொள்கிறேன். பிரியாத நண்பர்கள் என்று பெயர்பெற்ற எத்தனையோ இரண்டு நண்பர்கள் என்னிடம் வரும்போது தனித் தனியாக வருவார்கள். சும்மா உட்கார்ந்திருந்து பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

ஒரு பெண்பிள்ளை, தாராளமாக நடமாட இடம் உள்ள வீட்டில் தனியாக இருந்தால் ஒரு வருடத்திற்குள் நூற்றுக் கிழவி கண்டதைக் கண்டுவிடலாம் - கேட்பதையெல்லாம் கேட்கலாம். நினைப்பதையெல்லாம் நினைக்கலாம் - உணர்வதை யெல்லாம் உணரலாம்.

எத்தனை மாதிரிகள்! எத்தனை பயங்கள்! எத்தனை ஆசைகள்!

பேசாமல் உட்கார்ந்திருக்கிற இளைஞர்கள். இவர்களும் தனியாக வருவார்கள். என்ன பயம்! கூப்பிடு மணி அடித்தால் முகத்தில் பயம் - அசடு - ஏமாற்றம் - கோபத்தை மறைக்கிற சிரிப்பு.

"என்னைவிட இவன் நெருக்கமோ?" என்ற முகத்தில் கிலி - அரிப்பு.

அறிமுகப்படுத்தி வைத்தால் வளவளவென்று பேசும் வாய்கள் அளந்து, யோசித்து அசையத் தொடங்கும்.

வேதாந்தமாகப் பேசுகிற வாய்கள்.

நாஸ்திகம் பேசுகிற வாய்கள்.

கலை விமர்சனம் பேசுகிற வாய்கள்.

ஸம்ஸ்கிருதப் பேராசிரியர், இரண்டு மூன்று வக்கீல்கள் -

சபா காரியதரிசிகள், கல்லூரி மாணவர்கள், ஓவியம், சிற்பம் பழகுகிற மாணவர்கள். அப்போது நீளமயிர்கள் வளராத காலம். அழுக்குச் சட்டைகள் கலகக் குறியீடாக ஆகாத காலம். ஆட்டுத்தாடி மட்டும் ஒரு கலைச் சின்னமாக நாலைந்து முகங்களில் கூர்ந்திருக்கும்.

முதல் பழக்கத்துக்கு இரண்டு மூன்றாகச் சேர்ந்தே வரும். இரண்டாவது மூன்றாவது விஜயம்கூட சேர்ந்து வரும். அதற்குப் பிறகு தனிக்கட்டை.

ஒவ்வொன்றும் பெண்களின் நிலையைப் பற்றிப் பேசாமல் இருப்பதில்லை.

"உலகம் முழுவதும் ஆண்களின் ஆதிக்கம்தான். வெள்ளையோ, கறுப்போ, மஞ்சளோ, பழுப்போ - எந்த தேசமாயிருந்தாலும், ஆம்பிளைக்குத்தான் அதிகாரம் - அதற்கேற்ப சட்டம், ஆசாரம்."

இப்படி ஒன்று பேசும். என்ன அர்த்தம்?

"நீ இருப்பதுதான் சரி. தனிக் கட்டையாக யார் கையிலும் மாட்டிக்கொள்ளாமலிருக்கிறாய் பார். நீதான் சமர்த்து."

"கஷ்டங்களுக்கெல்லாம அப்பா அம்மா தான் காரணம். நான் பள்ளிக்கூட வாத்தியாராகப் போக வேண்டும் என்று ஆசை. அம்மாவுக்கு நான் கார் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசை. அப்பாவுக்கு நான் என்ஜினீராகப் போகவேண்டும் என்று ஆசை. கணக்கில் சூரப்புலி மார்க் வாங்கினால் என்ஜினீராகத் தான் போகவேண்டுமா? வாத்யார் வேலை கசக்கிறதா? - எனக்கு ஒன்றும் பேச முடியவில்லை. என்ஜினீரிங் படிப்பை கழுதை மாதிரி சுமந்துகொண்டிருக்கிறேன்."

என்ன அர்த்தம்?

"நீ இருப்பதுதான் சரி. அப்பா அம்மாவை உதறிவிட்டுத் தனிக்கட்டையாக வந்துவிட்டாய் பார் - நீதான் சமர்த்து."

"கலை பழகினால் யாருக்கும் கட்டுப்பட முடியாது. கணவன் ஒரு விலங்கு. மனைவி ஒரு விலங்கு. மாமியார் மாமனார் நாத்தனார் என்று சின்ன விலங்குகள் இல்லாத சமர்த்துப் பண்ணினாலும் பெரிய விலங்கு மாட்டிக்கொண்ட பிறகு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது" - இப்படி ஒரு வக்கீல் பேசும்.

என்ன அர்த்தம்?

"நீ சமர்த்து. கலியாண விலங்கை மாட்டிக்கொள்ளவில்லை."

இந்தச் சுதந்திரப் பேச்சில்தான் கடைசியில் பேச்சு முடியும்.

எனக்கு எல்லா மார்பும் சதை தசையெல்லாம் விலக்கின கண்ணாடியாகத் தெரிந்தது. உள்ளே என்னைத் துருவிப் பார்க்கிற வெறி. பிறந்த மேனிக்குப் பார்க்கிற வெறி. ஆனால் வெவ்வேறு வடிவம். புகையும் வடிவம். குமைகிற வடிவம். கொழுந்துவிட்டு எரிகிற வடிவம். எப்பொழுது எப்பொழுது என்று பரக்கிற வடிவம். எத்தனை காலமானாலும் காத்திருக்கிறேன் என்று பொறுமையே வடிவான வடிவம்.

கோபாலி வரும்.

அறிமுகப்படுத்துவேன்.

"அப்படியா? சந்தோஷம்" என்று சொல்லும்.

இந்த அப்படியாவுக்கு எத்தனையோ குரல் - இந்த சந்தோஷத் திற்கு எத்தனையோ ஏற்ற இறக்கம்.

சந்தோஷம் சொல்லிவிட்டுப் பேசாமல் உட்கார்ந்திருக்கும். காத்துக்கொண்டிருக்கும், எப்போது இவன் போகப்போகிறான் என்று.

திடீரென்று கடிகாரத்தைப் பார்க்கும். "இன்னும் தயாராக லியா? காலமே பச்சைகிட்ட சொல்லியனுப்பிச்சேனே, அஞ்சரை மணிக்கே போகணும்னு . . ." என்று கேட்கும்.

"எங்கே?" என்று என்னால் கேட்கவும் முடியாது. பச்சையப்பன் சொல்லவில்லை என்று சொல்லவும் முடியாது.

"மன்னிக்கணும். வெளியிலே போகப் போறாப்பல இருக்கு. நான்

வரட்டுமா!"

"பரவாயில்லெ. நீங்க இருங்கோ" என்றது கோபாலி.

"இல்லியே - வெளியிலே நீங்க போகணும்னா . . ."

"நீங்க இருங்கோளேன். நாங்க போயிட்டு வந்துடறோம். ராத்திரி பதினோரு மணிக்கெல்லாம் வந்துடுவோம் . . ."

வந்தவர் "பரவாயில்லெ" என்று சொல்லி எழுந்திருப்பார்.

செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்புவார்.

"என்ன சந்தைமடமாப் போயிடுத்து. யாரு, எதுன்னு முகம்கூட தெரியறதில்லே. இப்பல்லாம் என் கீர்த்திக்குமேல் போயிடுத்தே உன் கீர்த்தி."

"என்ன பண்றது? நான் வரட்டுமான்னு உத்தரவு வாங்கிண்டாக் கூட சரின்னு சொல்லி வழக்கமில்லே எனக்கு. வரட்டுமான்னு சொல்லிட்டு போயிடணும். பேசறவாளை எப்படிப் போகச் சொல்றது? நன்னாவும் பேசறா எல்லாரும். எப்படிப் போகச் சொல்றதுன்னு யோசிச்சிண்டிருந்தா, பேச்சு காதிலெ விழாது. உங்களைப் பிடிச்சுப் பிடிச்சுண்டு சங்கிலி சங்கலியா வந்த சிநேகம்தானே. சாதாரண ஆளா இல்லியே ஒண்ணும். நானும் சாதாரணம், அசாதாரணம்னு பார்க்கறதில்லெ. எனக்கு எல்லாம் ஒண்ணுதான். ஒவ்வொரு உடம்பிலெயும் ஒரு ரகசியம், ஒரு சேதியிருக்கும். பேரிச்சம்பழம் விக்கிறவன், கொத்தமல்லிக்காரி, பழக்காரன், ப்ரொபசர் அகோரம், உங்களுக்கு மிருதங்க வாசிக்கிற கலியுக நந்தி - எல்லாம் எனக்கு ஒண்ணாத்தான் படறது. எனக்கும் போது போகணுமோல்லியோ?"

"நிறுத்தியாச்சா?" என்று திடீர் என்று இடை அகப்பட்டதைப் பற்றிக்கெண்டு மறிக்கும் கோபாலி.

"போது போகலேன்னுதானே உனக்கு சிரமமாயிருக்கு?" என்று கேட்டது கோபாலி.

பொழுது போகவில்லை என்று நிச்சயமாகச் சொல்ல நான் தயாராயில்லை.

நான் பொழுது போவதைப் பற்றி கவலைப்படவில்லை. முன்பக்கத்து இடது அறையிலோ வலது அறையிலோ உட்கார்ந்தால், வெயில் வட்டங்கள் விளையாடுகின்றன. இல்லாவிட்டால் மரத்து இலைகளைப் பார்க்கலாம். எதிர்வீட்டு மாடியைப் பார்க்கலாம். மேகத்தைப் பார்க்கலாம். உருமாறிக்கொண்டேயிருக்கும். பிற்பகல் வந்தால் நிசப்தத்தைக் கேட்டுக்கொண்டே யிருக்கலாம். கீழே பாத்திரம் தேய்க்கிற ஓசை கேட்கும். கீழே குடியிருக்கிறவர்கள் வீட்டு அம்மாள் சமைக்கிறபொழுது பாத்திர ஓசைகள் தினுசு தினுசாகக் கேட்கும். சாயங்காலம் வந்தால் பிள்ளையார் கோயில்மணி. இத்தனையும் இல்லாவிட்டால் எதிர் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காலி மனையில் இரண்டு எருமைகள் கட்டியிருக்கின்றன - அன்னவாசல் மாடுகள் இல்லை - சென்னை மாடுகள். அன்னவாசல் மாட்டுக் கொட்டிலில் வைக்கோலை வாய்விழுங்கிற ஓசை கேட்டுக்கொண்டேயிருக்கும். கழுத்து மணி கேட்கும். சென்னை, சென்னை மனிதர்கள் மாதிரி வைக்கோல் ரேஷன், மைலாப்பூரிலும், அடையாற்றிலும், பழைய மாம்பலத்திலும், காவாக்கரையிலும் வாங்கின அளவு வைக்கோல் பிரியைத் தின்றுவிட்டு முளையைப் பார்த்துக்கொண்டே நிற்கும். சளைக்காமல் பார்த்துக்கொண்டே நிற்கும். அது என்ன நினைத்துக்கொண்டிருக்கும்? யாரைப் பற்றி நினைக்கும்? தனக்கு ஒரே ஒரு தடவை சைதாப்பேட்டையில் சினையிட்ட ஒரு ஆண் எருமையாயா? தன் சொந்தக்காரரையா? அடுத்த ஜன்மத்தைப் பற்றியா? அல்லது நினைவேயில்லாத சவிகல்ப சமாதியா?

இதை நினைத்துக்கொண்டிருந்தாலே ஒருநாள் போதுபோகும். இரவில் கரப்பு, பல்லி, பூச்சி ஒலிகள் கேட்கின்றன. இருளில் இலைகள். இந்த எல்லாம் நினைத்துக்கொண்டிருக்கின்றன.

என் காது கூர்ந்துவிட்டது. கண் கூர்ந்துவிட்டது. எந்த சத்தமும் எனக்குக் கேட்கும். எந்த மணமும் மூக்கிற்கு வரும். எந்த மனசையும் துளைக்காமல் அப்படியே பார்க்க முடிவதுபோல் ஒரு நிச்சயம்.

"பொழுது போகலேன்னா என் ஒன்றுவிட்ட அத்தை பேரன் இருக்கான் - நாலு நாள் முன்னாலெ. இப்பதான் பாலிடெக்னிக்கிலே சேர்ந்திருக்கு. வசதியில்லாத குடும்பம் வசதியிலிருந்து சளைச்சுப்போன குடும்பம். உங்கிட்ட சாப்ட்டுண்டு வாசிக்கட்டுமே - உனக்குக் கோடி புண்ணிமுண்டு. அம்மாஞ்சின்னு கொண்டுவிட்டிருக்கா அத்தை பொண்ணு. அவனுக்குப் படிக்க முடியும்னு தோணலெ வீட்டிலெ. எப்ப பார்த்தாலும் பாட்டு.

குஞ்சாளிக்கு எத்தனை சிஷ்யன் இருந்தாலும் போறாது வேலைக்கு.

இவனையும் படிக்க விடமாட்டா. இங்க வந்து படிக்கட்டுமே. பையன் படிக்கிறான்னு நீயும் வரவாளுக்கெல்லாம் சாக்குச் சொல்லலாம் - பையன் நல்ல சமர்த்து. இனம் தெரிஞ்ச பய - ஒரு ரூம்லெ அவன் வந்து இருக்கலாமா இங்க?"

"சரி."

"என்ன யோசிக்கவேல்லெ. உடனே சரீங்கறே."

"நீங்க யோசிச்சப்பறம் என்ன?"

"நீ பையனைக்கூட பார்த்ததில்லியே."

"நான் எதுக்குப் பாக்கணும்? அவனுக்கு இடம் தயாராயிருக்கு."

இரண்டு நாள் கழித்து அந்தப் பையன் ஒரு பழைய டிரங்குப் பெட்டியும், படுக்கையுமாக வந்து நின்றான்.

# 2

கோபாலி சொன்ன பையனா இவன்! ஏழை, நாதியில்லாதது போன்ற நிலை, சாப்பாட்டுக்கே கோபாலியை எதிர்பார்க்கின்ற பஞ்சம் - இதையெல்லாம் கோபாலி சொன்னதிலிருந்து, கரளையாக, அரை வயிறு சாப்பிட்டு சாப்பிட்டு அரைநாடி உடம்பாக, சற்று சோகையாக, பயந்த சங்கோசக் கண்ணாக, குனிந்த தலையாக, நேராகப் பார்க்காத பார்வையாக, முழங்கைக்கு மேல் பாதி புஜத்தில் கையும் இடுப்பளவு மாக சட்டையாக, அரையில் பழுப்பேறின நாலுமுழ நாட்டுவேட்டியாக, தயங்கு நடையாக ஒரு பையனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

"நான்தான் கோபாலி மாமாட்டேர்ந்து வரேன்" என்று நிமிர்ந்து அறிமுகப்படுத்திக்கொண்டான் பையன். வலது கையில் டிரங்குப் பெட்டி, இடது கையில் படுக்கை, படுக்கைக் கயிற்றுக்கடியில் பாலிடெக்னிக்கின் சட்டம் செருகியிருந்தது. தோளில் தொங்கிற்று ஒரு பை.

"மாமா இன்னும் கொஞ்சம் நாழியிலே வரேன், நீ போன்னு சொன்னா."

"வா" என்று மேல்தாழை இறக்கி இன்னொரு கதவையும் திறந்தேன். "பொட்டியை எங்கிட்ட கொடு."

"வாண்டாம்."

"மாடிப்படி குறுகல். இரண்டு கையிலியும் மூட்டையை வைச்சுண்டு ஏற முடியாது."

"நான் ஏறிடுவேன். நீங்க போங்கோ."

வலது கை பெட்டி தோளுக்கு எழுந்தது. தலையில் அமர்ந்தது. நான் முன்னால் ஓட வேண்டியிருந்தது.

படி ஏறியதும் வலப்பக்கம் திரும்பி இந்தப் பக்கத்து முன்னறைக்குச் சென்றேன்.

"இதுதான் உன் அறை."

பையன் பார்த்தான். வெயில் வட்டங்களைப் பார்த்தான். பால்கனியிலும், இரு ஜன்னல்களிலும் தொட்டு உராயும் மரத்து இலைகளைப் பார்த்தான். கன்னங்களிலும், கன்னத்திலும் வெயில் வட்டங்கள் ஏறினதுபோலிருந்தது. மலர்ச்சி.

"இத்தனை இடம் எனக்கு வாண்டாம் மாமி" என்றான்.

"என்ன சொன்னே?" - கொஞ்சம் அதட்டினாற்போலக் கேட்டேன்.

"என்னத்துக்கு இத்தனை பெரிய இடம் எனக்குன்னு சொன்னேன்."

"கடைசியிலே என்னமோ சொன்னியே!"

"என்ன?"

"மறுபடியும் முதல்லெ சொன்னதையே சொல்லு."

"இத்தனை பெரிய இடம் எதுக்குன்னேன்."

"இல்லெ. வேற என்னமோ சேர்த்துண்டியே - உறவா கூப்பிடற மாதிரி."

"இத்தனை பெரிய இடம் வாண்டாம் மாமின்னேன்."

"என்னை நன்னாப் பாரு."

கண்களைத் தழைத்து என்னைப் பார்த்தான். நானும் நிமிர்ந்தபடியே பார்த்தேன்.

"என்னைப் பார்த்தா உன்னோட எந்த மாமா பொண்டாட்டி மாதிரி இருக்கு? கோபாலி மாமாவா - இல்லெ, உங்கம்மாவோட கூடப்பிறந்த அண்ணாவோட பொண்டாட்டி மாதிரி இருக்கா?"

முகத்தை கோபமாக வைத்துக்கொண்டிருந்ததைச் சற்று உற்றுப் பார்த்தான்.

சிரித்தான். "எப்படிக் கூப்பிடணும்னு சொல்லுங்கோ. அக்கா அஞ்சடி உசரமும் தம்பி ஆறடி உசரமும் இருக்கப்படாதா?" என்று அகலமாகப் புன்சிரிப்பு சிரித்தான் பையன்.

"என் பேர் தெரியாதா உனக்கு?"

"கோபாலி மாமா கோபமாமாவாச்சே."

"அப்படியா? அவர் கோபம்தான் பெரிசு உனக்கு!"

"அம்மணீன்னு கூப்பிட்டா, ஏண்டா பிச்சைக்காரன் மாதிரி அம்மணி அம்மணீன்னு புலம்பறேன்னு நீங்க கோச்சுக்க மாட்டேளே."

எனக்கு சிரிப்பே வந்துவிட்டது.

"பொட்டியைக் கீழே வையி."

வைத்தான். அவன் கையைப் பிடித்துக் குலுக்கினேன். "தேவலெ. யாராவது ஏழை பாழைன்னு ஒரு அம்மாஞ்சியை அனுப்பிச்சுடப் போறார் கோபாலின்னு பயந்நு போய்ட்டேன். படுக்கையும் கீழே வையி. தோல் பையையும் எடுத்து வையி . . . இந்த ரூம்தான் உனக்கு. சரியா இருக்கும் உனக்கு."

பையன் என்னைப் பார்க்காமல் புன்சிரிப்புச் சிரித்தான். சாமான்களைக் கீழே வைத்துவிட்டு ஜன்னல்களையும் மர இலைகளையும் பார்த்தான். பால்கனிக்குச் சென்று தெருவைப் பார்த்தான்.

அவன் உயரத்தையும் காலையும் கையையும் பார்க்கப் பார்க்க எங்கோ கலியாணத்திலும் ஹோட்டலிலும் பார்த்த இரண்டு மூன்று சமையற்காரர்கள் ஞாபகம் வந்தது. மெல்லிய தோல். ஆனால் குறக்களி வாங்கும்போது விறைத்துப் போகிறது போல காலும் கையும் அழுத்தச் சதை. பெரிய விரல்கள். கறுப்புக்கும் மாநிறத்துக்கும் நடுவான ஒரு பழுப்பு நிறம். அழுக்கு நிறம் - மண் நிறம். தனித் தனியாகக் காது, மூக்கு, கண், உதடு. சிறிது கோபாலி வம்ச ஜாடையோ என்னமோ, கண் அதே மாதிரி பெரிய கண். பேசுகிறபோது, ரொம்பத் தெரிந்தவன் பீற்றிக் கொள்கிறது போல, சற்று முறுக்கிக்கொள்கிற வாயும் உதடும். அளவுக்கு மீறி அகலமான பாதம் - மாக்கோலப் பாதம்போல. தலையில் கட்டை மயிர். மீசை மாதிரி புருவ மயிர். கையைப் பற்றிக் குலுக்கிய போதும் பாதம் மாதிரியே அகலமான உள்ளங்கை. அங்கேயும் குறக்களி விறைப்பு மாதிரி முயன்று குலுக்க வேண்டியிருந்தது.

"உன் பேர் என்னவோ?"

"பட்டாபிராமன். பட்டாபி பட்டாபின்னு கூப்பிடுவா. கோபாலி மாமா மாமவ பட்டாபிராமான்னு ஒரு பாட்டு நன்னாப் பாடுவாளாம். எங்கம்மா அதைக் கேட்டதுக்குப்பறம், அந்தப் பேர்தான் வைக்கணுமனாளாம்" என்று ஐந்து வயதுப் பையனைப்போல மேல் விவரமும் சொன்னான் பட்டாபி.

"நீ கேட்டதில்லியா அந்தப் பாட்டை?"

"நான் பாட்டே கேக்கறதில்லையே."

"பிடிக்காதா?"

"பிடிக்காதுன்னு இல்லே. எனக்கு ஒரு விஞ்ஞான ருசிதான் பாட்டிலெ. அதுக்குமேலே ஒண்ணும் கிடையாது."

"அப்படீன்னா?"

"ஜலதரங்கம் வாசிச்சா ஏன் கேக்கறா? சைக்கிள் மணியை ஏன் கேட்க மாட்டேங்கறா எல்லாரும்? மிருதங்கம் வாசிச்சா கேக்கறா! ஏன் நெல்லுப் புடைச்சா கேக்க மாட்டேங்கறா? பாட்டு பாடினா கேக்கறா! குழந்தை அழுதா ஏன் கேக்க மாட்டேங்கறா? புல்லாங்குழல் வாசிச்சா கேக்கறா! கழுகு கத்தினா ஏன் கேக்க மாட்டேங்கறா? ஸ்வரம் பாடினா கேக்கறா! டைப் அடிச்சா ஏன் கேக்க மாட்டேங்கறா? கடம் வாசிச்சா கேக்கறா! ஜட்கா வண்டி ஓடறபோது சாட்டைக் கம்பை ஆரக்கால்லெ கொடுத்தா ஏன் கேக்கமாட்டேங்கறா - இப்படி யோசிச்சுண்டே இருப்பேன். பாடினா, பிடிக்கும்னும் இல்லே, பிடிக்காதும்னும் கிடையாது."

"அதுதான் உங்க மாமா உன்னை இங்கே வந்து இருன்னு சொன்னாரா? உனக்கு என்னதான் பிடிக்கும்? நான் டான்ஸ் ஆடறேனே, பிடிக்குமா?"

"அதுவும் அப்படித்தான்."

"எப்படி?"

"டான்ஸ் ஆடினாப் பாக்கறா. தலையிலே சுமை வச்சுண்டு நெல்லு மிஷினுக்கு நடந்துபோறவாளையும் காய்கறி மார்க்கெட்டுக்கு நடந்து போறவாளையும் ஏன் பார்க்க மாட்டேங்கறா? அபிநயம் பிடிச்சா பார்க்கறா. கையையும் கண்ணையும் ஆட்டி உருட்டிண்டு எல்லாரும் பேசறபோது ஏன் பார்க்க மாட்டேங்கறா - இதெல்லாம் யோசிச்சிண்டே

இருப்பேன்."

"கையைக் கொடு" என்று வாங்கிக் குலுக்கினேன். எனக்கும் 'விஞ்ஞான ஆசை' வந்துவிட்டது போலிருந்தது. பசியாகவும் இருந்தது. உலை நீர் வைக்க உள்ளே போனேன்.

கோபாலி வந்தது.

"என்ன கதல்லாம் திறந்து போட்டிருக்கு?" என்று செருப்பைக் கழற்றிக்கொண்டே உள்ளே வந்தது.

"நான்தான் சாத்த மறந்துபோய்ட்டேன் மாமா" என்று சொல்லிக்கொண்டே அறையிலிருந்து வந்தான் பட்டாபி.

"ஓகோ. கிருகப்பிரவேசம் ஆயிடுத்தா . . ." என்று அந்த அறையை

நோக்கிப் போயிற்று கோபாலி. பையனும் போனான்.

"தேவலையாடா?"

"நான் இவ்வளவு நன்னாயிருக்கும்னு நெனக்கலெ மாமா."

"ஆமா. மரம், காத்து, பால்கனி. படிக்கக்கூட மறந்து போயிடும் போல்ருக்கோ? கதவை சாத்தி வச்சுக்கோ. இங்க யாராவது வந்து பேசிண்டேயிருப்பா. நீயும் பேச்சு கேக்க வந்துடாதே. படிப்பு உண்டு, நீ உண்டுன்னு கதவைச் சாத்திண்டு இரு. அம்மணி கூப்பிட்டா ஏன்னு கேளு. ஏதாவது வேணும்னு செய்யி . . . படிச்சவாள்ளாம் வருவா . . . நீயும் அவாளோட சரிக்குச் சரி உட்கார்ந்து, ராவணான்னு ஏதாவது பேச ஆரமிச்சுடப்படாது."

பட்டாபி குனிந்து சரி என்கிற பாவனையில் மௌனம் சாதித்துக்கொண்டிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சமையல் முடிந்ததும், பட்டாபி எங்கள் இருவரையும் உட்கார்த்தி வைத்துப் பரிமாறினான். பிறகு சாப்பிட்டான். மிச்சங்களை எடுத்து ஒழுங்கு பண்ணிவைத்தான். சமையலறையை சுத்தம் செய்தான். பாத்திரங்களைத் தேய்க்க மொட்டை மாடித் தாழ்வாரத்தில் கொண்டு போட்டான். தன் அறைக்குப் போய்விட்டான்.

ஏழெட்டு நாள் அவன் இருக்கிற இடம் தெரியவில்லை. விடியற்காலையில் நான் எழுந்திருக்கும்போது காபி தயாராக இருக்கும். இட்லியோ தோசையோ வார்த்து எனக்கும் கொடுத்து, தானும் சாப்பிட்டு ஏழு மணிக்கு வீட்டைவிட்டு கிளம்பிவிடுவான். திரும்பி அந்திவேளைக்கு வருவான். சாப்பிட்டுவிட்டு, பச்சையப்பனுக்குப் பாத்திரம் தேய்க்கப் போட்டுவிட்டு, அறைக்குப் போய் விடுவான். இரவு பன்னிரண்டு ஒரு மணி என்று அவன் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.

யாராவது வந்திருந்தால் வெளியே வர மாட்டான். நேரமாகி விட்டால், கால் அலம்பப் போவதுபோல் பின்பக்கம் போவான்.

நான்காவது நாள், "இவாளும் சாப்பிடப் போறாளா?" என்று இரண்டு பையன்கள் உட்கார்ந்து பேசும்போது கேட்டான்.

"நோ நோ . . . நேரமாயிடுத்து. நாங்க போகணும்" என்று இருவரும் எழுந்தார்கள்.

மணி அப்போது பத்து.

"நேரமாயிடுத்தே. சாப்பிட்டுப் போறதுன்னா, நான் ஏதாவது தயார் பண்ணிவிடறேனே" என்றுகொண்டே என்னைப் பார்த்தான்.

"நோ நோ" என்று இருவரும் மாடிப்படி இறங்கினார்கள்.

கோபாலி பாடும். அவன் வெளியே வர மாட்டான். நான் கற்றுக்கொள்வேன். தலை காட்டமாட்டான். வேலய்யா வந்து கட்டை தட்டுவார். வரமாட்டான். நான் மாடி அதிர ஆடுவேன். வரமாட்டான்.

மூன்று நான்கு மாதமாகிவிட்டது. அவனோடு பேசக்கூட முடியவில்லை. கோபாலி வந்து பாடிவிட்டு, பானம் செய்து, சாப்பிட்டு, பேசிவிட்டு தூங்கும். பட்டாபி இருக்கிற சுவடு தெரியாது. ஒரு மணி வரையில் வெளிச்சம் தெரியும். கோபாலிக்கு ஒரு நாள் சங்கோசம் வந்துவிட்டாற்போலிருக்கிறது. இரவு பதினொரு மணி இருக்கும். விளக்கு எரிவதைப் பார்த்து அந்தப் பக்கம் போயிற்று.

"ஏண்டா பட்டாபி, ரொம்ப நாழியாயிட்டாப் போலிருக்கே. இன்னும் படுத்துக்கலெ?" என்று கேட்டது.

"சரி மாமா."

மறுகணம் விளக்கு அணைந்துவிட்டது. ஒரு நிமிஷத்திற்கெல்லாம் லேசாகக் குறட்டை கேட்டது.

மறுநாள் மாலை கோபாலி வரவில்லை. கச்சேரிக்கு வெளியூர் போயிருந்தது. பேச்சு நட்புகளையும் காணவில்லை. பட்டாபியைக் கூப்பிட்டேன்.

"என்ன?" என்றான் வந்து நின்று.

"நேத்திக்கி ராத்திரி மாமா தூங்கலியான்னு கேட்டார். சரின்னு விளக்கை அணைச்சே. உடனே குறட்டை சத்தம் கேட்டுதே."

"ஆமாம்."

"உடனே தூங்கிப்போயிட்டியா?"

"ஆமாம்."

"எப்படித் தூங்க முடியும்?"

"முடியும் மாமி . . . ஸாரி . . ." என்று தயங்கிவிட்டு "முடியும்."

"இன்னும் என்னைப் பார்த்தா மாமி மாதிரிதான் இருக்கா?"

"அதான் சாரி சொன்னேனே."

"எப்படி உடனே தூங்கறே நீ?"

"வேலையிருந்தா செஞ்சிண்டே இருப்பேன். மூணு நாலுநாள் கூட தூங்காம வேலை செய்வேன். வேலையை நிறுத்தினேன்னா உடனே தூங்கிடுவேன்."

"வேலையில்லாட்டாலா? வேலையை நிறுத்தின உடனேயா?"

"வேலையை நிறுத்தினவுடனே."

"எனக்கு நம்பவே முடியலியே!"

பட்டாபி பேசாமலிருந்தான்.

"இப்ப தூங்கிவிடுவியா நெனச்சா?"

"ம்."

"இன்னும் அஸ்தமனம்கூட ஆகலியே?"

"ஆகாட்டா என்ன? நான் இருட்டா பண்ணிண்டுவிடுவேன்."

"அப்படின்னா, இப்ப தூங்கு பார்ப்போம்."

"யாராவது வந்தா?"

"வந்தா என்ன? நீ பாட்டிலே தூங்கு."

"உள்ளே போய் தூங்கறேனே."

"இல்லெ, இங்கியே தூங்கு. நான் பார்க்கணுமே."

"சரி" என்று சிரித்தான் பட்டாபி.

சுவரோரமாக இருந்த திண்டை இழுத்துத் தலைக்கு வைத்துக் கொண்டான். கண்ணை மூடினான். ஒரு நிமிஷமாயிற்று. இரண்டு தடவை கையைச் சொறிந்துகொண்டான். மூன்றாவது நிமிஷம் மெல்லிய குறட்டையாக வந்தது. ஐந்து, பத்து, பதினைந்து நிமிஷமாயிற்று. பட்டாபி உறங்கிக் கிடந்தான். உலகத்தைச் சுருட்டி எறிந்துவிட்டு, அவன் வேறு எங்கோ போய்விட்டாற் போலிருக்கிறது. குறட்டை இல்லை. ஆழ்ந்த தூக்கம்.

கூப்பிடு மணி கேட்டது.

ஆள் எழுந்திருக்கவில்லை.

சந்தடி செய்யாமல் எழுந்துபோய் மாடிப்படி இறங்கிக் கதவைத் திறந்தேன்.

சுந்தரம் நின்றுகொண்டிருந்தார்.

"வாங்கோ, வாங்கோ."

"நீங்க இருக்க மாட்டேள்னு நினைச்சேன். என்ன அதிர்ஷ்டம்?"

"இன்னிக்கு எங்கேயும் போகலெ. கோபாலி ஊர்லெ இல்லெ. எனக்குப் பொழுது போகலெ."

"அப்படியா?"

சுந்தரத்திற்குக் கிடைகொள்ளாத ஆனந்தம்.

"தனியாவா இருக்கேள்?" என்று சிரமப்பட்டு ஆவலை அடக்கிக்கொண்டே படி ஏறினார்.

"என்ன பண்றது?"

"உஷ்" என்று சீட்டியடித்துக்கொண்டே வந்தார். பட்டாபி யைப் பார்த்ததும் "ஓ" என்றார்.

"பரவாயில்லெ. இங்கே ரூம்லெ குடியிருந்த பையன்தான். கோபாலி மருமான். நாலு நாளா விடாம படிச்சிருக்கான் ராப்பகலா. களைச்சுப் போய்த் தூங்கறான்" என்று மெதுவாக, பட்டாபியைக் கலைத்துவிடாமல் சொன்னேன்.

"அப்பன்னா, அங்க போய்ப் பேசுவோமே" என்று கண்ணை இடது பக்கத்து அறைப்பக்கம் காட்டினார். அங்கே இரட்டைக் கட்டிலோடு, மூன்று நாற்காலிகளும் உண்டு.

"சரி."

நாற்காலியில் உட்கார்ந்ததும், "ரெவ்யூ படிச்சிட்டியா?" என்றார்.

"படிச்சேனே. என்னைப் பத்தி எனக்கே இவ்வளவு தெரியாது. நிறைய எழுதியிருக்கேளே."

"நான் வெறுமே எழுதலியே. என்னுடைய ஞானம் எழுதலெ அதை."

"?"

இடது மார்பில் கையை வைத்து "இது" என்றார்.

"ஹ்ருதயம் வலது பக்கம் இருக்குன்னா ரமணமகரிஷி எல்லாரும் சொல்றா" என்றேன்.

"அவருக்கு இந்தப் பக்கம் இருந்து, இங்க வந்து இப்படி உட்கார்ந்திருந்தார்னா அப்படியே இழுத்திருக்க மாட்டாரா? இந்த மாதிரி சஞ்சலப்பட்டுண்டா உட்கார்ந்திருப்பர்?"

"எனக்கு இஷ்டமிருந்தாத்தானே, நான் இழுபட்டிருப்பேன்" என்றேன்.

சுந்தரத்திற்குப் பத்திரிகை ஆபீசில் துணை ஆசிரியர் தொழில். கோபாலிக்கு நெருங்கிய சிநேகம். நெருங்கிய சிநேகத்

திற்கு இரண்டு நினைக்கிறதே என்று எனக்கு வருத்தமில்லை. அந்தத் தொழிலுக்குள்ள ஒரு சின்ன அடிமைத்தனம், இதனிடம் சற்றுத் தூக்கலா இருந்ததுதான் எனக்குக் குமட்டிற்று. கூப்பிட்ட இடத்திற்குத் தன் சிவப்பு - இரட்டை நாடி உடலையும், மாட்டளவுக்கு இரட்டித்த தாடைச் சதையையும் சுமந்துகொண்டு போகும். மற்ற பேர் இரண்டு கண்ணாடி சாப்பிடுவதற்குள், காணாதது கண்டது போல ஐந்தாறு கண்ணாடி விஸ்கியை விழுங்கிவிடும். சாப்பிடும். கண்காணிப்பு சுழன்று ஹெஹ்ஹெஹ்ஹெ என்று அடித்தொண்டையோடு தொட்டதற்கெல்லாம் சிரிக்கும். சிரிப்பதற்காகவே வந்திருப்பதுபோல் சிரிக்கும்.

சற்று யோசித்துப் பார்த்தபோது இதுகூட அடிமைத்தனமாகப் படவில்லை. என்னைப் பற்றி மூன்று தடவை கைலாச சிகரத்தில் தூக்கிவைத்து எழுதியதற்காக கோபாலி குப்பி குப்பியாக ஊற்றியிருக்கிறது. வேறு கேள்வி என்னை அரித்துக்கொண்டிருந்தது. இதற்கு என் மீது சபலம் வர என்ன காரணம்? என் அழகா, வயசா, கவர்ச்சியா, பேச்சா? அதெல்லாம் இருக்கவே இருக்கிறது. அதற்காக, இந்த சுந்தரம் சபலப்படுவானேன்? ஒரு இருபத்து மூன்று வயதுப் பெண்ணைப் பார்த்து சபலப்படத் தனக்கு இருக்கிற தகுதி என்ன என்று இது ஏன் யோசிக்கவில்லை? கட்டிளம் வயதா? வயது ஐம்பத்தைந்திருக்கும். குடித்து குடித்து மனசில் உள்ள சத்துவம்கூட சறுகிப்போன உடம்பு. இதன் மனைவி நல்ல அழகு. அதுவும் எனக்கு ஒரு தடையாகப் படவில்லை. புருஷன், பெண் இரண்டு பேருக்குமே தன் கண்தான் பெரிது. எனக்குக்கூட பட்டாபியைக் கண்டால் பிடித்திருக்கிறது. எந்தப் பெண்ணும் அப்படி லேசாக அவனைப் பிடிக்கிறது என்று சொல்லிவிடமாட்டாள். சுந்தரத்தின் மனைவி அழகாயிருந்தால் அதற்கு அவர் என்ன செய்ய முடியும்? அவரை எதற்காக அது கட்டிப்போட வேண்டும்?

சுந்தரம் தனக்கு என்ன தகுதி என்று ஏன் கேட்டுக் கொள்ளவில்லை? கோபாலியைவிட சத்துவசாலி என்று தன்னைக்

கணித்துக்கொண்டுவிட்டதா? இல்லை, தான் சபலப்படுவது ஒன்றே தனக்குத் தகுதி என்று முடிவுசெய்துவுட்டதா? என்னைப் பற்றி எழுதியதற்காக என்னிடம் நன்றி கேட்கிறதா?

கொஞ்சம் சிரிப்புகூட வந்தது. சுந்தரத்தைப் பார்த்து இல்லை, என்னைப் பார்த்தே. சுந்தரம் தட்டிக் காண்பித்தாற்போல இந்த இருதய விஷயத்தை, இப்படி ஆற அமர புத்தியில் போட்டு புரட்டிக்கொண்டிருந்ததை நினைத்து.

என் தகுதியைப் பற்றியும் நினைத்தேன். எனக்கு சுந்தரத்தைத் தொடக்கூடப் பிடிப்பதில்லை. அது என் கையைப் பிடித்து எல்லாரையும் போல எத்தனையோ தடவை குலுக்கியிருக்கிறது. அப்போதெல்லாம் என் கையிலிருந்து உயிரைக் கழற்றியிருக்கிறேன். பிடிப்பு மறை தளர்ந்தாற்போல என் கை தொங்கும். அதற்கு ஏன் தெரியவில்லை.

அடி மனசுக்குள் என்ன நினைத்தேன்?

ஒரு கிழம் போதும் என்றா?

சுந்தரத்துக்கு செல்வாக்கு அதிகம். முனைந்தால் அது முடிக்காத காரியம் இல்லை. அதற்கு மணியாக மூன்று பிள்ளைகள். இரண்டு மூன்று நாலு தடவை திருப்பிப் திருப்பிப் படையெடுத்து மல்லுக்கு நின்று பி.ஏ.யை பெயரோடு சேர்த்துக்கொண்டது. அந்த இரண்டையும், ஐ.சீ.எஸ்.காரர்களின் பிள்ளைக்கே தனி உரிமையான இரண்டு பிரிட்டிஷ் கம்பெனிகளில் கவனெண்ட்டட் ஆபீசர்களாக உட்கார்த்தி வைத்துவிட்டது. பள்ளிக்கூடத்திற்கு மேல் போகமாட்டேன் என்று சண்டி பிடித்த மூன்றாவது பிள்ளையை ஹோட்டல் படிப்பு படிக்க வைத்து ஒரு அகில உலக ஹோட்டல் மேனேஜராக அமர்த்திவிட்டது. இரண்டாம் உலக யுத்தத்தைப் பற்றி எண்பது பக்கத்தில் ஒரு புத்தகம் எழுதி, யார் யாரையோ பிடித்து ஒரு அகில இந்தியப் பரிசு வாங்கி விட்டது. சங்கீத சர்ச்சை மண்டபங்களில் முன்னால் போய் உட்கார்ந்திருக்கும். சங்கீத வித்வான்கள் பரிதாபகரமாக அதைப் பார்த்துக் குழையும். கோபாலி ஒன்றுதான் அதைப் பார்த்து வயிற்றைப் பிடுங்குவதுபோல் ஏதாவது சொல்லும். போன வருஷம் டிசம்பர் குளிரில் சங்கீத விழாவின்போது, சுந்தரம் கோட்டு நிஜாரில்லாமல், வேட்டியும் பட்டுச் சட்டையும், மேலே ஒரு ஜரிகை போட்ட மைசூர் சிவப்புக் கம்பளியை தலைக்குப் போர்த்திக்கொண்டு கச்சேரிக்கு வந்துகொண்டிருந்தது.

வெளியே சிஷ்ய - சிநேகித ஜமாவுடன் நின்றுகொண்டிருந்த கோபாலியைப் பார்த்து "என்ன சௌக்யமாண்ணா?" என்று அருகே வந்தது. நானும் நின்றுகொண்டிருந்தேன்.

கோபாலி அடையாளம் தெரியாததுபோல "யாரு?" என்றது.

"நான்தாண்ணா சுந்தரம்."

"அடெடெ, சுந்தரமா? என்ன இது? பெரிய மனுஷாளாத்துக் கம்மண்டாட்டி மாதிரி, போர்வை முக்காடு எல்லாம்."

"ஹெஹ்ஹெஹ்ஹெ" என்று சிரித்தது சுந்தரம். உள்ளே நெருப்போ, நீரோ.

நான் அதைக்கூட நினைத்துப் பார்த்ததுண்டு. அந்தக் கோபத்தைத்தான் இப்படிக் காட்டுகிறதா?

குழப்பம். இரண்டு மாதங்களுக்கு முன் மயிலாப்பூர் கோவில் உற்சவத்தில் கோபாலி பாடியதைப் பற்றிப் பேசத் தொடங்கினேன்.

சுந்தரம் "ம் ம்" "ஆமாம் ஆமாம்", "அது தனி வயக்தின்னா", "அது மேதைன்னா" - என்று மனசோடு சம்பந்தப்படாமல் என்னமோ சொல்லிக்கொண்டிருந்தது. என் கண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தது. என் பேச்சு அதன் காதில் விழுகிறது. ஆனால் காதுக்குள் போகவில்லை.

"நீ மாத்திரம் என்ன? ஒரு அயிட்டத்தை முடிச்சுட்டு நீ உள்ளே போறியே. அயிட்டம் ஆடறது இருக்கட்டும். ஆனா உள்ள போறது எப்படின்னு யாராவது தெரிஞ்சிண்டிருக்காளான்னு ஒரு கேள்வி, உன்னைப் பார்த்தப்பறம் கேட்கத் தெரிஞ்சுண்டேன். ஸ்டேஜிலே ஆடறாப்பல, ஸ்டேஜுக்கு வரது ஒரு ஆர்ட் இல்லையோ? அதைவிட ஸ்டேஜை விட்டு விங்குக்குள்ள போறது ஒரு பெரிய சாதனை இல்லையோ? இதை ஒருத்தருமே நினச்சுப் பார்த்ததில்லேன்னு நினைக்கிறேன். இப்படி ஒண்ணு இருக்க முடியும், இதனாலெ ஒரு தாக்கு இருக்கும்னு எனக்கே பட்டது கிடையாது - உன்னோட எக்ஸிட்டைப் பார்க்கற வரையில். அதை நினைச்சா எப்படியிருக்கு தெரியுமோ? எப்படி எனக்கு வந்த இம்பாக்ட்டைச் சொல்லுவேன். ராமன் அனுமாருக்குச் சொன்னாப்பல செல்லட்டுமா?" என்று எழுந்து வந்து என்னைக் கட்டிக்கொண்டது.

நான் எதிர்பார்க்கவில்லை.

அது விடவில்லை.

"நோ நோ - எனக்கு இதெல்லாம் பிடிக்காது . . . விடுங்கோ."

"நான் ஒருத்தர்கிட்டவும் இந்த மாதிரி ஒரு உணர்வு கொண்டதேயில்லியே."

"வாண்டாம், இது உங்களுக்குப் பழக்கம்."

"நீ சொல்றது புரியலே."

"விடப்போறேளா இல்லியா இப்ப நீங்க!" என்று மெதுவாக, மூன்றாம் காதில் விழாமல் கமறினேன்.

மறு கணம் என்ன ஆயிற்றென்று தெரியவில்லை. இரண்டு கைகள் சுந்தரத்தை புஜங்களில் பிடித்துத் தூக்கின. காந்தத் தூக்கி தூக்குவது போலிருந்தது. பெரிய பொம்மையைத் தூக்குவது போல் தூக்கி ஹாலுக்குள் கொண்டுபோய்விட்டான் பட்டாபி. இங்கிலீஷில் சொன்னான்.

"இப்ப உங்களுக்கு என்ன ப்ராப்ளம் சார்?"

எனக்குத் திகைப்பாக இருந்தது. எப்படி அப்படியே தூக்கிக்கொண்டிருக்கிறான் பட்டாபி இந்தப் பெரிய கனத்தை?

"சொல்லுங்க சார், மாடிப்படியிலேர்ந்து கீழே போடட்டுமா? இல்லை பின் பக்கத்து மொட்டை மாடிக்கட்டைச் சுவரிலேர்ந்து போடட்டுமா?" என்றான்.

"விடு சொல்றேன்."

"பட்டாபி என்ன இது! விடு அவரை" என்று கேட்டதும் கேட்காததுமாக இரைந்தேன்.

"ஸாரி."

சுந்தரத்தின் கால் தரை தட்டிற்று.

"என்னது பட்டாபி. அவர்கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கோ."

"எக்ஸூஸ் மீ, சார், நான் என்னமோ தவறா நினைச்சுட்டேன்."

கையெழுத்து மறைகிற நேரம்.

ஹாலில் முக்காலிருள் கூடியிருந்தது.

"தூக்கக் கலக்கம், சார். என்னமோ ஏதோன்னு பயந்து போய்ட்டேன்" என்றான் பட்டாபி.

"நான் வரேன்" என்று வெளியே போனார் சுந்தரம்.

"கதவைத் தாழ்ப்பாள் போட்டுட்டு வா" என்றேன். பட்டாபி கீழே போய்த் திரும்பி வந்தான்.

"அவசரமா நடந்துனுட்டேன்" என்றான்.

"நீ சரியாத்தான் நடந்துண்டே."

"நான் செஞ்சது சரியா!" என்று ஆச்சரியமா என்னைப் பார்த்தான்.

"ரொம்ப சரி."

"அப்ப ஏன் என்னை விடச் சொன்னேள் அவரை? இதுதான் மனசிலே ஒன்று, வெளியிலே ஒன்றுங்கிறது."

"பயமுறுத்தினதோட போறும்."

"எப்படிப் போறும்? அவருக்கு ஞாபகம் இருக்கும்படியா ஏதாவது செஞ்சிருக்க வேண்டாமோ?"

"நீ தூக்கினியே எலெக்ட்ரோ மாக்னட் மாதிரி. அது எனக்கே ஞாபகம் இருக்கும் . . . நீ எப்ப முழிச்சுண்டே?"

"அஞ்சு நிமிஷம் இருக்கும். முழிப்பு கொடுத்துப் பார்த்தேன். பொழுது விடிஞ்சுட்டுத்துன்னு நினைச்சுண்டிருந்தேன். அப்பறம் பார்த்தா பட்சி கத்தலெ. பிள்ளையார் கோயில் மணி வேறே கேட்டுது. அப்புறம் யாரோ பேசறாப்பல இருந்துது. உட்கார்ந்தபடியே நகர்ந்து பார்த்தேன். இவர் உட்கார்ந்துண்டிருந்தார். கொஞ்ச நாழி தூக்கக் கலக்கமாவே கேட்டுண்டிருந்தேன். அப்பறம் சட்டுன்னு அவர் எழுந்துண்டதைப்

பார்த்தேன். கொஞ்சம் தயங்கினேன். அப்பறம் சட்டுனு ஓசைப்படாமே வந்தேன். யாரு இவர்?"

எல்லாம் சொன்னேன்.

"இவ்வளவு தெரிஞ்சுண்டவரா இப்படி இருக்கார். கொஞ்சம் சோஷலா இருந்தா உண்டிப் பொட்டி மாதிரி பொன்னமான்னு நினைச்சுக்கறா சில பேர்."

"?"

பட்டாபி மேலே பேசவில்லை.

"யாரு பொன்னம்மா?"

"சாரி" என்றான் பட்டாபி.

"சொல்லு."

"ஒண்ணும் இல்லே . . . நான் மூஞ்சியை அலம்பிக்கிறேன், விளக்கைப் போட்டுட்டு" என்று நகர்ந்தான்.

"பட்டாபி, சுந்தரத்தைத் தடுத்த மாதிரி இருக்கு இது? என்ன சொல்ல வந்தே?"

"கோபாலி மாமாதான் சொல்லிண்டிருந்தார் ஒரு நாளைக்கு.

ஊர்லே உண்டிபொட்டி பொன்னம்மான்னு ஒருத்தி இருந்தாளா, மேலத் தெருவிலே. ஆமடையான் போனப்பறம் நாதியில்லாம போயிட்டாளாம். பிள்ளைகுட்டி இல்லை. உறவும் ஜனமும் இல்லியாம். சாப்பிடணுமே. அதுக்காக, எல்லாரையும் உறவாக் கினுட்டாளாம். ஒரு உண்டி பொட்டி வச்சிருப்பாளாம். அதிலெ வர புருஷா, காசைப் போட்டுட்டு . . . கோபாலி மாமா சொன்னாத்தான் இந்தப் பைத்தார கதையெல்லாம் நெஜம் மாதிரி இருக்கும் . . . இந்த இவருக்கு ஏன் இப்படியெல்லாம் தோணித்து?"

இப்போது எனக்கே அங்கு நிற்கக் கூசிற்று. உள்ளே வந்து விளக்கைப்போட்டு நிலைக்கண்ணாடி முன் பார்த்துக்கொண்டேன். சிரித்தேன். என்னை பார்த்து கண்ணாடிக்குள்ளும் சிரித்தது.

பட்டாபி முகம் கழுவிக்கொண்டிருந்தான்.

"பட்டாபி."

"வந்துட்டேன்."

ஓடி வந்தான்.

"உனக்கு என்ன வயசு?"

"பதினெட்டு . . . நாள் கழிச்சுத்தான் படிக்க வச்சா. எஸ்.எஸ்.எல்.சி வரதுக்கே இத்தனை வயசாயிடுத்து."

"எப்படி அவரைத் தூக்கினே?"

"சின்ன வயசிலியே கள்ளத் தெருவிலே கர்லா சுத்துவேன். வெய்ட் தூக்குவேன். சிலம்பம் ஆடுவேன்."

"அப்பறம்?"

"தச்சு வேலை பண்ணுவேன். சமைப்பேன். மூனாவது பாரம் படிக்கறபோதே கலியாணத்துக்கு பெரிய சமையக்காராளோடே சித்தாளாப் போவேன். சாதம் கொதிக்கிற பெரிய தவலையெல்லாம் லாவகமாப் பெரட்டுவேன்."

"சித்தாள் வேலை எதுக்கு?"

"சாப்பாடு, பள்ளிக்கூடத்து சம்பளம், புஸ்தகம், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குப் பணம் கட்டக்கூட, மூணு கலியாணத்துக்குச் சித்தாளா போய் சம்பாதிச்சுட்டேன்."

சிறிது அவனைப் பார்த்துக்கொண்டே நின்றேன்.

"கோபாலி மாமா எதுக்கு உன்னை இங்க கொண்டு வச்சிருக்கார் - காவலா? உளவா?"

"அப்படின்னா அவர் சொல்லுவரா, நீ கூப்பிட்டாலொழிய உன் ரூமை விட்டு வரப்படாதுன்னு?"

"நான் உன்னைக் கூப்பிட்டேனா, இப்ப வந்தாரே இவரைத் தூக்கச்

சொல்லி?"

பட்டாபி தலையைக் குனிந்துகொண்டான்.

ஒரு நிமிஷம். "நான் வேற எங்கியாவது ரூம் பார்த்துண்டு போறேனே" என்று தலையைக் குனிந்துகொண்டே கால் விரலைத் தேய்த்தான்.

"என்னது திடீர்னு?"

"ஆமாம்."

"ஏன் இப்படிச் சொல்றே?"

பதில் இல்லை.

"சொல்லு."

"நான் அவரை அந்த மாதிரி பண்ணினது தப்போ என்னமோ?"

"நீ செஞ்சது சரின்னு சொன்னேனே."

"இனிமேலும் நான் இந்த மாதிரி ஏதாவது பண்ணாம இருக்கணுமே?"

"அப்படின்னா?"

"உங்களுக்கு அவரை பிடிக்கலெ. எனக்கு யாரையாவது பிடிக்காமல் இருந்து அவரையும் இந்த மாதிரி பண்ணிப்ட்டேன்னா?" என்று என்னைத் திரும்பிப் பார்த்தான். முகத்தைக் கீழே குனிந்து கொண்டான்.

"உனக்கு யாரையாவது பிடிக்காமலிருந்து . . . அப்பறம்?"

"நீங்க இத்தனை நாளா எனக்கு இடம் கொடுத்ததே பெரிசு. ஆனா, இங்க வரவாள்ளாரையும் பார்த்தா எனக்கும் என்னமோ போலிருக்கு. நானும் ஏதாவது தப்பா நடந்துண்டா?"

"கோபாலி மாமா இப்படியெல்லாம் பேசத்தான் உன்னை வச்சிருக்காரா இங்க?"

"எனக்கு இங்க வந்து இருக்கறதுக்கே லாயக்கில்லெ. ஆனா, எனக்கு படிக்க ஓட மாட்டேங்கறது."

"சரி . . . சட்டையைப் போட்டுக்கோ. நான் இன்னிக்கி சமெக்கலெ. வெளியிலே எங்காவது சாப்பிட்டு வருவோம்."

ஐந்து நிமிஷத்தில் நானும் தயாராகி விட்டேன்.

மவுண்ட் ரோடில் ஒரு ஹோட்டலில் ஒரு குடும்ப அறையில் ஒரு மூலை மேஜையாகப் பார்த்து உட்கார்ந்துகொண்டேன்.

சாப்பிட்டு முடியும்போது கேட்டேன். "இப்ப சொல்லு - வேற ரூம் பார்த்துண்டு போகணும்போல இருக்குன்னு சொன்னியே?

ஏன் சொன்னே?"

"மாமா நல்ல மனசோட கொண்டு வச்சிருக்கார் என்னை. எனக்கு பயமாயிருக்கு."

உடனே பேச முடியவில்லை. "மாமாவுக்குத் தப்பு பண்றோம். மாமாவுக்கு தப்பு பண்ணிடப்போறோமோன்னு பயம். என் மேலே பிரியம்னு சொல்ல மனசு வரலெ இல்லே."

"சொல்றதுக்குப் பயமாயிருக்கு."

"சொல்லணும்போல தோணறதா?"

பட்டாபி பதிலே சொல்லவில்லை.

திரும்பி வீட்டுக்கு வந்ததும், நேராகத் தன் அறைக்குப் போனான் அவன்.

வழக்கம்போல இராக்குளியலை முடித்துவிட்டு வந்தேன். பதினோரு மணிக்கு மேலாகிவிட்டது. முன் அறைக்குப் போனேன்.

கதவு சாத்தியிருந்தது.

விரலால் தட்டினேன்.

"யாரு?"

"நான்தான்."

திறந்தான்.

"குட்நைட் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்."

குனிந்து நின்றான்.

"வேற ரூம் பாக்கறதாக முடிவு பண்ணியாச்சா . .? அவரைத் தூக்கினாப்லெ என்னை தூக்கிவிடுவியா கோபத்திலெ . . . தூக்கு பார்ப்போம் . . ."

சுந்தரத்தைத் தூக்கினது போலவே இருந்தது. என்னுடைய அறையில் படுக்கையில் உடம்பு விழுந்தது.

சுந்தரத்தை நினைத்து சிரிப்பு வந்தது. இடைஇடையே கோபாலி இதே இடத்தில் கிடந்து அடித்துப் போட்டாற்போல தூங்கும் நினைவு வந்தது. இனனும் எனக்குத் தூக்கம் இல்லை. பக்கத்திலும் தூக்கம் இல்லை.

விடியற்காலையில் பட்டாபியைக் காணவில்லை. கோபாலி; கட்டிலில் ஒரு ஓரமாகத் துணிமூட்டை மாதிரி, ஜவ்வாது மூட்டை மாதிரி கிடக்கிற தோற்றம். சிரிப்பு வந்தது. மூட்டைக்கும் நன்றி செலுத்த வேண்டும் போலிருந்தது.

தலையணைக்கடியில் ஒரு சின்ன கடுதாசி கிடந்தது.

"ப்ளாஸ்கில் காபி, அடுக்கில் ஆறு இட்லி. எங்கள் தாத்தா யக்ஞம் செய்திருக்கிறார். என் மாதிரி அவர் செய்திருக்க முடியாது.

உண்மையாக எனக்குத்தான் செய்ய முடியும். சாகிற வரையில் இப்படி எனக்குச் சொல்ல முடியும்."

இந்தக் கடுதாசியைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். வெள்ளை வெயிலாகக் காலை முற்றியிருந்தது.

## 3

அன்றிரவு

மறுநாள் இரவு

மூன்றாம் நாள் இரவு - அதாவது நான்காவது இரவு.

அதே கதைதான்.

ஆனால் ஒரு நாள் பட்டாபி அவசரப்பட்டு, கல்லூரியிலிருந்து திரும்பி வந்துவிடவில்லை. வழக்கமாக வருகிற நேரத்திற்குத்தான் வந்தான். தன் படிப்பை, வேலையை முடித்துக்கொண்டு, பார்க்கிற நண்பர்களையோ என்னமோ பார்த்துவிட்டு, பேசிவிட்டு, வழக்கம்போல்தான் வந்தான்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை.

இரவை நினைத்து, என்னை நினைத்து ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு பிற்பகல் அல்லது மாலையில் வந்துவிடுவான் என்று நினைத்தேன்.

சிறிது ஏமாற்றம்தான்.

காரணம்; என் விழி வழிமேலே.

பகல் முழுதும் மனசில் படம் போட்டுக்கொண்டு இருந்தேன். அவன் பிரின்ஸ்பாலிடம் போகிறாற் போல, ஆசிரியரிடம் போகிறாற்போல - வீட்டில் வேலை இருக்கிறது என்று சொல்கிறாற்போல வழக்கமாகக் கூடவருகிற நண்பர்களிடம் ஏதோ சாக்குச்சொல்லிவிட்டு, பேச்சை கழற்றிவிட்டு, கிடைத்த வழியில் பஸ்ஸில் யாரோடும் ஏதும் பேசாததுபோல. ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி வருகிறார் போல. வருகிற வழியில் பஸ்ஸில் யாரோடும் ஏதும் பேசாததுபோல. ஆட்டோ ரிக்ஷாவில் வரும்போது, தெருவில் ஒன்றையும் பார்க்காமல், இந்த அறையை நினைத்துக்கொண்டிருப்பது போல. சாயங்காலப் பசிக்குக்கூட ஒரு 'டீ'க்காக ஹோட்டலில் நுழையாதது போல.

அப்படியெல்லாம் பட்டாபி செய்துவிடவில்லை.

எனக்குக் கோபம்.

நான் வீட்டில் இல்லை. அவன் பள்ளிக்கூடத்தில் இருந்தேன்.

வெயில் வட்டம் கீழே பூள்ளி பூசிக் கிடந்தது. நான் பள்ளிக்கூடத்தில் இருந்தேன். கழுகுச் சத்தம் கேட்டது. சைக்கிள் மணி

கேட்டது. நான் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அவன் பள்ளிக்கூடத்தில் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். முதல்நாள் இரவை, அதற்கு முந்திய நாள் இரவை நினைத்துக்கொண்டிருந்தேன். அவன் சத்துவத்தை நினைத்துக்கொண் டிருந்தேன். அக்கறையை நினைத்துக்கொண்டிருந்தேன். இந்த அறையில் அவன் இருப்பதையெல்லாம் திருப்பித் திருப்பி ஓட்டினேன். அவன் நர்சு மாதிரி இருப்பதை, ஆள் மாதிரி இருப்பதை, கட்டின அகமுடையான் மாதிரி இருப்பதை, அம்மா மாதிரி இருப்பதை, ஒப்பனைக்காரன் மாதிரி இருப்பதை, அப்பா மாதிரி பேசுவதை, தம்பி மாதிரி பேசுவதை . . . வயசு பதினெட்டா, நாற்பதா இவனுக்கு?

எல்லார் மாதிரியும் பேசினான். ஆனால் ஒரு பேச்சுத்தான் வரவில்லை. கொள்ளை ஆசையாக இருக்கிறவர்கள் பேசுகிற பேச்சு! பெண் அமுதத்தைக் காண்பவர்கள் பேச்சு. பெண் வெள்ளத்தில் தாங்க முடியாமல் குதிக்கிறவர்களின் பேச்சு. ஒரு வார்த்தை! கணத்திற்குக் கணம் கோபாலி நினைவு வரும். அதன் பேச்சு கேட்கும். கெஞ்சல் கேட்கும். இனிமையும் குழைவும் கரவும் கொண்ட பொருள்களின், மிருகங்களின், தாவரங்களின், பட்சிகளின் பெயர்களெல்லாம் கேட்கும். இவன் வாயிலிருந்து இல்லை. இல்லாத கோபாலியின் வாயிலிருந்து.

மூன்றாம் நாள் அந்திக்கு வந்தவன், வாசல் கேட்டுக்கு அப்பால் நின்று யாரோ பள்ளிக்கூடத்து நண்பனோடு, கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுத்தான் உள்ளேவந்தான்.

வந்தவுடன் முகம் காலெல்லாம் கழுவிவிட்டு, சமையல் அறைக்குப் போனான். அங்கே ஒன்றுமில்லாததைப் பார்த்து, "சமைக்கட்டுமா?" என்றான்.

"வாண்டாம்."

"ஏன்?"

"இன்னிக்கும் ஹோட்டல்லிலே சாப்பிடுவோம்."

மறுபடியும் இன்னொரு ஹோட்டல் - பிராட்வேயில் குடும்ப அறை. சாப்பாடு. வீடு திரும்பினதும், அவன் அவன் அறைக்குப் போய், நான் படிக்கிறாற்போல, பொழுதைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு நடுநிசிக்கு குளித்துவிட்டு அவன் அறைக்கதவைத் தட்டி குட்நைட் சொல்வதற்காக வந்தேன் என்று சொல்லி . . .

". . ."

"என்ன பேசாம நிக்கறே?"

"யாருக்கு குட்நைட்னு யோசிக்கிறேன்" என்றான் பட்டாபி.

"நீ தான் சொல்லேன்."

"நாலு நாளா எனக்கு குட்நைட் இல்லெ."

"என்ன சொன்னே?"

"ஆமாம்."

"மனசோடதான் சொல்றியா?"

"ஆமாம்."

வெறித்துப் பார்த்தேன்.

"கோபாலி மாமா இங்கியேதானே நினச்சுண்டிருப்பர் . . . அவருக்கு நன்னியா நான் செய்றது? . . . குட்நைட் இல்லேன்னு சொல்லி இங்கியும் நன்னியில்லாம போயிடுத்து எனக்கு" என்றான் பட்டாபி.

நிமிர்ந்துதான் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் குழந்தையைக் குனிந்து பார்ப்பது போலிருந்தது. அவனைக் கையில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. விரலைப் பிடித்தேன். நடந்தேன். குழந்தை மாதிரி நடந்து வந்தான்.

அந்த அறைக்குப் போனதும் சரியாகப் போய்விட்டது.

விடியற்காலையில் விழிப்புக் கொடுக்கிறார் போலில்லை உடம்பு. ஆனால் அவன்தான் என் மனதை, புலன்களை எழுப்பி விட்டானா என்று புரியவில்லை. கண்ணை விழித்தேன்.

அவன் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தான்.

"தூங்கலியா?"

"இல்லெ."

"நெனச்சபோது தூக்கம் வரும்னு சொல்லுவே. தூங்கிக்கூட காமிச்சே அன்னிக்கி."

"இனிமே இங்கே இருக்கிறவரைக்கும் தூக்கம் வராது போலிருக்கு எனக்கு."

"கோபாலி மாமாவை நெனச்சிண்டிருக்கியா இன்னும்?"

"நீங்கதான் சொல்றேளே."

"என்ன நடுவிலே நடுவிலே நீங்க? . . . இன்னும் கோபாலி மாமாக்கு துரோகம் பண்ணாததுதான் உனக்குப் பெரிசாப்படறது உனக்கு."

"பண்ணினது."

"சரி. எதாயிருந்தா என்ன? நான் ஒரு பொருளா படலெ உனக்கு. கோபாலி மாமாவோட திருப்திதான் வேணும். அவருக்கு நன்னி காமிச்ச புண்யம்தான் வேணும்."

"நான் ஆத்திலெ, குளத்திலெ விழுந்தாக்கூட செத்துப்போக மாட்டேன். நீஞ்சத் தெரியும்."

"அப்படியா? நீ இத்தனை மங்குன்னு தெரியலெ. பிறத்தியார் கிட்ட ஈவு, இரக்கம் இருக்காதுன்னு நெனச்சேன். உங்கிட்டவே இல்லென்னு தெரியறது . . . வெறும் கல்லு எதுக்காக இருக்கணும்? வேற ரூம் பார்க்கணும் பார்க்கணும்னு அன்னிக்கே தொண தொணத்தே நீ. பார்த்துண்டு போ. எப்படியெல்லாம் பாவத்தைத் தீர்த்துக்கணுமோ

தீர்த்துக்கோ. எப்படியெல்லாம் நன்னி காமிக்கணுமோ காமிச்சுக்கோ. எனக்கும் நல்ல பேரு. உனக்கும் நல்லபேரு. உங்க மாமாவுக்கு ரொம்ப கௌரவமாயிருக்கும் . . . நீ வேற ரூம் பார்த்துண்டு போறதுக்கு முன்னாலெ, எனக்கு ஒரு டம்ளர் காபி போட்டுக் கொடுத்துட்டுப் போ. எனக்கு இப்ப எழுந்துண்டு வேலை செய்யமுடியாது போலிருக்கு."

வாயை மூடவில்லை. பட்டாபி எழுந்துவிட்டான். பத்து நிமிஷத்தில் காபியைக் கொண்டுவந்துவிட்டான்.

உப்புமாவை பண்ணி குளித்துவிட்டுப் பள்ளிக்கூடம் கிளம்பிவிட்டான்.

அன்று முழுவதும் பயம். திரும்பி வருவானா? உயிரை முடித்துக்கொள்வானா? படிப்பை முடித்துக்கொள்வானா? எங்காவது கண்காணாத, கோபாலியின் பெயரே கேட்காத திக்காகப் பார்த்து ஓடிவிடுவானா? நன்றி மறதியை மறக்கவோ, மறைக்கவோ, துடைக்கவோ எங்காவது இமயமலை, குகை என்று ஓடி ஒளிந்து கண்ணை மூடி உட்கார்ந்திருக்கப் போகிறானா?

வீட்டில் நிலைகொள்ளவில்லை. பச்சையப்பனிடம் சொல்லிவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினேன். ரயிலடிக்குப் போய் தாம்பரம் வரையில் டிக்கெட் எடுத்துக் கொண்டு மின் வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். தாம்பரம் ஸ்டேஷனில் மறுபடியும் டிக்கெட் எடுத்து பீச் ஸ்டேஷன் வரையில் போனேன். நாலைந்து பேர் அடையாளம் கண்டு பேச்சுக் கொடுத்தார்கள். இறங்கிப் போனார்கள். பேச்சும் மனிதர்களும் போனதும் மீண்டும் பயம். வழக்கமாகப் பேச்சுக்கு வருகிற ஒரு பி.எச்.டி. பண்ணுகிற பையன் வீட்டுக்குப் போனேன். அவன் வீட்டில் இல்லை. ஒரு இளம் வக்கீல் வீட்டுக்குப் போனேன். அவர் கோர்ட்டுக்குப் போய்விட்டார். கடைசியில் வேலய்யா வீட்டுக்குப் போனேன். இருந்தார். நான் போவது வேளை இலாத வேளை. நான் அவர் வீட்டுக்குப் போவதே இது மூன்றாவது தடவை. முன்னால் சொல்லாமல் போனது. 'எங்க எக்மோர் பக்கமாக் காத்தடிச்சுது' என்று அவர் வரவேற்றார்.

"காத்தோடு போறவள்னு சொல்றேளா?" என்று என் பயத்தை மறைப்பதற்காக என்னமோ சொல்லிக்கொண்டே கீழே பாயில் உட்கார்ந்தேன்.

"ரொம்ப களைச்சு வராப்பல தெரியுதே. வீட்லேர்ந்து வறீங்களா? வேற எங்காவது போய்ட்டு வர்றீங்களா . . . யாரங்கே? யாரு வந்திருக்காங்க

பாரு - மாமாங்கம் வர்றாப்பல."

அவர் மனைவி வந்தாள். அவளைப் பார்க்கும்போது, கோபாலி மீது வருகிற அத்தனை இரக்கம் வராது எனக்கு. ஆனால் கற்றுக்கொள்கிற பெண்களிடம் எப்படி வேலய்யா சபலப்படாமல் நல்ல பெயர் வாங்கிக்கொள்கிறார் என்று.

"மாமாங்கம் மாதிரிதான் வராங்க" என்ற முப்பது பல்லாலும் முன்னால் நீண்ட மீதி இரண்டு பல்லாலும் சிரித்து வரவேற்றாள். அத்தனை பல்லும் தாஷ்ணாப் பொடிபோட்டு இடுக்கெல்லாம் பாக்குச் சாயம் மாதிரி ஏறியிருந்தது. தொண்ணூறு வயசானாலும் விழாமலிருப்பதற்காக தாஷ்ணாப்பொடி போட்டு பல்லை கெட்டித்துவிட்ட பற்கள். பல் டாக்டர் கம்பி கட்டி முன்பற்களை உள்ளே சாய்த்து நேராக்குகிற வழக்கம். அதற்கு தாஷ்ணாப்பொடி பற்கள் என்று இந்த மூன்றாவது தடவை அவளைப் பார்த்தபோதும் யோசனை வந்தது.

வேலய்யா ஒரு வாரமாக வரவில்லை. நான் ஏன் என்று விசாரிக்க வந்திருக்கிறேனோ என்று காரணங்கள் சொல்லத் தொடங்கினார். ஜுரம் என்றார். உடம்பை நெருட்டுகிற வலி என்றார். அதைவிட யாரோ ஒரு சிஷ்யை தன்னைக் கேட்காமல் சர்க்காரிடம் உதவிச் சம்பளம் வாங்கிக்கொண்டு அதில் பாதியை வேறு யாரிடமோ கொடுத்து மேல் சிட்சை சொல்லிக்கொள்ளப் போறாளாம்.

"ஜுரத்தைவிட இதுதான் உடம்புன்னு வச்சிக்குங்க. நாலு ஜாண் உசரத்திலெ வந்துது. அப்பவே புடிச்சு சொல்லிக் கொடுத்தேன். மாசம் முப்பது ரூபாய்க்கு மூணுநாள் ரோதனம் பண்ணுவாங்க தாயாரும் தோப்பனாரும். அஞ்சு வருசம் காலு, கையில் எல்லாம் கரச்சுப்போட்டுனேன். அம்பலத்துக்குக் கொண்ணாந்தேன். பாச்சா அய்யங்காரு, கிருஷ்ணமூர்த்தி அய்யிரு, நம்ப சாமி, ராமதுரை எல்லாரையும் கூப்பிட்டு நல்ல வார்த்தையா எளுதிப் போடுங்கய்யான்னு சொன்னேன். எளுதினாங்க. கொளந்தைக்கு என்னா தெரியும்? தாயாரம்மா இருக்காங்களே அவங்களை பார்த்துத்தான் வள்ளுவரே திருக்குறளு எழுதி இருப்பாரு. அரங்கேத்தம் ஆச்சோ இல்லியோ, பத்திரிகை யிலே பாச்சா அய்யங்காரு எளுதினதைப் பார்த்தாங்களோ இல்லியோ, மூணாம் கச்சேரியில்லேர்ந்து வர்ற தொகையிலேர்ந்து பாதி கொடுக்கறது எப்படி குருஜீ சாத்தியம்னு சொல்லத் தொடங்கிட்டாங்க. எப்ப? மூணாம் கச்சேரிக்கே. ஏன்னா? கனகாபிசேகம்ல பண்ணிட்டாங்க முதரண்டு கச்சேரியிலே வந்ததை வச்சுகிட்டு. சரி இழுத்துப் பிடிக்கிற கேசுன்னு

விட்டுக்கிட்டேயிருந்தேன். அது இப்ப சூரபஸ்மாசுரன் கதையாயிடிச்சு. பொண்ணு காலேஜிலே சேந்துது. காலேஜிலே சேந்தா நல்ல புத்தியில்ல வரணும்? அம்மா சொல்றதுதான் சரின்னு தோணிடிச்சு.

காலர்ஷிப்பு வந்தப்பறம் அட்வான்ஸ் சிட்சையாம். மகாலிங்கத்துக் கிட்ட போயி அக்ரிமெண்ட் பண்ணிக்கிட்டாங்களாம். அவன் மொளங்கா வரைக்கும தொங்கத்தொங்க சட்டை போட்டுகிட்டு ஜவ்வாது பொட்டு கையிலே தோடான்னு உச்சவ மூர்த்தி மாதிரி நிக்கிறான்! உச்சவமூர்த்தியாவே சிங்கப்பூரு, சைகோன், கோலாலம்பூருன்னு போயிட்டு வந்திட்டானா, இன்னமே அவுருதான் நடராஜா அவுருதான் பரதரு. நான் திண்ணைப் பள்ளிக்கூட வத்தியாரு. ஒரு வாரம் முன்னாலெ வந்தாங்க - தாயாரும் பொண்ணுமா. எனக்கு முன்னாடியே சேதி தெரியும். ஒரு நூறு ரூபா பணம், ஒரு திருநாசரம் பத்தாறு வேட்டி - நான் பத்தாறு பஞ்சக்கச்சம் கட்டிகிட்டு புரோயிதம்ல பண்ணப் போறன்! அந்தப் பத்தாறு, ஒரு சீப்பு பச்சவாளப்பளம், அர டஜன் குடகாரஞ்சி, தாஷ்ணாப்பளம் பத்து பலம் - குருஜி நொந்துபோயி பாட முடியாம ஆயிடப் போறாரேன்னு தொண்டைக்கு எதவா இருக்கணும்ல! அதுக்குத் தாஷ்ணாப்பளம் . . ."

"சீனாக் கல்கண்டு விட்டுட்டிங்களே" என்று குறுக்கிட்டாள் மனைவி.

"நீ இருக்கியா? ஆமா. சீனா கல்கண்டு கால் வீசை இருக்கும் - மொளகு போட்டு காச்சின நெய்தான் கொண்ட வக்யலெ தொண்டைக்கு - எல்லாத்தியும் ஒரு ப்ளாஷ்டிக் தாம்பாளத்திலே வச்சுக் கொண்டு வச்சாங்க. நின்னாங்க. என்ன திடீர்னு இதெல்லாம்னேன். 'நீங்க எவ்வளவோ செஞ்சிருக்கேள். உங்க ஆசீர்வாதத்திலெ தான் குழந்தைநல்ல பேர் சொல்லிண்டு வரா. காலர்ஷிப்பும் கிடைச்சிருக்கு. முன்னாலெ கிடைக்காததுபோல இருந்துது. அப்பறம் மகாலிங்கம் பேரைப் போட்டா கிடைக்கும்னு சொன்னா. நான்தான் எங்க இவர்கிட்ட சொன்னேன். அவர் பேரைப் போட்டு வச்சுடுங்கோ. அப்பறம் நம்ம குருஜி பெயருக்கு மாத்திண்டா போச்சுன்னேன். அது கஷ்டம்னு ஆடர் வந்தப்பறம்தான் தெரிஞ்சுது. இது என்னடா கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாப்பல ஆயிட்டுதுன்னு மனசுக்கு சங்கடமா போயிட்டுது. குழந்தையோட ப்யூச்சரை நினைச்சா ஒண்ணுமே புரியலெ' - ன்னு நின்னாங்க.

"'நீங்க சொல்றது சரியாத்தானே இருக்கு. மகாலிங்கம் பூதம் மாதிரிதான் இருக்கான் - ஞானத்திலியும் பேர்லியும் சொல்றேன்' - ன்னு சொன்னேன். இவ இந்தப் பக்கம் நின்னுகிட்டு சிரிச்சுக்கிட்டேயிருந்தா. இவ ஊர் மகிழங்காடு. அதனாலெதான் போல்ருக்கு - இவங்க ஊரு

பொண்டுங்களுக்கு கிச்சுகிச்சு மூட்டவாணாம் - காதறுந்த செருப்பைப் போட்டுகிட்டு தெரு வோட போனாப் போதும் பெவொவன்னு முந்தானைக்குள் சிரிச்சு, கண்ணில தண்ணி வரவரைக்கும் குலுங்குவாங்க. எனக்குப் பயம். நீ போ உள்ரன்னேன். முளிச்சேன். போயிட்டா. தாயாரம்மா இருக்காங்களே - நீங்க கோவிச்சுட்டீங்களோன்னு கேட்டாங்க. 'எனக்கு என்னா கோவம். நான் அரிச்சுவடி வாத்யாரு. மகாலிங்கம் பி.ஏ., எம்.ஏ. வாத்யாரு. உங்களுக்கு அரிச்சுவடியெல்லாம் ஆயிரிச்சு. பெரிய வாத்தியார்கிட்ட போறீங்க. நான் என்னாத்துக்குக் கோச்சுக்கணும். நான் கோச்சுக்கிட்டா, ஊரெல்லாம் வளிச்சிகிட்டு சிரிக்காதோ - ம்'ன்னேன். பேசாம நின்னாங்க. அப்பறம் 'பல்லாவரம் போயிட்டுப் போகணும். நேரமாச்சு. நீங்க ஒண்ணும் வித்யாசமா நெனச்சுக்கப்படாது. எங்க அசட்டுத்தனம்தான். என்னமோ நினைச்சு, எப்படியோ ஆயிடுத்து. சொல்லிட்டுப் போகலாம்னுதான் குழந்தையை அழச்சிண்டு வந்தேன். நமஸ்காரம் பண்ணுடி குழந்தே' - ன்னாங்க. அது பண்ணிச்சு. 'நல்லாருக்கணும். ஊர்வசி, திலோத்தமை, ஞானாம்பா மாதிரியெல்லாம் ஆடணும். உலகம்லாம் சுத்தறதுக்கு சான்ஸ் வந்து பேரும் புகழுமா இருக்கணும்'னு ஆசீர்வாதம் பண்ணினேன். மெதுவாக் கிளம்பினாங்க. இதையெல்லாம் வச்சிட்டுப் போறீங்களேன்னேன் - தட்டு, பத்தாற பணம்லாம் காமிச்சு. உங்களுக்குத்தானே கொண்டு வந்ததுன்னாங்க - வாண்டாம் எடுத்துட்டுப் போயிடுங்க. கேக்கலெ. எடுத்துட்டுப் போறீங்களா இல்லியான்னு குரலை உசத்தினேன். இருக்கட்டும்னு வெளியிலே அடியெடுத்து வச்சாங்க. அவங்க தெருவிலே இறங்கறதுக்குள்ர, தட்டு பத்தாறு பழம் பணம் எல்லாம் அவங்களை முந்திக்கிட்டு தெருவிலேபோய் விழுந்திரிச்சு. என்னை ஒரு பார்வை பார்த்தாங்களே பாப்பம் தாயாரம்மா. எனக்கு திக்கினிச்சு. ஏண்டா அவங்கத்தான் புத்தியில்லாம போயிட்டாங்கன்னா, உனக்கெங்கடா புத்தி போச்சுன்னு உள்ளே ஏதோ சங்கடம் பண்ணிச்சு. அவங்க பார்வையிலே அத்தனை நோவு. எனக்கே வெக்கமாப் போயிரிச்சு. பேசாம தலையைக் குனிஞ்சு உள்ர வந்து பூந்துகிட்டேன். அவங்க எல்லாத்தியும் பொறுக்கி எடுத்துக்கிட்டு போனாங்களாம். ஒண்ணுமே பேசலியாம். எதிர்த்த வீட்டுக்காரங்க சொன்னாங்க. நல்ல வேளையா ஒரு ரிக்ஷாக்காரன் நின்னுக்கிட்டிருந்தானாம். அதிலே ஏறிக்கிட்டுப் போயிட்டாளாம். அன்னிக்கி ராத்திரி ஒரு ஜுரம் வந்திச்சு பாருங்க எனக்கு. நாலஞ்சு தடவை பேத்தக்கூட பேத்துனேனாம். இவ சொன்னா. அவங்க நடந்துகிட்டது தப்பு. அதுக்கு மேலே மன்னிக்க முடியாத தப்பு நான் நடந்துகிட்டது. தெருவிலே பத்து ஜனம் பார்க்கக்கொள்ள, எப்படியிருந்திருக்கும் அவங்களுக்கு! இதான் சேதி. அன்னையிலேர்ந்தே மனசு சரியில்லெ

போங்களேன். ஒரு பாக்கு வெட்டி நேரம் அந்த அம்மா பார்த்தாங்க பாருங்க - ப்பூ இவ்வளவுதானாங்கறாப்பல . . ."

"இதே பேச்சுத்தான் எப்படிப் பார்த்தாங்க எப்படிப் பார்த்தாங்கன்னு, ஓயமாட்டேங்கறாங்க. சரி எனக்குக் கூடத்தான் இருந்திச்சு. அதுக்காக எத்தினி நாள் நான் புலம்பிட்டுக் கிடக்கறதாம்" என்று குறுக்கிட்டாள் மனைவி.

எனக்கு முதுகு ஜில்லிட்டது. முதலில் எதோ அஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தவள், வேலையாவின் நமுட்டுப் பேச்சில் மயங்கி, மனசைக் கொடுத்துக் கேட்கத் தொடங்கிவிட்டேன். ஆபத்து, முழுவதும் கேட்டதும், நானே பச்சைப் பழமும் கல்கண்டும் திராக்ஷைப் பழமும் பணமுமாகத் தெருவில் கிடக்கிறாற்போல ஒரு கண பிரமை. பட்டாபி பிளாஸ்டிக் தட்டாக உருண்டு ஓடி தெருவோரத்தில் விழுகிறாற்போல - தெருவே எங்களை வேடிக்கை பார்க்கிறாற்போல.

அப்போதுதான் முதுகு ஜில்லிட்டது.

கோபாலியின் தலைக்குக் கீழே வேலய்யாவின் உடம்பு.

வேலய்யாவின் நமுட்டுப் பேச்சு மறந்து போய்விட்டது. அதனால் சிரிப்பு வரவில்லை.

என்ன பேசுவதென்றும் வாய் வராமல் உட்கார்ந்திருந்தேன்.

"ரண்டு மூணு நா கழிச்சு வர்றேன். மனசிலெ இருக்கறதெல்லாம் ஒளிஞ்சு ஒருபடியா அடங்கட்டும்" என்றார் வேலய்யா. "இந்த அகம்னு ஒண்ணு இருக்கிறதுனாலெ தானே இந்த சங்கடம் எல்லாம் வருது. நீயும் நான், இவரும் நான், எல்லாரும் நான்னு நெனக்க ஆரமிச்சிருந்தா இந்த மாதிரி எல்லாம் நிஷ்டூரமா நடந்திருக்க வந்திருக்காதில்ல? அப்படின்னு ஒரு நாய் வைராக்யம். ஆனா மத்த சமயத்திலே, இப்படி செய்துட்டாங்க பார்த்தியான்னு ஒரு வேதனை. மகாலிங்கம் பயலுக்கு என்ன தெரியும்? குழையடிச்சு அடிச்சே இடிச்சுத் தள்ளிக்கிட்டு முன்னாலெ வந்து நிக்கறான். சில சமயம் நெனச்சு பாக்கறப்ப என்னாங்கிறீங்க. உலகத்திலே நெசமான ஞானம் இல்லாத்தினாலெதான் இதெல்லாம் நடக்குது. எங்கேயோ வந்தான் - ஜவந்திவனம் கோயில்லெ உண்டக்கட்டி வாங்கித் தின்னுகிட்டிருந்தான். அவன் சித்திக்கு ஜவந்திநாதர் கோயில்லெ போட்டுக் கட்டிருந்திச்சு. கூட ஜால்ரா போட்டுக்கிட்டே நிப்பான் -

இவ்வளுண்டுப் பயலா. அப்பறம் அந்த சித்தி செத்துப் போயிட்டா அம்மை போட்டி. கோவில் நாயனக்கார்கிட்டவே பாட்டுச் சொல்லிக்கிறேன் டாய்யான்னு என்னமோ பண்ணிக்கிட்டிருந்தான். கோயில்லேயே சாப்பாடு. அப்பறம் இதே வீட்டுக்கு வந்து நின்னான். அப்பல்லாம் இந்த சட்டை பொட்டெல்லாம் கிடையாது. நட்டுவாங்கம் பண்றேன்னான். ரண்டுபேர் கிட்டகூட சொன்னேன். ஆளுக்குத் தகுந்தாப்பல பேசுவான். தப்புன்னு யாராவது பெரிய மனுசன் சொன்னா, உனக்கென்னாய்யா தெரியும்னு அடிச்சுச் சொல்ல மாட்டான். ஆமாம், நீங்க சொல்றது சரிதான் எப்படிக் கண்டுப்பிடிச்சிங்கன்னு சரியாயிருக்கிறதையே தப்பா மாத்திடுவான். அப்பதானே, நல்ல கொணம், சொன்னாக் கேட்டுக்கறாருன்னு அவங்களுக்கு உச்சி குளுந்து போகும். இப்படியே ஆடி ஆடி பாடிப் பாடி சீமைக்கெல்லாம் போய்ட்டு வந்துட்டான். அவன் பொறந்த வேளை, அவன் புடிச்ச கொம்பு . . ."

மறுபடியும் எனக்கு அஸ்வாரஸ்யம். இனி இந்தப் புலம்பலைக் கேட்க முடியாது. என் புலம்பலுக்குப் போட்டியாக அவர் புலம்புவது போலிருக்கிறது.

"சரி, ரண்டு மூணு நாள் கழிச்சே வாங்க" என்றேன்.

"ஐயா ஊர்லெ இருக்காங்கள்ள?"

"இன்னிக்கி வந்திருக்கணும். நாலஞ்சு நாளாச்சு, ஊரில் இல்லெ."

"அதானே பார்த்தேன். என்ன இப்படி சொல்லாம கொள்ளாம வந்திருக்கிங்களேன்னு. என்னடா அவருதான் இல்லேன்னா, இவனும் வர்ற சோடா தெரியலியேன்னு வந்தீங்க. நான் ஒரு பாட்டம் எம் அவுதியைச் சொல்லியாச்சு. நான் யார்கிட்டவாவது சொல்லிக்கணும்ல. பிரியப்பட்டவங்கள்ட்டதானே சொல்லிக்கணும்."

வேலய்யா சொல்லியும் கேட்கவில்லை. பஸ்ஸில் ஏற்றி விடுவதற்காக எழுந்து வந்தார்.

பஸ்ஸில் எதிர் சீட்டிலும் முன் சீட்டிலும் நாலைந்து பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் எந்தெந்த நன்றியைக் கொலை செய்திருப்பார்கள் என்று கற்பனை செய்துசொண்டே போனேன்.

வீடு திரும்பும்போது இருட்டுகிற சமயம்.

கதவைத் திறந்து மாடியேறி விளக்கைப் போட்டதும், பச்சையப்பன் பின் ஜன்னலில் தெரிந்தான்.

"ஐயா வந்தாங்க - மத்யானம். மணியடிச்சுகிட்டேயிருந்தது. யாரோ ஏதோன்னு இருந்தேன். ஐயா கொல்லைப் பக்கத்தாலே படி ஏறி வந்தாங்க. எங்கடா அம்மாள்னாங்க. அப்பவே போயிட்டாங்க. வார நேரம்தான்னேன். காமணி நின்னுட்டுப் போயிட்டாங்க. அப்பறம் சாயங்காலம் நாலு மணிக்கு வந்தாங்க. இன்னும் வல்லியேன்னேன். அந்தப் பையனும் இல்லீங்களா, போயிட்டாங்க."

"பையன்?"

"பையன் அரை மணி முன்னாலெ வந்தாரு. காலமே போனவங்களா வல்லேன்னு உடனே புஸ்தகம் எல்லாம் போட்டுட்டுப் போனாரு."

"ஏதாவது சொன்னாரா?"

"யாரு?"

"பையன்."

"இல்லியே."

எட்டு மணிக்குமேல் வந்தான் பட்டாபி.

"வந்தாச்சா - அப்பாடா" என்று சிரித்துக்கொண்டே வந்தான். அந்த மலர்ச்சியைப் பார்த்ததும், அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. நன்றியிலிருந்து காப்பாற்று என்று அவன் கைக்குள் ஒண்டிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

"எங்க போயிட்டேள்?" என்றான் பட்டாபி. வெகுநேர இருளுக்குப் பிறகுதான் முகம் மலர்ந்திருக்க வேண்டும். அப்படித்தான் எனக்குத் தோன்றிற்று. அவன் காலில் ஒரு பரபரப்பு - கையில் பரபரப்பு. நிற்கிற நிற்றலில் தரையில் கால் கொள்ளாத உளைச்சல்.

"எங்கெங்கேயோ போயிருந்தேன்."

"சொல்லிட்டுப் போனா என்னவாம்? நான் உங்க சிநேகிதா வீட்டுக்கெல்லாம் போயிட்டு வரேன்."

பச்சையப்பனுக்கு எதிரில் அவன் நீ, உன் என்றெல்லாம் பேசமாட்டான் - கோபாலியின் எதிரில் போல, சில நண்பர்களின் எதிரில் போல.

"ஏன் இப்படிப் பாக்கிறே?" என்றேன்.

"ஆமா. காலையிலே போனவங்க வல்லேன்னா, கவலைப்பட்டுப் போயிட்டாங்க" என்றான் பச்சையப்பன்.

"எங்கெல்லாம் தேடினே? மயிலாப்பூர் குளம், ரயில் தண்டவாளம், லைட்அவுஸ் கீழேல்லாம் தேடிவிட்டு வறியா?"

பச்சையப்பன் சிரித்தான். "உங்களுக்கு வேடிக்கையா இருக்கு. நானும் பஸ் ஸ்டாப்பிலே நின்னு நின்னு எத்தினி தடவை பாத்தேன்! காலையிலேர்ந்து அஞ்சாறு பேர் வந்து பெல்லடிச்சுக்கிட்டே யிருந்தாங்க."

"வாசல்தான் பூட்டியிருந்தேனே."

"நான் பின்னாலெ இருக்கும்னு தெரியுமே . . . சரி. நீ போய் சொல்லிட்டுவா ஐயாட்ட, நான் வந்தாச்சுன்னு."

பச்சையப்பன் கிளம்பினான்.

எனக்குப் பட்டாபியைக் கேட்கவேண்டும் என்று ஆசை.

பச்சையப்பன் இறங்கி தெருவில் போகிறவரை பார்த்துக்கொண்டே நின்றான் பட்டாபி.

"நான் என்னமோ உளறிட்டுப் போனேனேன்னு பயமாயிருந்துது எனக்கு. அதுக்குத்தான் இன்னிக்கி சுருக்க வந்தேன். மூணு மணிக்கே வந்துட்டேன். பூட்டியிருந்தது. கொல்லைப்பக்கத்தால வந்தேன். பச்சையப்பனும் இல்லெ. அரைமணி நின்னு பார்த்தேன். உன்னோட சிநேகிதர் வீட்டுக்கெல்லாம் போயிட்டு வந்தேன். முன்னாலெ கோபாலி மாமாவாத்திலே போய்ப் பார்த்தேன். அவர் வந்து பார்த்துட்டுப் போனாராம். இனிமே எங்காவது போறதுன்னா கொல்லை எரப்பிலே ஒரு கடுதாசிலெ எழுதி வச்சுட்டுப் போனாத்தான் நல்லது."

"ஏன்?"

"ஏன்னா, கவலையாயிருக்கு."

"உனக்கென்ன கவலை? உனக்குத்தான் இங்கே இருக்கப் பிடிக்கலெ. ஆறுகுளம்னா நீஞ்சத்தெரியம்கறே. இனிமே நாளைக்கு, விஷத்தை சாப்பிடலாம்னா, கழுத்துக்குள்ள நீலகண்டன் மாதிரி மச்சம் இருக்கு. அதனாலெ விஷமும் பிரயோசனப்படாதுன்னு சொல்லுவே. நெருப்பிலே கொதிக்கலாம்னா, சமையக்காரருக்குச் சித்தாளா, கோட்டையடுப்புகிட்ட நின்னு நின்னு உடம்பே பயர்ப் போயிடுத்துன்னு சொல்லுவே . . ."

நான் பேசிக்கொண்டே நின்றேன்.

பட்டாபி காதில் போட்டுக்கொள்ளவில்லை. சமையலறைக்குப் போய்விட்டான். குக்கரை எடுத்து நீர் நிரப்பி, அடுப்பை மூட்டி, அதன்மேல் வைத்தான். இன்னொரு அடுப்பில் தண்ணீரை வைத்து பருப்பைப் போட்டான். கத்தியை எடுத்து கறியை நறுக்க உட்கார்ந்துகொண்டான்.

கழுகுக் கத்தலுக்கும் புல்லாங்குழலுக்கும் வித்தியாசம் தெரியாதவன். பாட்டுக்கும் குழந்தை அழுகைக்கும் பேதம் தெரியாதவன். ஸ்வரம் பாடுவதற்கும் டைப் அடிப்பதற்கும் வித்தியாசம் தெரியாதவன்.

அந்த நான்கு இரவுகள் மட்டுமில்லை. நான்கு வருஷம், பத்து வருஷம், பதினைந்து வருஷமாகப் பார்த்திருக்கிறேன்.

அவன் மனது கழுகாகக் கத்திற்று. டைப்பாக அடித்தது. சைக்கிள் மணியாக அடித்தது. நடனமாடாமல், சுமையாகச் சுமந்தது. கோபாலியின் வார்த்தைகள் அவனுக்குப் பேசத் தெரியாது. ஆனால் அவன் வந்த பிறகு நான் சமைத்தது ஏதோ சில நாளைக்குத்தான். காபி போட்டது சிலநாள்தான். ஜுரம் என்று படுத்தால் பக்கத்தில விட்டு நகரமாட்டான். எங்காவது நடனமாடிவிட்டு வந்தால், வாசல் கதவைத் திறந்து - கோபாலி கூட வராவிட்டால் - தாழிட்டதும், அப்படியே மாடிப்படி ஏறவிடாமல் தூக்கிக்கொண்டு மேலே கொண்டுவந்துவிடுவான்.

கோபாலி மாதிரியே அவனுக்கும் ஒருநாள் தெரியத்தான் தெரிந்தது - கோபாலி இருக்கிற இடத்தில், அவன் இருக்கிற இடத்தில், ஒரு மூன்றாவது ஆள், நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, இருபதாவது, முப்பதாவது, நாற்பதாவது மனிதர் ஒருவர் இருந்திருக்கிறார் என்று. ஆனால் கோபாலிமாதிரி அவன் சிணுங்கவில்லை. முகத்தைச் சுளிக்கவில்லை. கோபித்துக்கொண்டு ஒரு மாசம் தலைகாட்டாமல் இருக்கவில்லை. பச்சையப்பன் இல்லாதபோது காச்சுமுச்சென்று

கத்தவில்லை. (நானும் ராமன், கிருஷ்ணன் படத்தை கோபாலிக்கு முன் செய்ததுபோல் சுவரி லிருந்து இழுத்துக் கீழே தள்ளவில்லை.) கச்சேரிக்குப் போன இடத்தில் அம்மணியைப் பற்றி யாராவது விசாரித்தால் "சௌக்யமாயிருக்கு. பூனை வெளியிலே போயிட்டா எலி சௌக்யமில்லாமல் சந்தோஷமா இல்லாமல் எப்படி இருக்கும்" என்று அவன் சொன்னதில்லை.

அவன் நாக்கில் இல்லை நான். அவன் கையில் செய்கிற வேலையில் இருந்தேன். காலால் ஓடுகிற ஓட்டத்தில் இருந்தேன். அவன் பண்ணுகிற சமையலின் ருசியில் இருந்தேன். சுந்தரம் மாதிரி நலுக்கு மினுக்கு ஆசாமிகளிடம் அவன் காட்டுகிற மௌன முரட்டுத்தனத்தில் இருந்தேன். இன்புளூயன்ஸா வந்து நான் கிடந்தால், என்னமோ நான் சாகக் கிடக்கிற மாதிரி அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு மாட்டு முழி நிறைய கிலேசத்தைச் சுமந்து எங்கோ சூன்யத்தைப் பார்த்து உட்கார்ந்திருக்கிற வெறிப்பில் இருந்தேன். அவன் வாங்கிக்கொண்டு வருகின்ற பூவில் இருந்தேன். என் புடவைகளை மடித்துவைக்கிற கரிசனத்திலும் நறுவிசிலும் இருந்தேன்.

# 4

கோபாலி, குழந்தை மாதிரி முகத்தைத் தூக்கிக்கொண்டு வரப்போகிறதோ என்று கவலை. அது வரும் போதெல்லாம் வீட்டில் இருக்க வேண்டும். இல்லாத சில நாட்களில் அதைச் சிரிக்க வைக்க ஐந்தாறு மணி நேரம் ஆகும். அப்பொழுதுகூட உதட்டால், வாயால் சிரிக்காது. கையால் சிரிக்கும்.

என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், பந்துவராளியைக் கள்ளக் குரலில் பாடும். நான் கரைந்துபோய், என் சிரிப்புக் கவலையை எல்லாம் பிரமிப்பாகக் கரைத்துக்கொள்ள வேண்டும் என்று அது ஆசைப்படுவது போலிருக்கும். நானும் கரைவதில்லை என்று பிடிவாதம் பிடித்துப் பார்ப்பதுண்டு. முடிவதில்லை. கரைந்து உருகி அதன் குரலோடு குரலாக அழிந்துபோகத்தான் முடியும். அந்த சமயம் கோபாலி, பட்டாபி - ஒன்றும் இருப்பதில்லை. இன்றும் அந்தமாதிரிதான் ஆகப்போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கரைவதற்கு முன்னால் ஒரு ஜாமம், இரண்டு ஜாமமாவது உம்மணா மூஞ்சியாக, கோபமும் தாபமுமாக இனிமேல் முகத்தில் விழிப்ப தில்லை என்று ஒரு வெறியாகத் தள்ளியாக வேண்டும்.

ஆனால் ஒரு கவலையும் இல்லை.

"புதுசா ஏதாவது பாடம் ஆரம்பிக்க வாண்டாம் வேலய்யாகிட்ட. ஊருக்குப் போகணும். மூணு நாலு வாரம் ஆகும் திரும்பி வர" என்று நான் வேலய்யா வீட்டுக்குப் போன செய்தியைச் சொன்னவுடனே சொல்லிற்று கோபாலி.

"டில்லியிலே ரண்டு கச்சேரி. அப்பறம் காசி, கல்கத்தா, நாகபுரி, பம்பாய். ஒரு மாசம் ஆகும். சிஷ்யனை அழச்சிண்டு போகலெ. சிஷ்யன், கணக்குப்பிள்ளெ - இன்னும் எப்படியெல்லாம் இருக்க முடியுமோ என்னாலெ - நாளன்னிக்கிக் கிராண்ட் ட்ரங்கில் டிக்கட் வாங்கியிருக்கு. எலே பட்டாபி . . ."

பட்டாபி ஓடிவந்தான்.

"ஒரு மாசம் கச்சேரி டூர் இருக்கு. மாமியும் வரா. சுவரைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்கப்படாது. தினமும் வீட்டுக்குப் போயி வந்திருக்கிற லெட்டர்லாம் பார்த்து, அவசரமா இருந்தா தந்தி குடுக்கணும். அம்மணி ஊர்லெ இல்லியேன்னு ஆகாசத்தைப் பார்த்துண்டு உட்கார்ந்திண்டிருக்கப்படாது - சமைச்சுப் போட ஆள் இல்லியேன்னு."

"சரி."

பட்டாபியின் மாட்டு முழியைப் பார்த்தேன். பயமா கோபமா என்று தெரியவில்லை. இரண்டும் அடுத்தடுத்து மின்னிறாற்போலிருந்தது. கடைசியில் தெரிந்தது புன்சிரிப்புத்தான். கீழ்ப் படிகிற ஹாஸ்ய அடக்கம்.

மறுநாள் பட்டாபிதான் புடவைகளை எடுத்து இஸ்திரி போட்டு, மடித்து பெட்டியில் வைத்தாள். மூன்று பெட்டி சாமான்களை ஒரு பெட்டியில் அடுக்கி வைத்தான் - ஜவந்திப் பூ மாதிரி இருந்தது. இரண்டு மூன்று சாமான்களை வெளியே எடுத்தால், அவன்தான் அதை வைக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னொரு பெட்டி வேண்டும் போலிருந்தது. எப்படி அவனைப் பாராட்டுகிறது? மறுபடியும் கலைத்தேன். அட்சயப் பாத்திரம் போல புடவையும், ரவிக்கையும், புத்தகமும், லோஷனும், பவுடரும், சந்தனமும், ஜவ்வாதும், சீப்பும், நோட்டும், பிரஷ்ஷும், மருந்துமாக வந்துகொண்டிருந்தது. "இந்த டயரி வெளியிலே இருக்கணும்" என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்கிற மாதிரி சொன்னேன்.

"பரவால்லெ" என்று ஒரு கால் மணிக்குள், பிய்த்துப் போட்ட பூவை பழைய ஜவந்திப் பூவாகக் கட்டி, பெட்டியை மூடி, "பூட்டு எங்கே?" என்றான் பட்டாபி.

பூட்டி என் கையில் சாவியைக் கொடுத்துவிட்டு, கோபாலி மாமாவைப் பார்க்க விரைந்தான். அங்கும் இதே வேலை போலிருக்கிறது. காலையில்தான் ஆளைப் பார்க்க முடிந்தது.

கோபாலிக்குக் கோபம் - கூபே கிடைக்கவில்லையே என்று. ஆறு பேர்கள் உட்கார்கிற ப - னா வண்டி.

ரிசர்வேஷன் பட்டியலைப் பார்த்தேன். நம் ஊர்ப் பேராக இல்லை.

"வாயை விட்டுப் பாடக்கூட முடியாது. முனகக்கூட முடியாது.

'கூபே'யாப் போடச் சொல்லு. அஞ்சு பத்துன்னு அழுதாலும் பரவால்லெ,

போடச் சொல்லுடான்னேன். இப்படி சந்தை மடத்திலெ கொண்டு போட்டு வச்சிருக்கான். உன்னை அழச்சிண்டு போகலியேன்னு கோபம் உனக்கு - அதானே" என்று ஏற்றிவிட வந்த சிஷ்யப் பையனை விழியால் எரித்துக்கொண்டிருந்தது கோபாலி.

மிஸ்டர் எல். பென்னட்.

மிஸஸ் பென்னட்.

மிஸ் பென்னட்.

மிஸ்டர் கோபாலி

மிஸஸ் அம்மணி

மிஸ்டர் கே. மாதுர்.

இந்த பட்டியலை கோபாலிக்கு உரக்கப் படித்துச் சொன்னேன்.

வண்டி புறப்பட இருபது நிமிஷம் இருக்கும்போது பட்டியல் மனித வடிவம் கொண்டுவிட்டது.

மூன்று வெள்ளை மனிதர்கள். கணவன், மனைவி, மூக்குக் கண்ணாடி போட்ட ஏழு வயதுப் பெண்.

குட்டையாக மிஸ்டர் மாதுர்.

எல்லோரும் டில்லிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

கூடூர் போகிறவரையில் பேச்சு மூச்சு இல்லை.

கோபாலி 'கூப்பே'யை நினைத்து, தொலைவில் தெரியும் பனை, தென்னைகளைப் பார்த்துக்கொண்டிருந்தது. மாதுர் பெட்டியைத் திறந்து ஏதோ 'பைல்'களைப் பார்த்துக்கொண்டிருந்தார். மிஸ்டர் பென்னட்டின் குடும்பம் கோபாலியின் குடுமியையும் ப்ளூஜாகர் கடுக்கனையும் மூக்குப்பொடி நிற அரைச்கைச் சட்டையையும், மணிக்கட்டில் நழுவினாற்போல் நெளிந்திருந்த தங்கத் தோடாவையும் மயில்கண் ஜரிகை வேட்டியையும் பார்த்துக்கொண்டிருந்தது. மிஸ் பென்னட் அடிக்கடி தாயார் மேல் சாய்ந்து காதுக்குள் ஏதோ சிசுகிசுவென்று

சொல்லிற்று - கோபாலியின் நகைகளைப் பற்றித்தான் இருக்க வேண்டும் என்று அதன் பார்வையைப் பார்த்து ஊகிக்க முடிந்தது.

இரண்டு மூன்று தடவை கோபாலி தலையை அவிழ்த்து முடிந்துகொண்டதைப் பார்த்து, மிஸ் பென்னட் அம்மாவின் காதண்டை போயிற்று.

வெளியே பார்க்கிறது அலுத்துப் போனதும், கோபாலி மிஸஸ் பென்னெட்டை இரண்டு மூன்று தடவை கண்ணாலேயே சாப்பிட்டுக்கொண்டிருந்தது. ஒரு தடவை காலைச் சாப்பிட்டது. மறுதடவை கையிரண்டையும் சாப்பிடுவது போலிருந்தது.

"ஏன் இப்படி வெள்ளையா இருக்கா?"

"எப்படி வெள்ளையா ஆக முடியும்?"

"நாமகூட அந்த ஊர்லெ போய் ஒரு அஞ்சாறு வருஷம் இருந்தா இப்படி ஆயிட முடியுமோ?"

"வெண்ணெய், பன் ரொட்டி - இதுகளையே சாப்பிடறதி னாலியோ!"

"நான் என்னமோ இவளை அடிக்கடி பார்க்கறேனேன்னு கோச்சுக்காதே. உன் கால்லெ கட்டி அடிக்க முடியாது இவளை. நான் தெனச்சுதெல்லாம் வேற ஒண்ணுமில்லெ. அப்சரஸ்ஸுன்னு நம்ம புஸ்தகங்கள்ளாம் எழுதியிருக்காளே - அவாள்ளாம் உம் மாதிரி இருப்பாளா, இவ மாதிரி இருப்பாளான்னு யோசிச்சிண் டிருந்தேன். உன்னைப் பார்த்தாப் பருப்புஞ் சாதம் மாதிரி இருக்கு. இவளைப் பார்த்தா மைதா மா ப்ரெட்டைப் புட்டதுமாதிரி இருக்கு."

இப்படி கோபாலி தானே கேள்வி கேட்டுக்கொண்டு, பதிலும் சொல்லிக்கொண்டது. நான் வாயைத் திறக்கவில்லை.

கூடூர் தாண்டியதும், "இப்ப என்ன ஆயிடுத்து? ஏன் இப்படி எல்லாரும் பேசாம உட்கார்ந்துண்டிருக்கேள்? இந்தப் பையிலே டப்பா இருக்கு. அதிலெ மைசூர் பாகு பண்ணி வச்சிருக்கா குஞ்சாளி - அதை எடுத்து ஆளுக்கு ஒண்ணாக் கொடுத்துட்டு ஆரம்பி. யாரு இப்படி துக்கம் காத்திண்டு உட்கார்ந்திருக்கிறது, ரண்டு நாளைக்கு" என்றது கோபாலி.

டப்பாவை எடுத்தேன். திறந்து ஒரு மைசூர் பாக்கை எடுத்து, அந்தக்

குழந்தையிடம் நீட்டினேன். மற்றவர்களுக்கும் ஒவ்வொரு துண்டாகப் போயிற்று.

இரண்டு நிமிஷத்தில் களை கட்டிவிட்டது . . .

தாங்க்யூ, தாங்க்யூ - ஒரு இருபது தடவை.

வெள்ளைப் பெரியவர் லேசாகக் கடித்து ஜப் ஜப் ஜப் என்று நாக்கில் எடை போட்டுவிட்டு 'ஒண்டர்ஃஃபுல்' என்றார்.

ஒரே ஒண்டரும் டிலைட்ஃஃபுல்லுமாக ஒரு ஐந்து நிமிஷம்.

"எப்படி செய்கிறது?" என்று கேட்டாள், வெள்ளை அம்மாள்.

சொல்லிவிட்டு, "இது இவருக்கு ரொம்ப பிடித்த பட்சணம்.

இது இல்லாவிட்டால் லட்சக்கணக்கான பேருக்கு வாழ்க்கை யிலேயே அரிதாகக் கிடைக்கிற சில கணங்கள் முற்றிலும் தவறிவிடும்."

"உதாரணமாக?" என்றாற்போல் பார்த்தாள் அந்த அம்மாள். மாதுரும் பென்னட்டும் அப்படியே பார்த்தார்கள்.

"இவர் மாதிரி தென்னாட்டிலேயே ஒரு நூறு வருஷமாக ஒரு சங்கீதக் கலைஞர் பிறந்ததிலலை. இனிமேலும் நூறு வருஷத்திற்கும் பிறக்கமாட்டார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் கொண்ட சபையை அப்படியே சுருட்டி மயக்கி வைத்திருப்பார் - மிஸ்டர் கோபாலி."

"ஓ."

அறிமுகப்படலம் கைக்குலுக்கலில் தொடங்கிற்று.

பென்னெட் இங்கிலாந்தில் ஏற்றுமதி இறக்குமதி ஸ்தாபனத் தில் வேலை செய்கிறாராம். நாலைந்து வருஷத்துக்கு ஒரு தடவை இந்தியா வருவாராம் - ரமணரிஷி, அரவிந்தர், ராமகிருஷ்ண மடம், ஆனந்தமயி, நித்யானந்தா, ஞானானந்தா - இன்னும் ஏழெட்டு பேர்கள் சொன்னார் - எல்லோரையும் ஒரு தடவை கோரிக்கொண்டு போவாராம். இந்தத் தடவைதான் மனைவி யோடும் பெண்ணோடும் வந்திருக்கிறாராம். "ரமணரும் அரவிந்தரும் சமாதியாகிவிட்டார்கள். இந்தத் தடவை இந்தப் பக்கம் வரவே பிடிக்கவில்லை. இருந்தாலும் பழைய ஞாபகங்களில் சற்று

நனைந்துவிட்டுப் போகலாம்போலிருந்தது" என்றார்.

"மிஸஸ் கோபாலி, நீங்கள் அரவிந்தரைப் பார்த்திருக்கிறீர்களா?"

"அரவிந்தரையும் பார்த்ததில்லை. ரமணரையும் பார்த்ததில்லை. அதற்கு முன்னால், என்னுடைய மிஸ்டரையும் பார்த்தில்லை."

" . . ?"

"எனக்கு மிஸ்டர் கிடையாது."

" . . ."

"தவறிப்போய் மிஸஸ் அம்மணி என்று போட்டிருக்கிறார்கள், சம்பார்ட்மெண்ட் சார்ட்டில்."

"ஓ! எப்படிப் போட முடியும்?"

"ஒரு சமயம் நான் கோபாலியோட மிஸ்ட்ரஸ் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும்."

". . ."

"அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டதோ என்னவோ. கலியாணம் இல்லாமலேயே மனைவியாக இருக்கிறாளே என்று வெறும் மிஸஸ் போட்டுவைத்திருக்கிறார்கள் - யார் மிஸஸ் என்று போடாமல்."

பென்னெட்டுக்கு, மேலெல்லாம் காற்றில் மிதந்து வந்த நாலைந்து மயிரிழைகள் ஒட்டிக்கொண்டாற்போல இருந்திருக்க வேண்டும். இதெல்லாம் யார் கேட்டார்கள் என்று சொல்வது போல் ஒரு தடவை பார்த்தார். அவர் மனைவி சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். பெண்ணுக்கு இன்னும் புரியாதது போல் தோன்றிற்று.

"நீங்கள் என் காலை வாரிவிடவில்லை என்று நம்புகிறேன் . . ."

"இல்லவே இல்லை. ஏன் என்னைப் பார்த்தால் மிஸஸ் கோபாலி மாதிரி இருக்கிறதா?"

"எப்படி இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதேன்று தெரியவில்லை

எனக்கு. ஆனால் . . ."

அவர் நின்றுவிட்டார். வார்த்தைக்காக திண்டாடுவது போலிருந்தது.

"ஆனால் . . ?" என்று தூண்டினேன்.

இரண்டு கைகளையும் விரித்துத் தோளை உயர்த்தித் தணித்துக்கொண்டார். (வெள்ளைக்காரர்கள் நாம் 'என்னமோ' என்று வாயால் சொல்வதை இப்படித் தோளால் சொல்வார்களாம், படித்திருக்கிறேன். என்னுடைய பி.எச்.டி. சிநேகிதனும் இன்னும் இங்கிலீஷ் நாவல் படிக்கிற சில நண்பர்களும் மதராஸில் இப்படிச் செய்வதைப் பார்த்திருக்கிறேன்.)

"தோளை அப்படிச் செய்துவிட்டால் போதுமா? மிஸஸ் பென்னெட், நீங்கள் சொல்லுங்கள்" என்று திரும்பினேன்.

"எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் இந்த மாதிரி ஒரு சம்பாஷணையை இதுவரை கேட்டதில்லை" என்று லேசாகச் சிரித்தாள்.

"என்ன அம்மணி, நீங்க மாத்திரம் சிரிச்சுக்கறேளே. எனக்குந் தான் கொஞ்சம் சொல்லேன்" என்று கோபாலி குறுக்கிட்டது.

"என்னை அவர் மிஸஸ் கோபாலின்னு கூப்பிட்டார். அதிலேர்ந்து பிடிச்சுது. இவனை நான் விடப்போறதில்லை. இன்னிக்கி நெஜத்தைச் சொன்னேன். ஒரு க்ஷணம் தலையிலே இடி விழுந்தாற்போல பார்த்தான். அப்பறம் நான் என்னமோ வேணும்னு அவனைக் காலைவாரி விடறதுக்காக வேடிக்கை பண்றேன்னு சொல்றான்."

"நீ என்ன நெஜத்தைச் சொன்னே?"

"இந்த மாதிரி கலியாணம் பண்ணிக்காமலே இவரோட வீட்டுக்காரியா இருக்கேன்னு."

"யாரானும் ஒருத்தரோட மிஸஸ்ஸா இருந்தான்னா, குறிப்பிட்டு ஒருத்தர் பேரைப் போடலாம்னு சொல்லலியா?"

"என்னது!"

"நீ என்னையும் கோச்சுக்காதே, நான் இன்னும் ஒரு நெஜத்தைச் சேர்த்துச்

சொன்னதுக்காக."

"அப்பன்னா, என்னை ஏன் கட்டின பெண்டாட்டி மாதிரி அழச்சிண்டு போகணுமாம்."

"இத பாரு. நீ இப்ப என்னோட சண்டைக்கு நிக்காதே. நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்காதது வாஸ்தவம். அதுவரைக்கும் நீ உன் இஷ்டப்படி இருக்கறதும் நியாயம்தான். நான் இப்ப கோச்சுண்டேனா? நீ ஏன் ஒண்ணுமே நடக்காததுமே அதிந்து போறே?"

"உங்களுக்கு உளவு சொல்றவா யாரு? பச்சையப்பனா, பட்டாபியான்னு புரியலியே."

"இப்ப அந்தப் பேச்சு எங்க வந்துது? நீ அவாளோடு பேசிண்டிரு. நடுவிலெ நடுவிலெ எனக்கும் கொஞ்சம் சொன்னாப் போறும். அவ்வளவுதானே நானும் கேட்டது. எனக்கோ பாஷை புரியலெ. நீங்க மாத்திரம் சிரிச்சுண்டேயிருந்தா? நீ சொல்லு அவர்கிட்ட. நீ ஏன் அவரைப் போய் அவன் அவன்கிறே? அவரும் வயசானவராத்தானே இருக்கார் எம்மாதிரி. என்னைவிட ரண்டுவயசு கூடக்கூட இருப்பர் போல்ருக்கே . . . அது சரி. நீ அவர்கிட்ட சொல்லு. இந்த மாதிரி எங்க ஊர்லாம் உங்க ஊர் மாதிரி இல்லெ, பொண்ணு இருக்க, பொண்கட்றது உண்டுன்னு சொல்லு. என்ன சொல்றார்னு பார்ப்பம்."

பென்னெட் புன்சிரிப்புடன் காத்துக்கொண்டிருந்தார்.

எனக்கு மேலே எப்படித் தொடங்குவது என்று புரியவில்லை.

கோபாலிக்கு இவ்வளவு தூரம் தெரியுமா?

எப்படி என்று கேட்டுக்கொண்டிருந்ததில், மனசு இரண்டாகப் பிரிந்திருந்தது.

"நீங்களே சொல்லலாம் . . . நான் இங்கிலீஷிலெ மாத்திச் சொல்றேன் அவாளுக்கு."

"நெஜமாவா?"

"ஆமாம்."

ஏதோ பாடப் போவதுபோல லேசாகக் கனைத்துக்கொண்டது கோபாலி.

"யூ ஸீ" என்று இங்கிலீஷில் ஆரம்பித்தது. பிறகு தமிழில் சொல்லிற்று. "எங்க ஊர்லெ ரண்டுதாரம், மூணு, நாலுகூட கலியாணம் பண்ணிக்கலாம். மகா ராஜாக்கள்ளாம், நாப்பது அம்பதுன்னுகூட கலியாணம் பண்ணிக்கிற வழக்கம் உண்டு. ஆனா அது அவாவா வசதியைப் பொறுத்துது. தசரத மகாராஜாவுக்கு முன்னூத்தி முப்பத்திமூணு பொண்டாட்டியிருந்தா. ஆனா பட்ட மகிஷின்னு ஒருத்தி இருந்தா."

"அந்தக் கதை தெரியும் எனக்கு" என்றார் பென்னெட்.

"கதை தெரியும். நான் சொல்றது உள் தந்திரம். பட்ட மகிஷி சிம்மாசனத்திலெ உட்கார்த்தி வச்சுக்க. ஆனா ஆசையா வச்சுக்க ஒரு கைகேயியை கலியாணம் பண்ணிண்டார். அந்த ஆசை கடைசியிலே அவர் உசிரைக் குடிச்சுது. இப்படிப் பண்ணிப்பிட்டா பார்த்தியான்னு அந்த ஆசை மனைவி பேர்லெ கோபம் வந்துதே ஒழிய, மனுஷனுக்கு வெறுப்பு வந்துதோ, எனக்குத் தெரியலெ ஸ்வாமி, இப்படி வச்சுண்டிருந்தோம், இப்படி கல்லைத் தூக்கிப் போட்டுட்டா பாத்தியான்னு ஆத்திரம், சோகம் வந்துது. சீச்சீன்னு உதறினார் மனுஷன். ஸப்போஸ், இல்லெ பிராணநாதா, ஏதோ தவறிப்போய் சொல்லிப்ட்டேன், அதெல்லாம் ராமன் காட்டுக்கும் போகவேண்டாம், பரதனுக்கு பட்டாபிஷேகமும் வாண்டாம்னு சொல்லியிருக்கட்டும் அந்த அம்மா! அப்படியா சேதி, இந்தா பிடி இன்னும் ரண்டு வரம்னு நீட்டிருப்பர் மனுஷன். ஒரு தடவை சூடுபட்டதுக்காக, அவளை வெரட்டிருப்பரா? பொம்மனாட்டி ஒவ்வொருத்தர்கிட்ட ஒவ்வொண்ணு இருக்கு. இப்ப என் ஆமடையாளப் பார்த்தா ஆஞ்சனேயர் மாதிரி இருப்ப. நான் அப்படியே ஏத்துனூட்டேன். ஆஞ்சநேனயருக்கு ராமர்கிட்ட எவ்வளவு பக்தியோ அவ்வளவு - ஆஞ்சநேயரைத் தெரியுமோ உங்களுக்கு?"

"தெரியும். ராமாயணம் முழுக்க வாசிச்சிருக்கேன் - மொழிபெயர்ப்பிலே. ஆனா, உங்க . . . சரி, மேலே சொல்லுங்கள்."

"என்ன, என்னமோ கேட்க ஆரமிச்சு நிறுத்திவிட்டேள்."

"தயவுசெய்து நீங்கள் அவரிடம் சொல்லாதீர்கள்; தன்னுடைய மனைவியை ஒரு அனுமானுக்கு எப்படி ஒருவர் ஒப்பிட முடியும்? எனக்கு அது என்னமோ போலிருக்கிறதே!"

"நான் சொல்லலாம். எப்ப அவர் அப்படிச் சொன்னாரோ, அப்பறம் என்ன ஒளிமறைவு? அவர் தப்புன்னு ஒப்புக்கட்டும். இல்லாட்டா, காரணம் சொல்லட்டும்" என்று கோபாலியிடமும் சொல்லிவிட்டேன்.

கோபாலி சொல்லிற்று, "உங்க ஆமடையா அழகா இருக்கா . . . அதனாலெ உங்களுக்கு என் மாதிரி சொல்லிக்க சான்ஸ் இல்லே. அம்மணி, சொல்லு. இவ ரொம்ப அழகா இருக்கான்னு நான் நினைக்கிறேன்னு சொல்லு."

"ஓ ஓ ஓ ஓ" என்று பெரிதாக வளைந்துவிட்டுச் சிரித்தாள் வெள்ளையம்மாள்.

"பார்த்தியா . . . பத்து வருஷம் முன்னாலெ நீங்க அவரைப் பார்த்திருக்கணும்" என்று அவரைப் பார்த்தார் பென்னெட்.

முதலில் கொஞ்சம் உம்மணா மூஞ்சியாக உட்கார்ந்திருந்த மாதுர்கூட சற்று உதட்டை அகட்டிச் சிரித்தார், அவரறியாமல். சிரிக்க வேண்டாம் என்று அவர் கங்கணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலிருந்தது இதுவரை.

"என் அகமுடையாள் ஆஞ்சநேயர் மாதிரி இருந்தால் அது அவள் தப்பில்லையே. அவ அப்பா அம்மான்னா பொறுப்பு. இல்லெ தசாவதாரம் எடுக்கற எங்க ஊர் ஸ்வாமி பொறுப்புன்னு வச்சுங்களேன். ஆனா அவ மாதிரி ஒரு கத்திரிக்கா பிட்ளெ, ஒரு ரசம், ஒரு பருப்பு உசிலி - இந்த லோகத்திலெ நளனுக்குக்கூட பண்ண முடியாது. நான் இவ வீட்டுக்கு வந்து சாப்பிடுவேன். ஆனால் அழகில்லாத தம்பதிகள், அழகா இருக்கற யாரையோ நெனச்சுண்டு, ஒருத்தருக்கொருத்தர் சந்தோஷப்பட்டுக்கறாப்பல, எங்க ஆமடையா சமையல்னு நெனச்சுண்டு, அந்த ருசியெல்லாம் இருக்காப்பல நெனச்சிண்டு சாப்பிடுவேன்."

"நீங்க சங்கீத வித்வான்னுதான் இவர் அறிமுகப்படுத்தினார், ஹாஸ்ய நடிகர்னு சொல்லலியே" என்றார் பென்னெட்.

"இது ஹாஸ்யம் இல்லெ, நெஜம். இவ ரொம்ப ஆச்சரியமான பேர்வழி. எல்லாரையும் உதறிட்டு, என்னோட வந்திருக்கா . . ."

"போறும்."

"நீ இங்கிலீஷிலே சொல்லித்தான் ஆகணும். நீதான் ஆரமிச்சே, என்னை

பேசச் சொல்லி - ஆச்சா. இவ ரொம்ப ஆச்சரியமான பேர்வழி. ரமணர் எல்லாக் கிழவர் மாதிரிதான் இருந்தார். சப்பைக் காலும், நரைச்ச தாடியும், தொடுக்கு தொடுக்குனு தொங்கு சதையுமா. அதுக்காக நீங்க அவரை சாதாரண மனுஷன்னு - சாதாரண கிழவன்னு சொல்லிடுவேளா? அதேமாதிரிதான், இவ எல்லார் மாதிரியும், எல்லா பொண்கள் மாதிரிதான் பார்க்கறதுக்கு இருக்கா - அழகா, சேப்பா, நறுவிசா புடவை கட்டிக்கிண்டு. பாட்டு பாடுவ, நாட்டியம் ஆடுவ. அதெல்லாம் எப்படின்னு நான் சொல்லத் தயாரா இல்லெ. ஆனா அவளுக்குள்ள ஒண்ணு இருக்கு . . . "

"நான் இனிமே இங்கிலீஷிலே சொல்லப் போறதில்லெ."

"இவ தர்ஜமா பண்ணமாட்டாளாம் . . . இத பாரு – நீயா ஒண்ணும் சொல்லிக்கலெ இப்ப. நான் சொல்றதைச் சொல்லிடறேன். நீ அப்பறம் தனியா அவாகிட்ட என்ன வேணும்னாலும் சொல்லிக்கோ. இப்ப நான் சொல்றதையெல்லாம் தர்ஜமா பண்ணித்தான் ஆகணும் . . . இவகிட்ட என்னமோ இருக்கு. அந்த சின்ன வயசிலெ எல்லாரையும் விட்டுட்டு எங்கிட்ட வந்தா. என் சங்கீதத்திலெ, எம்மேல ஒரு பிரமையிருக்கலாம். ஆனா, அதையும்விட, தான் நினைச்சபடி இருக்கணும்னு ஒரு பிடிவாதம். உங்களாலெ முடியுமா? என்னாலெ முடியுமா? ஆஞ்சநேயர் மாதிரி இருக்கான்னு என் அகமுடையாளை நான் தள்ளிவைக்க முடியுமா? நான் யாருக்கோ, எதுக்கோ பயப்படறேன். நீங்க பயப்படுவேள். உங்க சம்சாரம் பயப்படுவாள். உங்க ஊர்லெ இதெல்லாத்துக்கும் கோர்ட் இருந்தாலும், நீங்க அதுக்கு வகையா பதில் சொல்லித்தானே ஆகணும். இவ அதுக்கெல்லாம் பயப்பட மாட்டா. என்னைப் பிடிக்கலேன்னா, உதறித் தள்ளிட்டு வெளியிலே போயிடுவ. ஆனா இன்னும் போகாத்துக்குக் காரணம், இன்னும் ஏதோ கொஞ்சம் இவளுக்குப் பிடிக்கிறாப்போல எங்கிட்ட என்னமோ இருக்கு. அதுவும் போயிடுத்துன்னா, நிச்சயமா என்னை வெளியிலே வெரட்டி விடுவ. வெரட்டிவிடுவன்னா, அதையும் அழகாச் செய்வ . . . அதுக்கப்புறம் கரெக்டா, உள்ளதை உள்ளபடிதான் பார்ப்பள். தாட்சிண்யம் பார்க்க மாட்டா. உங்களுக்காக எனக்காக, தன்னோட முதல் கருத்தை மாத்திக்கமாட்டா. அவளுக்காக மாத்திக்கணும். மாத்திக்கிறதுதான் சரின்னு நம்பிக்கை வரவரையில் மாத்திக்கமாட்டா."

"அவர் உங்கமேலே இத்தனை உசிரை வச்சிருக்காரே" என்றார் பென்னெட். தன் மனைவியைப் பார்த்தார்.

# 5

கோபாலி இன்னும் ஒரு பத்து நிமிஷம் என்னைப் பற்றிப் பேசிற்று. மனதாரப் பேசுகிறதா, பரிகாசமாகப் பேசுகிறதா என்று புரியவில்லை. நான் வர்ணம் கொடுக்காமல், சிரிக்காமல், கோபித்துக்கொள்ளாமல், என்னைப் பற்றிச் சொல்லாதது போல, ஆங்கிலத்தில் அத்தனையையும் சொல்லிக்கொண்டிருந்தேன்.

"எனக்கு இங்கிலீஷ் தெரியாது. இவள் லௌ, லௌ என்று ஒரு வார்த்தை சொல்லிண்டிருக்கா. பொதுவா, ஒரு பொம்மனாட்டி ஒரு புருஷனைப் பார்த்துப் பிரியப்படறது, ஒரு புருஷன் ஒரு பொம்மனாட்டியைப் பார்த்துப் பிரியப்படறதுதான் 'லௌ'ன்னு நினைச்சுண்டிருந்தேன். எனக்கு ஒண்ணுவிட்ட பெரியப்பா பிள்ளை ஒருத்தன் இருந்தான் - அப்பாராஜா அப்பாராஜான்னு பேரு. அவனுக்கு சமையல்காரத் தொழில். கடசீலே ஒரு மிட்டாய்க்கடை வச்சான் - சாரங்கபாணி கோவில்கிட்ட. பக்கோடா, காராபூந்தி, பஜ்ஜி எல்லாம் பண்ணி ஒரு சின்னக் கூடையிலே தட்டுலெ வச்சு வித்திண்டிருப்பன். ராத்திரி கடை பூட்டி வந்தவுடனே, சாப்பிடுவன். தூங்கமாட்டான். நாவல் எழுதுவன். கடுதாசு கடுதாசா எழுதி கட்டு கட்டா, விபூதி வைக்கற பறை, கால் அலம்பற சொம்பு வைக்கற பறை, பாத்திரப் பொட்டி வைக்கிற இடத்திலே இருக்கற இடுக்கு, மோசனம், எரப்பு - எங்க பார்த்தாலும் சொருகி வச்சிருப்பன். என்னைப் பார்க்கிற போதெல்லாம் கடைசியா எழுதின நாவலோட கதையைச் சொல்லுவன். எல்லாத்திலியும் ஒரு பொண்ணு தனியா கோயிலுக்கோ, ரயில்லியோ, ஆத்தங்கரைக்கோ போயிண்டிருப்ப. அப்ப திடீர்னு ரண்டு பயங்க வந்து, அவளைக் கட்டிப் பிடிச்சு 'லௌ பண்ணுவன்' எல்லாக் கதையிலியும். வந்தான், வழி மறிச்சான், கட்டிப் பிடிச்சு லௌ பண்ணினான். இதே கதை.

அப்பதான் எனக்கு லௌன்னா இன்னொரு அர்த்தம் உண்டுன்னு தெரிஞ்சுது. அம்மணி சொல்றதைப் பார்த்தா இன்னும் என்னென்னமோ அர்த்தம் எல்லாம் இருக்குன்னு தெரிஞ்சுது. அவளுக்கு உலகத்திலே பிறந்திருக்கிற எல்லா மனுஷாளையும் லௌ பண்ணணுமாம். ஒருத்தர் பாக்கி இல்லாம எல்லாரையும் கை குலுக்கணுமாம். அணைச்சுக்கணுமாம். ஆண், பெண், கிழம் - குழந்தை, சொந்தம் - அன்னி அயல், தெரிஞ்சவா -

தெரியாதவா - இப்படி ஒண்ணும் பார்க்காம எல்லாரையும் கையைக் குலுக்கி அணைச்சுக்கணுமாம். ஆமடையான், பொண்டாட்டி - இதெல்லாம் இருக்கப்படாதாம். இதை எங்கிட்ட மாத்திரம் இல்லாம - பார்க்கறவாகிட்டல்லாம் சொல்லிண்டிருப்ப. அது எப்படி முடியும்னு நான் கேட்பேன். முடியணும்னு சொல்லுவ. எப்படின்னு தான் எனக்குப் புரியலெ. ஒரு நாளைக்குப் புரிஞ்சுது - சொப்பனத்திலே - நான் எங்கேயோ கூட்டமா இருக்கிற ஒரு ஊர்லெ போயிண்டிருக்கேன். கடைத்தெருவோ - இல்லாட்டா, எலெக்ஷன் மீட்டிங்கோ தெரியலெ ஒரே கூட்டம். எள்ளுப்போட்டா எள்ளு விழாது. இவளும் கூட வரா. இவ எல்லாரையும் கையைப் பிடிச்சுக் குலுக்கிண்டே போறா. எல்லாரையும் அணைச்சு அணைச்சுண்டு நகர்ந்துண்டே யிருக்கா. ஒரு ஓரமா ஒரு கிழவர் நரைச்ச தாடியும் மீசையுமா ஒரு திண்ணையிலே உக்கார்ந்திண்டிருக்கார். நல்ல கட்டு உடம்பு. இவ எல்லாரையும் கை குலுக்கறதைப் பார்த்துட்டு "பலே பலே அப்படித்தான் - வந்துடுத்து வந்துடுத்து"ன்னு சிரிச்சுண்டேயிருக்கார். எல்லாம் கூத்தாடிண்டிருக்கு, அவர் சொல்றதைக் கேட்டு. ஆமாம் ஆமான்னு "வந்துடுத்து வந்துடுத்து"ன்னு சிரிக்கிறார். "என்னையா வந்துடுத்து?"ன்னு நான் அவரைப் போய் கேக்கறேன். "லௌ லௌ . . . பூமியிலே லௌ வந்துடுத்து லௌ - எல்லாரும் மனசனா ஆகப் போறாங்க, நீங்க அல்லாரும் மிருகங்க. இவங்கதான் மனுசி - இன்னமே கொஞ்சநேரத்திலே அல்லாரும் மனுசனாயிடப் போறாங்க, பாத்துக்கிட்டேயிருங்க. நானும் அதுக்குத்தான் நூறு வயசு ஆனப்பறமும் உசிரை வச்சிக்கிட்டேயிருக்கேன். பாருங்க இன்னும் கொஞ்ச நேரத்திலே"ன்னு அம்மணியைப் பார்த்து பலே போடறார். அம்மணி உடனே என்னைப் பார்த்து, இத்தனை வயசானவர், பழுத்த பழம், ஞானப்பழம் சொல்றார், பேசாம நிக்கறேளே, நீங்களும் எல்லார் கையையும் பிடிச்சுக் குலுக்கி, கட்டிக்கிங்கோன்னு சொல்றா. சரிதான்னு அந்த ஞானப்பழத்துக்குப் பக்கத்திலே ஒரு அம்மா உக்காந்திருந்தா - அவ கையை எடுத்துக் குலுக்கினேன். உடனே கிழவர் எம்மேலே ஒரே பாச்சலாப் பாஞ்சாரே பார்ப்பம். ஏண்டா, நான் எல்லார் கிட்டவும் பிரியமா இருன்னா, எம் பொண்டாட்டி கையைப் புடிச்சு இழுன்னு அர்த்தமான்னு என் கழுத்தைப் புடிச்சு நெறிச்சுது. அப்பறம் பார்த்தா நெறிச்சுது ஞானப்பழத்தோட வாயி. ஞானப்பழத்தோட தலை மனுஷத் தலையா இல்லே. பெரிய ஓநாய்த் தலையா இருந்துது. அந்தக் கூட்டத்திலெ இருந்த அத்தனை மனுஷத் தலையும் நாய்த் தலையா ஆயிடுத்து - நரித் தலையா இருக்கு பாதி. "எல்லாரையும் நாய் நரியா ஆக்கிட்டியேடா பாவி மகனே"ன்னு ஞானப்பழத்தோட ஓநாய்த் தலை என் காதிலே வந்து கத்தறது. நான் கிலிப்பிடிச்சு ஒரே கத்தா கத்தறேன். என்னைப்பிடிச்சு எல்லா

நாயும் தள்றது. கடைசியிலே முழிச்சிண்டு பார்த்தா, என் சம்சாரம் - ஏன் கத்தறேள், ஏன் கத்தறேள்னு என் மாரைத் தடவிக் கொடுக்கறா. கிலியிலே முழிக்கிறேன் பேந்தப் பேந்த. என்ன சொப்பனம் என்ன சொப்பனம்னு நச்சரிக்கறா அவ. நான் முழுக்கச் சொல்லலே. எப்படிச் சொல்றது? நாயெல்லாம் விழுந்து பிடுங்கினதை மாத்திரம் சொன்னேன். ஓநாய்கூட, பொண்டாட்டியைத் தன் சொத்துன்னு நெனச்சிண்டிருக்கு. புருஷனைத் தன் சொத்துன்னு நெனச்சிண்டிருக்கு. நான் என்னோட குரலைக்கூட, என் சங்கீதத்தைக்கூட எனக்கு சொந்தம்னு நெனச்சிண்டிருக்கேன் - ஒரு தெருநாய், தெரு முழுக்க தன்னுதுன்னு நெனச்சுண்டு குறைக்கறாப்போல . . ."

கோபாலி நின்றுவிட்டது. நானும் நிறுத்திவிட்டேன்.

சிறிது நேரம் வண்டி ஓடுகிற சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

"என்ன ஒண்ணும் சொல்லமாட்டேங்கறேள்?" என்றது கோபாலி.

"சொப்பனமே வேடிக்கைதான். தலை கால் புரியாது. உங்கள் சொப்பனத்துக்கும் தலை எங்கே, காலெங்கே என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றார் பென்னெட்.

"இது ரொம்ப க்ளீன் சொப்பனம்னா! தலை கால் எல்லாம் அப்படி அப்படியே இருக்கற இடத்திலே இருக்கே . . ."

"நீங்க என்கிட்ட சொன்னதே இல்லையே இந்த சொப்பனத்தை இத்தனை நாளா?" என்றேன் நான் கோபாலியிடம்.

"சொன்னா நீ என்ன சொல்லப்போறே. ஏதோ அஜீர்ணத் தாலெ வந்திருக்கும். சொப்பனமெல்லாம் பொய், பிதற்றல் - சாமி மாதிரின்னு சொல்லுவே . . . இதையும் சொல்லு அவர்கிட்ட இங்கிலீஷ்லெ."

சொன்னேன்.

"உங்களுக்கு சாமிகிட்ட நம்பிக்கை கிடையாதா?" என்றார் பென்னெட்.

"கிடையாது."

"எப்படியிருக்க முடியும்? எனக்கு ஏதோ ஒரு பிடிப்பு வேண்டியிருக்கிறதே - பாதுகாப்பு வேண்டியிருக்கிறது. ஒரு வழியிலியும்

கதியில்லாமல் எப்படி இருக்க முடியும்? ஒரு பாதுகாப்பு கடைசியாக வேண்டியிருக்கிறதே."

"பாதுகாப்பு இல்லாவிட்டால் என்ன? பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறதுதான் நம்ம வாழ்க்கை. அதுதான் சகஜமான வாழ்க்கை. என்னத்துக்குப் பயப்படணும்?"

"ஆக, உங்ககிட்ட மாத்திரம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கு."

"ஆமாம்."

"உங்ககிட்ட நம்பிக்கை இருந்தா, உங்களுக்கு சாமிகிட்ட நம்பிக்கை இருக்குன்னு அர்த்தம்."

"இல்லே இல்லே. நானே கடவுள். என்னுள்ளே கடவுள் இருக்கான்னு நான் நம்பலெ. தயவுசெய்து என்னைத் தவறாக அர்த்தம் பண்ணிக்கொள்ளாதீர்கள்."

"அப்ப உங்ககிட்ட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"இருக்குன்னேனே. ஆனா நீங்க சொல்றாப்பல இல்லேன்னு சொன்னேனே . . . எனக்கு எல்லாரையும் தொடணும்னு ஆசை. எல்லாரையும் பிரியமாக் கட்டிக்கணும். அது எனக்குப் போறும்."

"உண்மையாகச் சொல்லுங்கள். உடம்பெல்லாம் அழுகிச் சொட்டுகிற ஒரு மனிதனிடம் இதே மாதிரி நீங்கள் செய்வீர்களா?"

நான் சிறிது நேரம் யோசித்துப் பார்த்தேன். அந்த மாதிரி சந்தர்ப்பம் வரக்கூடாது என்று விரும்பிக்கொண்டேன். அவர் பதிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

"ஏன் இப்படி அவரைப் போட்டு நெருக்குகிறீர்கள்?" என்று பென்னெட்டின் மனைவி அவரைக் கண்டிப்பதுபோல சொல்லி வைத்தாள்.

"மன்னிக்க வேண்டும். நாம் பேச ஆரம்பித்ததுமுதல் நாம் எல்லாம் மனம்விட்டுத் தாராளமாகப் பேசலாம். அத்தனை தூரம் ஒருவருக்கொருவர் பிரியமாக, விட்டுக்கொடுத்து, புரிந்துகொண்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு கேட்டேன். இவள்

சொல்வது போல நான் என்னமோ உங்களை நெருக்குவது போல நீங்கள் நினைத்தால் வேறு ஏதாவது பேசுவோமே" என்றார் பென்னெட்.

"அப்படி எல்லாம் நான் நினைக்கவில்லை. ஆனால் நீங்கள் கேட்பது நியாயம். சில சமயம் நாம் என்ன சொல்கிறோம் என்று நாமே யோசித்துச் சொல்வதில்லை. நான் உங்களிடம் சொன்னதை பலபேரிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்கள் உங்கள் மாதிரி திருப்பிக் கேட்டதில்லை. ஒருவேளை என்னை எதிர்த்துப் பேசாமல் ஒப்புக்கொண்டால், நான் பிற்பாடு ஏதாவது தருவேன் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். அல்லது என் பேச்சில் ஏதோ இருக்கிறது, யோசிக்காமல் நான் எதுவும் சொல்லமாட்டேன் என்று அவர்கள் பேசாமலிருந்திருக்க வேண்டும். உங்களுக்கு நான் சப்பைக்கட்டி பதில் சொல்லலாம் அதாவது உலகத்தில் எந்த மனிதனும் உடல் அழுகாமல் இருக்க, வைத்திய ஆராய்ச்சி நடத்தி, நோயே இல்லாமல் செய்துவிடப் பாடுபடுவேன் என்று சொல்லலாம். ஆனால் நீங்கள் கேட்ட கேள்விக்கு அது பதிலாகிவிடாது . . . நீங்கள் கேட்டது சரி. அழுகிச் சொட்டுகிற நோயாளியைத் தொட்டுத் தொட்டுப் பழகினால் மனசுக்கு அருவருப்பு இராது. நாளடைவில் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன்."

"ம்" என்று யோசித்துக்கொண்டிருந்தார் பென்னெட். என்னுடைய ஐந்தரை அடி உடலை யாரோ தட்டித் தட்டி, கழித்துக் கழித்து, வேர்க்கடலை அளவுக்குச் சின்னதாக்கிவிட்ட மாதிரி இருந்தது. இந்த மனிதனுக்கு மேலே மேலே பதில் சொல்லிக்கொண்டே போகலாம். கடவுளை நான் நம்பினால் என்ன? நம்பாவிட்டால் என்ன? இவனுக்கு என்ன வந்தது? யாரைத் தொட்டால் என்ன, தொடாவிட்டால் என்ன? இவனுக்கு என்ன வந்தது? - இப்படி ஒரு கோபம். மேலே மேலே பேசச் சரக்கு இல்லையே என்ற வேதனை.

"என்ன பேசினேன்?" என்றது கோபாலி.

சொன்னேன்.

"நீயாத்தானே வாயைக் கொடுத்து மாட்டிக்கிறே? என்னைக் கேட்டாப் பேசாம அவாவா இருக்கறதுதான் புத்திசாலித்தனம்னு சொல்லுவேன்" என்றது கோபாலி.

"மைசூர்பாக்கைக் கொடுத்து பேச்சைக் கிளப்பச் சொன்னது நான் இல்லையே."

"பேசச் சொன்னேன். பேசி மாட்டிக்கச் சொல்லலே . .! நீ இப்ப இங்கிலீஷிலெ சொல்லு. யூ ஸி - எனக்குப் பாடறது ஒண்ணுதான் லௌ. சுருதி சேர்த்து கொஞ்ச நேரம் பாடினப்பறம் நான், பாடிக்கிண்டே இருப்பேன். நான் ஒருத்தன் இருக்கேங்கறதே தெரியாது - கொஞ்ச நேரம் அதுதான் லௌ எனக்கு. அது முடிஞ்சுபோனப்பறம் ஏண்டா இந்த லோகத்திலெ பிறந்தோம்னு இருக்கும். சில சமயம் உடம்புகூட சரியில்லாம போயிடும்."

"ஆமாம். அந்த மாதிரி சமாதியைத் தாங்க முடியாது மனுஷ உடம்புக்கு. உடம்பு சீக்காயிடும். அதனாலேதான் நீங்கள்ளாம் உடம்பை உரப்படுத்திக்கணும்" என்றார்.

"அப்ப உடம்பு நன்னாயிருக்கணும்னா சாமியை நெனச்சு உருகப்படாது."

"நான் அப்படித்தான் நினைக்கிறேன். உடம்பு நன்னா இருக்கணும்னு நெனச்சா, சரி, நீயாச்சு உன் உடம்பாச்சுன்னு இருன்னு சொல்லிடுவார் சாமி. அதனாலெதான் உலகமும் ஓடிண்டிருக்கு - ஆஸ்பத்திரி, வைத்யர், ஆராய்ச்சின்னு."

"உடம்பை உரப்படுத்திக்கணும்னு சொன்னாப்பல இருக்கே சித்தெ முன்னாலெ."

"நீங்க சொன்னதாலே சொன்னேன். லௌவிலே கரைஞ்சு தீர்ந்துபோக உங்களுக்கு இஷ்டமில்லேன்னா, உடம்பை உரப்படுத்திக்கிண்டுதான் ஆகணும்னு சொன்னேன். அந்த மாதிரி எத்தனை பேர் இருக்க முடியும்? அப்படி எல்லாரும் ஆயிட்டா, பேச்சேது?"

பேச்சு எங்கோ தண்டவாளத்தை விட்டு இறங்கிவிட்டாற் போலிருந்தது. எதற்காக இப்படிக் கவலைப்படுகிறார்கள்? எதற்காக இந்தக் கடவுள், லௌ என்று வெட்டிப் பேச்சு? நாராசமாயிருந்தது.

"மிஸ்டர் பென்னட், நீங்கள் பேசுவதையெல்லாம் பார்த்தால் கடவுளை நீங்கள் பார்த்துவிட்டு வந்து பேசுகிற மாதிரி இருக்கிறது" என்று கிண்டினேன்.

"நான் பார்த்ததில்லை. உங்கள் மாதிரியே எனக்கும் கோபம் தான் கடவுள் கடவுள் என்கிறார்களே; என்ன அது என்றுதான் அலைகிறேன்.

அழுகிற சொட்டுகிற உடம்பைத் தொடுகிற அளவுக்குப் பழகிக்கொள்ள வேண்டும் என்று சொன்னீர்களே - அந்த மாதிரி நானும் பழகிக்கொண்டிருக்கிறேன். முதலில், நீங்கள் எல்லாரையும் தொடவேண்டும் போலிருக்கிறது, அணைத்துக்கொள்ள வேண்டும்போலிருக்கிறது, என்று சொன்னபோது, என்னமோ வாசல் திறக்கற மாதிரி இருந்தது எனக்கு. ஆனால் நல்ல உடம்புகளுக்குத்தான் அந்த உரிமை உண்டு என்று நீங்கள் டிக்கட் வைத்த பிறகு எனக்கு மறுபடியும் வாசலை யாரோ மூடிவிட்ட மாதிரி இருந்தது."

"எந்த வாசல்?"

"கடவுள் உட்கார்ந்திருக்கிற கட்டிடத்தின் வாசல்."

"எல்லாரும் பசியில்லாமல் இருக்க, நோயில்லாமல் இருக்க வழி செய்துவிட்டால் அந்த வாசலைத் திறக்கவே வாண்டாமே."

"நாம் திறக்க வாண்டாம். அந்த ஆசாமியே கதவைத் திறந்துகொண்டு வந்து ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருப்பான். 'தேவலையே, தேறிவிட்டானே மனுஷன்' என்று வியந்து பார்த்துக் கொண்டேயிருப்பான் . . . ஆனா, அப்படிப் பார்க்கப்போறான்னு எனக்குத் தோணலெ. அந்தக் கிழவனார் பொண்டாட்டிக் கையைக் குலுக்கப் போனதற்காக, அவர் தலையே ஓநாய்த் தலையாக மாறிவிட்டதே - அந்த சொப்பனக் கிழவர் தலை. உடம்பு அழுகல்னு நீங்க சொன்னது மனசு அழுகி உடம்பில் தெரிந்த அழுகல்தான் . . . இது என்னோடது, அது உன்னோடதுன்னு நினைக்கிற வரையில், உடம்பு அழுகும், கிழவர் தலை ஓநாய்த் தலையாகிக்கொண்டுதானிருக்கும் . . ."

அவர் மேலே என்ன பேசினார் என்று காதில் வந்துகொண்டிருந்தது. எனக்கு பத்து வயதாகும்போது, மேலண்டை வீட்டுக்காரர் குழந்தைக்குப் பனையேறி அம்மை போட்டிவிட்டதாம். என்னமோ ஏறியும் இறங்கியும் உடலையெல்லாம் குதறி எருமைச் சாணம்போல கொதகொதவென்று ஆக்கிவிடும் நோயாம் அது. குழந்தைக்குக் கண், காது, தொண்டையெல்லாம் அடைத்து, உடலெல்லாம் குதறிக் கிடந்ததாம். ஆனால் தாயாரம்மாள் அதை மடியிலே போட்டு, ஆச்வாசம் செய்துகொண்டிருந்தாளாம். மாமியார்க்கார அம்மாள், நாத்தனாரம்மாள், எதிர் வீட்டுக் காரர்கள், வேலைக்காரர்கள் யாரும் அண்டவில்லை. வைத்தியம்

கிடையாது. வைத்தியர் வரவில்லை. குழந்தை முனகிக்கொண்டிருந்தது. வாய்க்குள் தண்ணீர், பால் எதுவும் இறங்கவில்லை. கடைசியில் எடுத்துண்டு போ எடுத்துண்டு போ என்று தாயார் கண்ணை மூடி அழுதாளாம். "என்னை எடுத்துண்டு போ, இல்லாட்டா இதை எடுத்துண்டு போ. வாண்டாம் வாண்டாம், என்னை வாண்டாம், இதையே எடுத்துண்டு போ . . . இது இந்த கோரத்தோட பிழைச்சிருந்தால் உன்னைத்தான் தூத்துவார்கள்" என்று உத்தரத்தைப் பார்த்துக் கத்தினாளாம். கடைசியில் குழந்தையின் உயிரை அவள் கத்தின யம ஆசாமி வந்து எடுத்துக் கொண்டு போய்விட்டானாம். அது மாமியார் குழந்தை இல்லை. நாத்தனார் குழந்தையில்லை. எதிர்வீட்டு, அண்டை வீட்டுக்காரர் குழந்தை இல்லை. அதனால யாரும் அருகே வரவில்லை. சோறு தூக்கமில்லாமல் மடியில் போட்டுக்கொண்டிருந்த தாயாரின் கனத்தைச் சற்றுக் குறைக்க, யாரும் தன் மடிக்கு மாற்றிக்கொள்ள வரவில்லை. கடைசியில் நானே என் மடிக்கு மாற்றிக்கொள்கிறேன் என்று மரணம் தூக்கிக்கொண்டு போய்விட்டது.

பென்னெட் பேச்சு நின்றிருந்தது. தூக்கம் கலைந்தது போல, "நீங்கள் சொன்னது சரி" என்று அந்தக் குழந்தை பட்ட அவதியை முழுவதும் சொன்னேன் - தாயார் பட்ட அவதியை.

"உங்கள் கடவுள் ஏன் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வில்லை?" என்று கடைசியில் கேட்டேன்.

"காப்பாற்றிவிட்டாரே" என்றார் பென்னெட்.

"செத்துப்போகச் சொல்லியா?"

"ஆமாம். அவர் காப்பாற்றவில்லை என்று நமக்கு எப்படித் தெரியும்? ஆனால் குழந்தை பட்ட அவதியை விட; அந்தத் தாயாரின் உருவம்தான் என் முன் நிற்கிறது. இப்படித் தன்மறதியாக அதை மடியில் போட்டு உருகிக்கொண்டிருந்ததுதான் அவர் கடவுளைக் கண்ட களங்கள். கடவுள் சிலுவைக்கு மேல் நெருப்பு மாதிரி தெரியமாட்டார். சூலமும், சங்கும் ஏந்தி நிற்கமாட்டார், குழந்தையை மடியில் போட்டுக்கொண்ட தன்மறதியாகத்தான் இருப்பார்" என்றார் அவர்.

"எப்பேர்ப்பட்ட கடவுள்!" என்று இரைந்து சிரித்தேன்.

"உங்கள் சிரிப்பு ரொம்ப அழகாயிருக்கிறது. நான் உங்களோடு பேச

ஆரம்பித்ததிலிருந்து, நீங்கள் வார்த்தைக்கு வார்த்தை சிரித்துக்கொண்டே யிருக்கிறீர்கள். சிரிப்பு உங்களோடு பிறந்தது என்று நினைத்துக்கொண்டேன். இந்த மாதிரி நமக்கு ஏன் சிரிக்க முடியவில்லை என்று நினைத்துக்கொண்டேயிருக்கிறேன். ஆனால் நீங்கள் இப்போது சிரித்தீர்களே "எப்பேர்ப்பட்ட கடவுள்" என்று சொல்லி, அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

"ஏன்?"

"மார்க்ஸீயவாதி சிரிக்கிற மாதிரி இருந்தது."

"ஆமாம். எனக்குக் கடவுள் இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஒரு சமயம் கடவுள் இருக்கிறார் என்று நினைத்தால் மார்க்ஸ்தான் கடவுள் என்று சொல்லுவேன்" - என்று சிரித்தேன்.

"மார்க்ஸ் சைத்தானின் சிஷ்யர். கடவுள் இல்லாமலேயே உலகத்தில் சுபிட்சத்தைக் கொண்டுவரலாம் என்று நினைத்தார். ஏழ்மையை அகற்றிவிடலாம் என்று நினைத்தார். ஏழ்மையைக்கூட அகற்றிவிடலாம். சுபிட்சத்தைக் கொண்டுவந்துவிடலாம். ஆனால் சந்தோஷத்தைக் கொண்டுவந்துவிட முடியாது. பொறாமையை அகற்றிவிட முடியாது. பசிக்கிற வயிறோடு சண்டை போடுவதற்குப் பதிலாக அப்போது நன்றாக உண்டுவிட்டு, ஏப்பம் விட்டுக் கொண்டே சண்டை போடுவார்கள். சோற்றுக்குச் சண்டை போடாவிட்டால், பேருக்கு அல்லது அதிகாரத்துக்கு அல்லது நீங்கள் சொன்ன 'ஔ'வுக்குச் சண்டை போட்டுக்கொண் டிருப்பார்கள்."

"பசியோடு சண்டை போடுவதைவிட நிரம்பின வயிறோடு சண்டை போடுவது நல்லதுதானே."

"சண்டை நடக்கும். அதையாவது ஒப்புக்கொள்கிறீர்களா?"

"நான் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் மனிதர்கள் போக்கிரிகள் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள். நான் அப்படி நினைக்க வில்லை. அப்படி அவர்கள் போக்கிரிகளாகவே இருந்தாலும், வயிறாறச் சாப்பிட்டுவிட்டு சண்டை போடுவது நல்லதுதானே." சிரித்தேன்.

"அது இன்னும் அபாயமாயிற்றே!" என்றார் பென்னெட்.

"யார் கண்டார்கள்?"

"சுபிட்சமாக இருக்கிறவர்கள் போடுகிற சண்டையைப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறேன்."

"நீங்கள் சொல்லுவது சிலபேர் மட்டும் சுபிட்சமாக இருக்கிற ஊரில். நான் சொல்வது எல்லோரும் சுபிட்சமாக இருக்கிற ஊரில், அதாவது, மார்க்ஸ் சொன்ன ராமராஜ்ஜியத்தில்." - மீண்டும் சிரித்தேன்.

பென்னெட் இரண்டு கைகளையும் உயர்த்தினார்.

அவர் மனைவி சிரித்தாள். நானும் சிரித்தேன்.

"என்ன! என்ன!" என்று பரந்தது கோபாலி.

"அவர் தோத்துப் போயிட்டேன்னு சரணடைஞ்சுட்டார்."

"எப்படித் தோத்துப்போனார்?"

சொன்னேன்.

"இங்கிலீஷிலெ சொல்லு . . . யூ ஸி - நீங்க கையை உசத்தின துக்குத் தோத்துப் போயிட்டதாக அர்த்தமா? இல்லே, ஸ்வாமி, இவளைக் காப்பாற்றுங்கோன்னு பகவானைப் பார்த்து உயர்த்தினேளா?"

என்னுடைய பிச்.டி. நண்பனைப் போல தோளை உயர்த்தித் தழைத்துக்கொண்டார் பென்னெட்.

டில்லிக்குப் போய், கல்கத்தாவுக்குப் போய், நாகபுரி வந்து, பம்பாய் வந்து . . . நாகபுரி வரும்போதே சுரத்தில்லை. பம்பாய்க்கு வந்ததும் கிலியாக மாறிவிட்டது.

"ஏன், என்னமோ போலிருக்கே?" என்று கச்சேரி முடிந்து வந்த சந்தோஷத்தில் கோபாலி கேட்டது.

கோபாலிக்குத் தன்னை மறந்துகொண்ட பூரிப்பு. ஆள் கண்ட சமுத்திரமாகப் பொங்கின பூரிப்பு. இந்தத் தன்மறதியை எல்லாருக்கும் ஏற்றின பூரிப்பு.

"கோபாலி, நீயாடா பாடினே?" என்று ஒரு நார் பட்டுப் புடவையும்

முட்டாக்கும் போட்ட ஒரு பிராமண விதவை - வயது எழுபது இருக்கும் - கோபாலியின் காலைப் பிடித்துக் கொண்டாள். சட்டென்று நெற்றியை கோபாலியின் பாதத்தில் வைத்துக்கொண்டாள். "என்ன அபசாரம்! என்ன அபசாரம்! உங்க வயசு என்ன? என் வயசு என்ன? எனக்குத் தாயாரில்லையா நீங்க?" என்று முள் தைத்துவிட்டாற் போல எழுந்து துள்ளிற்று கோபாலி.

"தாயாராயிருந்தா என்ன? இந்த மாதிரி ஒரு பிள்ளையைப் பெத்துட்டு, அந்தப் பிள்ளைக்கு நமஸ்காரம் பண்றதுக்குக் கொடுத்து வைக்கணுமே அந்தத் தாயார், ம்க்ம் . . . ம்க்ம்!"

"நான் வெறும் பாஷண்டனாச்சேம்மா" என்று என்னைப் பார்க்காமலிருந்தது கோபாலி.

"நீ எப்படி இருந்தா என்ன? ராமன், கிருஷ்ணன்லாம் கள்ளுக் குடிக்கலியோ? அம்பாள் கள்ளுக் குடிக்கலியோ! இருடா வந்துட்டேன்னு கள்ளைக் குடிச்சுட்டுத்தானே சும்ப நிசும்பாளை யெல்லாம் வதம் பண்ணினா அம்பாள்! கிருஷ்ணன் ஆயிரம் கல்யாணம் பண்ணிக்கலியோ! நீ என்ன தாழ்ந்து போயிட்டே! ம்க்ம், உனக்குத்தான் பாத்தியம் உண்டு பாஷண்டனா இருக்கிறதுக்கு. வேற யாருக்கு இருக்க முடியும்? எத்தனையோ அபஸ்வரங்கள் எல்லாம் ஜரிகை வேட்டியும் ஜவ்வாதுப் பொட்டுமா, தான் என்னமோ சங்கீத வத்துவான்னு கள்ளுக் குடிக்கிறது. இந்த அபஸ்வரங்களுக்கெல்லாம் பிராந்தியில்லாம குடிமுழுகிப் போச்சாக்கும். உனக்குன்னா அதெல்லாம் வச்சிருக்கு . . . எனக்கு தீட்சை உண்டு - அம்பாள் தீட்சை - ஒருத்தருக்கும் நமஸ்காரம் பண்ணமாட்டேன், அம்பாளைத் தவிர . . ."

கிழவி பொரிந்துகொண்டிருந்தாள். அவள் பிள்ளை வீட்டில்தான் மாடியில் தங்கியிருந்தோம். பிள்ளை, அவர் மனைவி, பேரன் பேத்திகள் எல்லாம் பேச்சு மூச்சற்று நின்றுகொண்டிருந்தன. கோபாலி மேலே கம்பளிப் பூச்சி ஊர்வது போல, இந்த முகமனைக் கேட்டு குறுகிக் குன்றிக்கொண்டிருந்தது. "அம்பாளைத் தவிர" என்று சொல்லிவிட்டு கிழவி மேலே பேச முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் கழித்து சமாளித்து, தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டது. "பாஷண்டனாம், நடராஜூ ரண்டு நாவட்டம் கம்பெனிக்கு அந்த துரை வந்திருக்கான், இந்த துரை வந்திருக்கான், நீயும் பார்ட்டி கொடுக்கறே! தீர்த்தமா ஓடறது. நெசம்மா, நான் எங்க தாத்தாகிட்ட சொல்லிக்கிண்ட மாதிரி பாட்டுச் சொல்லிண்டிருந்தியோ, எனக்கு இதெல்லாம்

லாயக்கில்லெ, உங்களுக்குத்தான், உன் கிளாசு, பாட்டில் எல்லாத்தையும் கோபாலிகிட்டே கொடுத்திருப்பே. யாரு பாடுவா? இது அவதாரம்னா; பாஷண்டனாம் - நன்னாருக்கு!"

சாப்பிட்டுவிட்டு மாடிக்கு வந்த கோபாலி, நடராஜூவோடு உட்கார்ந்து பாட்டிலைத் திறந்தது.

நான் ஒரு ஓரமாகக் கீழே உட்கார்ந்து பட்டாபிக்குக் கடுதாசி எழுதிக்கொண்டிருந்தேன்.

". . . எனக்கும் உங்களையெல்லாம் போல் கடவுளை நம்பினால் தேவலை போலிருக்கிறது. உடனே நான் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கிற கடவுளாக இருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. முப்பத்தைந்து நாளாகிவிட்டது புரிகிறதா? நினைத்தால் சில சமயம் பகீர் என்கிறது. நான் எவ்வளவு தைரியசாலி என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நீ, கோபாலி, இன்னும் உலகமே என்னைத் துணிந்த கட்டை என்றுதானே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் எப்பேர்ப்பட்ட துணிந்த கட்டையும் இந்த நிலையில் கிலிபிடித்து உள்ளுக்குள்ளே குருவிக் குஞ்சுமாதிரி நடுங்காமல் இருக்க முடியும் என்று தோன்றவில்லை. அதனால்தான் உன்னைப்போல ஒரு கடவுளிடம் வடிவமுள்ள கடவுளிடம் நம்பக்கூடிய திராணி, சிறுமை எல்லாம் இருக்கக்கூடாதா என்று தோன்றுகிறது . . ."

# 6

நடராஜனும் கோபாலியும் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. என் காதில்தான் விழவில்லையா? எழுதிய கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண்டிருந்தேன். கடுதாசி முழுவதும் பட்டாபியின் முதுகைப் போல, நெற்றியைப் போல, மார்பைப் போல, வயிற்றைப் போலத் தோன்றிற்று. ஒவ்வொரு எழுத்தையும் விரலால் நான் அவனுடைய அங்கங்களின் மீது எழுதியதுபோல, எழுதிக்கொண்டிருப்பது போலிருக்கிறது . . . பட்டாபியைத்தான் உள்ளும் புறமும் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த சமயத்தில் அவன்தான் வழிசொல்ல முடியும், கைகொடுக்க முடியும் . . . அவன் எதற்கும் பின்வாங்கியதில்லை. தயங்குவதில்லை. முடியாது என்று எந்த நிமிஷமும் சொன்னதில்லை. கேட்டதையெல்லாம் நிசி, பகல் என்று பாராமல் வாங்கிக்கொண்டு கொடுத்திருக்கிறான். உத்தரத்தில் தொங்குகிற பல்ப் ப்யூசாகி விட்டால் அவனுக்கு ஏணி வேண்டியதில்லை. ஒரு ஸ்டூல், அதன்மேல் அண்டா, அதன்மேல் அடுக்கன்சட்டி என்று கவிழ்த்து ஏறி சர்க்கஸ்க்காரனின் நிதானத்துடன், பல்பை மாற்றிப் போட்டு விடுவான். சப்போட்டா பழம் பறிக்க பால்கனிக்கு வெளிப்பக்கம் உதட்டைப் போல சிறிது துருத்தி வளைந்திருக்கும் குசலிமீது நின்று கிளையை எட்டி வளைப்பான். கால் சறுக்காமல் இருக்க வேண்டுமே . . . என் கால் கூசும். அவனுடைய கனம் தாங்காமல் குசலி விண்டுவிட்டால் . . . மாடி ஜன்னல் விளிம்பில் நின்று, ஒரு விளக்குமாற்றால் இரப்பில் படிந்திருக்கிற ஒட்டடையை, எட்டுக்கால் பூச்சியை வீசி வீழ்த்துவான். ஒரு காலின் ஒரு பக்கம்தான் பிடி. அந்தப் பக்கத்தில் சிறிது வியர்வை இருந்து வழுக்கிவிட்டால், கீழே பாயவேண்டும் . . . ஒவ்வொன்றாக அவன் முரட்டுக் காரியங்கள் நினைவுக்கு வந்துகொண்டிருந்தன . . . என்னை அவன் தூக்கினதும் ஞாபகம் வந்தது. தூக்கித் தலைக்குமேல் நெட்டி பொம்மை போல உயர்த்திச் சிரித்தான். நானும் சிரித்தேன். தப்பித் தவறிக் கீழே விழுகிற பயமே இல்லை. அவன் கைவிட மாட்டான் என்ற காரணம் தெரியாத தைரியம் . . . ஒவ்வொன்றாக கடுதாசியில் படமாகிக்கொண்டிருந்தது. விகார உயரம்; விகாரமான நடைகூட. பாதம், கணுக்கால், துடை, கை, உடம்பு என்று ஒருமிக்கப் பார்த்தால் ஒட்டாத ஒரு விகாரம். ஆனால் ஒவ் வொன்றும், ஒவ்வொரு அங்கமும், ஒவ்வொரு

மூட்டும் எனக்கு ஏன் பாந்தமாகப் படுகிறது? துருவித் துருவிப் பார்த்தேன். ஆமாம். ஒவ்வொரு அங்கமும் பொய்க்காத அங்கம் அவனுக்கு. பொய்க்காத கால், பொய்க்காத கை, பொய்க்காத பாதம், பொய்க்காத கண், பொய்க்காத பேச்சு, பொய்க்காத விருப்பம், பொய்க்காத முரட்டுத்தனம், பொய்க்காத துணிச்சல், பொய்க்காத பாசம் என்னிடம். நான் எதைக் கேட்டு முடியாது, இல்லை என்று அவன் சொல்லியிருக்கிறான் . .? பட்டாபி, நீ ஏன் இங்கு, இப்போது என் பக்கத்தில் இல்லை? ஏன், எண்ணூறு மைலுக்கு அப்பால் பட்டணத்தில் இருக்கிறாய் . .?

"காதில விழலியா, உன்னைத்தானே, அம்மணீ" - கோபாலி கூப்பிட்டது.

விழித்தேன்.

"எத்தனை தடவை கூப்பிடறது?"

"ஆழ்ந்து யோசிச்சிண்டிருக்கார்" - நடராஜன்.

"என்ன யோசிச்சிண்டிருக்கே - கூப்பிடறேன் . . . என்ன அப்படி கோட்டை கட்டிண்டிருக்கே . . . சார், உன்னைக் கூப்பிடறார் . . . தனியாப் போய் உட்கார்ந்திருக்காயே." - கோபாலி.

"என்னமோ எழுதிண்டிருந்தாப் போலிருக்கே. நீங்க எழுதி முடிச்சப்பறம்தான் கேட்டேன்" என்றார் நடராஜன்.

"என்ன எழுதிண்டிருந்தே?"

"லெட்டர்."

"யாருக்கு?"

"பட்டாபிக்கு."

"இப்ப என்ன திடீர்னு பட்டாபி ஞாபகம் வந்துது. இப்படி வந்து உட்கார்ந்துக்கோயேன். உனக்கு இங்கிலீஷ் பேசத் தெரியும்னு அழைச்சிண்டு வந்தா . . . என்னமோ பட்டாபி பட்டாபிங்கிறியே."

பாட்டிலைப் பார்த்தேன். முக்கால்வாசி தீர்ந்திருந்தது. எழுந்து அருகே போவதுதான் நல்லது என்று தோன்றிற்று, என்னையும் சொஞ்சம் மறந்திருக்கலாம்.

"ஹம்மா, தாயே, பராசக்தி!" என்று முனகல் கேட்டது. அந்த அம்மாள் மாடிப்படி ஏறி வந்த சிரமத்தில் இடுப்பைப் பிடித்துக்கொண்டு நின்றாள். பிறகு அருகில் வந்தாள்.

"என்னம்மா . .?" - நடராஜன்.

"என்னடா நடராஜு! மறுபடியுமா சீசாவை வச்சுண்டு உட்கார்ந்துட்டேள். சாப்பிடறதுக்கு முன்னாலெ ஒரு கோஸ் ஆயிடுத்தே. என்னத்துக்கு மறுபடியும்?"

"உபாசனைக்கு வேளைபோது உண்டோ?" - சொல்லிவிட்டு நடராஜனைப் பார்த்தது கோபாலி.

"நன்னாருக்கு உபாசனை . . ! அம்மாடி!" என்று ஒரு சோபாவில் தாயாரம்மாள்.

"நீங்கதான் சொல்ப்ட்டேளே அம்மா . . . பிராந்தி, விஸ்கி எல்லாம் உனக்குத்தாண்டாப்பான்னு. அதான் சாப்பிட்டுண் டிருக்கேன்" - என்று போலிப் பணிவுடன் சொன்னது கோபாலி.

"சொன்னேன். நான் சொன்னதை அப்படியே மாத்திப்ட்டியே."

"என்ன சொன்னேள்? என்ன மாத்திப்பிட்டேன்?"

"உனக்குத்தான் எல்லாம்னு சொன்னேன். நீதான் அதுகளுக்கு மாத்தினுடணுமா?" என்று மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டே என்னைப் பார்த்தாள் தாயார்.

மேலும் என்னைப் பார்த்துச் சொன்னாள். "நீ கூட என்னத்துக்காக வந்திருக்கே, அம்மணி. சும்மா குரு பாடறார்னு கேக்றதுக்கா? அவருக்கு சுச்ரூஷைன்னா பண்ணணும்? இந்த மாதிரி சாப்பிடறதுக்கு முன்னாடி, சாப்பிட்டதுக்கு அப்பறம், தூங்கறபோது, ஏந்துக்கற போதுன்னு சாப்பிண்டிருக்கறதைப் பார்க்கறதுக்கா, நீ கூட வந்திருக்கே! நீன்னா சீசாவைப் பிடுங்கி அலமாரிலே வச்சுப் பூட்டணும்! வரம்பு மீறாம நீன்னா கோடு கிழிக்கணும். அவன் தாண்டத்தாண்ட, நீ கோட்டைத் தள்ளித் தள்ளி போட்டுண்டிருந்தா? கிட்டப்பா இப்படித்தான் பண்ணிண்டேயிருந்தான். கடசீலெ ஈரல் கருங்கல்லாப்போயி வாயைப் பொளந்தான். மிதம்மா இருந்தா உசிரும் இருக்கும். அதுக்காக இருக்கேன்னு சாப்பிட்டுண்டும் இருக்கலாம். பொத்துன்னு குதிச்சா, மூச்சுமுட்டி முழுகி பிராணனுக்கே

ஆபத்தாச்சே!"

"ஆபத்தில்லெ. அதுதான் செய்யவேண்டிய காரியம்!"

"என்னது?"

"ஆமா. வயசானப்பறம் பாட முடியாது. சுருதி சேராது. குரல் சொன்னபடி கேக்காது. ஆனா இருக்கவனும் விடமாட்டான். நமக்கும் ஆசை விடாது. பாடி பிறத்தியார் காதையும் துளைச்சு, நம்ம பேரையும் கெடுத்துண்டு . . . பால்ய அபிமானத்தை நினைச்சுண்டு, தொண்ணூறு வயசு கிழம் எண்பது வயசு தேவடியாளைப் பார்த்து மகிழ்ந்திண்டிருக்கும். சின்னதுகளுக்கெல்லாம் நாராசமாயிருக்கும். எதுக்கு அந்த தண்டா எல்லாம். நன்னாப் பாடிண்டியி ருக்கறபோதே பிராணனை விடறதுக்கு வழியைப் பார்க்கறதா . . ?"

"போரும் போரும். ரொம்பப் பணிக்காத்தான் இருக்கு பேசறது. பேசாம படுத்துங்கோ ரண்டுபேரும். நாளைக்கு வேற கச்சேரி இருக்கு. ஊர் சுத்தி வேற பார்க்கணும்கறா அம்மணி. பேசாம படுத்துங்கோ. நடராஜன், ஏந்துரு சொல்றேன். மணி பன்னண்டரை ஆச்சு."

"ஒரு அரை ரவுண்டும்மா. பெரிய மனசு பண்ணுங்கோ" - கோபாலி.

"உங்க கையாலேயே அனுக்ரகம் பண்ணுங்கோ."

தாயாரம்மாள் சிரித்தாள். "சரி, அனுக்ரகம் பண்றேன்" என்று பாட்டிலை எடுத்து அரை அரை ஸ்பூன் ஊற்றினாள். "நடராஜு, ஏந்திரு சொல்றேன், சடசடன்னு சாப்பிட்டுட்டு," என்று எழுந்து இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்து காத்துக்கொண்டு நின்றாள்.

நான் பாட்டிலை எடுத்து அலமாரியில் வைத்தேன்.

வேறு வழியில்லாமல் ஒரே வாயில் விழுங்கிவிட்டு நடராஜன் எழுந்தார். கிழவி இரண்டு டம்ளர்களையும் எடுத்து வெளியே இருந்த குழாயில் கழுவி, அலமாரியில் கொண்டு வைத்தாள். பாட்டிலை கையில் எடுத்துக்கொண்டு, 'அம்பாள், சண்டை போடறதுக்காக மதுபானம் பண்ணினா. நீங்கள்ளாம் சாந்தமாயிருக்கறதுக்குப் பண்றேள். எங்கே போய் சொல்றது? என்னத்துக்கு இந்த எழவெல்லாம். பாடறதே கள்ளுக்குடிக்கறாப்பலதானே. தலையிலே பாட்டை எழுதின தெய்வம், இதையும் எழுதி வைக்யப்படாதோ தாயே, பராசக்தி. என்னடீம்மா

விளையாட்டு இதெல்லாம் . . . ஹம்மா . . . ஹம்மா" என்று ஆடிக்கொண்டே மாடிப்படியை இறங்கி நடந்தாள்.

கோபாலி அவள் படியிறங்கும்போது இரண்டாம் காதில் விழாமல் சொல்லிற்று: "நான் குஞ்சாளிகிட்ட ரண்டு குழந்தைகளைப் பெத்துதே, இதைச் சாப்பிட்டு, மறந்து போனதினாலெதான். கிழவிக்கிட்ட எப்படி சொல்றது? வளவளன்னு மறுபடியும் ஆரமிச்சுருவ சொன்னா" என்று என்னைப் பார்த்து முணு முணுத்தது. கட்டிலில் இருந்த மெத்தைச் சுருளைப் பிரித்தது. படுத்துக்கொண்டது.

என்னைக் கூப்பிடக்கூட அதற்குத் தோன்றவில்லை. அவ்வளவு தடுமாற்றமாக இருந்திருக்க வேண்டும். படுத்த கணத்தில் நன்றாக அயர்ந்தும் விட்டது. படியிறங்கின கிழவியைப் பார்த்து அது முணுமுணுத்ததை நினைத்து நினைத்துப் பார்த்தேன். சிரிக்க வேண்டும்போலிருந்தது. ஆனால் வந்தது என்னமோ இரக்கம். மெதுவாக அதன் காலடியில் உட்கார்ந்து காலை அமுக்கிப் பிடித்துவிட்டேன். "பாட்டி சொன்னதுபோல பிராந்தி விஸ்கி மட்டுமில்லை. நான், என்மாதிரி இன்னும் எத்தனையோ பேர் உனக்குத்தானிருக்கிறார்கள்" என்று ஜபம் பண்ணினவாறு ஆடுசதை, உள்ளங்கால், கால்விரல்கள் எல்லாவற்றையும் பிடித்துவிட்டேன். கோபாலிக்கு ஸ்மரணை இல்லை. எனக்குச் சிரிப்பும் வந்தது. பட்டாபி நினைவும் வந்தது.

மீண்டும் கிலி. எழுந்துகொண்டேன். பெட்டியை திறந்து பட்டாபிக்கு எழுதின கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். பட்டாபி யோடு பேசவேண்டும் போலிருந்தது. 'பட்டாபி, வண்டியில் வரும்போது பென்னெட் குடும்பம் என்று ஒரு வெள்ளைக் குடும்பத்தைப் பற்றி முன்பு எழுதியிருந்தேனே. அவர் எல்லார் மாதிரியும் என் சிரிப்பைப் பற்றிச் சொன்னார். வார்த்தைக்கு வார்த்தை நான் சிரிக்கிறேன். அழகாகச் சிரிக்கிறேன், தனக்கும் அந்த மாதிரி சிரிக்க முடியவில்லையே என்று சொன்னார். ஆனால் நான் ஸ்வாமியைப் பார்த்துச் சிரித்தது அவருக்குப் பிடிக்கவில்லை. நான் டில்லியில் வரிசை வரிசையாக இருந்த ஆயிரக்கணக்கான மரங்களைப் பார்த்துச் சிரித்தேன். வேப்பம் பழங்களைப் பார்த்துச் சிரித்தேன். பட்சிகளையெல்லாம் பார்த்துச் சிரித்தேன். மைசூரில் ராஜா ஆண்டபோது, சாலையில் போகிற வண்டி மாடோ குதிரையோ சாணம் போட்டுவிட்டால், உடனே எங்கிருந்தோ ஒரு ஆள் வருவான். அந்தச் சாணத்தைக் கூடையில் போட்டுக்கொண்டு போய்விடுவான். ஆனால் சுதந்திரம் வந்ததும், சாணத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, அப்படியே விட்டுவைக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்த மாதிரிதான் டில்லி மரங்களையும் வெட்டிப்

பொட்டலாக்கிவிடப் போகிறார்கள் என்று பயமாயிருந்தது. அங்கே ராஜ்யம் பண்ணுகிறவர்களைப் பார்த்துச் சிரிப்பாக வந்தது. மரம், பட்சி எல்லாம் பட்டிக்காட்டு சமாசாரங்கள் என்று அவர்கள் நினைப்பதுபோல் தோன்றுகிறது. சிரிப்பு வந்தது. அங்கே ஒரு பெரிய அதிகாரி வீட்டுக்குக் கோபாலியையும் என்னையும் சாப்பிடக் கூப்பிட்டார்கள். போனோம். சுற்றிலும் பெரிய தோட்டம். தாவாரத்தில் உட்கார்ந்து கோபாலியும் அவரும் மதுபானம் செய்தார்கள். நானும் அந்த அதிகாரி மனைவியும் கூடவே உட்கார்ந்திருந்தோம். கோபாலிக்கு அவர் அந்த மதுவின் உயர்த்தியைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். மரப் பீப்பாயில் வைத்து வைத்து அதை நாள் படுத்தி வயதாக வைத்திருந்தார்களாம். அதனால் உயர்த்தியாம். பிறகு சங்கீதத்தைப் பற்றிப் பேசினார்கள். பிரதிமத்யமத்துக்கு ப்ரீக்வன்ஸி எத்தனை என்று கேட்டார். கோபாலி பேந்தப் பேந்த விழித்தார். 'இதுகூடத் தெரியாமலா பெரிசாப் பாடறேள்' என்று சொல்லுகிறாற்போல முகத்தை வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஸ்வரத்துக்கு எத்தனை அலை அதிர்வுகள் என்று கணக்குப் போட்டுச் சொன்னார். பிறகு அலை அதிர்வு என்பது என்ன என்று விஸ்கி பாட்டில், மேஜை, குடிக்கிற கண்ணாடி, சிகரெட் சாம்பல் தட்டுகிற தட்டு, சிகரெட் அட்டை டப்பா எல்லாவற்றையும் விரலால் சுண்டி, தட்டித் தட்டிக் காண்பித்தார். கோபாலிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் என்னைப் பார்த்து "பாத்தியா அம்மணி, சங்கீதத்திலே எப்படி எல்லாம் சர்ச்சை பண்றார் பாரு. இதெல்லாம் ஒரு மேதை. சும்மாவா பெரிய டிபார்ட்மெண்டெல்லாம் கொடுத்து ஆட்சி பண்ணுங்கோன்னு சொல்றா" என்று அந்த மாமியையே பார்த்துக்கொண்டிருந்தார். மாமி நல்ல அழகு. சங்கீதம் தெரியாதாம். ஆனால் எந்த சங்கீத வித்வான் வந்தாலும் வீட்டுக்குக் கூப்பிட்டுச் சாப்பாடு போட்டுவிடுவார்கள். எந்த நாட்டியக்காரர்கள் வந்தாலும், எந்த பத்திரிகாசிரியர் வந்தாலும் முதல் சாப்பாடு அவர்கள் வீட்டில்தானாம். சௌடய்யா வந்திருக்கார் எங்காத்துக்கு, மதுரமணி வந்திருக்கார் எங்காத்துக்கு, அரியக்குடி வந்திருக்கார், ராஜரத்தினம் வந்திருக்கார், வாசன் வந்திருக்கார் என்று சொல்லிக்கொண்டிருந்தாள் மாமி. பேசிக்கொண்டேயிருக்கும்போது ஒரு மந்திரி வந்துவிட்டார். சிலப்பதிகாரத்தில் சங்கீதத்தைப் பற்றி என்னென்னவெல்லாம் சொல்லியிருக்கிறது என்று பேசிவிட்டு, கொஞ்சம் பாடியும் காண்பித்தார். அப்போதுதான் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.

உரக்கச் சிரித்துவிட்டேன். சட்டென்று திரும்பினார்கள். அப்படியே பாடறேளே என்று பரமார்த்தச் சிரிப்பாக மாற்றிக்கொண்டேன். எப்படியே என்றார். ஈச்வரம்மா பாடறாப்பலவே இருக்குன்னு நினைச்சேன். பேஷ்

பேஷ் அப்படியே நறுக்குனு சொல்லிட்டீங்களே என்றார். கோபாலி சிகைஷண்ணா கேட்கணுமா, பேசறதை எல்லாம் எவ்வளவு நுட்பமாக் கவனிக்கிறார் தெரியுமோ, நான் அதையே பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று இங்கிலீஷில் சொன்னாள் அந்த அம்மாள். "நீங்க ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறேளே" என்றார் அவர் சம்சாரம். "இத்தனை அழகான மரங்கள் எல்லாம் இருக்கே உங்க வீட்டிலெ? யாரு நட்டா இதெல்லாம்?" என்றேன். "எனக்கு எல்லா மரத்து மேலயும் ஏறணும் போலிருக்கு" என்றேன். எல்லாரும் ஒரு தினுசாக என்னைப் பார்த்தார்கள். சற்றுக் கழித்து அந்த மாமியின் பெண் வந்தாள். கலியாணம் ஆகிவிட்டது. மாப்பிள்ளை சீமையில் படிக்கிறான் என்றாள் மாமி. பாவம் என்றேன். நீங்கள் எல்லாம் இவ்வளவு படிச்சிருக்கேள். ப்ரீ லவ் சொல்லிக் கொடுக்காமல் இப்படி குழந்தையை பட்டிக்காட்டுப் பொண்ணு மாதிரி கலியாணம் பண்ணி வச்சுட்டேளே என்றேன். சொல்லிவிட்டு என் சொந்த சிரிப்பையும் சிரித்தேன். அவர்கள் என்னை அதிகப்பிரசங்கி என்று நினைத்தார்களா, பைத்தியம் என்று நினைத்தார்களா, எதை எதையோ படித்துவிட்டு, நாலு பேருக்கு நடுவில் இஷ்டப்படி பேசுகிற தான்தோன்றி என்று நினைத்தார்களா - எல்லாமாகவும் நினைத்தாற்போலிருந்தது. இன்னும் இரண்டு வீடுகளுக்குக் கூப்பிட்டார்கள். அவர்கள் வீட்டுப் பையன், பென்னெட் மாதிரியே சொல்லி வைத்தான். உங்க ஹஸ்பெண்ட் ரொம்ப நன்னாப் பாடினார் என்றான். அவர் என் கணவர் இல்லை என்றேன். ஓ, மன்னிக்கணும். உங்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டது என்று நினைத்தேன். இல்லை என்றேன். நீங்க வந்து . . . இவருக்கு என்று பையன் இழுத்தான். நான் கோபாலியோட மைத்துனி. ஆனால் சம்சாரம் என்றே சொல்லலாம் என்று மெதுவாகச் சொல்வது போலவும், ஆனால் அவன் அப்பா அம்மா காதில் விழும்படியாகவும் சொல்லி வைத்தேன். எல்லோருக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. பையனை ஏதோ சமாசாரம் சொல்வதுபோல உள்ளே அழைத்துப் போனாள் இந்த அம்மாள். அன்று இரவு கோபாலி கேட்டார் - ஏன் இப்படியெல்லாம் சிரிக்கிறாய், பொய்யெல்லாம் சொல்லுகிறாய் என்று. உங்களுக்கு மேலே சங்கீதம் தெரியும், உங்களுக்குத் தெரியாததெல்லாம் தெரியும் என்று அவர்கள் உங்களை பிரமிக்க அடிக்க நினைக்கிறார்கள். நானும் ஏதாவது சொல்லி பிரமிக்க அடிக்க வேண்டியதுதானே. இவர்கள் எல்லாம் தெரிந்ததாக, எல்லாம் தங்களுக்கு முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள். அதனால் இப்படி ஏதாவது சொல்லி வைத்தால், ஏது இந்தப் பைத்தியத்தை எல்லாம் கூப்பிட்டு உபசாரம் பண்ணுகிறோம், நம் அந்தஸ்து என்ன, அதிகாரம் என்ன என்று சற்றுக் கலங்குவார்கள். அவர்களை இப்படி கொஞ்சம் பைத்தியமாக அடிக்கிற சந்தோஷம்தான்

எனக்கிருக்கட்டுமே என்றேன். உங்களை யாரும் தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டார்கள்; நீங்கள் ஏதோ பாட்டுக்காரர் என்று விட்டுவிடுவார்கள். ஏதோ அழகாக இருக்கிறது என்று ஒரு கிறுக்கைக் கட்டிக்கொண்டு அழுகிறது என்று உங்களைப் பார்த்து அனுதாபப்படுவார்கள். ஆனால் கோபம் என்மேல்தான் இருக்கும். பரவாயில்லை என்று சிரித்தேன். கல்கத்தாவிலும் ஒரு ஆசாரமான கம்பெனி ஆபீசர் வீட்டில் எனக்கு எத்தனையோ லவர்கள் உண்டு என்று சொல்லி வைத்து அவர்கள் வீட்டுப் பெண்களையும் வீட்டுக்காரியையும் பயமுறுத்திவிட்டேன். அந்த மாமா எங்களை காரில் வைத்துக்கொண்டு ஊர் சுற்றிக் காண்பித்தார். அவர் பக்கத்தில் அவர் மனைவி, மனைவிக்குப் பக்கத்தில் நான், எனக்குப் பக்கத்தில் கோபாலி என்று காரில் பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தோம். மாமா இடது கையைத் தூக்கி பின்னால் போட்டுக்கொண்டிருந்தார். இரண்டு மூன்று தடவை என் தலைப் பூவைத் தொட்டார். நான் சட்டென்று, "என்ன மாமா தலைப் பூவைப் பிய்க்கிறேள்?" என்ற கோபித்துக் கொள்கிறாற்போல் கொஞ்சினேன். இந்த மாதிரி எத்தனையோ சிரிப்பு . . . இந்த சிரிப்புக்கெல்லாம் சேர்த்து வைத்து இப்போது அழவேண்டும் போலிருக்கிறது. நாகபுரியிலேயே முப்பது நாளாகிவிட்டது. இன்று முப்பத்தைந்து நாளாகிவிட்டது. இண்டர்மீடியட் படிக்கிறபோது ஒரு ஸம்ஸ்கிருத ராயர் வாத்தியார் எங்களுக்கு இருந்தார். காதலுக்குத் தமாஷ் வரி குழந்தை என்று ஒருநாள் சகுந்தலை வசன பாடம் நடத்தும்போது சொல்லிவிட்டுச் சிரித்தார். தன்னுடைய ஹாஸ்யங்களைச் சொல்லிவிட்டு அவர் தானே சிரித்துக்கொள்ளுகிற வழக்கம்.

இப்படிச் சிரிக்கிறதே அப்பாவி என்று நாங்கள் சிரிப்போம்.

இப்போது அது ஞாபகம் வந்து என்னை அழவைத்துக் கொண்டிருக்கறது. வயிற்றை வயிற்றை வைத்துத் தொட்டுப் பார்த்துக்கொள்ளுகிறேன். சாதாரணமாகத்தான் இருக்கிறது. இருக்கவேண்டும். நீயானால் இருக்கவேண்டும் பகவானே என்று சொல்லுவாய். எனக்கு அப்படிச் சொல்ல வாய் வரவில்லை. வந்தாலும் மனசோடு சொல்லமாட்டேன். இந்த சமயத்தில், இந்த க்ஷணத்தில் நீ கூட இருந்தால் தேவலை போலிருக்கிறது. ஒரு சமயம் கடவுள் என்று ஒன்று இருந்து, அது பிசாசு மாதிரி, சாதாரண துஷ்டன் மாதிரி இருக்குமோ? எல்லாரையும் பார்த்து, எதற்கும் சிரித்துக்கொண்டிருந்தாயே, இப்போது சிரி என்று என்னைக் குத்துமோ அது? எனக்கு இப்போதே புறப்பட்டு வந்துவிடவேண்டும் போலிருக்கிறது. நீ வழி சொல்லுவாய் - தைரியம் சொல்லுவாய் - எனக்கு என்னமோ பிரமை எல்லாம்

வந்துகொண்டிருக்கிறது - ஆஸ்பத்திரியில் கிடற்கிறாற்போல - வீல் வீல் என்று கத்துகிறாற்போல - வயிற்றுக்குள் ஏதோ உருள்கிறாற்போல - நான் போடுகிற சத்தம் வெளியே கேட்காமல் வாயில் யாரோ துணிப்பந்தை வைத்து அடைத்திருக்கிறாற்போல . . . கோபாலி லேசில் கிளம்புவதாக இல்லை. நாளை மாலை கச்சேரி - அதாவது இன்று மாலை - இப்போது மணி இரண்டாகிவிட்டது. நேற்று கச்சேரி பண்ணின மெய்ம்மறதி அவருக்கு. எல்லாரும் பாராட்டின போதையில் தூங்கிக்கொண்டிருக்கிறார் . . . சில சமயம் . . . சை . . . எதற்கு சை என்று கேட்கிறாய் . . . இந்தமாதிரி சமயங்களில் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளத் தோன்றும் . . . அப்படி . . . நான் அப்படி செய்ய மாட்டேன். என்னை யார் கேட்கக் கிடக்கிறது? முதல் முதலில் கலியாணமாகியா, தாயாராக ஆனாள் ஒரு பெண்? பத்து லட்சம் வருஷம் கழித்து மட்டும் என்ன வித்தியாசம் வந்துவிட்டது? இப்படியெல்லாம் பேசுகிறேனே தவிர, மார்பு வயிற்றுக்குள் மட்டும் என்னமோ கிலி, கால்சியம் இன்ஜக்ஷன் போல சூடாக இறங்கிக்கொண்டிருக்கிறது . . . நான் யாருக்காகப் பயப்படுகிறேன்? அவமானத்திற்கா, உயிர் போய்விடுமே என்றா? சில சமயம் வேறு ஏதாவது தேசத்தில் பிறந்திருக்கக் கூடாதா என்று நப்பாசை தட்டுகிறது. ஆனால் அந்த தேசம் எங்கேயிருக்கிறது? வண்டியில் பென்னெட் குடும்பத்தைப் பார்த்த பிறகு, வெள்ளைக்காரர்கள் நம்மைவிட கோழைகள், பத்தாம் பசலிகள் என்று தோன்றுகிறது. அந்த மாதிரி தேசத்தை நான்தான், என்னுள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களுக்கென்ன என்று நான் எல்லாரையும் பார்த்து அலட்சியமாகச் சிரித்தால் போதும். அந்த தேசம் அமைந்துவிடும். ஆனால் அந்த மாதிரி சொல்ல முடியுமா? தூக்கத்தில் சொப்பனத்தில் ஓட முடியாது என்கிறார்களே, அந்த மாதிரி அந்த அலட்சியச் சிரிப்பு எனக்கு வருமோ என்று ஒரு பகீர் சந்தேகம். நீ கூட இருந்தால் அப்படிச் சிரிப்பேன். கோபாலியின் பக்கத்தில் அந்தச் சிரிப்பு வருமா என்று சந்தேகமாயிருக்கிறது. எனக்கும் ஒன்றும் புரியவில்லை. முடிந்தால் கோபாலி வராவிட்டாலும் நானாவது பிய்த்துக்கொண்டு வந்துவிடுவேன். மனது அப்படி அடித்துக்கொண்டிருக்கிறது . . .

ஏன் இப்படி பயப்படுகிறேன் என்று புரியவில்லை. வயிற்றில் பெரிய கல் . . ."

இத்தனையும் மனத்திற்குள் பேசவில்லை. எழுதிக்கொண் டிருந்தேன். மேலே என்ன எழுதுவது என்று புரியவில்லை. இரண்டு காகிதங்களையும் எடுத்துப் பெட்டியில் வைத்தேன். மூடினேன்.

கோபாலியைப் பார்த்தேன். அதன் பெட்டியைத் திறந்தேன். பட்டுத் துணியில் சுற்றியிருந்த பாட்டிலை எடுத்து மெதுவாகத் திறந்தேன். அலமாரியிலிருந்து கிளாஸை எடுத்து, ஊற்றி, வெளியேயிருந்த குழாய்த் தண்ணீரைப் பிடித்துக் கலந்து வராந்தாவிலேயே நின்று சாப்பிட்டேன். இன்னும் கொஞ்சம் எடுத்துக் கலந்தேன். சாப்பிட்டேன். வயிறு முழுவதும் அடுப்பு மூட்டிவிட்டது. விளக்கை அணைத்துப் படுத்தேன்.

# 7

கண் விழித்தபோது, கார் சத்தமாகத் தெருச் சத்தம் காதில் புகுந்துகொண்டிருந்தது. சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை. பட்டணத்தில், வீட்டில் இருக்கிற மயக்கம். ஆனால்சப்போட்டா செடி தெரியவில்லை. சுவர் கண்ணாடிகள் ஜன்னலில் தெரியவில்லை. மாமரம் தெரியவில்லை. தென்னை ஓலைகள் தெரியவில்லை. ஜன்னலுக்கப்பால் பச்சையப்பன் முகம் தெரியவில்லை. மேலே அரிசிக் காகித கோளம் போர்த்த விளக்கு இல்லை. பட்டணத்து வீடு இல்லை. பம்பாயில் நடராஜன் வீடு என்று ஸ்மரணை தெளிய இரண்டு நிமிஷமாயிற்று.

சுற்றி முற்றிப் பார்த்தேன். யாரும் இல்லை. கோபாலி இல்லை. எழுந்து படுக்கையைச் சுற்றியபோது லேசாகத் தலைவலி. கோபாலி எங்கே? ரவிக்கை, கையெல்லாம் ஒரு வாடை. மதுவும் வியர்வையும் கலந்த இரவு வாடை. வெளியே குழாயில் பல்லைத் தேய்த்து, முகம் கழுவி, உடல் முழுவதையும் ஈரத்துணியால் துடைத்துக்கொண்டேன். பவுடரைத் திறந்து முகம், முதுகு, மார்பு, கை கால் கொட்டித் தேய்த்துக்கொண்டேன். கிழவியின் ஞாபகம் வந்தது. இடுப்பில் கையை வைத்துக்கொண்டு குச்சிக் கால்மீது சுமை மாதிரி நின்று, "நான் இறங்கி வந்தப்புறம் நீயும் சேவிச்சியோ . . . நான்தான் குப்பியைக் கீழே எடுத்துண்டு வந்துட்டேனே! ஏது உனக்கு? கோபாலி பொட்டிக்குள்ள வச்சிருந்தானோ?" என்று சிரிப்பது போலிருந்தது.

அந்த சிரிப்பைப் பார்க்கவாவது கீழே ஓடலாம். போகட்டும் போகட்டும் என்று யாரையும் மன்னிக்கிற முக மலர்ச்சி அது. அப்படியே பிரசன்னமாக இருக்கிறபோது 'இதை'யும் சொல்லிவிட்டால் என்ன?

அந்த நினைவு வந்தது. மீண்டும் வயிற்றில் கல். இவர்கள் யார்? நாம் யார்? முன்பின் தெரியாதவர்கள். ஒரு சமயம் ஏதாவது உதவி செய்தாலும், செய்துவிட்டு, நாம் ஊருக்கு வந்தபிறகு சிரித்துக்கொண்டு தானே யிருப்பார்கள்! இல்லை, தலையில் எழுத்து என்று முன்னந் தலையில் விரலால் அடித்துக் கொண்டுதானே இருப்பார்கள்?

தலைவலி வேறு.

உடம்பெல்லாம் வாடை தெரியாமல் பவுடரை நன்றாகத் தேய்த்துக்கொண்டேன். தலையை வாரிக்கொண்டேன். அத்தனையையும் மீறி தலைமயிர்கூட வாடை வீசுவது போலிருந்தது.

குழாயில் அலம்பிவிட்டு, பிடரியில் பவுடரைப் பூசி, தைலத்தை எடுத்துத் தடவி வாரிக்கொண்டேன்.

கீழே போனபோது, நடராஜனின் மனைவி காப்பியைக் கொண்டுவைத்தாள்.

"ரொம்ப நாழி வாசிச்சிட்டிருந்தே போலிருக்கே" என்று இடுப்பில் கை வைத்துக்கொண்டு நின்று சிரித்தாள் பாட்டி.

கிடைத்துவிட்டது - அந்தச் சிரிப்பு. சிறிது பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

"நடராஜுவும் கோபாலியும் யாரையோ பார்க்கணும்னு போயிருக்கா. நீ நன்னாத் தூங்கிண்டிருந்தே. இதோ வர சமயம் தான். எட்டு மணிக்கே போயிட்டா" என்றாள் பாட்டி.

"மணி என்ன இப்ப?"

"மணி பத்தேமுக்கால்."

"ஐயையோ" என்றேன். "அப்படியா தூங்கியிருக்கேன்."

"என்ன ஐயையோ! வெக்கமாப் போயிடுத்தோ - இத்தனை நாழி தூங்கிட்டமேன்னு. சேந்தாப்பல ஒரு மாசம் ரயில்லே போயிண்டேயிருந்திருக்கே. தூங்கினா என்னவாம்? என்னமோ முசுகுந்த மகாராஜான்னு நெனச்சினுட்டியோ? கோபாலிகூட சொன்னான் - எழுப்பிண்டு வரேன்னு. போடா போன்னு நான்தான் கட்டை போட்டேன் . . . நீ ஸ்நானம் பண்ணிட்டு ரெடியா இரு. அவா ரண்டுபேரும் வந்துடுவா. சாப்பிட்டுடலாம்."

திடீர் என்று ஒரு தைரியமாக இருந்தது. ஒன்றையும் நினைக்காமல் குளித்தேன்.

புடவை மாற்றிக்கொள்ளும்போதே, கோபாலியும் நடராஜனும் வந்துவிட்ட ஓசை கேட்டது.

"வந்தேளா? ரொம்ப நேரமாயிடுத்தே போயி" என்றாள் பாட்டி.

"ஆமாம். இரண்டு மூணு பேரைப் பார்த்துட்டு டிக்கட்டையும் புக் பண்ணிண்டு வந்தோம் - வி.டி.க்குப் போயி . . . இன்னிக்கி ராத்திரி ஊருக்குப் போகணுமாம்."

"யாருக்கு?"

"யாருக்கா? உங்க கோபாலிக்குத்தான்."

"என்ன கோபாலி? கச்சேரி எப்ப முடிச்சிட்டு ஊருக்குப் போறது?"

"எட்டரை மணிக்குக் கச்சேரியை முடிச்சுக்கறது. வந்து சாப்பிடறது. நேரே ஸ்டேஷனுக்குப் போறது."

"என்னது? ரண்டு மூணு நாள் இருக்கப் போறேன்னு சொன்னே. ஊரெல்லாம் சுத்திப் பார்க்கணும்னு சொன்னே."

"இல்லேம்மா. இன்னிக்கு அவசரம். போய்த்தான் ஆகணும்."

கிழவி கிண்டிக் கிண்டிக் கேட்டாள். "காரியம் இருக்கு" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிற்று கோபாலி.

என்னது திடீர் என்று?

மாலை கச்சேரிக்கு நானும் போனேன். சொல்லி வைத்தாற் போல எட்டரை மணிக்கு மங்களம் பாடிற்று. பாட்டில் சுரத்து இல்லை. ரயிலை நினைத்துக்கொண்டே பாடுவது போல் மணியை மணியைப் பார்த்துக்கொண்டிருந்தது. ஒரு அசிரத்தை.

அவசர அவசரமாக ரயிலில் கொண்டு ஏற்றினார்கள்.

ரயில் நகர்ந்ததும் "திருப்திதானே?" என்று கண்ணை உருட்டி விழித்தது கோபாலி.

"என்ன?"

"பட்டாபியை ரயில்லேர்ந்து இறங்கறபோதே பார்த்துடலாம் . . . நல்ல வேளையாப் பொட்டியைப் பூட்டாம படுத்துக்க ணும்னு தோணித்தே.

இல்லாட்டா நானும் கேட்வே ஆப் இண்டியா, மரைன் ட்ரைவ்னு ஊரைச் சுத்திண்டிருப்பேன். என்ன பைத்தியக்காரத்தனம் . .! பட்டாபி மாதிரி ஆதரவாக் காரியம் எல்லாம் செய்யத் தெரியாதுதான் எனக்கு. அதுக்காக மனுஷன் இல்லேன்னு நெனச்சே பாரு" என்று விழித்தது கோபாலி.

தாலிகட்டின பெண்டாட்டி மாதிரி உம்மென்று கேட்டுக்கொண்டிருந்தேன்.

பெட்டியத் திறந்து பாட்டிலை எடுத்து வெள்ளி டம்ளரில் ஊற்றிக் கலந்து என்னிடம் முன்னால் நீட்டிற்று கோபாலி.

"பேசாம சாப்பிடு, என்ன பயம்! என்ன கிலிக்கு வந்துடுத்து இப்ப?" என்றது.

இதற்கு முன் கோபாலியின் எதிரில் நான் தளர்ந்திருக் கிறேனோ? - பெரியப்பா வந்ததற்குப் பிறகு? அது எத்தனை பழைய கதை!

இன்று அந்த மாதிரி ஒரு அழுகை!

கோபாலி திடீர் என்று அப்பா மாதிரி இருந்தது - என் தலைமயிரை வருடியபோது.

# 8

எனக்கு என்ன வேண்டும்?

நான் ஏன் இத்தனை காலமாக இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ளவில்லை? இல்லை, வார்த்தையில்லாமல், உருவமில்லாமல் உள்ளுக் குள்ளே நிலவிச் சுழன்றுகொண்டிருந்த ஒன்றுக்கு பட்டாபிதான் உடம்பும் உருவமும் கொடுத்து விட்டானா?

உனக்கு என்ன வேணுமாம்!

என்ன அற்புதமான கேள்வி! அர்த்தமற்ற கேள்வி!

பட்டாபிக்கு நான் உடனே பதில் சொல்லவில்லை.

சொல்லித்தான் அவனுக்கு என்ன புரிந்துவிடப் போகிறது? எனக்குத்தான் என்ன புரிந்துவிடப் போகிறது?

ஆனால் பட்டாபி திடீரென்று குருநாதன் மாதிரி நிற்பதுபோல் தோன்றிற்று. அவன் கேட்ட கேள்வியை நான் எத்தனை நூறு பேரிடம் கேட்டுக்கொண்டே இருந்திருக்கிறேன்! நேராக, அப்படி பானையை உடைக்கிறாற்போல் கேட்பதில்லை. வார்த்தைகளில் கேட்காமல் கேட்டு வருகிறேன். கண்ணால் கேட்கிறேன். உடம்பால் கேட்கிறேன். கோபத்தால் கேட்கிறேன். சிரிப்பால் கேட்கிறேன். தம்பதிகளுக்குள் சண்டை மூட்டிவிடும்போது இந்தக் கேள்வியைத்தான் அவர்களுக்குத் தெரியாமல் கேட்டிருக்கிறேன். ஏற்கனவே மனத்தாங்கல் உள்ள கணவன் - மனைவிகளின் இடையே நின்று, இரண்டு பேரையும் ஆளுக்கு ஒரு கையை நீட்டி, தள்ளி இடைவெளியை பெருக்கிப் பெருக்கி, இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் கண்ணில் படாமல் போகிற வரையில் தள்ளிய பொழுதெல்லாம் இந்தக் கேள்வியைத்தான் கேட்டிருக்கிறேன்.

கோபாலிக்குத் தெரியாதவர்கள் யார்? அதன் பாட்டில் சுழலாதவர்கள் யார்? பழுப்பு அட்டைக்குள்ளே காதுமடிந்த கடுதாசிகளில் கண்ணையும் உயிரையும் பண விரையம் வைத்து மரத்துப்போன சர்க்கார்

அதிகாரிகளுக்குக்கூட, அதன் பாட்டைக் கேட்டவுடன், விழித்துச் சுற்றிலும் பார்த்து வியந்து, உயிரிருப்பதின் சின்னங்களுடன் அசையத் தோன்றியிருக்கிறது. அதன் பயனாக நான் இரண்டு மூன்று தடவை, கஜ்ஜை பண்பாட்டுக் கோஷ்டிகளில் கூட்டத்தோடு கூட்டமாக விமானம் ஏறிப் பறந்தேன். சைனாவில் ஆடினேன், ஜப்பானில் ஆடினேன், லண்டனில் ஆடினேன், பாரிசில் ஆடினனேன், ரஷ்யாவில் ஆடினேன். பக்கத்து நாடுகளுக்கெல்லாம் போய் ஆடினேன். இம்ப்ரஸாரியோ கையை வளைத்து வளைத்து மேடைக்குத் தள்ளுவான். கையை வளைத்து வளைத்து அறிமுகப்படுத்துவான். கடைசியில் ஆட்டம் முடிந்ததும் கூட்டமாக எழுந்து நின்று சபை கைதட்டும். ஓயாமல் கைதட்டும். ஒவ்வொரு தடவையும் முன்னே வந்து குனிந்து குனிந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சில சமயம் உள்ளே போன பிறகு கைதட்டல் நிற்காமல் நாலைந்து தடவை திரும்பித் திரும்பி வந்து ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஐந்தாவது தடவை வந்தபோது சிரிப்பு வந்தது. வெளியே காட்டிய புன்னகைக்குள் வெடித்த வேறொரு சிரிப்பு. என்னத்தைக் கண்டுவிட்டார்கள்? எதற்காக இப்படித் திரும்பத் திரும்பக் கூப்பிடுகிறார்கள்? என்னத்தைப் புரிந்துகொண்டுவிட்டார்கள்? இந்த அகம்பாவத்திற்கும் அடியில் நாம் புரிந்துகொள்ளாதது ஏதாவது இவர்களுக்கு புரிந்திருக்கிறதோ என்னவோ என்ற ஒரு சிறு குறுகுறுப்பு. நமக்கே ஒன்றும் புரியவில்லையே? எதற்காக ஆடினேன், ஆடுகிறேன் என்று எனக்கே புரியவில்லை. இவர்கள் என்னத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள்?

"க்ரேட் க்ரேட்" என்று யாரோ ஒரு கிழவர் வந்து வேஷம் கட்டுகிற அறைக்குள் வந்து சொன்னார். கும்பிட்டார். நான் அவர் கையைப் பிடித்து இழுத்துக் குலுக்கினேன். எங்களுக்கு மானேஜராக வந்திருந்த அக்கர்வாலுக்கு உடம்பெல்லாம் கடிக்காத கறுப்பெறும்பு ஊர்வதுபோல் இருந்திருக்க வேண்டும். நாங்கள் கும்பிட்டால் போதும் என்று இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறவர்.

க்ரேட் க்ரேட் என்று சொன்ன கிழம் என்னத்தைக் கண்டு க்ரேட் க்ரேட் என்கிறது? என்ன புரிந்துவிட்டது அதற்கு! எனக்கு என் சிநேகிதி! ஆடி ஓய்ந்துகொண்டிருக்கிற அரைக்கிழவி சொல்வது ஞாபகம் வந்தது. "இப்பதான் ஆடறதுன்னா என்னன்னு புரிய ஆரமிச்சிருக்கு. ஆனா ஆட முடியலெ" என்று அந்த அரைக்கிழவி உடம்பை நொந்துகொள்ளும். அதனால்தான் அந்தக் கிழவர் வந்து "க்ரேட் க்ரேட்" என்று சொன்னபோது "சும்மா உளறாதே - இந்தா - இந்த கையைப் பிடிச்சுக் குலுக்கு.

இருபத்தெட்டு வயசுக் கை. இதுதான் உனக்கு வேணும்" என்று மனசிற்குள் சொல்லிக்கொண்டேன். பட்டாபியின் முழியும் உயரமும் அப்போது "என்ன வேணும் என்ன வேணும்?" என்று மனசின் ஓரத்தில் எங்கோ இருளில் பெட்ரூம் விளக்கைப்போல முத்து வெளிச்சமாக நின்று கேட்பதுபோலிருந்தது. திருப்பித் திருப்பி ஒன்றையே ஆடிக்கொண்டிருப்பதை நினைத்து, முதல், இரண்டாம், மூன்றாம், நாலாம், ஐந்தாம் தடவை போக மற்ற தடவைகளில் இயந்திரமாக, சைக்கிள் விடுகிறதுபோல் ஆடி ஆடின அலுப்பு அப்போது! இவர்கள் என்னத்தைக் கண்டுவிட்டார்கள்! நமக்கே அலுத்துப் போயிருக்கும்போது? ஒரு தடவைக்குமேல் ஒன்றையே எப்படித் திருப்பித் திருப்பிச் செய்யமுடியும்? இந்தக் கிளித்தனத்திற்காகவா இந்தக் கைதட்டல்!

மூன்றாவது தடவை போய்விட்டு ஊருக்குத் திரும்பியதும் கோபாலியைப் பார்த்ததும் குபீர் என்று ஒரு எரிச்சல். அந்தத் தடவை கிழக்கே போய்விட்டு வந்ததால் அவ்வளவு அலுப்பு இல்லை. டோக்கியோ, சிங்கப்பூர், பாங்காக், ஜாகர்த்தா என்று ஒப்பித்த கதையெல்லாம் ஒரு மணி நேரம் கோபாலி ஆசையாகக் கேட்டது.

"இனிமே ஆப்ரிக்காவும் அமெரிக்காவும்தான் பாக்கி" என்றது அது.

"ஒண்ணும் பாக்கியில்லெ."

"ஏன் அங்கேயும் போய்ட்டு வந்தாச்சா?"

"நான் இனிமே எங்கியும் போகமாட்டேன் இந்த சலங்கையைக் கட்டிக்கிண்டு."

"என்ன கோபம் திடீர்னு? யார் மேல?"

"என்மேலே! உங்க மேலே! . . . நீங்க நூறு கீர்த்தனத்தைப் பாடம் பண்ணிவிட்டு, முப்பது ராகத்தைப் புரிஞ்சிண்டு, முப்பத்தஞ்சு வருஷம் திருப்பித் திருப்பிப் பாடிண்டு காசா அரிச்சுக் கொட்டலாம். எனக்கு முடியலெ. கால் வலிக்கிறது."

"கால் வலிக்கிறதா?"

"மண்டையிலே இருக்கிற கால் வலிக்கிறது. மனசுக்குள்ள இருக்கிற கால் வலிக்கிறது. திருப்பித் திருப்பி ஒண்ணையே பண்ணிண்டிருக்கிறது எப்படி? என்ன இது?"

"முன்னே ஒரு தடவை வயத்திலே என்னவோ வந்தடுத்துன்னு எரிஞ்சு விழுந்தே. குழந்தைகளையெல்லாம் குப்பைத் தொட்டியிலே போடணும்னு சீறிண்டிருந்தே. இன்னிக்கு திருப்பித் திருப்பி எதையும் செய்யப்படாதுன்னு அலுத்துக்கறே! உனக்கு என்னதான் வேணும்?"

கேள்வி மண்டையில் அடிப்பதுபோல் வந்தது. பட்டாபி கேட்டதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்!

கோபம் வந்தது. அதன் உண்மையைக் கேட்டு சிரிப்பு வந்தது.

"முதல் தடவை ஆடறது பயம். அப்புறம் அதையே ஆடறது தைரியம். மூன்றாவது தடவை ஆடறது பழக்கம். நாலாவது தடவை ஆடறது, புதுசா ஏதாவது இருந்தா கல்பனை. அஞ்சாவது தடவை அலுப்பு. அப்புறம் எல்லாம் செக்கு மாடு. எனக்குப் பிடிக்கலே. எல்லாரும் கை தட்டினா. உள்ள வந்து உபசாரம் சொன்னா. இப்படி தோசையைத் திருப்பித் திருப்பிப் போட்டு அடுக்கற மிஷினுக்கா இத்தனை உபசாரம்னு பரிதாபமாயிருந்தது. அதுக்காக கையாவது பிடிச்சுப் பார்க்கட்டுமேன்னு கையைக் குலுக்கக் கொடுத்தேன். அது புதுசா இருக்கு. கையிலே எத்தனை தினுசு. ரொம்ப ஆச்சரியமாயிருந்தது. கையைப் பிடிச்சுக் குலுக்கற போது, அவன் என்ன தொழில் பண்றான்னு கண்டுபிடிச்சுடறாப் போல இருக்கும். இந்த ஊர்லே பஸ்ஸிலே போறபோது சில சமயம், சமுத்ரத்திலே மீன் பிடிக்கிறவாள்ளாம் குப்பத்து பஸ் ஸ்டாப்பிலே வந்து ஏறுவா. ஒவ்வொருத்தருக்கு கை விரலைப் பார்த்தா திண்டு திண்டா இருக்கும். நகம் கூட ஒவ்வொண்ணும் ஒரு ரூபா அகலம் இருக்கும். வலை வீசுறதும் துடுப்புப் போடறதுமா இருக்கிறதுனாலெ இப்படீன்னு நெனச்சுண்டேன். அதனாலே கையைப் பிடிச்சு குலுக்கறபோதே, என்ன வேலை செய்யறான்னு சொல்லிவிடலாம்போல இருக்கும். ஆனா அதுவும் சரியில்லையின்னு புரிஞ்சுது. பெல் கிராடிலே ரண்டு பத்திரிகைக்காரன் வந்து கை குலுக்கினான். ஒருத்தன் கை அப்படியே இருப்புப்பட்டம் மாதிரி இருந்துது. இன்னொருத்தன் கை பூனைக்குட்டியைத் தோலைப் புடிச்சு தூக்கறாப்போல இருந்துது. இது எப்படின்னு போன தடவை முழுக்க ஒவ்வொரு கையாப் பிடிச்சு யோசிச்சிண்டிருந்தேன் . . ."

"இவ்வளவு பெரிய டூர் போய் இதுதானா மிச்சம்?"

"நானும் அதைத்தான் கேட்டுக்கறேன். ஆனா எல்லாருக்கும் நான் கையைக் கொடுத்ததனாலே பெரிய திருப்தி. நம்ம நாட்டியத்தை அவா

புரிஞ்சுண்டதை விட, இந்த திருப்தி எத்தனை பெரிசா இருந்திருக்கும்!"

"அது போரும் எனக்கு?"

"போருமோ என்னவோ. நாட்டியத்தைப் பார்த்து, உங்க பாட்டைத்தான் கேட்டு, யாரு என்ன பண்ணப்போறா? தான் ஆடப்போறாளா, பாடப்போறாளா?"

"எனக்கும் ஒண்ணும் புரியலியே நீ சொல்றது."

கோபாலிக்கு என்ன புரியவில்லை என்று எனக்குப் புரியவில்லை.

முதல் தடவை போய் வந்தபோது, கோபாலி வெகு துணிச்சலுடன் கேட்டது. "பம்பாயிலே பயந்துண்ட மாதிரி ஒண்ணும் பயம் கியம் வந்துடலியே?" என்று பேச்சுவாக்கில் விட்டது.

"நான் இப்ப அதெல்லாம் ஜாக்ரதையா இருக்கத் தெரிந்து கொண்டுவிட்டேன்" என்று பட்டென்று பதில் சொன்னேன்.

அதற்கு என்ன புரிந்துவிடப்போகிறது? இந்த உலகத்தில் இருக்கிற அத்தனை ஆண்களுக்கும் ஒரு கணமாவது மனைவியைப் போல இருந்துவிட வேண்டும் என்று எனக்கு ஆசை என்று சொன்னால் அதற்கு என்ன புரிந்துவிடப்போகிறது? நான் அதை வாயைவிட்டுச் சொன்னால், பதில் என்று ஏதோ கிண்டலாகச் சொல்லப்போகிறது. கிண்டல் பண்ணுகிறவர்கள், புரியாததால்தான் கிண்டல் செய்கிறார்கள். ப்ளாரின், லட்விக், ஐவன், பீனே, கயோவானி, பர்வேனு - என்று அந்த இளைஞர்கள் பெயர்களை அடுக்கினால் அதற்குக் கோபம் வரலாம். அல்லது என்னைக் கல்லுரல் என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு சிரிக்கவோ, பரிதாபமோ படலாம். ஜாடைமாடையாக ஒருதடவை அப்படிச் சொல்லவும் சொல்லியிருக்கிறது. நாராயணசாமி என்று அவர்கள் கிராமத்தில் ஒரு மனிதராம். இரண்டு வீடு தள்ளியிருந்தாராம். அவர் மனைவியிடம் கல்பகல் தெரியாமல் அடைந்து கிடப்பதைப் பார்த்து, நாராயணசாமியின் வீட்டோடு கிடந்த ஒற்றைக் கண் கூனல் அத்தைக் கிழம் சொல்லிற்றாம்? "ஏண்டிம்மா உனக்குத்தான் கொஞ்சம் சுரணை இருக்க வாண்டாமோ - என்னன்னு நினைச்சுண்டே - தோல்னு எண்ணமா, கல்லோரல்னு எண்ணமான்னு கேட்டா, பேசாம, வயலுக்குப் போய் வேலையையாவது கவனிப்பனோல்லியோ!" என்று மருமகன் மனைவியைக் கடிந்துகொண்டாளாம். என்னமோ ஊர்க்கதை சொல்லுவதுபோல் இதை

என்னிடம் சொல்லிற்று கோபாலி . . . நான் நடந்ததைச் சொன்னால், உடம்பு, வியாதி என்று ஏதாவது ஆரம்பித்திருக்கும்.

"நான் இனிமேல் ஆட்டம் கீட்டம்னு எங்கேயும் போகப் போறதில்லெ" என்று அன்றைய பேச்சை முடிக்க முயன்றேன்.

"இனிமேல் டூரே வாண்டாம்கறே?"

"டூர் வாண்டாம்கலெ. ஆனா ஆடிப்பாடிண்டு போக மாட்டேன். என் இஷ்டப்படி போவேன். சுத்துவேன். பேசுவேன். மனுஷாளையெல்லாம் பார்ப்பேன். மலைமேலே நிப்பேன். சமுத்ரத்துக்கு முன்னாலெ நிப்பேன். கடைத்தெருக்களிலெ போய் நிப்பேன் . . ."

"எதுக்காக வந்திருக்கே, என்ன வேணும்னு யாராவது கேட்டா?"

"உனக்கென்ன அதைப்பத்தின்னு சொல்லிட்டு, நகர்ந்து போயிடுவேன்."

அப்படி கோபாலிக்கு பதில் சொல்லுகிற போதும் பட்டாபி மனசின் ஓரத்தில் வந்து நின்று உனக்கு என்ன வேணும் என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

# 9

முதல் தடவை விமானங்களில் பறந்து, ஆடிவிட்டு, ஊருக்குத் திரும்பி வரும்போதே பட்டாபி அங்கு இல்லை. பம்பாய்க்கு அன்று போய்விட்டு வந்ததும் கோபாலி அவனை மூன்றே நாளுக்குள் வீட்டை விட்டுக் கிளப்பிவிட்டது. நான்காவது நாள் ஒரு ரிக்ஷாவை வாசலில் கொண்டு நிறுத்தினான். பெட்டியைக் கொண்டு வைத்தான். படுக்கையையும் ஒரு கூஜா, மரடப்பா என்று மீதியிருந்த சாமான்களை எடுக்க மாடிப்படி ஏறி வந்தான்.

"எங்கே போறே" என்றேன்.

"வேற ரூம் பார்த்தாச்சு."

"எங்க?"

"சைதாப்பேட்டையிலே."

"உன்னை நான் ரூம் பார்த்துண்டு போகச் சொன்னேனா?"

"இல்லெ."

"யாரைக் கேட்டுண்டு புறப்பட்டே?"

"மாமாவைக் கேட்டுண்டு."

"உனக்கு அவர்தான் எசமானரா?"

"இந்த வீட்டிலெ அவர்தான்."

"நான் உனக்கு எஜமானி இல்லியா?"

பட்டாபி புன்சிரிப்புச் சிரித்தான்.

"இப்படிப் போறதுக்கு உனக்கு வெட்கமா யில்லெ?"

"இருக்கறது. இன்னும் வெக்கமா யிருக்கே."

"அதுக்காக திடீர்னு சொல்லாம கொள்ளாம புறப்பட் டுடணுமா?"

"எதுக்காக இந்த மரியாதையெல்லாம்? வாய்விட்டுப் பேசினாத்தானா மரியாதை?"

"நான் இப்ப மரியாதையைப் பத்திப் பேசலெ."

"மரியாதைதான் இது . . . மரியாதைன்னா அளவு, வரம்புன்னு அர்த்தம். அதை வாயாலே கட்டிப் பார்த்துண்டிருக்க முடியாது."

"நீ பொட்டியை உள்ள கொண்டு வச்சுட்டு, ரிக்ஷாவை அனுப்பப் போறியா இல்லியா?"

"இப்ப நான் போகத்தான் போகணும்."

"நீ இத்தனை இனம் கெட்டவன்னு நான் நினைக்கலியே."

மறுபடியும் அவன் முகத்தில் புன்னகை.

"இளப்பமாயிருக்கா?"

'இல்லை' என்பதுபோல் தலை அசைத்தான்.

"பேசாம இங்கேயே இரு."

"அம்மணி, நான் அன்னிக்கிக் கேட்டேன், உனக்கு என்ன வேணும்னு. நீ பதில் சொல்லலெ. ஒரு குறிப்பாச் சொல்லியிருந்தா, நான் ஒரு வீடே பார்த்திருப்பேன். எங்கம்மா என் மேலே உசிரை வச்சிருக்கா. உன்னைவிட தைரியசாலி அவ. ஒரு வார்த்தை சொன்னேன்னா, அடுத்த முகூர்த்தத்திலே சாஸ்திரிகளைக் கூப்பிட்டுட்டு, மணையிலே உட்கார்த்தி வச்சுடுவ ரெண்டுபேரையும்."

இதைக் கேட்டதும் கோபம் எல்லாம் பறந்துவிட்டது. பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினேன். வயிற்றைப் பிடித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

நான் சிரித்துக் கொண்டிருக்கும்போதே, சடசடவென்று கீழே இறங்கிவிட்டான் அவன்.

என் சிரிப்பு மும்முரத்தில் எனக்கும் அவனைத் தடுக்கத் தோன்றவில்லை. அவன் இறங்கிப் போவதுகூட மனதில் உறைக்க இரண்டு மூன்று கணம் பிடித்தது.

நான் மாடிக் கிராதியண்டை போய்ப் பார்த்தேன். பட்டாபி தெருவில் ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்துகொண்டிருந்தான். அவசர அவசரமாகக் கீழே இறங்கினேன்.

மாடிப்படி யிறங்கித் தாழ்வாரத்திற்கு வருவதற்குள் ரிக்ஷா நகர்ந்துவிட்டது.

காம்பவுண்டைக் கடந்து நடந்து கேட்டண்டை நின்றேன். ரிக்ஷா தெரு திரும்பிவிட்டது.

பார்த்துக்கொண்டே நின்றேன்.

புது மாம்பலம் ஆள் அரவமற்ற காடுமாதிரி ஆகிவிட்ட பிரமை. கண் இருள்வதுபோல் ஒரு தோற்றம். கோபத்தினாலா, பயத்தினாலா என்று புரியாத ஒரு திகைப்பு. இரண்டும் இல்லை - அவமானம் போலிருந்தது. யார் அவமானப்படுத்தியது? பட்டாபியா, கோபாலியா? நிலைகொள்ளாமல் உடம்பில் ஒரு பரபரப்பு. கையில் ஏதோ சாவி வளையம் இருந்தது. எப்போது எங்கே கையில் எடுத்தேன் என்று புரியவில்லை. கட்டைவிரல் வளையத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தது.

திரும்பி வரும்போது நடப்பது சிரமமாயிருந்தது. கீழே குடியிருக்கிற குடும்பக்காரி, குழந்தையை இடுப்பில் வைத்தவாறு என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். வழக்கமாகப் பார்க்கிற பார்வை. அந்த வீட்டு ஆண், இவள், பெரிய பெண், அடுத்த பையன் - எல்லாரும் வழக்கமாகப் பார்க்கிற பார்வை. ஓ நீ இந்தமாதிரி மனுஷியா என்று பார்க்கிற, கோபத்தை சலனமற்ற முகத்தில், அதே சலனமற்ற, இமைக்காத பார்வைக்குள் அடக்கிக்கொண்ட பார்வை. எனக்கு இது பழக்கமாகிவிட்ட பார்வை. நான் அசட்டை செய்து பழகிக்கொண்ட பார்வை. என் அவமானத்தையும் புரிந்துகொண்டு, புரியாததுபோல், என்ன என்று கேட்கிறாற்போன்ற பார்வை. இப்போதும் சட்டை செய்யாமல், கதவைத் தாழிட்டுவிட்டு மேலே ஏறினேன். பச்சையப்பனைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. ஜன்னலில் எட்டிப் பார்த்தபோது அவனுடைய அறை பூட்டியிருந்தது.

கையில் என்ன வெறி!

கோபாலி மாட்டியிருந்த படங்களை விறுக்கென்று இழுத்தேன்.

தியாகையர் ஆணியோடு பிடுங்கிக்கொண்டு வந்தார். ராமனும் கிருஷ்ணனும் கயிறறுந்து வந்தார்கள். அதது காப்பாற்ற முடியாமல் கீழே மல்லாத்தியும் குப்புறத்தியும் கிடந்தது.

மேலண்டை அறையில் போய் கட்டிலில் படுத்துக்கொண்டேன். கண்ணை மூடினேன். மறுபடியும் பயம்.

சைதாப்பேட்டையில் அவன் குடிபோகும் விலாசம் என்ன?

தெரியவில்லை. அவன் சொல்லவில்லை. சொல்லாததற்கு என்ன பொருள்? புதுச்சேரிக்கு ஓடிவிட்டாற்போன்று அர்த்தமா? யாரும் கண்டுபிடிக்க முடியாது, அல்லது பார்த்தாலும் பிடிக்க முடியாது என்று அர்த்தமா?

நான் சிரித்துக்கொண்டு நின்றது, கண்முன் வந்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"மணையிலே உட்கார்த்தி வைக்கிறதா? எதுக்கு? கலியாணமா? நம்ம ரண்டு பேருக்குமா? எனக்கா கலியாணம்? யார்கிட்டே பேசறே நீ? கலியாணம் பண்ணிக்கிறவளா இருந்தா ஏன் இங்கே வந்திருக்கணும்?"

"கலியாணம் வாண்டாம். பின்னே என்னதான் வேணும்?"

"ஓங்கி உன்னை அறையணும்" என்று மனதிற்குள்ளாகவே பட்டாபியை ஓங்கி அறைந்தேன்.

கன்னத்தைத் தடவிக்கொண்டே அவன் நிற்கிறான்.

ஏதோ பூட்டுத் திறக்கும் சத்தம். இருமலும் காறலும் கேட்பது போலிருந்தது.

எழுந்துபோய் பார்த்தபோது, பச்சையப்பன் அறையில் விளக்கு எரிந்தது.

வெளியே வந்தவன் ஜன்னலில் எட்டிப் பார்த்தான். மாலை வேளை.

என்னைப் பார்த்தான்.

"லைட் போடட்டுங்களா?"

"அது கிடக்கட்டும். பட்டாபியைப் பார்த்தியா?"

"காலையிலே பார்த்ததுதாங்க."

"இப்ப வழியிலே பார்க்கலெ? எங்கேர்ந்து வரே?"

"அய்யா வீட்டிலேர்ந்து."

"பட்டாபி சைதாப்பேட்டைக்குக் குடிபோயிட்டார்" என்று கதவைத் திறந்து பின் தாழ்வாரத்திற்குப் போனேன்.

"குடி போயிட்டாங்களா?"

"ஆமா. சைதாப்பேட்டைக்கு."

"ஏங்க?"

"ஐயாவைத்தான் கேக்கணும்."

"பெரிய ஐயாவைங்களா?"

"ஆமாம்."

"ஏங்களாம்."

"அதான் நீதான் சொல்லிட்டியே . . . பெரிய அய்யா இருக்கறப்போ, சின்னய்யா ஒருத்தர் எப்படியிருக்க முடியும்?"

பச்சையப்பன் குனிந்துகொண்டு நின்றான். பிறகு கீழே கிடந்த படங்களைப் பார்த்தான்.

எடுத்து ஓரமாக வைத்தான்.

"அதற்காக இப்படி செஞ்சிடறதுங்களா?" என்று படங்களை, என்னமோ

கீழே விழுந்து சிராய்த்துக்கொண்ட குழந்தையைத் தட்டிவிடுவதுபோல் தட்டி, துண்டால் துடைத்தான். சுவர்மீது சார்த்தி வைத்தான்.

"ஐயாட்டபோய் நான் வரச்சொன்னேன்னு சொல்லிட்டு வா."

"இப்பவேங்களா?"

"பின்ன எப்பவே?"

"ஐயா வரபடி வரட்டுங்களே!"

"என்னது!"

"அம்மா, நான் ஒண்ணு சொல்றேன். கொஞ்சம் நீங்க கேட்டுக்கணும். என்னடா, ரொம்ப இதாட்டம் சொல்றானேன்னு நினைக்காதீங்க. உங்க மேலே இருக்கிற விசுவாசத்துனாலெ சொல்றேன்."

"என்ன சொல்லு."

"அடுத்த மாசம், நான் கல்யாணம் கட்டிக்கப் போறேன். இங்கேயே கொல்லைப் பக்கம் குடிசை போட்டுக்கலாம்னு இருக்கேன். அதுவரைக்கும் நீங்க ஒண்ணும் பண்ணாதீங்க. நீங்க ஏதாவது அய்யாவோடு கோச்சிக்கிட்டு, எங்கியாவது போயிட்டிங்கின்னா, எனக்குத்தான் பெரிய நஷ்டமாப் போகும்."

எனக்கும் ஒன்றும் புரியவில்லை.

"கலியாணம் பண்ணிக்கப் போறியா?" என்று இயந்திரம் மாதிரி கேட்டேன்.

"ஆமாங்க. அடுத்த மாசம். நீங்க இருக்கணும். கலியாணத்துக்கு நீங்க வரணும். சின்னய்யாவைக் கண்டா, ஐயாவுக்குப் பிடிக்காம இருக்கலாம். நீங்க ஒண்ணும் இப்ப சொல்லாம இருந்தா, எனக்குப் பெரிசா என்னமோ கிடைச்சாப்பல இருக்கும். இப்ப பெரியய்யா வரவாணாம், இங்க. நீங்களும் ஏதும் அவரைச் சொல்ல வாணாம் . . . கொஞ்சம் உட்கார்ந்துங்கம்மா. நான் சொல்றதை கொஞ்சம் உட்கார்ந்துகினு கேளுங்களேன்."

என்ன இது? குரலில் ஒரு அதிகாரம் மாதிரி? இல்லை - செல்ல அதிகாரம்.

என் உடம்பு கோபத்தில் நடுங்குகிறதா? அதைப் பார்த்துவிட்டுத்தான் இப்படி உரிமையோடு அதட்டல் மாதிரி அதட்டுகிறானா?

கீழே பாயை விரித்து உட்கார்ந்துகொண்டேன்.

"சொல்லு . . . நீ எப்ப கலியாணம் நிச்சயம் பண்ணினே?"

"அது ஒரு வருசத்துக்குமேலே ஆயிட்டுது. சொந்தத்திலேதான்."

"சொல்லவேல்லியே."

"இன்னக்கிம் சொல்றதாக இல்லை. பத்திரிகையை கையிலெ கொடுக்கறப்ப சொல்லலாம்னு இருந்தேன். இப்பதான் சட்டுனு சொல்லணும்போல வந்திட்டுது."

கலியாணப் பெண்ணைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான் அவன். என்னிடம் எதற்காகச் சொல்கிறான்? போயும் போயும் என்னிடம்தானா கலியாணச் செய்தி சொல்லவேண்டும்?

பச்சையப்பனுக்கும் கல்வி புகட்ட வேண்டும் என்றுதான் தோன்றிற்று.

"பச்சையப்பா, இக்குபிக்குன்னு பேசறேன்னு நெனச்சுக்காதே. கலியாணம் எதுக்காக பண்ணிக்கிறது?"

". . ."

"கலியாணம் பண்ணிண்டு எல்லாரும் சுகம்மா இருக்காங்கன்னு நெனச்சிண்டிருக்கியா . .? முதல்லெ ஒரு மாசம் ரண்டு மாசம் ஆசையாயிருக்கும். அப்புறம், புளிப்பு விட்டுப் போயிடும். புருஷன் வேற யாரையாவது பார்ப்பான். அவ வேற யாரையாவது பார்ப்ப. சண்டை. சண்டைபோட தைரியமில்லாம, அக்கம்பக்கத்துக்குப் பயந்திண்டிருந்தா, வேண்டாவரியா ரண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து கடும்பூனை மாதிரி கருவிண்டிருக்கணும். போக்கிரியா இருந்தா கருவறது தெரியாம சிரிச்சிண்டிருப்பாங்க. சாதுவாயிருந்தா உள்ள இருக்கறதை மறைக்க முடியாம சண்டை போடுவாங்க . . . நீ ஒண்ணும் நெனச்சுக்காதே. என்னடா கலியாணம்னு சொல்றோம், என்னென்னமோ சொல்றாளேன்னு."

"அதெல்லாம் இல்லீங்க நீங்க சொல்றதுதான் வேடிக்கையா யிருக்கு. ஒரு

மாசம் ரண்டு மாசம் ஆசையாயிருக்குன்னீங்களே. அவ்வளதாங்களா? அதுக்கு மேலே ஓடாதுங்களா?" என்ற நாணத்தோடு சிரித்தான் பச்சையப்பன்.

கலியாண குகையின் வாசலில் நின்று பேசுகிறான் பச்சையப்பன். குகைக்குள்ளே என்ன இருக்கிறது என்று நானே சற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். உள்ளேயிருந்து ஊதுவத்தி வாசனை வருவது போலிருக்கிறது. யாராவது சாது பூஜை பண்ணிக்கொண்டிருக்கலாம். உள்ளே போனதும், உபசாரம் செய்து பட்சணம் கிட்சணம் எல்லாம் கொடுத்து நமஸ்காரம் செய்யும்போது, வீச்சென்று வாளை உயர்த்தி கழுத்தில் போட்டு பலிகொடுத்துவிடுகிறார் சாது.

"பச்சையப்பா, ஒன்று சொல்லட்டுமா?"

"என்னங்க?"

"இளம் கன்று பயமறியாதுன்னு கேள்விப் பட்டிருக்கி யோல்லியோ!"

"ஆமாங்க."

"குழந்தைக்கு, தேள், பாம்புக்குட்டி, வெல்லக்கட்டி, குஞ்சாலாடு - எல்லாம் ஒன்றுதான். தேளைப்போய் உள்ளங் கையாலெ கவ்வும். பாம்புக் குட்டியை வாலைப் புடிச்சு இழுக்கும்.

நாம எல்லோரும் இளங்கன்றுதான் . . . கலியாணம் பண்ணிக்காத வரையில் இளங்கன்று. இல்லாட்டா தேளைப்போய் உள்ளங் கையாலெ கவ்வுவோமோ! கலியாணம் பண்ணிண்ட உடனேதான் தெரியும், வண்ணாத்திப் பூச்சி இல்லெ, தேள் குஞ்சுன்னு. அந்த க்ஷணமே திடீர்னு இளம் கன்றுக்கு வயசாயிடும் . . ."

"புத்தி வந்திரும்."

"புத்தி மட்டும் இல்லெ, திடீர்னு வயசே ஆயிடும்."

"கலியாணம் கட்டிக்கிட்டவங்கள்ளாம் கம்பு ஊனிக்கிட்டு நடக்கறாங்கன்னு சொல்றீங்க."

"கம்பு கண்ணுக்குத் தெரியாது. உடம்பிலே வயசானவங்களே, லேசிலே கம்பை எடுத்துனுட மாட்டாங்க கையிலே. வயசாகலெ வயசாகலென்னு

எப்படி பிறத்தியாருக்குச் சொல்றது? முடிஞ்ச மட்டும் பார்ப்பாங்க. ஒரு நாளைக்கு விழுந்து நெத்தியிலேயும் மூக்கிலெயும் அடிபட்ட அப்புறம்தான் கம்பு வேணும்னு நிச்சயம் வரும்."

உடம்பு குலுங்க, வெற்றிலைப் பல்லால் நாலைந்து கணம் சிரித்தான் பச்சையப்பன். அந்த சிரிப்புக்கு ஒரு அர்த்தம்தான். 'அட, பைத்தியக்காரி, மூணு லோகத்தையும் கரச்சுக் குடிச்சாப்பல பேசறியே' என்கிற சிரிப்பு.

இவன் மட்டுமா, இல்லை, பட்டாபி மட்டுமா? எத்தனை பேரிடம் வாதாடியிருக்கிறேன். பத்து, இருபது என்று கணக்குக்குள் அடங்காது. நூற்றுக் கணக்கில் போகும். அத்தனை பேரிடம் சொல்லியழுதாகிவிட்டது. கலியாணம் நாகரீகம் பெற்றதாகச் சொல்லிக்கொள்பவர்களின் மௌட்யம் - இல்லாவிட்டால் சூழ்ச்சி - இல்லாவிட்டால் தவறு - இல்லாவிட்டால் கன்னத்துப் பட்டி - இல்லாவிட்டால் தடுமாற்றம் - இல்லாவிட்டால் போதை - இல்லாவிட்டால் தன்னையே சாட்டையால் ரத்த விளாராக அடித்துக்கொள்ளும் கல்லுளிமங்கத்தனம் - இல்லாவிட்டால் அவர்களே தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுகிற கடவுள் என்ற இயற்கைக்குத் துரோகம் - இல்லாவிட்டால் துடைநடுங்கித்தனம் - என்னென்ன வர்ணனைகளெல்லாம் சாத்தியமோ எல்லாம் சொல்லியாயிற்று. உலகப் பிரசித்தி பெற்ற ஒரு சரோட் வித்வான் எல்லாவற்றையும் சிரிக்காமல் கொள்ளாமல், தம் பெயர்போன குரு பக்தியைக் காட்டிக்கொண்டே கேட்டுக்கொண்டார். "நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு ஒரு புது அனுபவமாக இருக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பாவெல்லாம் ஆயிரக்கணக்கான பேர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் இதையெல்லாம்பற்றி அவர்கள் பேசுகிறதில்லை. இனிமேல் நான் போகுமிடமெல்லாம் நீங்கள் சொன்னதைத்தான் சொல்லப்போகிற«ன்" என்று புது உலகத்தைப் பார்த்துவிட்ட பரவசமாகப் பேசினார். ஒன்று மாற்றி ஒன்று அவருக்கு மூன்று கலியாணம். கடைசி மனைவி ரத்து செய்துகொள்ளாமல் செத்துப் போய்விட்டாள்.செத்துப் போகாமலிருந்தால் ரத்தாகியிருக்கும். இந்தப் பரவசம் என்னோடு அவ்வளவு பேசிவிட்டு ஐரோப்பாவுக்கெல்லாம் மறுபடியும் போயிற்று. மூன்று மாதம் கழித்து அவருடைய இங்கிலீஷ் சீடப்பையன் ஒருவன் மதராஸுக்கு வந்தவன், அவர் ஒருவாரம் முன்னால் மறுபடியும் கலியாணம் செய்துகொண்டதாகச் சொன்னான்.

ஒரு பீஎச்டி நண்பனைப் பற்றிச் சொன்னேனே. அவனும் நான் சொல்வதற்கெல்லாம் அம்பிலிமாடு மாதிரி நாலு வருஷம் தலையாட்டிக்கொண்டிருந்தான். கடைசியில் எர்ணாகுளத்திற்குப் போய்

ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டானாம். ஒரு வருஷம் கழித்து வெட்கப்பட்டுக்கொண்டு ஒரு கடுதாசி எழுதினான். "உனக்கு அதிர்ச்சியாக இருக்கும். ஒருக்கால் இளக்காரம் பண்ணவும் தோன்றும். ஆனால் நான் சொல்வது இதுதான். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ரத்த ஓட்டம் மாதிரி. எல்லாருடைய ரத்த ஓட்டத்திலும் ஒரு க்ளாட் - ஒரு ரத்த உறைவு - இருக்கிறது என்று நினைக்கிறேன். கடுகைவிட இம்மியாக இருக்கலாம். ஆனாலும் அது கட்டி கட்டிதான். அது இருக்கிற இடத்தைப் பொறுத்து, அது ஒரு நெருக்கடியை உண்டுபண்ணலாம். இன்றோ, நாளையோ, அடுத்த மாதமோ, அடுத்த வருடமோ, பத்து அல்லது முப்பது வருஷம் கழித்தோ அது ஒரு நாளைக்கு இதயத்திற்கு வந்து சேரும். நுழைய முடியாத நுண்ணிய குழாயில் வந்து அடைத்துக்கொள்ளும். அப்படித்தான் நம்முடைய எண்ண உணர்வுக் கோட்பாடாகிய ஓட்டத்திலும் ஒரு நுண்ணிய உறைவு இருக்கிறது. அது என்றோ எங்கோ வந்து அடைத்துக்கொள்கிறது. உயிருக்கு ஆபத்தோ, கால் கைக்கு ஆபத்தான பாரிச வாதமோ வந்துவிடுவதுபோல நம் மன வியக்தியும் பங்கம் அடைகிறது, அல்லது மாற்றம் அடைகிறது. இந்த என் கலியாணத்தைத்தான் சொல்கிறேன். என்ன நேர்ந்ததென்று புரியவில்லை. ரீட்டாவோடு பழக ஆரம்பித்தபோது நான் இதைப் பற்றி யோசிக்கவில்லை. திடீர் என்று ஒரு நாள் "நாம் ஏன் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது?" என்று கேட்டாள். "ஏன் கூடாது?" என்று நான் சிரித்தேன். பரவசமாக அணைத்துக்கொண்டேன். இந்த அணைப்பு முதல் தடவை அல்ல. நூறு முன்னூறு தடவை அணைத்த அணைப்புதான். அணைப்பைக் கடந்து எல்னென்னவெல்லாமோ செய்திருக் கிறோம். ஆனால் அவள் அந்தக் கேள்வி கேட்ட கணம், அப்போதுதான் புதிதாக அணைத்துக்கொள்வது போலிருந்தது. உடம்பு, சுற்றுப்புறம் எல்லாம் மறந்துவிட்டது. அடுத்த வாரம் அறிவிப்பு செய்துகொண்டோம் - கலியாணம் ரிஜிஸ்ட்ரார்முன். சம்பிரதாய ஒரு மாதம் கழித்துப் பதிவு செய்துகொண்டோம். புதிதாக அணைத்துக்கொள்வது போன்ற, புட்குரல் போன்ற தன் மறதி தோன்றிற்றே, அந்தக் கணம்தான் நெருக்கடியான, ரத்த உறைவு நகரமுடியாமல் ஓட்டத்தை நிறுத்தின கணமோ என்று தோன்றுகிறது - ஏன் அந்த உணர்ச்சி . . ? "

கடிதத்தை நிறுத்திவிட்டு ஒரு கணம் யோசித்துப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மடையா, அந்தக் கேள்வி கேட்டதும் ஏன் திடீரென்று இத்தனை நாளுமில்லாத புதுப் பரவசம்? பீஎச்டி பண்ணினவனுக்கு இது ஏன் விளங்கவில்லை? "நான் ஏன் என் சொத்தாக, எனக்கு மட்டும் சொத்தாக உன்னை ஆக்கிக்கொள்ளக் கூடாது?" என்று கேட்டிருக்கிறாள்.

"நானும் உன்னை ஏன் எனக்கு மட்டும் சொத்தாக ஆக்கிக்கொள்ளக் கூடாது" என்று பதிலுக்குக் கேட்டிருக்கிறாய். இதற்குப் பீஎச்டியா படிக்க வேண்டும்?"

கடிதம் மேலும் தொடர்ந்தது. 'ரத்த உறவை'ப் பற்றித்தான். அவனுக்கே ஏன் என்று புரியவில்லையாம். ரீட்டா ரொம்ப இனிமையானவள். இரண்டு பேரும் ஆனந்தமாக இருக்கிறார் களாம் . . . இத்யாதி இத்யாதி. என்னிடம் என்னமோ தீட்சை பெற்றுக்கொண்டது போலவும், அதை மீறிய குற்றம் செய்துவிட்டது போலவும் பன்னிப் பன்னி எழுதியிருந்தான்.

ஒன்றரை வரும் கழித்து தொடர்ச்சியாக மாதத்துக்கு ஒரு தடவை அவனிடமிருந்தே ஏழெட்டுக் கடிதம் வந்தது.

- ரீட்டா ரொம்ப "கோர்ஸ்" பிராணி.

- பொறாமைக்காரி.

- அவளுடைய சந்தேகத்திற்கு எல்லையே கிடையாது.

- சில சமயம் அவளைக் கொன்றுவிட வேண்டும் போலிருக்கிறது.

- ரீட்டாவுக்கு சங்காதோஷம். அவள் கத்தும்போது எப்படித் தான் தொண்டை தூண் கனத்திற்கு பருக்கிறதோ தெரியவில்லை. ஒரே கத்தல்.

- ரீட்டா அடுத்த வீட்டுக்குப் பக்கத்திலிருக்கிற ஜன்னலுக் கருகில் நின்றுதான் கத்துவாள். அந்த ஜன்னல்தான் என்னைப்பற்றி உலகத்திற்கு எடுத்துச் சொல்லுகிற பொது மேடை, ஒலிபெருக்கி என்று அவள் எண்ணம் போலிருக்கிறது.

பீஎச்டி - நீ இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாய்? பீஎச்டி மௌனம், சகிப்பு என்ற சிறைக்குள் புகுந்துவிட்டான். மகாத்மா காந்தி சொன்னபடி சகித்துக்கொண்டு 'சத்தியத்'தைக் காப்பாற்றிக்கொண்டுவிட்டான். விலங்கு என்ற சத்தியத்தை. கோழைத்தனம் என்ற சத்தியத்தை. ஊருக்காகவாவது பால் குடிக்க வேண்டாமோ என்ற சத்தியத்தை. பெண்டாட்டியோடு வாழத் தெரியவில்லை என்று சக பேராசிரியர்கள் நினைக்க இடம் கொடுக்கக்கூடாது என்ற சத்தியத்தை. அவர்கள் "பாவம்" என்ற தோரணையில் பார்க்கக் கூடாது என்ற சத்தியத்தை.

பீஎச்டி கிடக்கட்டும். என்னுடைய சக பக்தர்களான நாட் (நடராஜன்), காமாட்சி, லெனின் (பிராமணப் பையன். இவன் அப்பா அந்த நாட்களில் மாஸ்கோ போய்விட்டு வந்தாராம். தன் குழந்தைகளுக்கு லெனின் பெயரை வைக்க வேண்டும் என்று சபதம் செய்துகொண்டாராம். கலியாணமாகி, பிறந்த முதல் குழந்தைக்கு லெனின் பெயரை வைத்தாராம்), ராயப்பா, திருமலாச்சாரி, ஸ்ரீராமுலு - இது மாதிரி ஒரு இருபத்திரண்டு பேர்கள் - என்னைச் சேர்த்து. வேதாந்த, பக்தி - சாது பக்தர்கள் பஜனை, சத்சங்கம என்று தங்கள் குருவைப்பற்றி ஒரு வாரத்தன்று மட்டும் கூடி காலட்சேபம் செய்வார்கள். இந்த இருபத்திரண்டுபேரும் வேளை, பொழுது, கிழமை, நாள் என்று பார்க்காமல் மார்க்சின் புகழ் பாடுகிற வழக்கம். வலதுகோடி, இடதுகோடி மையம் என்று இதற்குள் பல தரிசனங்கள். இத்தனை பேரும் என்னோடு கலியாணம் கல்லறை என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது இத்தனை பேரும் - இரண்டு பேரைத் தவிர - கல்லறையில் இருக்கிறார்கள். லெனின் அகண்ட காவேரி ஓரமான கிராமத்து ஒரு முரட்டு வைதீக மிராசுதாரின் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறான். ராயப்பா, திருமலாச்சாரி, வர்கிஸ், ராஜபாதர் ஆகியோர் முறையே கத்தோலிக், வடகலை, சிரிய கிறிஸ்தவம், பட்டணத்து முதலியார் என்று தங்கள் இனக் குழுக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம்விட பங்காருவுக்கு வந்த 'ரத்த உறைவு'தான் விந்தையிலும் விந்தை. அவன் மார்க்ஸிஸ்ட் இல்லை. முதலாளிவாதியும் இல்லை. ஒரு வாதியும் இல்லை. சுதந்திரவாதி. கோபக்கார இளைஞன் - அதாவது முப்பத்து நான்கு வயது. என் தலைமயிரில் பாதி நீளம் தலைமயிர். கிராப்பா, பழைய சங்க காலத்துத் தலைவன் தலையா என்று சந்தேகமாயிருக்கும். பலவர்ணப் பூச்சட்டை, வெளிரடிக்கும் நீலக் கால் சட்டை, ரொம்ப இறுக்கமான கால்சட்டை. சில சமயம் முன்பக்கம் இடுப்புக்குக் கீழ் பார்த்தால் கண்ணைத் திருப்பிக்கொள்ள வேண்டியிருக்கும். சிறுகதை எழுதுவான். சந்தமில்லாத கவிதை எழுதுவான். க்யூபிஸ்ட் ஓவியங்களுக்காக அறப்போர் நடத்தியிருக் கிறான். திரைப்பட சங்கத்தில் உறுப்பினனாகச் சேர்ந்து, ஒரு நாள் நீ இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும், நீதான் பார்க்க வேண்டும் என்று என்னை இழுத்துக்கொண்டு போனான். ஒரே ரத்தக்களரிப் படம். தலையை உடைக்கிறார்கள். குழந்தைகளை மிதிக்கிறார்கள். ரத்தக் குட்டைகளில் மயிர் உறைந்து சிடுக்கான தலைகள் மிதக்கின்றன. ஒரு படம் முழுவதும் இப்படியே எழுபது நிமிஷ நேரம் காயம், கீறல், எலெக்ரானிக்

பேயமுழுகைகள் - அது எலெக்ட்ரானிக் இசை என்றான் பங்காரு - லைப் இஸ் க்ரிம்ஸன் - வாழ்க்கை செக்கர் நிறம் - என்ற தலைப்பு. எனக்கு வயிற்றைக் குமட்டுகிறதே என்றேன். ஹாம்பர்க்கில் இதைப் பார்த்த இரண்டு பெண்களுக்குக் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டுவிட்டது என்று தானே படத்தைத் தயாரித்த பூரிப்புப் புன்னகையுடன் சொன்னான் பங்காரு. "உன்னை வந்து ஏன் பார்க்கச் சொன்னேன். லைப் இஸ் க்ரிம்ஸன் என்பதற்குப் பதிலாக கலியாணம் க்ரிம்ஸன் என்று மாற்றிச் சொல்ல வேண்டும் என்று ஒரு எண்ணம் தோன்றிற்று. "கலியாணம் என்பது இது தான் என்று எனக்கு அபிப்பிராயம்" என்றான். "எனக்கு இப்படித்தானா குருதட்சிணை செலுத்த வேண்டும்" என்று குமட்டலை அடக்கிக்கொண்டே கேட்டேன். பங்காரு என்று நான்தான் அவனுக்குச் செல்லப் பெயர் வைத்தேன். அவன் பெயர் குமாரசாமி. வெடுக்வெடுக்கென்ற அவன் பேச்சையும் குழந்தைத்தனத்தையும் சுதந்திரம் சுதந்திரம் எனது வேட்கை, சொல்லு சொல்லு, எங்கே நான் சுதந்திரமாக இருப்பேன் என்று திடீர் திடீர் என்று சன்னத வெறியுடன் அவன் கேட்கிற கேள்வி, அதற்கெல்லாம் நான்தான் காரணம் என்று கண்களில் உதிர்கிற நன்றி - இதையெல்லாம் பார்த்து நான்தான் பங்காரு (தங்கம்) என்று சுந்தரத் தெலுங்காகப் பெயர் வைத்தேன். "இந்தப் படம்தான் வாழ்க்கையின் மூலாதாரத்தை சித்திரமாக மாற்றிக் காட்டியிருக்கிறது" என்றான் பங்காரு. எனக்குப் புரியவில்லை. எப்போதும் யாரும் சேராத மைனாரிட்டியாக இருப்பதில் அவனுக்கு ஒரு வேட்கை. அவனுக்குத் தனி அபிப்ராயங்கள் உண்டு. கோயம்புத்தூர் கிருஷ்ணய்யர் ஹோட்டல் ஹல்வாவைச் சாப்பிட்டு, "ப்ஸ, என்ன இது? ரொம்ப காலரி ஸ்டஃப்பாகி விட்டதே" என்பான். கலியாணங்களுக்குப் போகமாட்டான். "திருமலாச்சாரிக்குக் கலியாணம். நீ துக்கம் கேக்கப் போகலியா?" என்பான். இந்த பங்காரு திடீர் என்று ஆளைக் காணவில்லை. செட்டிநாட்டில் புதுவயலுக்குப் போய் ஒரு புரோகிதரின் பெண் ணைக் கலியாணம் செய்துகொண்டு வந்தான். பீஎச்டீ மாதிரி வெட்கப்படவில்லை. ஒரு பதினைந்து நாள் கழித்து டெலிபோன் வந்தது. "எனக்கு துக்க பட்சணம் பண்ணி வைக்கிறியா - ப்யூனரல் கேக்?" என்று அவன் குரல் உற்சாகமாக விம்மிற்று.

"என்னது?"

"நான்தான் பங்காரு. உன் சொர்ணம். பங்காரு செத்துப் போயிட்டான். ஈயமாய்ட்டான் - காரீயமாய்ட்டான்."

"என்ன?"

"நான் நேரே வந்து சொல்றேன்."

கூப்பிடு மணி அடித்துக் கதவைத் திறந்தபோது, "சாரி, நான் நேரே வந்து சொல்றோம்னு சொல்லியிருக்கணும். மாச்சுமீ - வா - இதுதான் - என் குரு. நான் குருவுக்கு அபசாரம் பண்ணினது உன்னாலெதான். நீதான் காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டுக்க ணும்" என்று அந்தப் பெண்ணின் இடுப்பில் கைகொடுத்து மாடிப்படியில் ஏற்றினான். அவன் வலது கையில் கலியாணக் கயிறு பதினைந்து நாள் அழுக்குப் படர்வுடன் என்னைப் பார்த்து இளித்தது. நான் அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

"என்னோட அத்தை பொண்ணு. பி.யூ.சி. படிச்சிருக்கா. ரயில்வே ஆபீஸ்லே வேலையாயிருக்கா - குடும்பத்தையும் காப்பாத்திண்டு, தன்னோட கலியாணத்துக்கும் பணம் சேர்த்திருக்கா. அத்திம்பேர் வந்து சொன்னார், சரின்னுட்டேன். எங்கே ப்யூனரல் கேக்?" என்று அவளைப் பார்த்துச் சிரித்தான். 'கலியாணம் க்ரிம்சன்னு சொன்னியே. அதுக்குத்தான் அரக்குக் கலர்லெ கூறைப்புடவை வாங்கினியா?' என்று அவள் புடவை யைப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இதெல்லாம் பிற்பாடும் முன்னும் நடந்த துக்கங்களில் சில.

பச்சையப்பன் எவ்வளவு தூரம்!

அவன் சிரித்தது - முன்னாலேயே சிரித்தது எனக்கு சரியாகத் தான் தோன்றிற்று.

அவன் கலியாணத்துக்கு வடபழனிக்குப் போனேன்.

கோபாலியும் வந்தது.

## 10

இந்தக் கலியாணத்தைவிட பெரிய அதிர்ச்சி எனக்கு எப்போதும் ஏற்பட்டதாக ஞாபகம் இல்லை.

பெண் அப்படியிருந்தாள்.

ஆண்பிள்ளையைப் போல அவளைப் பார்த்துப் பார்த்து வாயடைத்துப் போய்க்கொண்டிருந்தேன்.

கண்ணைப் பறிக்கிற கறுப்பு. எப்படிச் சொல்கிறது? அட்டைக் கறுப்பு, மைக்கறுப்பு - இப்படியெல்லாம் சொன்னால் போதாது போலிருக்கிறது.

நீக்ரோக்களைப் பார்த்திருக்கிறேன். அன்னவாசலில் ரங்கநாயகியைப் பார்த்திருக்கிறேன்.

இந்தக் கறுப்பு எனக்காகப் படைத்தது போலிருந்தது - நான் பார்த்து மலைப்பதற்காக.

ஒரு நிமிடம் கழித்துத்தான் இந்தக் கறுப்பைப் பார்த்து நான் மலைக்கவில்லை என்று உணர்க்கை வந்தது.

தொண்ணூற்றொன்பதரை முகங்கள் இந்த உலகத்தில் பக்கவிச்சோடியாக இருக்கும். புதிதாகக் கண்டுபிடித்த விந்தையில்லை. யாரைப் பார்த்தாலும் உச்சி நெற்றியிலிருந்து ஒரு கோடு போட்டு மூக்கு மேடு, மூக்கின் கீழ்ப்பள்ளம், நடு உதடு, கழுத்து, மார்பு என்று மனசுக்குள் இழுத்துப் பார்க்கிற கோட்டை இவள் உச்சி நெற்றியிலிருந்தும் இழுத்துப் பார்த்தேன். கண்ணுக்குத் தெரியாத முகம் பார்க்கிற கண்ணாடியை அந்தக் கோட்டில் வைத்தது போலிருந்தது. தூக்கிவாரிப்போட்டது. வலது மூக்கின் நிழல் மாதிரி இடது மூக்கு - வலது கண்ணின் நிழல்போல இடது கண். வலது உதட்டின் நிழலாக இடது உதடு. வலது பாதத்தின் நிழலாக இடது பாதம். தலைமயிர் பின்னிப் பிச்சோடாவாகப் போட்டிருந்தது. அதையும் அவிழ்த்து தளரச் செய்து பக்கம் பார்க்க வேண்டும் போலிருந்தது. காது, விரல் ஒவ்வொன்றாக இந்த அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டு நின்றேன்.

தலையில் அலை வேறு.

எதைப் பார்த்து அதிர்வது என்று புரியவில்லை. உடம்பெல் லாம் குழந்தை மழமழப்பு. நான் பட்டது அதிர்ச்சியா, அதிர்வா?

மூச்சு முட்டுகிற களை ஒன்று முகத்தில்.

மனிதர்கள் எப்படி இவ்வளவு இருபக்க ஒழுங்காகப் பிறக்க முடியும்?

நான் பார்க்கிறது பொம்மையா நிஜ உடம்பா?

நான் இவளைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேனோ!

அப்படித் தோன்றவில்லை.

பொறாமைப்படக்கூட நேரமில்லை. ஒவ்வொரு பகுதியாக அளந்துகொண்டிருந்தேன்.

மனிதர்கள் எப்படி இவ்வளவு கொள்ளையாக இருக்க முடியும்?

பளார் என்று நம் கன்னத்தில் அறைகிற ஒரு உடலழகு எப்படியிருக்க முடியும்? திணற அடிக்கிறதுபோல ஒரு சீரும் குழைவும் எப்படி இருக்க முடியும்?

இவ்வளவு அழகாக இருக்கிறோம் என்று இவளுக்குத் தெரியுமா? தன் முழு உடம்பையும் எப்போதாவது ஒரு பெரிய கண்ணாடியில் பார்த்திருப்பாளா?

எனக்குப் பைத்தியம் மாதிரி அரற்றவேண்டும் போலிருந்தது - இந்த உடம்பைப் பற்றி. விளக்குப் பிடிக்கிற சிலைகள் எல்லாம் அப்போது ஞாபகம் வரவில்லை. அதெல்லாம் வறட்டு, சோகைக் கவிகளுக்கல்லவா தோன்ற வேண்டும்?

எனக்கு ஆண் பிள்ளையாக இல்லையே என்று ஒரு ஏக்கம்? எனக்கு ஒருபால் சபலங்கள் கிடையாது. ஆனால் ஆணாக இருக்கவேண்டும் போலிருந்தது.

பச்சையப்பன் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

கோபாலியும் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தது.

நான் மூக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நடுவில் கோடிழுத்து வலது பக்கத்தின் அச்சாக இடதுபக்கமும் இருக்கிறதா என்று அளந்துகொண்டிருந்தேன். எல்லா மூக்குகளும் புருவ மத்தியின்கீழ் சிறிது வலதுபக்கம் அல்லது இடப்பக்கம் சாயும். கண்ணாடியில் இந்தக் கோணல் தெரியும். நானே இரண்டு கண்ணாடி வைத்து என் மூக்கு சற்று வலப்பக்கம் சாய்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். நூற்றில் ஒரு மூக்கு நேராக இருந்தால், அது இயற்கைக்கு விரோதம், மிஷினில் பண்ணின பொம்மை மூக்கு என்று தள்ளியிருக்கேன். எத்தனை பேருக்கு வாயோரம் வலது பக்கமோ இடது பக்கமோ சற்றுக் கீழே இறங்கியிருக்கிறது. இந்தச் சிறு கோணல் இல்லாவிட்டால் அச்சு பொம்மை என்று சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

இந்தப் பெண்ணைப் பார்த்ததும் விநோதமாக இருந்தது. வலது பாதியின் கருக்கு அச்சு இடது பாதி - உதடு, கண், மூக்கு, இதழ், முகவாய், கால்விரல், கைவிரல் எல்லாம். பொம்மை என்று பரிகாசம் பண்ணலாம். சிரிக்கலாம். சிரிக்கத்தான் முடியவில்லை. பெண் அழகாக வேறு இருந்தது. கண்கூட பெரிய கண். இப்போது அலை ஒதுக்கிய கிளிஞ்சல் மாதிரி கண் வெள்ளையில் ஒரு நைப்பு - லேசாக நீலம் போல ஒரு வெளுப்பு.

கோபாலி புடவை, ரவிக்கைத் துணி, வேட்டி எல்லாம் வாங்கிக்கொண்டு வந்திருந்தது. ஒரு தாம்பாளத்தைக் கொண்டுவரச் சொல்லி, வைத்துக் கொடுத்தது. நான் என்ன கொடுக்க? கையில் இருந்த ஒரு ஜோடி தங்க வளையலைக் கழற்றி "இங்க வா" என்று கூப்பிட்டேன். பெண் வந்தது. கைக்கு ஒன்றாக மாட்டினேன். கையைப் பிடித்துப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கோபாலியைத் திரும்பிப் பார்க்கவில்லை. அது வாங்கிப் போட்ட வளையல் ஜோடி அது. பெண்ணின் கையில் போட்டுவிட்டு, அதன் உள்ளங்கையைப் பற்றிக்கொண்டே நின்றேன். அது என் கையைப் பார்த்துக்கொண்டே நின்றது. என்னைவிட ஒரு பிடி உயரம் அது.

"உன் பேர் என்ன?"

"மரகதம்."

"என்ன வயசாறது?"

"இருபத்திரண்டு."

"நீ ரொம்ப அழகுன்னு உனக்குத் தெரியுமோ?"

நாணம்.

"உன் மாதிரி அழகா யாரும் இருக்க முடியாதுன்னு உனக்குத் தெரியுமோ?"

பதில் இல்லை.

"நிஜமா சொல்லு. நீ ரொம்ப அழகுன்னு உனக்குத் தெரியுமோ?"

". . ."

"சொல்லமாட்டியா?"

". . ."

"சொல்லாட்டா நான் விடமாட்டேன்."

"முதல்லெ நீங்க கையை எடுங்க. நீங்களும் கருப்பாயிடுவீங்க" என்று வாயைத் திறந்தது பெண். முகவாய் மார்பில் இடித்தது - வெட்கம். எனக்குத்தான் காதில் விழுந்தது.

ஒரு செல்லச் 'சீ' போட்டு, கையை விட்டு இறுக அதை அணைத்துக்கொண்டேன். "இப்ப பார்ப்பம், உடம்பும் கறுப்பா ஆறதான்னு."

"என்ன சொன்னா தெரியுமா பச்சையப்பா?"

"என்னங்க?"

சொன்னேன்.

"பின்னே, நீங்க கேட்டதுக்கு எப்படி பதில் சொல்றது" என்று நாக்கால் வாய்க்கடையைத் தடவிக் குறும்பு பண்ணினான் பச்சையப்பன்.

சந்துக்கு வெளியே காரில் ஏற வரும்போது, கூடவே வந்தான் பச்சையப்பன். கோடிக் கொசகொசப்பும், கையில் மோதிரமும் ஒரு கையில் சங்கிலியும் டெரிலின் சட்டையுமாக காரில் கொண்டுவிட வந்தான்.

"பொண்ணு எப்படிங்க?" என்றான் என்னிடம்.

"நீ இவ்வளவு கெட்டிக்காரன்னு இப்பதான் புரியறது."

"சாதாரண அதிர்ஷ்டமில்லேடா உனக்கு. நல்ல வேளையாப் பொழச்சே. இத்தனை கலர் இல்லையோ, அவளைக் கொத்திண்டு போயிடுவன் பார்க்கறவன்லாம்" - கோபாலி.

பச்சையப்பன் பெருமையாக முகத்தைக் கவிழ்த்துப் புன்னகையில் திளைத்தான்.

"உனக்கு உறவுன்னு சொன்னே இல்லெ!"

"ஆமாங்க. இதுக்கும் நாலு பேர் போட்டிங்க. ஆனா அது மாட்டேன்னு சொல்லிப்பிட்டுது."

"நீ சொல்லவே இல்லியே - இப்படி இருப்பள்னு."

இப்போதுதான் ஞாபகம் வந்தது. அன்று "ரண்டு மாசம் தாங்களா - அதுக்கு மேலே ஓடாதுங்களா?" என்று சொல்லி, பிறகும் அவன் சிரித்தது.

கார் நகர்ந்ததும் "எப்படியிருக்கா!" என்று திகைத்தேன்.

கோபாலி பதிலே பேசவில்லை.

வீட்டுக்கு வந்து மாடிக்கு வந்ததும் வராதுமாக, "இந்தப் பயலை நினச்சாத்தான் கவலையாயிருக்கு!" என்றது.

"யாரை?"

"பச்சையப்பனை. இதைச் சரியாக் காப்பாத்தணுமே அந்தப் பய!"

"காப்பாத்த முடியலேன்னா, அந்தப் பொண்ணுக்கு இன்னும் பெருமை."

"உன் மாதிரி இருக்கணுமாக்கும்!" என்று உருட்டி விழித்தது கோபாலி. "எல்லாரும் விழுந்து குதறினாத்தான் அவ அழகுக்குப் பெருமையாக்கும்."

"இப்ப என்ன இந்தக் கவலை? யாருக்காக இந்த பயம்? பச்சையப்பனுக்காகவா? இல்லை, உங்களை நினைச்சுண்டா?"

"என்னது!"

"கொத்திண்டு போற முதல் கழுகு நீங்களா இருக்கப் படாதேன்னு கவலையா யிருக்கா?"

கோபாலி சற்று முறைத்து விழித்தது. நாலைந்து கணம்தான். பிறகு மலர்ந்தது.

"இத்தனை அழகாயிருந்தா என்னைப் பத்தின வரையில் பயமில்லெ. ரொம்ப அழகாயிருந்தா அதிலெ என்ன இருக்கு? சீன்னு போயிடும். ஏதாவது மூளியிருக்கணும் - கொஞ்சம் ஆம்பளைத்தனம், குரல்லெ கனம், இல்லாட்டா கிறுக்கா இருக்கணும் . . ." என்று என்னைப் பார்த்தது கோபாலி.

"தாங்க்ஸ்" என்று வாங்கிக்கொண்டேன். "இது என்ன எனக்குக் கொடுக்கற வாக்கோ?" என்றேன்.

"உனக்கு என்ன வாக்கு? உனக்குத்தான் இந்த மாதிரி சங்கடங்கள்ளாம் கிடையாதே. என்ன என்னமோ போல பேசறே இன்னிக்கி?"

எனக்கே ஏதோ நான் உளறிக் கொட்டியது போலிருந்தது.

"அழகா இருக்கறவா கொஞ்சம் அசடும் வழியணும். இல்லாட்டா பிரயோசனமில்லெ; இதெல்லாம் இல்லாம, வடிச்சு எடுத்ததுகளா இருந்தா, தங்கை தமக்கை மாதிரி இருக்கும். ஜுகுப்ஸையா இருக்கும்" என்று வலது கையை மூடி கட்டைவிரலை உயர்த்தி என் கண்முன் செல்லமாக ஆட்டிற்று. 'அவ்வளவு தான் நீ புரிஞ்சுண்டுது இவனை' என்று அந்த பாதித் தலையை ஆட்டிற்று. அதாவது என்னை அவமதித்தது.

"ஸுததீ சீதம்மா" என்று முனகிற்று. ராமனுக்குப் பெருமையெல்லாம் சீதையால்தான். "என்னது?"

"சீதை வடிச்சு எடுத்த அழகு. ராவணன் அவளைப் பார்த்து மயங்கி, உடம்பு ஆசைப்பட்டான்னா, கொஞ்சம் மட்ட கிளாஸ் ஆள்னு அர்த்தம், அதாவது என்னைவிட மட்டம்னு அர்த்தம்."

ராவணனும் இல்லை, கீவணனும் இல்லை. அது என்னைத் தான் குழியில் தள்ளிற்று. நான் ராவணன் மாதிரி என்று சொல்லத் துடிப்பு அதற்கு.

பட்டாபியை வெளியே அனுப்பியதிலிருந்தே கோபாலி என்னை இப்படி சீண்டிக்கொண்டிருந்தது. அது சம்பந்தமாக நான் சண்டை போடவில்லை. வீழ்த்திய தியாகராஜர், ராமன், கிருஷ்ணன் படங்களையும் அன்று பச்சையப்பன் உடனே எடுத்து மாட்டிவிட்டான். ஒன்றும் நடக்காததுபோலிருந்துவிட்டேன்.

இன்று என்னை ஏதோ அவமதித்து விட்டதாகத்தான் அது பூரித்துக்கொண்டிருக்க வேண்டும். எனக்கு புத்தி சொல்லிவிட்டுப் போவதுபோல, 'இன்னும் எவ்வளவோ தெரிஞ்சுக்க வேண்டியது இருக்கு' என்று நகைப்பதுபோலத்தான் இருந்தது, அது செருப்பை மாட்டிக்கொண்டு மாடிப்படி யிறங்கிய தோரணை.

நானும் அதோடு மறந்துவிட்டேன். எனக்கு மரகதத்தை நினைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. நள்ளிரவில்கூட அவள் ஞாபகம். பத்து இரவுகளைச் சேர்த்துத் திணித்தாற்போல் இருந்த அந்தக் கறுமை, அழகில் திணிந்துகொண்டு முன்னே முன்னே வந்தது.

பித்துப் பிடித்த மாதிரி அவளைப் பார்த்துக்கொண்டிருப்பேன். எனக்குத்தான் இந்த மெய்யழகின் தனித்துவம் எல்லாம் தெரிந்ததுபோல ஒரு கர்வம், பிடிவாதம் எனக்கு. பச்சையப்பனுக்கு இந்த அழகு எங்கே புரியப்போகிறது? அவன் கொல்லைப்புறம் கொட்டகை போட்டுக்கொண்டிருக்கிறான். கொட்டகையின் கூம்பு சேர்கிற இடமாகப் பார்த்து நாலைந்து தப்படிகூட நிமிர்ந்து நடக்க முடியாது. மற்ற இடங்களில் குனிந்து நடக்கவேண்டும். மரகதத்தைப் பிறந்த மேனிக்கு நிறுத்தி நடக்கச்சொல்லிப் பார்க்கக்கூட அவனுக்குத் தோன்றாது. அவனுக்கு என்ன இதைப்பற்றிக் கவலை? மரகதம் அழகாயிருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? அவனுக்கு இதற்கெல்லாம் பொழுது இருக்குமா? கோபாலி வீட்டுக்கும் எனக்கும் சேவகம் செய்யவே சரியாயிருக்கும். ஒரு வாரம் வரவேண்டாம் என்று சொன்னால்கூட வீட்டுக்குள் உட்கார்ந்து அவள் நடப்பதையும் பேசுவதையும் உட்கார்வதையும், கையையும் காலையும், இடுப்பையும் பார்க்கப்போகிறானா அவன்! இந்த மாதிரி உணர்வெல்லாம் அவனுக்கு இருக்குமா?

இடை இடையே எனக்கு கட்சி நினைவு, மார்க்ஸ் நினைவெல்லாம் வந்து குத்துவதுண்டு. நடுத்தர அல்லது மேல்மட்ட சுகவாசி வர்க்கங்களுக்கெல்லாம்தான் அழகுணர்ச்சி உண்டா? அன்றாடம் பாடுபடுகிறவனுக்குக் கிடையாதா? அழகைப்பற்றி கவிதை பாடியவர்கள்.

அழகைக் கடவுளின் பிரசாதமாகப் பாடியவர்கள் எல்லாம் சோம்பேறிகள்தானா? பிறர் உழைப்பை மென்று தின்கிறவர்களுக்குத்தான் அழகு இருக்கிற இடம், அழகைப் பார்க்கிற கண், அழகைப் பார்க்கிற பொழுது எல்லாம் இருக்குமா?

முதல் ஒரு வருஷம் மரகதம் தினம் ஒரு தடவை இரண்டு தடவை வீட்டுக்கு வந்துவிட்டுப் போவாள். புதுக் கலியாணப் பெண்ணாக, அதிகம் வெளியே தலைகாட்டாமல், நடமாடாம லிருக்க முயலுவது போலிருந்தது. மாலையில் அந்தி மயக்கத்திற்கு வருவாள். நாலைந்து தடவை அவள் வாயைப் பிடுங்கிப் பேசவைப்பதற்காகச் சீண்டியிருக்கிறேன்.

"நீ ரொம்ப அழகுன்னு பச்சையப்பனுக்குத் தெரியுமோ?" என்று கடைசியாகக் கேட்கும்போது, "போங்கம்மா" என்று பேச்சை மாற்றுவாள் - அல்லது நிலையைக் கடந்து கொல்லைப்படியில் இறங்கிவிடுவாள். உடல் கறுமை முழுவதையும் நாணம் படர்ந்து அவளைத் தூக்கிச் செல்வது போலிருக்கும்.

அவள் இந்த வீட்டில் வந்து இஷ்டம் போல நடமாட ஒன்றரை, இரண்டு வருடம் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன்.

ஐந்தாவது தடவையோ ஆறாவது தடவையோ அதே கேள்வியைக் கேட்ட பிறகு, சிறிது நேரம் என்னையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

"என்ன பார்க்கறே?"

இப்போது பழைய நாணம் எல்லாம் போய்விட்டது. நாலு மாதமாக அவ்வப்போது எனக்குச் சமைத்துக்கூடப் போடுகிறாள். தலைவாரி விடுகிறாள். புடவையைத் தோய்த்து உலர்த்துகிறாள். கூப்பிடு மணி கேட்டால், மாடிப்படி யிறங்கி வாசல் கதவைத் திறந்துவிட்டு வருகிறாள். கனகாம்பரம் வாங்கிவந்து தொடுக்கிறாள். பாத்திரங்களைக் கழுவி வைக்கிறாள். முதல்தர காபியாகப் போடக் கற்றுக்கொண்டுவிட்டாள்.

பார்த்துக்கொண்டே நின்றாள்.

"சொல்லமாட்டியா?"

"என்ன சொல்றது?" என்று குனிந்துகொண்டாள்.

"நீ அழகா இருக்கேன்னு பச்சையப்பனுக்குத் தெரியுமான்னு கேட்டேன்.

ஒரு தடவை சொன்னாப் புரியாதா?"

"நீங்கதான் இத்தோட ஏழெட்டு தடவை கேட்டாச்சே இப்படி."

"எழுபது தடவை கேட்டாக்கூட நீ பதில் சொல்றதாகத் தெரியலியே."

"என்னத்தைச் சொல்றது! ஆம்பிளையாகப் பொறந்தவங் களுக்கு இதுகூடவா தெரியாம இருக்கும்?"

"இதுகூடன்னா?"

"..."

"ஒரு பொம்மனாட்டி அழகா இருந்தா ஒரு ஆம்பிளைக்கு அது தெரிஞ்சுதான் இருக்கும்."

"இருக்குமா, இருக்கா?"

"நீங்க வம்புக்காரங்கம்மா. உங்களோட வாயைக் கொடுத்து மாட்டிக்கக் கூடாது."

இரண்டாவது வருடம் நவம்பர் மாதம் மழையும் புயலும் ஒரு நாள் சீறி தென்னை மரத்தின் தலைகளை முறித்து முறித்துப் போட்டது. பிராணன் போன காக்கையாக, பச்சையப்பன் குடிசை கீழே சாய்ந்து ஒருக்களித்துவிட்டது. இரண்டு ட்ரங்குப் பெட்டி, சட்டி, தட்டுமுட்டெல்லாம் மாடிக்கு வந்தன.

புயல் நின்றது. வானம் வக்காளித்தது. "பச்சையப்பா, நீங்க ரண்டுபேரும் இங்கேயே இருந்துடலாம். பின் ரூம் இருக்கே, அதை உங்க ரூமா வச்சுக்கோ. சாப்பாடெல்லாம் ரண்டுபேரும் என்னோடு சேர்ந்து சமைச்சுக்கலாம்."

"என்னம்மாது!"

பச்சையப்பனுக்கு பெரிய ஆச்சரியம் வந்துவிடவில்லை. ஆச்சரியம் இல்லாமலும் இல்லை. "இது என்ன புது கிறுக்கு!" என்று சொல்லுகிற சிரிப்புதான் ஆச்சரியமாக முகத்தில் பரந்தது.

"உங்களுக்கும் சேர்த்து சமைச்சு எல்லாருமா சாப்பிடறதா?" என்றான்.

"ஆமா."

"உங்களுக்கு வித்தியாசம் கிடையாதும்மா. அய்யிரு ஒத்துக்குவாங்களா?"

"இது என் வீடா, அய்யிரு வீடா? வாயை மூடிண்டு இரு."

"நான் அதுக்குச் சொல்லலெம்மா! உங்களுக்கு ஏதுக்கு கஷ்டம்?"

"எனக்கு என்ன கஷ்டம்? நான் ஒண்டியாத்தானே இருக்கேன்."

"அதுக்குத்தான் சொல்றேம்மா."

"என்ன?"

"நீங்க ஒண்டியா இருக்கணும்னுதானே இருக்கீங்க. அப்பறம் இது என்னத்துக்கு?"

"நீ கவலைப்படாதே அதைப்பத்தி. எனக்கு வேணுங்கறபோது ஒண்டியா இருந்துக்கத் தெரியும்."

பச்சையப்பன் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

"நீதான் பாத்துண்டிருக்கியே. தினம் ஏழெட்டு பேராவது வந்து போயிண்டுதானே இருக்காங்க. அப்பவும் நான் ஒண்டியாத்தானே இருக்கேன் . . ."

மீண்டும் மௌனமாக நின்றான்.

"நான் ஊரிலே இருந்தா அண்ணன் தம்பி, தங்கை, தமக்கை இல்லாட்டா, புருஷன், நாத்தனார், கொழுந்தன் எல்லாரும் கூடத்தானே இருப்பாங்க. அந்த மாதிரி நீங்க இருந்துட்டுப் போங்களேன்."

பச்சையப்பன் புன்னகையோடு பார்த்தான். அப்போது மரகதம் காப்பி போட்டு, என்னிடம் கொண்டுவந்தாள். பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

அவள் மீண்டும் உள்ளே போனதும் சொன்னான். "ரண்டு மாசத்துக்கப்பறம் சண்டை வந்திரும்னு அப்ப சொன்னீங்களே! ரண்டு வருசம் கழிச்சாவது சண்டை வரத்தான் போவுது. வந்தா தடுக்கலாம்னு

நினைக்கிறீங்க போலிருக்கு" என்று இரண்டு கண்களையும் விஷமாகச் சிமிட்டினான் பச்சையப்பன். அவனுக்கு ஒரு கண்ணை மட்டும் சிமிட்ட வராது போலிருந்தது. குறும்பு பேசும்போது இரண்டு கண்களையும் சேர்த்து சிமிட்டுவான். அதுவும் மூடித் திறந்துகொள்ள முழுசாக ஒரு விநாடியாகும், நன்றாகப் பார்த்துக்கொள், குறும்பாகப் பேசுகிறேன் என்று இடிப்பதுபோல.

"நீயா சண்டை போடப்போறே அவளோட! நீதான் அவ கால்லெ அடிமையா விழுந்து கிடக்கியே. அவளை கொஞ்சம் அதட்டிப்பேசினாலெ, அவ அழகெல்லாம் நலுங்கி உதிந்து போயிடுமோன்னு நடுங்கறாப் போலன்னா இருக்கு உன்னைப் பார்த்தா."

"அது லட்சணமா இருக்கறது எனக்கும் தெரிஞ்சிருக்குன்னு சொல்றீங்க" என்று மீண்டும் கண்ணைச் சிமிட்டினான் பச்சை.

உற்று அவனைப் பார்த்தேன்.

"எங்கிட்ட பேசறதையெல்லாம் ஒண்ணுவிடாம சொல்லுவளோ மரகதம் உங்கிட்ட?"

"நானும்தான் சொல்லுவேன். இல்லாட்டி நீங்க சொல்றாப்பல எப்படி ரண்டு மாசத்துக்குமே ஓடும்?"

எழுந்து வாசலைப் பார்க்கும் கிராதியடித்த தாவாரத்துக்குப் போனேன். அவனை ஜாடைசெய்து கூப்பிட்டேன். வந்தான்.

"உனக்கு இங்க வந்து இருக்கறதுக்கு என்ன ஆட்சேபம்?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"நான் இருக்கத் தயார். அது சரிங்கணுமே. எத்தனையோ பேர் வராங்க கொள்றாங்க" என்று குனிந்துகொண்டான்.

சிறிது நின்றேன்.

காபி பாத்திரங்களை எடுத்துக்கொண்டு வந்த மரகதம், "உள்ளார உங்களுக்குக் காபி வச்சிருக்கறேன்" என்று குரல் கொடுத்துவிட்டு, தேய்ப்பதற்காக பின்பக்கம் மொட்டை மாடித் தாழ்வாரத்திற்குச் சென்றாள்.

"உனக்கு சந்தேகமா இருக்கோ?" என்றேன்.

"என்னங்க?"

"நான் எப்படியெல்லாமோ இருக்கேனே . . ."

பச்சை ஒன்றும் பேசவில்லை. தலையை மட்டும் இல்லை இல்லை என்பதுபோல் அசைத்தான்.

"சொல்லு வாயைத் திறந்து."

"அதுக்கும் இதுக்கும் என்னம்மா?"

"பின்ன ஏன் அவ சரின்னு சொல்லணுமேங்கறே?"

"எனக்கு உங்களை நல்லாத் தெரியும். ஆனா அதுக்கு எப்படியோ?"

"கூப்பிடு அவளை."

பச்சை அவளை அழைத்து வந்தான். பாதி பற்றுத் தேய்த்துக் கொண்டிருந்தவள், அப்படிக் கையை அலம்பிவிட்டு, பழைய துணி ஒன்றில் கையைத் தேய்த்துக்கொண்டே வருகிறாள். பழிகாரி! எப்படி நடக்கிறாள்! க்ணிக் க்ணிக் என்று கால்விரல் மெட்டி ஒலிக்கிறது. வெளிர் நீலமாக ஒரு புடவை. கலியாணமான இரண்டு வருஷத்திற்காக தோள், புஜம், இடுப்புக் கீழ் எல்லாம் பாந்தமாகச் சதை வைத்து மினுமினுத்தது. அவள் நடந்து வருவதைப் பார்க்கும்போதே என் ஊடம்பில் ஒரு பரப்பு, ஆண் பிள்ளையாக இருக்க வேண்டும் போல. இந்தக் கணத்திலேயே, அவளை அப்படியே அணைத்து முந்தானயைப் போட்டு மூடி முற்றிலும் காப்பாற்ற ஒரு பரபரப்பு! நான் ஏன் இத்தனை படித்தேன்! இன்னும் அலமாரி அலமாரியாகப் புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறேன்! ஏன் புதிது புதிதாகப் படிக்க வேண்டும், பார்க்க வேண்டும், பழக வேண்டும் என்று நண்பர்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். ஓடி ஓடிப் போய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் - மாணவிகளை, ஹோட்டலில் வந்து தங்கும் வித்வான்களை, நீளமுடிப் பாடகர்களை, சித்திரம் போடுகிறவர்களை, நடிகர்களை, புடவை நெய்பவர்களை, எழுதுகிறவர்களை, புதிதாக கட்டுகிறவர்களை! ஏன் இப்படி ஊர் ஊராக மனிதர் மனிதராக அலைகிறேன் - இவள் ஏன் அலையவில்லை? ஏன் பற்றுத் தேய்த்து, வீடு பெருக்கி நறுவிசு செய்துகொண்டிருக்கிறாள்?

"என்னது?" என்று கடைசியில் ஒரு சங்கதியுடன் உள்ளங் கையைத்

துடைத்துக்கொண்டே கேட்டாள் மரகதம்.

"மரகதம், உன்னை ஒண்ணு கேக்கணும். குடிசை காத்திலெ விழுந்துடுத்து. நீங்க ரண்டுபேரும் இங்கேயே இருந்துடுங்களேன் . . .

அதோ உள்ளூ இருக்கு பாரு, பின் பக்கத்திலெ. அங்கே ரண்டு பேர் உட்கார, படுக்க இடம் இருக்கு. பொட்டி, சாமான்லாம் வச்சுக்கலாம். இங்கியே சாப்பிட்டுடுங்கோ ரண்டுபேரும். நீ பச்சையப்பனுக்குச் சமைக்கறபோது எனக்கும் சேத்து சமைச்சுடலாம். நான் சமைக்கிற அன்னிக்கி உங்களுக்கும் சேர்த்து சமைச்சுடறேன். என்ன?"

மரகதம் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே?"

"இவங்க என்ன சொல்றாங்க?"

"அவனுக்குச் சம்மதம்தான். நீ சம்மதிப்பியான்னுதான் அவனுக்கு யோசனை. இந்த அம்மாவோட எப்படி குடித்தனமா இருக்கறதுன்னு யோசிக்கிறாப்பல இருக்கு. இந்த அம்மா ஒரு தினுசான அம்மா. கலியாணம் கிடையாது. ஆனா கலியாணமானாப்போல எத்தனையோ பேரோட இருக்காங்க. மரகதத்தை இந்தக் கடைக்கு நடுவிலே கொண்டுவச்சா சரிப்பட்டு வருமா? - இப்படியெல்லாம் பச்சையப்பன் யோசிக்கிறானோ என்னவோ. ஆனா நீதான் இப்படியெல்லாம் யோசிப்பியோ என்னவோன்னு சொல்றான். நான் எப்படியிருந்தா என்ன? உங்க ரண்டு பேரையும் வீட்டோட வச்சிண்டா தேவலை போலிருக்கு. என்னைப் பத்தித்தான் உனக்குத் தெரியும். உன் புருசனும் சொல்லியிருப்பன். எனக்கு வேற மனுஷா இல்லாத்தினாலெ சொல்றேன். . ." குரலில் கண்டிப்பாக மிடுக்காகத்தான் சொல்லிக்கொண்டிருந்தேன்.

மரகதம் தலையைக் குனிந்தவள் நிமிரவில்லை.

"என்ன?"

" . . ."

"உனக்கு இஷ்டமில்லேன்னா இல்லேன்னு என்னைப் பார்த்துச் சொல்லு. சம்மதமானா சரி, இல்லேன்னா இல்லே. எனக்கு என்ன வருத்தம்? சொல்லேன்."

மரகதம் நிமிர்ந்தாள். ஆச்சரியமாக இருந்தது. கண்ணில் மளமளவென்று நீர் விழக் காத்துக்கொண்டிருந்தது.

"என்னது!"

தலை மட்டும் சரி என்பதுபோல ஆடிற்று.

"என்னது!"

"இருக்குறோம்மா" என்று முந்தானையால் கண்ணை துடைத்துக்கொண்டாள் அவள்.

பச்சையப்பன் கனிவாக அவளைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

"இருக்கியா? இல்லை குடிசை கட்டிண்டு போகணும் போலிருக்கா?" என்றேன்.

"இங்கியே இருக்குறோம்!"

"கேட்டுண்டியா, பச்சையப்பா?"

"கேட்டுகிட்டேன். இதைச் சொல்றதுக்கா, இத்தினி கண்ணாலெ ஜலம்?" என்று அவளைப் பார்த்தான்.

மரகதம் கலங்கிய கண்களுடன் ஒரே விநாடி அவனை முறைத்துப் பார்த்தாள். மீண்டும் தலையைக் குனிந்துகொண்டாள். இமை மயிர் நனைந்து பளபளக்க அவள் கழுத்து லேசாகப் புடைத்து உதடு சற்று விரிந்திருந்தது.

'என்ன நாக் - ஔட் அழகு!' என் கண் பரந்தது.

அவன் அந்தப் பார்வையைப் பார்த்தவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து, பின்புற அறைக்குப் போய்விட்டான்.

"என்ன மரகதம், என்னத்துக்கு இப்படி அடைச்சிண்டு வந்துது உனக்கு?"

"ஒண்ணுமில்லேம்மா" என்று "பாத்திரம் பார்க்க கிடக்கு" என்று சொல்லிக்கொண்டே பின்புறம் நடந்தாள் அவள்.

விளக்கு வைக்கிற நேரத்திற்கு மீண்டும் அவளைப் பிடித்துக்

கொண்டேன். பச்சையப்பன் வீட்டில் இல்லை.

"மரகதம் இப்ப சொல்லு. என்னத்துக்கு அழுதே அப்படி?"

"ஒண்ணுமில்லேம்மா."

"நீ சொல்ற வரைக்கும் நான் விடமாட்டேன்னு தெரியு மோல்லியோ உனக்கு - ஏன் இப்படி மழுப்பிண்டேயிருக்கே."

"பின்ன நீங்க அப்படியெல்லாம் பேசறப்ப என்னத்தைச் சொல்றது? எனக்குக் கஷ்டமா ஆயிட்டுது."

எனக்கு அவள் வாயை இன்னும் கிண்ட வேண்டும் போலிருந்தது. என்ன சொல்லலாம் என்று மனசுக்குள் ஒத்திகை பார்த்துக்கொண்டேன். "வயித்தெரிச்சலா இருந்துதா? இந்த மாதிரி, உறவு ஜனம் எல்லாம் விட்டுப்பட்டு இப்படி கண்டபடியெல் லாம் இருந்துண்டு, இப்படி மனுஷாளுக்குத் தவிக்கிறாளே . . ."

முழுவதும் மனதுக்குள் சொல்லிப் பார்த்துக்கொள்ள முடியவில்லை. "யாரைத்தான் யாரு என்ன செய்ய முடியும்மா? இல்லெ, யாருதான் என்னாத்தைச் சொல்லக் கிடக்கு? எல்லாம் அவங்க அவங்க இஷ்டம். எங்க உறவு ஜனத்திலெ இருக்குறாம்மா - கொல்லுத்து மேஸ்திரி. ஊடு கட்ட கண்ட்ராக்ட் எடுத்து ஊடெல் லாம் கட்டிக் குடுக்குறான். அவன் வந்து நாலு வடம் சங்கிலி, வளை பண்ணிப் போடறேன், அத்தை வாங்கிக் குடுக்குறேன், இத்தை வாங்கிக் குடுக்குறேன்னான்னு எங்கப்பாருகிட்டவும் ஆயாட்டியும் வந்து ஒரு வருஷம் மன்னாடினான். நான் முடியாதுன்னுட்டேன். அம்மாக்குக்கூட ரொம்ப கோவம். சும்மா எடுபிடி வேலை செய்றவனைத்தான் புடிச்சிருக்குதா, காடு கழனி இருக்குறவங்கள்ளாம் வாணாம் - அப்படி இப்படின்னு கொதறிக்கிட்டே இருந்தாங்க. உனக்கு அவனைப் புடிச்சிருந்திச்சின்னா, ஒரு நாளைக்குக் கூப்பிட்டு நல்லா செமத்தியா மசாலை எல்லாம் பண்ணிப் போட்டுச் சாப்பிடச் சொல்லு. மாப்பிள்ளையா வர்ற சேதி மட்டும் வாணாம்னு சொல்லி வச்சேன். என் இஷ்டமா எங்கம்மா இஷ்டமா? அந்த மாதிரிதான் அல்லாருக்கும் . . ."

"பச்சையப்பன் மேலதான் உனக்கு ஆசை! அதான் நீ சொன்னாதான் இங்கே இருக்க முடியும்னுட்டான்."

"..."

"இங்கே இருக்கறதுக்கு உனக்கு என்னமோ போல இல்லியே?"

"ஏம்மா சும்மாச் சும்மா அதையே கேக்கறீங்க? எங்களைப் பார்த்தா பயப்படறாப்பல இருக்குதா?"

"இங்க வா."

வந்தாள்.

கையைப் பிடித்துக்கொண்டேன். "நீ இங்கே இரு. ஏதாவது சொல்லணும்னா, எங்கிட்ட தைரியமா சொல்லு - தயங்காம, பயப்படாம."

அவள் தயங்கவும் இல்லை, பயப்படவும் இல்லை. கோபாலி, வேலய்யா - இவர்களைத் தவிர தினம் வருகிற பேச்சு விருந்துகள், சாப்பாட்டு விருந்துகள், நேரம் கழித்து வருகிற 'உள்வட்ட'ங்கள் - எல்லாருக்கும் கதவைத் திறந்துவிடுவாள். காபி கொண்டு வைப்பாள். வெற்றிலை, சிகரெட் வாங்கிக்கொண்டு வருவாள்; உப்புமா பண்ணிப் போடுவாள். இடக்காகப் பேசினால் இடக்காகப் பதில் சொல்லுவாள். ஏதாவது கொடுக்கும்போது கையை நீட்டி வாங்கிக்கொண்டால், கீழே வைக்காமல், கையிலேயே கொடுப்பாள். தெரியாமல் கை பட்டால், பார்க்கமாட்டாள். தெரிந்து கைபட்டாலும் பார்க்கமாட்டாள். வேணும் என்றே விரல் தீண்டினால், உபரியாக ஒரு கணம் இரண்டு கணம் தீண்டினால், ஒரு மின்வெட்டு வெறித்துப் பார்த்து, என்னையும் ஒரு முறை பார்த்துவிட்டுப் போவாள். மூணு தடவையும் வெளிநாடுகளில் சுற்றியபோதும் வீட்டையும் பச்சையப்பனையும் அவள்தான் பார்த்துக்கொண்டாள். திரும்பி வரும்போது வீடு நிகுநிகுவென்று வரவேற்கும்.

இரண்டாம் தடவை போய்விட்டு வந்தபோது, இரண்டு நண்பர்கள் - திருமலாச்சாரி, ஹக்கீம் - இரண்டு பேரும் நான் ஊரில் இல்லை என்று தெரிந்தும் மூன்று தடவை வந்து வந்து விசாரித்தார்களாம். "வரதுக்கு இன்னும் பதினைஞ்சு நாளாகும்னு போன வாரம் மூணாம் தடவை சொன்னேனே. சும்மாச் சும்மா வரீங்களே?" என்றாளாம் மரகதம். "உங்களுக்கு யாரைப் பார்க்கணும், அம்மாவைத்தானுங்களே?" என்று கேட்டாளாம்.

இருவரும் ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தபோதுதான் செய்தியைச்

சொன்னாள் மரகதம். மறுநாளே இருவருக்கும் கடிதம் எழுதிப் போட்டேன் - இனிமேல் நான் அவர்களை அவர்கள் வீட்டிலேயே வந்து பார்ப்பதாகவும், அல்லது மரகதம் அவர்கள் வருவதை அவ்வளவாக விரும்பாததால், வேறு எங்காவது சந்திக்கலாம் என்றும்.

"உனக்குப் பைத்தியமா?" என்றான் ஹக்கீம் அவன் வீட்டுக்குப் போனபோது.

"ஆமாம்."

"என்ன ஆமாம்?"

"ஆமாம்னால் ஆமாம்."

"இது என்ன க்ராண்ட் ஜோக்! நீ வந்து உன் வேலைக்காரியின் கற்பைக் - காப்பாற்றுவது - அவள் சொல்வது நிஜமென்றே வைத்துக்கொள்வோம்."

"கிராண்ட் ஜோக்காகவே இருக்கட்டும். ஆனால் என் சிநேகிதி பொய் சொல்லமாட்டாள்."

"உன் சிநேகிதியா?"

"அவள் வேலைக்காரி - சிநேகிதி இரண்டும்."

"ஓ அப்படியா. பொய்வேறு சொல்லமாட்டாளா? என்ன ஒரே ஜோக்காக இருக்கிறது எல்லாம்! இது என்ன வெளிநாட்டுப் பயணத்தின் கடைசித் தாக்கமா? இல்லை, மார்க்ஸிஸத்தின் ஃபர்மண்ட்டாகி கருணைச் சகோதரத்துவமாக வடிந்த மதுவா?"

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இனிமே எங்க வீட்டுப் பக்கம் வராதே. அவளுக்கு உன்னைக் கண்டால் பிடிக்கவில்லை. திருமலாச்சாரியையும் பிடிக்கவில்லை."

எனக்கு ஏன் இந்த வெறி வந்ததென்று புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் கற்பைப் பிறர் எண்ணத்தில்கூட இழப்பதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஹக்கீம் சொன்னாற்போல, எனக்கே இது ஒரு பூத ஹாஸ்யமாகத்தான் தோன்றிற்று. பாரிசிலும், ரோமிலும், கியாவானி, பீனே என்று இளைஞர்களோடு இருக்கிறபோதெல்லாம், மரகதத்தின் தூய்மையைக் கெட்டியாகக் கையில்

பிடித்துக்கொண்டிருந்தேன். நாலாந்தடவை யார் கூப்பிடாமலும், எங்கும் ஆடாமலும் நாடு நாடாகச் சுற்றியபோது, பிக்காடிலி சதுக்கத்தில் நானும் சுபலாவும் ஒருநாள் ஒரு 'எக்ஸ்பெரிமென்ட்' செய்துகொண்டிருந்தோம். அதாவது 'இரவு ராணிகள்' போல நடந்துகொண்டு, இரண்டு இளைஞர்களை எங்கள் அறைக்கு அழைத்துச் சென்றோம். அப்போதெல்லாம் மரகதம் ஞாபகம்தான். பச்சையப்பனைவிட நான்தான் அவளை, அவள் உடலை, அவள் மனதைக் காப்பாற்றுவதைப்போல் ஒரு பிடிவாதம். அந்தப் பையன், முரட்டு இளைஞன் - அமெரிக்காக்காரனாம் - சோல்ஜராம் - என்னோடு நீளமாகக் காலை எடுத்து எடுத்து வைத்து உடன் வந்துகொண்டிருந்தான்.

# 11

சிறிது தூரம் நடந்ததும் "எதாவது சாப்பிட இருக்கிறதா - வீட்டில்?" என்றான் அவன். "இல்லாவிட்டால் எங்கேயாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாமா?" என்றான்.

"நான் சாப்பாடு பண்ணிப் போடுகிறேன்."

"என்ன இருக்கிறது?"

"உப்மா - மாங்காய் ஊறுகாய்."

"என்னது!"

"இந்திய சாப்பாடு - திடீர் சாப்பாடு."

"நீங்கள் இந்தியர்களா?"

"ஆமாம்."

"அதுதான் இவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்!"

"நிஜமாகவா?"

"நான் இந்தியாவுக்கு வந்ததில்லை. சைகோனில் இந்தியர்களைப் பார்த்திருக்கிறேன். மாநிறம் ஒன்றே போதும். அந்த மாதிரி நிறம் வரும் என்றால், நான் ஒரு வருஷம் வெயிலில் நிற்கத் தயார்."

சற்றுக் கழித்து, "குடிக்க ஏதாவது இருக்கிறதா?" என்றான்.

"இல்லை."

ஒரு பாட்டில் விஸ்கி வாங்கிக்கொண்டான்.

அறைக்கு வந்தவன், எதற்காக வந்தோம் என்பதை மறந்துவிட்டானோ

என்னவோ! குடித்துக் கொண்டேயிருந்தான், பேசிக்கொண்டேயிருந்தான். பார்க்க வாட்டா குடிவீரன் மாதிரி உயரம். ஆனால் பேச்செல்லாம் பிள்ளைப் பேச்சாக இருந்தது. வியட்நாமில் சண்டை போட்டுவிட்டு மூன்று வருஷம் கழித்துத் திரும்பி வந்தானாம். வயது இருபத்து மூன்று என்றான்.

சுபலா உப்புமா கிண்டி, இருக்கிற கறி காய்களையெல்லாம் போட்டு சூப் செய்துகொண்டிருந்தாள்.

பாதி பாட்டில் சாப்பிட்டவன் நாக்கு முற்றிலும் அவிழ்ந்துவிட்டது போலிருந்தது.

"நான் ஏதாவது மனதைத் திறந்து சொன்னால், கோழிக்குஞ்சு என்று சொல்ல மாட்டீர்களே?"

"புரியவில்லையே."

"குடித்துவிட்டு உளறுகிறேன் என்று நினைக்காதீர்கள். இந்த மாதிரி இரண்டு பாட்டில் அப்படியே சாப்பிடுவேன். அசையாமல் உட்கார்ந்திருப்பேன்."

"அப்படியானால் இன்னும் இரண்டு பாட்டில் வாங்கி வந்திருக்கலாமே."

சிரித்தான்.

"என்னை அனாவசியமாகச் சிரிக்க வைக்காதீர்கள். நான் சிரிக்கிற மனநிலையில் இல்லை."

"அழவேண்டும் போலிருக்கிறதா?"

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது? எனக்கு அழவேண்டும் போல் தானிருக்கிறது. ஏன் தெரியுமா?"

சுபலா மிக்ஸர் ஸ்விட்சை நிறுத்திவிட்டு, சமையல் மேடையிலிருந்து திரும்பிப் பார்த்தாள்.

"இது என் வீடுமாதிரி இருக்கிறது" என்றான்.

பதில் பேசவில்லை.

"என்னவோ எங்கள் வீட்டுக்குள் இருப்பதுபோலிருக்கிறது. உங்கள் புன்னகை, உங்கள் சிரிப்பு, நீங்கள் பேசுகிற விதம், நான் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்கிற பரிவு, அதோ உங்கள் சிநேகிதி கரிசனையோடு சமையல் செய்கிற பொறுப்பு - இதையெல்லாம் பார்த்தால் என் வீடுமாதிரி இருக்கிறது."

'ஏது, நீங்கள் எங்களை கலியாணம் செய்துகொண்டுவிடுவீர்கள் போலிருக்கிறதே' என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் பையன் கடைசியாகச் சொன்ன தோரணை நாக்கைக் கட்டிவிட்டது. அவன் குரல் கம்மி நடுங்கிற்று. அழவேண்டும் போலிருக்கிறது என்று அவன் சும்மா சொல்லவில்லை. இரண்டு உதடுகளையும உள்ளே மடித்து இறுக வாயை மூடிக்கொண்டுவிட்டான்.

சுபலா என்னைப் பார்த்து "இது என்னடீம்மாது!" என்பதுபோல் உதட்டோரங்களைச் சரியவிட்டு நின்றாள். முகத்தில் கவலை.

"நான் அதிகமாகக் கொன்றதில்லை. எண்ணி வைத்திருக்கிறேன். பன்னிரண்டு பேர் என் துப்பாக்கியால் செத்திருக்கிறார்கள். ஐம்பது அறுபது என்று கொன்றவர்கள் என் சகாக்களில் உண்டு. நான் பன்னிரண்டு பேர்தான். எங்களைக் கண்டு முகத்தில் கிலி படர்ந்து ஓடிப்போன பெண்களைப் பார்த்திருக்கிறேன். பாம்பைக் கண்டு, அணிலோ, தவளையோ ஸ்தம்பித்துப்போய் அசையமுடியாமல் நிற்குமாமே, அந்த மாதிரி நின்ற மனைவிகளையும் பார்த்திருக்கிறேன். கண்ணில் கிலி, வாய் பொத்தின கரம். கர்ப்பமாயிருந்தால், அது நழுவி கீழே விழுந்திருக்கும் - அல்லது அப்படியே சுருண்டு மூர்ச்சை போட்டு விழுந்திருக்கலாம் அந்தத் தாய், அந்த மாதிரி ஒரு வீட்டுக்குள் போனேன். ஒரு பெண்ணும் மகனும் - சின்னப் பையன். பையனைப் பின்பக்கம் தள்ளி மறைத்துக்கொண்டு நின்றாள். என்னை வெறித்துப் பார்த்தாள். என்னவோ சொன்னாள். "கிட்டவராதே" என்று சொல்வது போலிருந்தது குரல். பாஷை புரியவில்லை. நின்றேன் பார்த்துக்கொண்டே நின்றேன். வாயை அசைத்தாள். ஒரு சின்ன பழ அளவுக்கு எச்சில் திரண்டு என் சட்டையில் வந்து விழுந்தது. கைக்குட்டையை எடுத்துத் துடைத்தேன். வெளியே வந்துவிட்டேன். அதையெல்லாம் எனக்கு மறக்க வேண்டும் போலிருக்கிறது - முற்றிலும் - துளி நினைவுகூட இல்லாமல். காறி உமிழ்ந்த அந்த எச்சில் இன்னும் என் மேல் ஒட்டிக்கொண்டிருக்கிறது. நான் உங்கள் மாதிரி பெண்களை அழைத்துக்கொண்டு போகிற போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் அந்த எச்சில் மேலே வந்து விழுந்துவிடுகிறது. உட்கார்ந்து குடிப்பேன். பேசிக்கொண்டேயிருப்பேன். தூங்கிப்

போய்விடுவேன். காலையில் எழுந்து வெளியே போய்விடுவேன்.

இங்கும் அப்படித்தான் செய்தான் அவன். குடித்துக்கொண்டே யிருந்தான். பேசிக்கொண்டேயிருந்தான்.

"துணிந்து ஒரு முஷ்டி எச்சிலை என் மீது துப்பினாளே அவள். எவ்வளவு தைரியம்! எது போய்விடும் என்று பயந்து அவள் அந்த மாதிரி தன் அலட்சியத்தைத் துப்பித் தீர்த்தாள்? நான் அவளை பலாத்காரம் செய்திருக்கலாம். கேட்க ஆளில்லை. காப்பாற்ற ஆளில்லை. என் சகாக்களிடம் சொல்லியிருந்தால் அவர்கள் செய்திருப்பார்கள். பிறகு வீட்டையும் அவளையும் எரித்துமிருப்பார்கள். யாரும் அப்பொழுது பார்க்கவில்லை. அவள் துப்பினதை - ஆனால் வெளியே வந்ததும், உலகம் முழுவதுமே அதைப் பார்த்ததுபோல் தானிருந்தது. யாரும் பார்க்க வில்லை என்று நாம் செய்யும் காரியங்கள், செய்யும் நல்லது கெட்டது, படுகிற அவமானம் - எல்லாவற்றையும் எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த உலகத்தில் ஒரு ஜீவனின் பார்வையிலிருந்தும் அது தப்பவில்லை என்று எனக்கு வெளியே நடந்தபோது தோன்றிற்று. நீங்கள் எதற்கு இந்தியாவிலிருந்து இங்கு வந்திருக்கிறீர்கள் . .? நீங்கள் மாணவிகளா?" என்றான் அவன் திடீர் என்று.

"என் சிநேகிதி, அவள் மாணவி. நான் சும்மா வந்திருக்கிறேன் - ஊர் சுற்றிப் பார்க்க" என்றேன்.

"ஏதாவது பணக் கஷ்டமா உங்களுக்கு?"

"இல்லையே."

"பின்னே ஏன் பிக்காடிலி சதுக்கத்தில் நின்று கூப்பிட்டீர்கள்?"

இத்தனை நேரமும் வந்திருந்த இன்னொரு இளைஞன் பேசவில்லை. அவன் இப்போது வாய் திறந்தான். "நான்கூட ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன், என்ன இது, இவர்களைப் பார்த்தால் இப்படியெல்லாம் தோன்றவில்லையே என்று."

"உங்களுக்கு அலுப்பாக இருக்கிறதா நான் பேசுகிறது?" என்று சோல்ஜர் பொதுவாகக் கேட்டான்.

"ஒருக்கால் இவருக்கு இருக்கலாம்" என்றாள் சுபலா இரண்டாவது ஆளைக்காட்டி.

"அலுப்பில்லை. எனக்குப் போக வேண்டும்" என்றான் அவன்.

சுபலா அவனை அழைத்துக்கொண்டு தன் அறைக்குப் போனாள்.

"அவன் அதிர்ஷ்டக்காரன். வந்த காரியத்தைப் பார்த்துக் கொள்ள முடிகிறது. எனக்குத் தூக்கம் வருகிறது" என்றான் சோல்ஜர். உப்புமாவையும் சூப்பையும் சாப்பிட்டான். காபி கேட்டான். கலந்து கொடுத்ததும் சாப்பிட்டான். சிகரெட்டைப் பற்றவைத்தான். அவன் உப்புமா சாப்பிடும்போதே இன்னொருவன் அடுத்த அறையிலிருந்து வெளிப்போந்தவன், "எனக்கும் இருக்க வேண்டும் போலிருக்கிறது. ஆனால் போயாக வேண்டும்" என்று மரியாதைக்குச் சொல்லிவிட்டு வெளியேறினான்.

"நீங்களும் என் மீது துப்புவீர்களா?" என்றான் சோல்ஜர்.

"என்ன கேள்வி?" என்றாள் சுபலா. அவளுக்கு அலுப்பா, கோபமா - புரியவில்லை. அர்த்தராத்திரிக்கு மேல் என்ன இது என்பதுபோல் அவள் கண்ணில் அயர்வு. என்னை ஒன்றும் சொல்லவும் முடியவில்லை அவளுக்கு. இரண்டு தடவை கொட்டாவி விட்டாள். சற்றுக் கழித்து எழுந்து போனாள் - அடுத்த அறைக்கு.

"உன் சிநேகிதிக்குக் கோபம் போலிருக்கிறது" என்றான் பையன் - பையன் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

"நான் இங்கேயே இரவு தங்கலாமா?"

"அதற்குத்தானே வந்திருக்கிறீர்கள்?"

"நல்லது. எனக்கு இங்கேயே தூங்கவேண்டும் போலிருக்கிறது. உங்களை - உங்கள் சிநேகிதியை இல்லை - உங்களோடு மட்டும் பேசவேண்டும் போலிருக்கிறது. பொறுமையாக நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நான் தூங்கும்போது என் மீது துப்ப மாட்டீர்களே?"

சிரித்தேன்.

"துப்பவும் கூடாது. என்னைப் பார்த்துச் சிரிக்கவும் கூடாது. இவனுக்கும் ஒன்றும் முடியாதுபோலிருக்கிறது என்று நினைத்து, அலட்சியம்

செய்யக்கூடாது. சரிதானே."

"சரி."

"புதிதாக எந்தப் பெண்ணைப் பார்க்கும் போதும் எனக்கு அந்த எச்சில் வந்து பயமுறுத்துகிறது. பலூன் கொப்பளம்போல என்னைத் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கிறது. வெடிக்காத கொப்பளம்."

சற்றுக்கழித்து அவன் பேச்சும் ஓய்ந்துவிட்டது. தூங்க ஆரம்பித்துவிட்டான். காலையில் எழுந்து போனான். "மறுபடியும் பார்க்கிறேன்" என்றான். கணப்புக் குசலி மீது முப்பது கினி நோட்டுகள் காலி சிகரெட் பெட்டிக்குக் கீழ் விரிந்துகிடந்தது.

மறுநாளும் வந்தான். மறுநாளும் வந்தான். என் கதையை யெல்லாம் கேட்டான். பதினைந்து நாள் அவனோடு சுற்றிக் கொண்டிருந்தேன். பர்மிங்ஹாம், ஆக்ஸ்போர்ட், மான்செஸ்டர், வேல்ஸ் - ஸ்ட்ராட்போர்டுக்குப் போய் இரண்டு நாள் தங்கி, ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பார்த்தோம். போன இடங்களிலெல்லாம் ஒரே அறையில் தங்கல். படுக்கையில் ஓரமாகப் படுத்திருப்பான். ஒரு சாகசமும் ஒரு வெற்றுக்காலும் பலிக்கவில்லை.

"எங்கள் வீட்டில் இருக்கிறேன்" என்பான் திடீர் என்று.

"யாரோடு?"

"எல்லாரோடும்தான். என் தம்பி, அம்மா, என் அண்ணன் எல்லாரும்தான்."

"மனைவியை விட்டுவிட்டாயே."

"எனக்குக் கலியாணம் ஆகவில்லையே."

"வீடு வீடு என்று ரொம்பவும் தெரிந்தாற் போல் பேசுகிறாயே."

"உங்களுக்கு மட்டும் எப்படித் தெரியும்?" என்று சிரித்தான்.

அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. நானும் சும்மா வாவது சீண்டிப் பார்த்தேன். அவன் சிரித்தான்.

அந்த சிரிப்பைக் கேட்கும்போது, அவன் திடீர் திடீர் என்று எச்சிலை நினைத்து குரல் கம்மியபோது, வீடு வீடு என்று சொல்லும்போது, நான் மரகதமாக ஆகிவிட்டது போலிருந்தது. அதே கறுப்பு நீலப்புடவை, பச்சைப் படவை, எச்சரிக்கை, இருக்கிற காரியங்களை எல்லாம் தலை மேல் போட்டுக்கொண்டு அலைவது - இப்படி மாறிக்கொண்டிருந்தது உடல். அதை அடக்கி அம்மணியாக நிற்கத் துடித்துக்கொண்டிருந்தேன்.

ஸ்ட்ராப்ஃஃபோர்டில் நாடகம் பார்த்துவிட்டு 'அமுக்குப் பன்றி' விடுதியில் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். கணப்பு எரிந்துகொண்டிருந்தது. பெஞ்சு மீது ஒண்டி ஒண்டி தசைக் கணப்பிலும் குளிர்காய்ந்து நாலைந்து சிறு குடும்பங்கள் திராக்ஷை மதுவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது. ப்ரூஸ் ஆரம்பித்துவிட்டான். ப்ரூஸ் அவன் பெயர். "இந்த உலகம் முழுவதும் கொள்ளைக்கார உலகம். இதில் யாரும் விலக்கில்லை. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, ஆசியா எங்கும் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். முதலாளி, பொதுவுடைமைவாதி, அபேதவாதி எல்லோரும் கொள்ளைக்காரர்களைப் போற்றிப் பேணி வருகிறார்கள். நாயைக் கண்டால் கல்லை எடுக்கிற உலகம். கொள்ளையடிக்கிறவன் யார் தெரியுமா? படித்தவன், அறிவடைந்தவன். அறிவில்லாதவன். கொஞ்ச அறிவுள்ளவனைக் கண்டால், தெரு நாயைக் காண்கிற மாதிரி மெத்தப் படித்தவனுக்கு, மெத்தத் தெரிந்தவனுக்கு. கொள்ளையடிக்கிறது பணக்காரன் இல்லை. பணக்காரனுக்குக் கொள்ளையடிக்கக் கைகொடுக்கிறவன் மெத்தப் படித்தவன். படித்தவனுக்குப் பணம் அவ்வளவு தேவையில்லை. அவனுக்கு ஆட்டிவைக்க வேண்டும். ஆனால் கொள்ளைக்காரன் என்று பேர் மட்டும் வரக்கூடாது. அதை வேறு யாராவது வாங்கிக்கொள்ள வேண்டும். தாங்கிக்கொள்ள வேண்டும். பணக்காரனைப் பணக்காரனாகச் செய்கிறவன். அறிவுக்காரன் பணக்காரர்களுக்கு அடிமையாகிவிட்டார்கள். அறிவுக்காரர்கள் என்று சொல்கிறார்களே - அதை நம்பமாட்டேன். பணக்காரன் என்று யாரும் இல்லை. இந்த உலகத்தில் தெரிந்தவன், தெரியாதவன் என்று இரண்டு ஜாதிதான் உண்டு. தெரிந்தவன் எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு, தெரியாதவனைப் பறக்கவிடுகிறான். அடிமைப்படுத்துகிறான் . . ."

ப்ரூஸின் குரல் உயர்ந்துகொண்டிருந்தது. குடி மயக்கமாகவும் தெரியவில்லை. மயக்கமில்லை. குடியின் உற்சாகத்தில் கத்திக்கொண்டிருந்தான். எல்லாரும் பேச்சை நிறுத்தி அவனைச் சற்று நிமிர்ந்து பார்த்தார்கள். திரும்பிப் பார்த்தார்கள். இளநகை புரிந்தார்கள்.

அவனை வெளியே கிளப்பிக்கொண்டு வருவது பாடாக இருந்தது.

"நாம் பேசுவது, அவர்கள் பேசுவதற்கு இடையூறாக இருக்கும் போலிருக்கிறது" என்று அவன் புத்தியில் படும்படி சொன்ன பிறகுதான் புரிந்தது.

"மன்னிக்க வேண்டும்" என்று அவர்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டு வெளியே வந்தான்.

"உனக்கு நான் இரைந்து பேசுவதைப் பார்த்து சங்கோசம் வந்துவிட்டது. இல்லையா? நான் ஏன் உரக்கப் பேசுவதற்குக் கூச்சப்பட வேண்டும்? போர்க் குண்டுகள் யாரைப் பார்த்துக் கூச்சப்படுகின்றன? வாங்கு வாங்கு என்று வர்ணமும் மேக்கப்பும் போட்டுக்கொண்டு புத்தகக் கடைகளில் நிற்கும் புத்தகங்கள் யாரைப் பார்த்துக் கூச்சப்படுகின்றன? நம் அரசியல்வாதி யாரைப் பார்த்துக் கூச்சப்படுகிறான்? பெண் பறவையைப் பார்த்து ஆடிப் பாடி அமர்க்களப்படுத்தும் ஆண் பறவை கூச்சமா படுகிறது? விளம்பரங்கள் கூச்சமா படுகின்றன? பாடுகிறவன் கூச்சமா படுகிறான்? நாட்டியமாடுகிறவள் கூச்சமா படுகிறாள்? மூட்டை மூட்டையாக அறிவு சேர்ந்தவன் கூச்சமா படுகிறான்? பிரசங்கி கூச்சமா படுகிறான்? லபோ லபோ என்று கத்தும் பாதிரி கூச்சமா படுகிறான்? நான் மட்டும் ஏன் கூச்சப்பட வேண்டும்? அறிவாளிகள், அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள்தான் கொள்ளையடிக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அறிவுதான் கன்னக்கோல். கொள்ளை, கற்பழிக்க, திருட, ஏமாற்ற எல்லாவற்றுக்கும் உதவுகிற கன்னக்கோல் அறிவு. அறிவு வந்தால் கபடம் வரும், சூது வரும், கொள்ளை வரும், நாசம் வரும்."

ப்ரூஸ் தெருவிலும் இரைந்தே பேசிக்கொண்டு வந்தான். ஹோட்டல் அறைக்கு வந்தும் விடவில்லை.

பைத்தியத்தைக் கட்டிக்கொண்டு அலைகிறோமா என்று சந்தேகம் அரித்தது. பைத்தியமா, கிறுக்கா என்று அவன் அடங்கியதும் யோசிக்கத் தோன்றியது.

"ஒரு பெண் துப்பிய எச்சில் என்னை விரட்டிக்கொண்டே யிருக்கிறது. அறிவு உன்னை விரட்டிக்கொண்டேயிருக்கிறது" என்றான் அவன் படுக்கை ஒட்டில் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டே.

"ஓ, இத்தனை நேரமும் என் மேல்தான் கோபமா?"

"உன்மேலும்தான். ஆனால் கோபம் இல்லை. பரிதாபம். நீ ஏன் ஊர் ஊராக அலைகிறாய்? நான்தான் பத்துப்பேரைக் கொன்றுவிட்டு, எச்சில் விரட்ட விரட்ட அலைகிறேன். உனக் கென்ன? புதிது புதிதாக மனிதர்களைப் பார்த்து என்ன செய்யப் போகிறாய்? புதிது புதிதாக ஊர்களைப் பார்த்து என்ன செய்யப் போகிறாய்? யாராவது அபசுருதியாக உளறிக்கொட்டினால் ஃபண்டாஸ்டிக் மான் என்று மாய்ந்து போகிறாய்? படிக்காத பாமரர்கள் அன்பாக இருந்தால் ஃபண்டாஸ்டிக் என்கிறாய். அவர்கள் அழகாகப் பேசினால், கம்பளியில் கலர் போட்டு அழகாக

டிசைன் பண்ணினால், ஃபண்டாஸ்டிக், டெர்ரிஃபிக் என்கிறாய். எதற்காக உங்கள் நாட்டைவிட்டு ஊர் ஊராக அலைகிறாய்?"

பதினைந்து நாள் சிநேகம் நெருங்கிவிட்டது - சண்டை போட்டுக்கொள்கிற அளவுக்கு நெருங்கிவிட்டது.

"நிஜமாகக் கேட்கிறேன். இந்த நாட்டில் என்ன புதிதாக இருக்கிறது? ஏன் இந்த ஊருக்கு வந்தீர்கள்?"

"நானும் எதையோ தேடிக்கொண்டுதானிருக்கிறேன்."

"அதைப் பார்த்துவிட்டேன், இதைப் பார்த்துவிட்டேன் என்று சொல்லிக்கொள்ளத்தானே. இந்த மூட்டைகளை எல்லாருக்கும் அவிழ்த்துக் காட்டத்தானே. ஐந்நூறு அறுநூறு ஆண்களுக்குமேல் முத்தமிட்டிருக்கிறேன் என்று சொல்கிறாய். அதில் பாதிபேரோடாவது படுத்துக்கொண்டிருக்கேன் என்கிறாய். சரி, முந்நூறு பேர் கொடுக்காததை முந்நூற்றோராவது ஆள் கொடுத்துவிடப் போகிறானா?"

"அப்போதல்லவா தெரியும் அது."

"அந்த ஆள் நானாக இருக்கவேண்டும் என்றும் ஒரு காட்டு ஆசைகூட, இல்லையா?" என்றான் ப்ரூஸ்.

"நீதான் காயடித்த மாடாயிற்றே."

"நீ இப்படிச் சொன்னதற்காக, நான் எழுந்து கிளம்பி மறுக்கத் தொடங்கப்போவதில்லை."

"இந்த ஆச்சரியம் எனக்கு ஒரு அறிவுதான்."

"இத்தனை அழகான உன்னிடம், இந்தத் தனிமையில், இந்த சுதந்திரத்தில், நான் பேடியாகக் கிடப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவது ஒரு அறிவு!"

"ஆமாம்."

"இந்த மாதிரி அறிவுகளைச் சேர்த்து, வயசான தலை நரைத்த பிறகு, தோல் சுருங்கின பிறகு, பல் விழுந்த பிறகு, ஜீர்ணம் அற்றுப்போன பிறகு, மூட்டுகள் நோகிறபோது, குண்டிச் சதை வற்றி மெத்தையில்கூட எலும்பு நொகிறபோது, இந்த அறிவுகளை மெத்தையாகப் போட்டுக்கொள்வாயா? பல்லாக, மூட்டு மருந்தாக, ஜீர்ண மருந்தாக உபயோகப்படுத்திக்கொள்வாயா? அதிபோகத்தினால் உன் கன்ன எலும்புக்கு மேல் சதை தடித்திருக்கிறதே - அதுவும் பெரிய தடிப்பாக ஆகி உனக்கு நானும் ஒரு அறிவுதான் என்று ஆச்வாசப்படுத்தப்போகிறதா?"

"ஓ! இந்த பயம்தானா உனக்கு!" என்று எக்களித்தேன்.

"நான் பயப்படவில்லை. துளிக்கூட பயப்படவில்லை. நீ நிஜமாகவே ஆச்சரியமான பெண்தான். எல்லாரையும் அணைத்துக்கொண்டுவிட வேண்டும் என்று துடிக்கிறாய். கொலைக்களத்திலிருந்து வந்த எனக்கு அது ஒரு புதுமையாகத்தான் இருந்தது. இப்போதும் இருக்கிறது. ஆனால் நீ அணைத்து அணைத்து என்னவோ தேடிப் பிடிக்கப்போகிறேன் என்று சொன்னாயே அதுதான் புரியவில்லை. அந்தக் குழப்பத்தில் உன்னோடு சுற்ற ஆரம்பித்தேன் . . ."

ப்ரூஸ் நகர்ந்து அருகே வந்தான். என் கன்னத்தை இரண்டு கைகளாலும் தடவினான். இமை ரப்பைகளை விரலால் வெகு நேரம் தடவினான். கை, துடை, முதுகு எல்லாம் தடவினான். நெருங்கிவிட்டான்.

வெளியே சுவர்க்கோழி கத்திற்று. ப்ராகாவோ, புடா பெஸ்ட்டோ, மாம்பலமோ, அன்னவாசலோ - எங்கும் கத்துகிற சுவர்க்கோழிதான் இங்கு ஸ்ட்ராட்போர்டிலும் இரைந்தது. அறைக்குள்ளேயே எங்கோ, ஈரக் குரலுடன், இரவின் குரலாக, கூதலின் குரலாக இரைந்தது. பயங்கர இரவாக இரைந்தது. தாளமுடியாத இரவாக இரைந்தது. ப்ருஸ் சோல்ஜர்தான். அவனும் யாரோடோ இப்போது போரிட்டுக்கொண்டிருந்தான். முந்நூற்று ஓராவது வீரனாகப் போரிட்டுக்கொண்டிருந்தான். "உன்னைச் சக்கையாகப் பிழிந்துவிடுவேன்" என்று கியோவானியிடமும் பட்டாபியிடமும் நான்

சிரித்துச் சீண்டுகிற வழக்கம். ஒரு சவாலாக பேச வருகிற நோஞ்சான் காட்டான் இளைஞர்களிடம் எல்லாம் கத்தியிருக்கிறேன். அத்தனை சீண்டலுக்குமாகச் சேர்த்துப் பழிவாங்கிக்கொண்டிருந்தான் இந்த எச்சில் விரட்டின படைவீரன். விடிகிறபோது, எச்சிலைப் போல பட்டணத்துக் கடல் மணலில் அலை விட்டுவிட்டுப் போன ஜெல்லியைப்போலக் கிடந்தேன் நான்.

பயங்கரமான இரவு.

சுவர்க்கோழி அடங்கி வீட்டுக் கோழி எங்கோ கத்திற்று. என்னுடைய நோவு பயம் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்துக் கத்திற்று.

மரகதத்தை நினைத்து பயந்து நடுங்கினேன் நான். நான் மரகதமாகவே கிடந்தேன்.

# 12

மரகதம் மட்டும் இல்லை. மற்ற பெண்களும் என்னுள் இருந்தார்கள். கறுப்பு, சிவப்பு, மஞ்சள், மாநிறம், வெள்ளை, அழகு, பாந்தம், கோரம், அன்னவாசல், பட்டணம், ஸ்ட்ராட்போர்ட், டோக்கியோ - இன்னும் எங்கும் உள்ள எல்லா பெண்களும் என்னுள் கிடந்தார்கள். எல்லாருக்கு மாகச் சேர்த்து, உச்சமான இன்பத்தை, உச்சமான நோவை நான் பட்டுக்கொண்டதுபோல் தோன்றிற்று.

ப்ரூஸ் பக்கத்தில் மூச்சுவிடுவதுகூட கேட்காமல், மென்மூச்சாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்து பிரமிப்பாக இருந்தது. நம்ப முடியாமலிருந்தது. இரவு பார்த்த ப்ரூஸா இவன்!

இது ஸ்ட்ராட்ஃபோர்டாக இல்லாமல், லண்டனாக இருந்து, சுபலாவும் கூட இருந்தால், அப்படியே அவன் கழுத்தில் கையைக் கொடுத்து இந்தத் தூக்கமே கடைசித் தூக்கமாகச் செய்துவிடலாம். ஏன்! இப்போதுகூடச் செய்யலாம். தூங்குகிறவன் நாதியில்லாதவன், தற்காப்பில்லாதவன் என்கிறார்கள். விழிப்பில் தற்காப்பில்லாதவர்களுக்கு, எதிரியின் உறக்கம்தானே ஆயுதம். அவன் கழுத்தில் இரண்டு கைகளையும் போட்டு அழுத்த வேண்டும் போலிருக்கிறது.

ஆனால் எல்லாம் நினைவிலேயே செய்துகொண்டிருந்தேன்.

நானேதான் தருவித்துக்கொண்ட தாளாமை இது! மரகதம் இன்னும் எல்லாப் பெண்களுக்குமாகச் சேர்த்து நான் தருவித்துக்கொண்ட தாளாமை! எல்லாப் பெண்களும் தாங்களே தலையில் போட்டுக்

கொண்ட மண்.

செயலற்றாற்போல் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ப்ருஸ் கண்ணைத் திறக்கிறான்! நான் அவனைப் பார்த்துக்

கொண்டிருப்பதைப் பார்க்கிறான். சிறிது கண்ணைத் திறந்து திறந்து மூடுகிறான். வீட்டுக் கோழியின் குரலைக் கேட்கிறான் போலிருக்கிறது. மீண்டும் கண்ணைத் திறக்கிறான். என்னைப் பர்க்கிறான். கண் கொட்டாமல் பார்க்கிறான்.

"மாணிங்" என்கிறான்.

அதையே திருப்பிச் சொல்கிறேன்.

"இத்தனை நேரமும் வீட்டில் படுத்துக்கொண்டிருப்பதாக ஞாபகம்" என்றான்.

"பெண் இருக்கிற இடம் எல்லாம் வீடுதான்."

"ஆமாம். ஸாரி."

"என்ன உடனே 'ஸாரி' என்று வெள்ளைக் கொடியை உயர்த்திவிட்டாய்?"

"நீ சொல்வது எனக்குப் புரிந்துவிட்டது."

"முழுக்கப் புரிந்துவிட்டதா? உனக்கு இன்னும் தூக்கக் கலக்கம் தெளியவில்லை போலிருக்கிறதே."

"தெளிந்துவிட்டது. மணி எட்டடித்ததை இப்போது எண்ணினேனே."

"தேதி, கிழமை, வருஷம் எல்லாம்கூட ஞாபகமிருக்கிறதா? தெரிகிறதா?"

"தெரிந்தது. இரவு முழுவதும் காலம் இல்லாமல் இருந்தது. இப்போது காலப் பிரக்ஞை திரும்பிவிட்டது. ராத்திரி அந்த விழிப்பிலும் கால நினைவில்லை."

"அவ்வளவு மெய்ம்மறதி!"

"ஆமாம், தன் மறதிதான்."

"எப்படியிருந்திருக்கும்! நீதான் பலசாலி என்று நிரூபித்துக் காட்டுகிற வேகம் இருக்கும்பொழுது, எப்படி உன்னையே மறந்திருப்பாய்?"

"எனக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்ததாக ஞாபகம் இல்லை. நீதான் குத்திக் குத்திக் காட்டிக்கொண்டிருந்தாய். நான் ஆண் என்றோ பலசாலி

என்றோ காட்ட நினைக்கவில்லை. என்னை இனிமேல் எச்சில் விரட்டாது என்று ஒரு நம்பிக்கை வந்தது. நீ சீண்டினதைக்கூட அந்தப் பரிவின் சீண்டல் என்றுதான் நினைத்துக்கொண்டேன்."

நிஜம் சொல்கிறானா! பொய் சொல்கிறானா இவன்! இந்த பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.

"எனக்கு இப்போது ஒரே சந்தோஷமாக, ஒரே நிம்மதியாக இருக்கிறது. ஆனால் உனக்கு ஒரே கோபமும் குறையாக இருப்பதுபோல் தோன்றுகிறது."

"ஆமாம். என்னை நீ அவமானப்படுத்தியதாகத்தான் தோன்றுகிறது. நான் எதோ சொன்னதற்காக, வஞ்சம் தீர்த்துக்கொண்டாற் போலிருக்கிறது."

"என்ன! என்ன! என்ன இது!" என்று எழுந்து உட்கார்ந்துகொண்டான் அவன். என் இரு கன்னங்களையும் இரண்டு உள்ளங் கைகளிலும் அமுக்கிக்கொண்டான். "ஏன் இப்படியெல்லாம் சொல்கிறாய்!"

"பின் ஏன் எனக்கு அந்தமாதிரி எண்ணம் தோன்ற வேண்டும்! எனக்கு ஒரே சந்தோஷம். நான் அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவ்வளவு நிம்மதி!"

என் கோபம் எனக்கே பொறுக்கவில்லை. வழக்கமான சிரிப்பைச் சிரித்தேன்.

"பழைய நிலைக்கு வந்துவிட்டாய், எழுந்திரு! முகத்தைக்

கழுவிக்கொள். காபிக்குச் சொல்கிறேன்." எழுந்து குளியல் அறையில் போய் பல்லைத் தேய்த்தேன். முகத்தைக் கழுவிக்கொண்டேன்.

முகத்தைத் துடைத்துக்கொண்டே அங்கிருந்து வந்துகொண்டே சொன்னேன்:

"நான் என்ன நினைத்துக்கொண்டிருந்தேன் தெரியுமா?"

"என்ன?"

"இன்றைக்கு கி.மு. பன்னிரண்டாயிரம் வருஷம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்."

"என்ன!"

"கி.மு. பன்னிரண்டாயிரம் - அல்லது கி.மு. இருபதினாயிரம் - அல்லது கி.மு. முப்பதாயிரமாவது ஆண்டு என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போது இந்த உலகத்தில் பெண்ணாகப் பிறந்தவர்கள் எல்லாரும் மேலே இருந்தார்கள். மேலே இருந்து அன்பு செய்தார்கள். நீங்கள் அதை வாங்கிக்கொண்டீர்கள். மல்லாந்து கிடந்தீர்கள். நாங்கள்தான் மேல் என்று ஒப்புக்கொண்டு கையாலாகாமல் கிடந்தீர்கள் - பிறகு ஏழெட்டு சோம்பேறிப் பெண்கள் இடம் மாற்றிக்கொண்டார்கள். விறகு வெட்டி, தீனி தேடிக்கொண்டு வருகிறவன் இதையும்தான் செய்யட்டுமே என்று சோம்பல் அடித்தார்கள். தொற்றுநோய் பரவிவிட்டது. யாருக்குத்தான் சோம்பல் அடிக்க, பரசிரம ஜீவியாக இருக்கப் பிடிக்காது!"

ஹொஹ்ஹொஹ்ஹொ என்று சத்தம் கேட்டது. ப்ரூஸ் பெரிதாகச் சிரிக்கிறான்.

"என்ன சிரிக்கிறே?"

"நடனம், பாட்டு எல்லாம்தான் தெரியும் என்று சொன்னாய். பெண்கள் வாரப் பத்திரிகையின் ஆசிரியையாக இருந்ததாக நீ சொல்லவேயில்லையே."

"நல்ல வேளை, நான் அந்த உத்யோகம் இன்னும் பார்க்கவில்லை. இந்த சோம்பல் சாம்ராஜ்யம் கையை விட்டுப் போய்விடப் போகிறதே என்று இதையெல்லாம் செய்கிறார்கள். நான் வேறு போகவேண்டுமா?"

ப்ரூஸ் காபிக்கு போன் செய்தான். ரிசீவரை வைத்துவிட்டு "அப்புறம்" என்று கேள்வி போட்டான்.

"அவ்வளவுதான், எல்லாம் போய்விட்டது."

"மீள வழியில்லையா?" என்று சிரித்தான் ப்ரூஸ்.

"உண்டு. கி.மு.வில் இருந்த மாதிரி நாங்கள் இருக்க வேண்டும்" என்று நானும் சிரித்தேன்.

"மேலே?"

"ஆமாம். பிறகு எல்லாம் சரியாகிவிடும். நீ வியட்நாமுக்குப்

போகமாட்டாய். குண்டு விழாது. எச்சில் விழாது. இதெல்லாம் அசக்தியால் வருகிறது."

"யாருக்கு அசக்தி?"

"எங்கள் ஊரில் பதினாயிரம் வருஷம் முன்னால் பெண்ணை சக்தி என்றார்கள். அவள் சிங்கத்தின் மீது உட்கார்ந்திருந்தாள். நீங்கள் எல்லாம் எருமையாகக் கீழே கிடந்தீர்கள். இப்போது அந்த சக்தி அசக்தியாகிவிட்டாள். அவளுக்கு அடிக்கடி அந்த கி.மு. ஞாபகம் வருகிறது. அதற்காக வருஷத்தில் ஒரு ஒன்பது நாள் அவள் சிங்கத்தின் மீது இருக்கிற மாதிரி படம் போட்டு, சாப்பாடு போட்டு, பத்தாம் நாள் அன்று படத்தை அழித்துவிடுகிறார்கள். பொம்மையாயிருந்தால், ஆறு குளத்தில் போட்டுவிடுகிறார்கள் -

இன்னும் ஒரு வருஷத்திற்கு வாயைத் திறக்காதே என்று.

ப்ரூஸுக்குக் குழந்தை மாதிரி ஆவல். எருமை, அசுரன் கதையைச் சொல்ல வேண்டியிருந்தது.

"ஸாரி" என்றான்.

"என்னத்துக்கு ஸாரி இப்ப?"

அவன் பதில் சொல்லவில்லை. கிண்டிக் கிண்டிக் கேட்டேன். பயனில்லை.

எதற்காக இப்படி மன்னிப்பு மாதிரி கேட்டுக்கொண்டான்?

மீண்டும் கிண்டினேன்.

"நான் உன்னை இழிவுபடுத்திவிட்டதாகத்தான் நினைக்கிறேன் - இப்போது" என்றான்.

அவன் கண்முன் மறுபடியும் எச்சில் வந்து தொங்கி ஊசலாடத் தொடங்கியிருக்க வேண்டும். முகத்தில் மீண்டும் அந்த யோசனை. கண்ணில் அந்தத் தொலைவு.

"கி.மு.வுக்குப் போய் சிங்கமாகப் போகிறாயா?" என்றான்.

"நீ தாங்கமாட்டாய்" என்றேன்.

"ஏன் இந்த மாதிரி எல்லாம் பேசுகிறாய்? இந்த மேல், கீழ் - பேச்செல்லாம் பிடிக்கவில்லை எனக்கு. பக்கத்தில் பக்கத்தில் என்று சொல்லேன்."

"பக்கத்தில் பக்கத்தில் இல்லை. அப்படி இருந்திருந்தால் நான் இப்படி அலையமாட்டேன். நான் என்னமோ அதைப் பார்க்க வேண்டும், இதைப் பார்க்க வேண்டும், அதைத் தெரிந்துகொள்ள வேண்டும், இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் அலைவதாக இடித்து இடித்துக் காட்டினாய் பார் ராத்திரி. அதெல்லாம் இல்லை. நான் சும்மா அலைய வேண்டும் என்று அலைகிறேன். எதுவும் வேண்டாம் எனக்கு."

"சும்மா அலைவார்களா யாராவது?"

நான் பதில் சொல்லவில்லை.

நான் சொன்னது அப்படியே நிஜமில்லை. ஆனால் அந்தக் கணத்தில் நான் சொன்னது உண்மைதான். உடம்பு களைத்துப்போயிருந்தது. வழக்கத்திற்கு மாறாக மனதும் களைத்துக் கிடந்தது.

இரவு மறுபடியும் நாடகம் பார்த்தோம். "வெனிஸ் வர்த்தகன்" நாடகம்.

போர்ஷியாவைப் பார்த்து சிரிப்பு வந்தது. ஜெஸ்ஸிகாவைப் பார்த்து சிரிப்பு வந்தது. 'உங்களுக்கு கி.மு. முப்பதாயிரமாவது வருஷம் தெரியாது. சிங்கத்தின் மேல் உட்காரத் தெரியாது' என்று மனதுக்குள் புலம்பிக்கொண்டிருந்தேன்.

லண்டனுக்குத் திரும்பி வந்ததும், நாலைந்து நாள்கூட இருந்தான் ப்ரூஸ் - மாலை வேளைகளில்.

"நான் என்ன செய்ய வேண்டும்?" என்று தினமும் இரண்டு தடவையாவது கேட்பான்.

ஒரு தடவைகூட பதில் சொல்லவில்லை. ஏன் பதில் இல்லை என்று கேட்க அவனுக்குத் துணிவில்லை.

ஐந்தாவது நாள். "நான் என்ன செய்யட்டும்?"

"வழியனுப்பு."

"எங்கே?"

"விமான நிலையத்தில், நான் ஊருக்குப் போகும்போது."

"என்னது!"

"நான் நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறேன்."

"எந்த ஊருக்கு?"

"எங்கள் ஊருக்கு. மதராஸ், இந்தியா."

"நிஜமாகவா?"

"இன்று மத்யானம் இடத்தை கண்பார்ம் பண்ணிவிட்டார்கள்."

"நிஜமாகவா?"

"சாமான்களைக்கூடத் தூக்கி எறிந்துவிட்டேன்."

"என்னது!"

"இருபது கிலோ!"

"நீ என்னிடம் சொல்லவேயில்லையே."

"அதான் இப்ப சொல்கிறேன்."

"நான் கேட்ட பிறகுதானே. தற்செயலாகத்தானே. நான் கேட்கவில்லை என்றால்?"

"நீ வந்து பார்த்திருப்பாய். சுபலா சொல்லியிருப்பாள் - நான் போய்விட்டேன் என்று."

"எப்படி இந்தமாதிரி பேச முடிகிறது, உன்னால்?"

"அதுதான் பேசுகிறேனே."

"எப்படி? நான் மூன்று வாரமாக உன்னோடு இருந்திருக்கிறேன். மூன்று ஜன்மங்கள் மாதிரி இருந்திருக்கிறது எனக்கு. காணக்கிடைக்காத ஒரு

மனிதரைப் பார்த்துவிட்டேன் என்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீ முந்நூறு பேரோடு படுத்துக்கொண்டிருக்கலாம். மூவாயிரம் பேரை முத்தமிட்டிருக்கலாம். ஆனால் நீ மிகமிகத் தூய்மையான மனுஷி."

"ஒன்றும் என்மீது ஒட்டிக்கொள்ளவில்லை?"

"நீ பரிகாசம் பண்ணலாம். ஆனால் நீதான் அழுக்கில்லாத, கறையில்லாத பிராணி என்று எனக்குத் தோன்றுகிறது. எச்சில் என்னை விரட்டாது என்று தைரியம் கொடுத்தவள் நீதான். நம்பிக்கை கொடுத்தவள் நீதான். கற்றுக்குட்டி, பால்வாடை மறக்காதவன் என்றெல்லாம் நீ என்னைப் பார்த்து நையாண்டி செய்திருக்கிறாய். நான் கற்றுக்குட்டிதான். ஆனால் உன்னிடம் நிறைய கற்றுக்கொண்டிருக்கிறேன். மனிதர்களை எப்படிப் பார்க்கிறது என்று கற்றுக்கொண்டேன். பொருட்களை எப்படிப் பார்க்கிறது என்று கற்றுக்கொண்டேன். மேகம், குப்பைத் தொட்டி, செத்த பூனைகள் மிதக்கிற தேம்ஸ் நதி, சினிமா, ரயில் வண்டி, ரொட்டி - எதைப் பார்த்தாலும் எப்படிப் பார்க்கிறது என்று கற்றுக்கொண்டேன். துணி, நாற்காலி, கதவு, நாய், பூச்சி, பெண், அவளுடைய அங்கங்கள் - இதையெல்லாம் நான் இனிமேல் முன்மாதிரி பார்க்கமாட்டேன் . . ."

"இது என்ன பிரிவுபசாரக் கூட்டமா?"

"சொல்லு. ஆனால் நான் பொய்யே சொல்லவில்லை. சாப்பிடுகிறது, நடக்கிறது, பிறரை எப்படிக் கேட்கிறது, எல்லாம் இனிமேல் நான் பழையமாதிரி செய்யமாட்டேன். நான் எதிலிருந்தோ விடுபட்டுவிட்டதாகத் தோன்றுகிறது . . . உன்னிடம் சொல்ல பயமாயிருக்கிறது. நான் உன்னோடேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு நான் வந்துவிடத் தயார். உன்னை - நீ சிரிக்கப்போகிறாய் - உன்னைக் கலியாணம் செய்துகொள்ளக்கூட நான் தயார் - நீ ஏன் சிரிக்கவில்லை . . ? கி.மு. பத்தாயிரத்தில் இருக்கத் தயார் - நீ சொன்ன கி.மு.வில்."

"டிக்கட்டை ரத்துசெய்துவிடச் சொல்கிறாயா?"

"உனக்கு இப்படியேதான் கேலி செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதா?"

"கேலி என்ன? டிக்கட்டை ரத்து செய்ய வேண்டுமா என்று கேட்கிறேன்."

"நானும் ஒரு டிக்கட் வாங்கிக்கொள்கிறேன் - நாளைக்குக் கிடைக்காவிட்டால், மறுநாளைக்கு - தப்பினால் அதற்கும் மறுநாளைக்கு."

"எதற்கு?"

"உன்னோடு இருக்க."

"என்னோடு இருக்க முடியாது யாராலும். பாம்புன்னும் தாண்ட முடியாது; பழுதைன்னும் தாண்ட முடியாது என்பார்கள் எங்கள் ஊரில். அந்த மாதிரி நான். எனக்கு யாரும் உறவு, நண்பர்கள் கிடையாது. இருக்க முடியாது. அந்தந்த இடத்தில் நண்பர்கள். அப்படி அப்படியே போட்டுவிட்டுப் போய்விட வேண்டும் எனக்கு. எனக்கு ஆயிரக் கணக்கில் நண்பர்கள் உண்டு. ஞாபகம் வைத்துக்கொள்வது சிரமமாயிருக்கிறது.

கனம் . . . மாக இருக்கிறது."

ப்ரூஸ் என் கையைப் பற்றிக்கொண்டான்.

"என்னைக்கூட மறந்துவிடுவாயா?"

"அப்படி மறக்கமாட்டேன். உனக்கு லெட்டர் போடுவேன். பதில் போடுவேன். நீ பண்ணினதையல்லாம் நினைத்துக்கொண்டு சினிமா பார்ப்பேன். சினிமா துணிமேல் ஓடுகிறது."

"என்ன மனுஷி நீ!"

"கோபமா?"

"உன்மேல் எப்படிக் கோபம் வரும்?"

"நகைப்பா?"

". . ."

"வெறுப்பா?"

". . ."

"வியப்பா?"

"அதுவும் இல்லை. உன்னைப் பார்த்துப் பழகிய பிறகு எதுவும் வியப்பாக இல்லை. முதலில் நீதான் வியப்பாக இருந்தாய். இப்போது அந்த உணர்ச்சிகூட கரைந்துவிட்டது. ரொம்பவும் நெருங்கிப் பழகினாலும் ஆபத்துதான். உன்னைப் பார்த்து ஒவ்வொரு கணமும் வியப்படைகிற நுட்பம்கூட போய்விடுகிறது. ஆனால் இந்த வியப்புக்கு நான் மீண்டும் மீண்டும் உயிர் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்."

"நான் நிஜமாகவே சிங்கத்தின் மேல் ஏறி கி.மு.வுக்குப் போய்விட்டதுபோல தோன்றுகிறதே."

பேச்சை மாற்றி மாற்றி அவனை அவன் கரைவிலிருந்து இழுத்துப் போகவேண்டியிருந்தது.

சிறிது நேரம் பேசாமலிருந்தான். என்னை விட்டுக் கண்ணை எடுக்காமல் புன்முறுவல் பூத்துக்கொண்டிருந்தான். நன்றியா? பரவசமா? இரண்டும்போலிருந்தது.

திடீர் என்று என்னமோ கேட்டான். "உங்களுடைய நாட்டில் பணக்காரர்கள் இருக்கிறார்களா?"

ஏன் இந்தக் கேள்வி என்று கேட்காமல் சரியாகப் பதில் சொன்னேன். "கோடீச்வரர்கள் இருக்கிறார்கள். லட்சாதிபதிகள் இருக்கிறார்கள். தொழிலதிபர்கள் - நிலச் சுவான்தார்கள் - பரம்பரைப் பணக்காரர்கள் - புதுப் பணக்காரர்கள் - கண்ட்ராக்டர்கள் - அரசியல்வாதிகளில் முக்கால்வாசிப் பேர்களை சுகபோக வாழ்வில் வைத்துக்கொண்டிருக்கிற கண்ட்ராக்டர்கள் - எல்லா ரகங்களும் இருக்கிறார்கள்."

"உன்னை ஒருவரும் வந்து அப்படி வைத்துக்கொள்ள ஆசைப்படவில்லையா?"

"அதுவும் செய்திருக்கிறார்கள். ஆனால் நான் கோயில் மாதிரி இருக்கிறேன். மாதா கோயிலுக்குக் கோடி ரூபாய் எழுதி வைத்தாலும், நான் மட்டும்தான் போவேன் என்று சொல்ல முடியாது. அங்கு ப்ரூஸும் வருவான், பட்டாபியும் வருவான், கியோவானியும் வருவான், மார்க்கிஸ்ட்டும் வருவான் . . ."

ப்ரூஸ் சட்டென்று எழுந்து என்னை ஒரு அணைப்பில் அழுத்திக்கொண்டு மறுபடியும் நகர்ந்து உட்கார்ந்துகொண்டான். "நான்

பொதுமகள் - அதே சமயம் பொது மகளும் இல்லை. என்னை விலைக்கு வாங்கலாம். விலைக்கு வாங்கவும் முடியாது. என்னோடு ஒட்டிக்கொண்டிருக்கலாம். அப்படியே நீடிக்கவும் முடியாது . . . ஏன் எக்ஸிபிஷன் மாதிரி என்னைப் பார்க்கிறாய்?"

"நான் என்ன செய்யட்டும்?"

"ஆரம்பத்திற்கே வந்துவிட்டாயே! ஊருக்குப்போ; கலியாணம் செய்துகொள். வியட்நாம் வீரனுக்கு விசேஷ சலுகையெல்லாம் கொடுப்பார்கள். நல்ல உத்யோகம் கொடுப்பார்கள். சௌக்யமாக இரு."

"நீயா சொல்கிறாய், கலியாணம் செய்துகொள் என்று!"

"நானேதான். மாறாக ஆயிரம் பேரிடம் சொல்லிவிட்டேன். பலிக்கவில்லை . . . ஒன்றே ஒன்று மட்டும் செய். உன் பெண்டாட்டியோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொள். அவளுக்கு என்றைக்கு உன்னைப் பிடிக்கவில்லையோ, அன்று உன் பாயைத் தூக்கி வாசலில் வீசி எறியச் சொல். சண்டை போடாமல், அந்தப் பாயை எடுத்துக்கொண்டு வேறு ஜாகை பார்த்துக்கொள். இஷ்டமிருந்தால் அந்தப் பாயை எடுத்துக்கொண்டு இன்னொருத்தி வீட்டுக்குப் போ. இல்லாவிட்டால் அதையும் தூக்கி எறிந்துவிட்டு தரையில் படுத்துக்கொள்."

ப்ரூஸ் சிரிப்பது போலிருந்தது. "முந்நூற்றொரு பாய்!" என்றான்.

"ஒன்று பாக்கியிருக்கிறது. அவன் கோடீச்வரன் இல்லை. பாட்டு பாடுகிறவன்" என்றேன்.

"அவரா?" என்றான்.

"அவர்தான். அவர் பாயை ஜப்பான்காரன் மாதிரி தரையோடு தைத்து வைத்திருக்கிறார். பிடுங்க நேரமாகும்."

அன்று இரவு ப்ரூஸ் என்னோடுதான் இருந்தான், ஓரமாகப் படுத்திருந்தான். மரியாதையாக சொல்லவும் சொன்னான்: "அன்று அத்தனை நெருக்கமாக இருந்தபோதுகூட, உன்னிடமுள்ள மரியாதை உணர்ச்சி போகவில்லை எனக்கு. வினோதமாக இருக்கிறது."

"அது ஸ்ட்ராட்போர்டின் மகிமை. நாடகத்தில் ஒபீலியா வேஷம் போட்டால், நிஜமாகச் செத்துப்போய்விட முடியாது."

"உனக்குக் கேலி செய்வதே இரண்டாவது இயல்பாகிவிட்டது" என்று மல்லாந்து உத்தரத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னான் அவன்.

அப்படியே படுத்துக்கொண்டிருந்தான் - நன்றியும் பரவசமுமாக. அவன் நானாகவே ஆகியிருப்பதுபோல் தோன்றிற்று.

நான் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தேன். குழந்தை மாதிரி இரு என்று சொல்ல வேண்டும்போலிருந்தது. குழந்தை ஆளைப் பார்க்கிறது. கிலுகிலுப்பையைப் பார்க்கிறது, அம்மாவைப் பார்த்ததும் கிலுகிலுப்பையை மறந்துவிடுகிறது. மூன்று நாள் முன்பு பார்த்தவர்களை இன்று பார்க்கும்போது யாரோ என்று விழிக்கிறது. அப்படியே இரு என்று ப்ரூஸிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.

குழந்தை மாதிரி தூங்கிக்கொண்டிருந்தான் அவன்.

விமான நிலையத்திற்கு வந்தான். சுபலாவும் வந்தாள். சுங்கத்திற்குள் போகும் நேரம் வந்தது.

"நான் மதராஸுக்கு வரத்தான் போகிறேன், ஒருநாள்" என்றான்.

"சட்டையில் எச்சிலோடு போகாதே. பாய் கொண்டு போ" என்றாள் சுபலா அவனிடம்.

சுங்கத்தின் வாய்க்குள் புகுந்தேன். விமானத்தில் ஏறி மேல் படி மீது நின்று திரும்பியபோது அவன் எங்கோ மாடியில் நின்று கையை ஆட்டிக்கொண்டிருந்தான்.

உள்ளே வந்து உட்கார்ந்து ஜன்னலிலிருந்து பார்த்தேன். ப்ரூஸ் இன்னும் கையை ஆட்டிக்கொண்டிருந்தான். என்னை அவன் பார்த்திருக்க முடியாது.

விமானம் ஓடி ஒரு கோடிக்குப் போய்விட்டு, திரும்பி வந்த வழியிலேயே ஓடிற்று. இப்போது பெல்ட் கட்டியிருந்தது. அந்தப் பக்க ஜன்னலிலும் வேகம்தான் ஓடிற்று. ப்ரூஸ் இன்னும் கையை ஆட்டுவதுபோலிருக்கிறது.

மேலே பறக்கும்போதுதான் வெட்கம் பிடுங்கிற்று. எதற்காக, நம்மைப் பற்றி இப்படி தம்பட்டம் அடித்துக்கொண்டோம். சிஷ்யப்பிள்ளை மாதிரி ப்ரூஸிடம் ஏன் தான்தோன்றித்தனத்தைக் கடைபரப்பிக்கொண்டிருந்தோம்

என்று வெட்கமாக இருந்தது.

நினைவு வந்து அழுத்திக்கொண்டேயிருந்தது. அப்படி அப்படியே விட்டுப் போகச் சொல்லுகிற உபதேசம் என்னைப் பார்த்து ஹெஹ்ஹெஹ்ஹே என்று சிரித்துக்கொண்டிருந்தது.

ரோமுக்குப் பிறகு கடல் நடுவில் வெஸூவியஸ் தெரிந்தது.

சைப்ரஸ் தெரிந்தது. க்ரீட் தெரிந்தது. குழந்தை பார்வை பட்டது போல, ஒவ்வொன்றும் அப்படி அப்படியே பட்டுப் போயிற்று. ஆனால் ஸ்ட்ராட்போர்ட் திரை மட்டும் ஓடிக்கொண்டிருந்தது.

மதராஸ் வந்துவிட்டது. மாம்பலம் வந்துவிட்டது - கோபாலியோடு.

வீட்டைத் திறக்க பச்சையப்பன் இல்லை. மரகதம் இல்லை. பச்சையப்பன் வேலையை விட்டுப் போய்விட்டானாம்.

# 13

வீடு மட்டும் இப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்தது போலிருந்தது. ஆறேழு மாதம் பூட்டிக் கிடந்த வீடாக இல்லை. தூசு தும்பைத் தேடிப் பார்க்க வேண்டியிருந்தது. சுவர்களில் புது வெள்ளை நீலம். ஹாலில் விரித்திருந்த மூன்று சுருட்டுப் பாய்களும் குளித்திருந்தன. மூலையில் தொங்கும் பிரம்மாண்ட கோவில் தொங்கு விளக்கில் முகம் ஒவ்வொன்றிலும் ஒரு சம்பரத்தப் பூக்கள் நாக்கை தொங்கவிட்ட வண்ணம் ஒருக்களித்திருந்தன. தியாகராஜர், ராமர், கிருஷ்ணர் படங்களில் புதிய ஜாதி மாலை. சமையல் அறைகூட துப்புரவாக இருந்தது. தர்மாஸில் காபி, பக்கத்தில் இரண்டு மூன்று அடுக்குகளில் தித்திப்பு, உப்புமா, தயிர்சாதம் - கூடையில் நாலைந்து பழங்கள். வீட்டு நிசப்தம்கூட குளித்துவிட்டு நிற்பது போல இருந்தது.

என்னென்னமோ இருக்கிறது. மரகதம் மட்டும் இல்லை.

"நான் வர சமயம் மரகதத்துக்குத் தெரியாதா?"

"உனக்குப் பசி கிசி இல்லையா? முதல்லெ சாப்பிடேன்," என்றது கோபாலி.

"வந்தவுடனே மரகதம்னா எடுத்துப் போடுவள், சாப்பிடப் போறோம்னு நெனச்சுண்டே வரேன்."

"அந்தப் பெருமை எனக்கிருக்கப்படாதோ?" என்று மேலே பேசவிடாமல், சமையலறையிலிருந்து பாத்திரங்களையும் தர்மாஸையும் எடுத்து ஹாலில் கொண்டு வைத்தது கோபாலி. தட்டு தட்டாக எடுத்துவைத்து, என்னை உட்காரச்சொல்லி, தானும் உட்கார்ந்து பரிமாறிற்று.

சாப்பிடும்போது கேட்டேன். "ஏன் மரகதம் வல்லெ?"

"நீ சாப்பிடேன். சொல்றேன்."

"சாப்பிட்டுண்டுதானே இருக்கேன்."

"முழுக்க சாப்பிடேன். உள்ளே நுழைஞ்சுதும் நுழையாததுமா சண்டைக்கு ஆரமிக்கணுமா? அதுதான் இருக்கவே இருக்கே."

"என்னத்துக்கு சண்டை?"

"பச்சையப்பன் வேலையை விட்டுட்டான்னேன். அப்பவே உனக்குத் திக்குன்னுது . . . நீ முதல்லெ சாப்பிடு . . ."

சாப்பிட்டு முடித்தேன். காப்பியையும் சாப்பிட்டேன். வெற்றிலைப் பெட்டியைத் திறந்து கோபாலி வெற்றிலை மடித்துக் கொடுத்தது. மெல்லும்போது, சொல்லிற்று "பச்சையப்பன் வேலையைவிட்டு போய்ட்டான். மரகதம் அவனுக்காக வந்தவ தானே, அவளும் நின்னுட்டா."

"ஏன் நின்னுட்டான் பச்சையப்பன்?"

"இப்பவே தெரிஞ்சுனுடணுமா எல்லாத்தையும்? இன்னிக்கி ராத்திரி நிம்மதியா பேசிட்டு, தூங்கிட்டு, நாளைக்காலமே குஸ்திக்கு நிப்பமே ரண்டு பேரும்!"

சிறிது பேசாமலிருந்தேன். பிறகு சொன்னேன். "எனக்குத்தான் பசி ஆறிப்போச்சு. இனிமே என்ன?"

"ஆறு மாசமா நீ என்னென்ன பண்ணினே? ஏன் அதெல்லாம் பேசத் தோணலெ உனக்கு?"

"நான் இன்னும் ஆறு மாசம் அங்கெல்லாம் சுத்தலாம்னுதான் நினைச்சுண்டிருந்தேன். ஏழெட்டு நாள் முன்னாலெ திடீர்னு மரகதத்தைப் பார்க்கணும் போல இருந்தது. உடனே புறப்பட்டு வரதுன்னு தீர்மானம் பண்ணினேன். ஏர்போட்டிலெகூட அவளும் பச்சையப்பனும் வந்திருப்பான்னு நெனச்சேன். வீட்டு வாசல்லியாவது அவ நின்னுண்டிருப்பள்னு நெனச்சேன். என்னமோ அவளைப் பார்த்துடணும்னு ஒரு வெறி மாதிரி யிருந்துது!"

"எனக்கும் அந்த மாதிரி இருக்கிறதாக பச்சையப்பன் நினைச்சுனூட்டான் போலிருக்கு" என்று என்னைப் பார்க்காமல், வெற்றிலைப் பெட்டியை மூட சிரமப்பட்டது கோபாலி.

'அப்பவே நினைச்சேன்' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது எனக்கு. சொல்லாமல், கோபாலியையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

கடைக்கண்ணால் பார்க்கிறது கோபாலி. கண் ஓரத்தில் சிறு அச்சம்.

வெற்றிலைப் பெட்டியை மூட முடியவில்லை. திரும்பியதில் விலா சுளுக்கிக்கொண்டது போல மார்பை ஒரு கையால் ஒரு ஐந்தாறு விநாடி அழுத்திக்கொண்டது கோபாலி.

"என்ன!"

"லேசா வலி."

இதயத்தின் பக்கமாகத் தொட்டுக் காண்பித்தது. தடவிக் கொடுத்தேன்.

"என் வயசு உனக்குத் தெரியும்!" என்றது கோபாலி.

ஆமாம். போனவருஷம் வைகாசி மாதம் அறுபது நிறைந்துவிட்டது அதற்கு. ஆக, இப்பொழுது அறுபத்து ஒன்று முடிந்து, ஒன்று இரண்டு . . . ஏழு மாதம் ஆகிவிட்டது.

சட்டென்று என் வயதும் நினைவில் வந்து குத்திற்று. முப்பத்தைந்து, இல்லை, முப்பத்தாறு! இல்லை முப்பத்தேழு! இல்லை இல்லை, முப்பத்தெட்டு முடிந்து மூன்று மாதம்.

"கொஞ்சம் தூத்தம் கொண்டு வா" என்றது கோபாலி.

குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டு கொடுத்தேன்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டது கோபாலி. தன்னையறியாமல் என் கால் இடது பக்க அறைக்கு இழுத்தது. கண்ணாடி முன் நின்றேன்.

"முப்பத்தொன்பது."

கண்ணாடிகளுக்குத்தான் எத்தனை உரிமை! எத்தனை சொந்த பாத்தியம்! எத்தனை வித்தியாசம்!

சொந்தக் கண்ணாடியில் பார்க்கும்போது, பழக்கப்பட்ட கண்ணாடியில்

பார்க்கும்போது, எப்படியெல்லாம் உண்மை அம்மணமாக நிற்கிறது!

கன்னத்தைப் பார்த்தேன். கன்ன எலும்பைப் பார்த்தேன். ப்ருஸ் சொன்னது இப்போது கேட்கிறது. "அதிபோகத்தினால் உன் கன்னச் சதையில் சிறிது தடித்திருக்கிறதே . . ." பிறகு என்ன சொன்னான்? காலையின் அரைவிழிப்பில் மனச்சொற்கள் தடம் புரள்வதுபோல, அவன் சொற்களும் தேய்கின்றன. முழுவதும் கேட்க விருப்பமில்லையா எனக்கு?

கொஞ்சம் சிரிப்பும் வந்தது. ப்ரூஸ் கன்னச் சதையைத்தான் பார்த்தான். தலைமயிரைப் பார்க்கவில்லை. ஏழெட்டு வருஷ மாகவே யாரும் அதன் சுய உருவத்தைப் பார்த்ததில்லை. அப்போதே முக்கால்வாசியில் வெளுப்பு புகுந்துவிட்டது யாருக்கும் தெரியாது. கோபாலிக்குத் தெரியாது; மரகதத்திற்குக்கூடத் தெரியாது. கூப்பிடுமணி கேட்டதும், ஒரு தடவை கண்ணாடிக்கு முன் நின்றுவிட்டுத்தான் மாடிப்படி யிறங்குவேன் - கதவு திறக்க. மணி கேட்டதும், கால் கண்ணாடிக்கு ஓடும். முடி ஒன்றிரண்டு பல்லிளித்தால், கீழே ஓலைப் பெட்டியில் இருக்கிற ப்ரஷ்ஷை, கொஞ்சம் கறுப்பில் தோய்த்து ஒரு வாரல் வாரின பிறகுதான் கால் மாடிப்படிக்கு இறங்கும். பிறகு முன் ஜாக்கிரதையாக இரவு படுக்கப் போகும்போதே சரிபார்த்துக்கொண்டுவிடுகிற வழக்கம் வந்துவிட்டது. ஆனால் சொந்தக் கண்ணாடி, ஆறு மாசம் பார்க்காத கண்ணாடி, இன்னும் கூடவே இருப்பைச் சொல்லிற்று. முப்பத்தெட்டா, நாற்பத்தெட்டா என்று சந்தேகமாக என்னைப் பார்த்தது. எனக்கும் சந்தேகம் வருகிறது. பயமாக இருக்கிறது. வயிற்றில் லேசாக ஒரு கிலி. "நூறு, இருநூறு, முந்நூறு" என்று அனுபவங்களை எண்ணிக்கொண்டு என்ன செய்யப் போகிறாய்? புதிது புதிதாகப் பார்த்து, கேட்டு, அனுபவித்து என்ன செய்யப்போகிறாய்? ஃபண்டாஸ்டிக் டெரிஃபிக் என்று மனிதர்களையும் காட்சிகளையும் பேச்சுகளையும் அவைகளின் தாக்குதல்களையும் வர்ணித்துக்கொண்டு என்ன செய்யப் போகிறாய்?" இந்த மாதிரி தானே கேட்டான் ப்ரூஸ்? அதே சொற்கள் இல்லை. அரை விழிப்பின் நினைவும் புனல்போல, என் நினைவுகளையே அவன் வாயில் போட்டுக் கேட்கிறேனா! அடிவயிற்றுக்குக் கீழ் காலிடையில் என்ன உணர்வு இது திடீர் என்று?

சும்மா அலையாதே, இதோடு நிறுத்திக்கொள் என்று சொல்வதற்காகத்தான் ப்ருஸ் அன்றிரவு அந்தப் பாடுபடுத்தினானா? அது ப்ரூஸா! அல்லது ஆண்கள் அத்தனை பேரின் ஒருமிப்பா! இல்லை காலம்தான் ப்ருஸ் வேஷம் போட்டுக்கொண்டு அப்படிப் படுத்திற்றா?

அன்றிரவுக்குப் பிறகு ஏன் ப்ரூஸைச் சீண்டத் தோன்றவில்லை?

அவனுக்குக்கூட ஏன் சீந்தத் தோன்றவில்லை? பழையபடி படுக்கையின் ஓரத்தில் படுத்திருந்தான்? அதைவிட உச்சமில்லை, இருக்க முடியாது என்று நான் உணர்ந்துவிட்டேனா, அவன்தான், சரி உபதேசம் செய்தாகிவிட்டது என்ற திருப்தியில் சும்மா இருந்தானா?

குளிர் நாடுகளுக்குப் போய்விட்டுத் திரும்பிய பிறகு, புளிக் குழம்பும், மிளகாயும் தவிர்த்திருந்த மினுமினுப்பு முகத்தில் தெரிகிறது. ஆனால் அந்த சல்லாவிற்குப் பின்னால் முப்பத்தெட்டா நாற்பத்தெட்டா என்று என்னமோ ஆடுகிற மாதிரி இருக்கிறது? மயிர் மட்டும் கறுகறுவென்று மின்னுகிறது. மரகதத்திற்குக்கூடத் தெரியாது.

மரகதம் எங்கே?

கோபாலி பேச்சை மாற்றிவிட்ட மாதிரி இருக்கிறது. திரும்பி ஹாலுக்கு வந்தேன்.

"இப்ப தேவலையா?"

"தேவலை."

"எங்க வலிச்சுது?"

இடது முதுகு, இடது மார்பு விலாவெல்லாம் காண்பித்தது கோபாலி.

"டாக்டரை வேணும்னா பார்க்கலாமா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. சும்மா இழுத்துண்டுது அவ்வளவுதான். ஏதோ இசைகேட திரும்பினது."

கொஞ்சம் பொறுத்துவிட்டு, பாத்திரங்களை உள்ளே கொண்டு வைத்துக்கொண்டே, தற்செயலாகக் கேட்பது போல் கேட்டேன். "மரகதம் வரவே மாட்டாளா?"

"அவன்னா வரப்படாதுன்னு சொல்லியிருப்பன் போலிருக்கு."

"என்ன நடந்துது?"

"போனமாசம் இங்க வந்து உட்கார்ந்துண்டிருந்தேன். உடம்பு என்னமோ சுட்டாப்போல இருந்தது. கொஞ்சம் ஜலதோஷம் வேற. காபி போட்டுண்டு

வான்னேன். வந்தா. தொட்டுப் பாரு ஜுரம் இருக்கான்னு அவ உள்ளங்கையைப் பிடிச்சு என் கன்னத்திலே வச்சுண்டேன். சட்டுனு கையை இழுத்துண்டா. ஜுரம் இருக்கோன்னு கேட்டேன். அப்பறம் அவளா கையை வச்சா கன்னத்திலெ. கொஞ்சம் வெத வெதப்பா இருக்குன்னா. பச்சையப்பன் அப்ப உள்ளே வந்தான். அதான் சமாசாரம். மறுநாளைக்குக் காலமே நாங்க வேலையை விட்டு நின்னுக்கறோம்னான். ஏண்டான்னேன். கவர்மெண்டிலே வேலை கிடைச்சிருக்கு. க்வார்ட்டர்ஸ் கொடுத்திருக்காங்கன்னான். அதுவுமன்னியிலே மாமியாளுக்கு உடம்பு சொகமில்லாம இருக்கு. கொஞ்ச நாளைக்கு மரகதத்தை ஒத்தாசைக்கு வச்சுக்கணும்கறாங்க - அங்க கொஞ்ச நாள் இருந்துவிட்டு, க்வார்ட்டர்ஸுக்குப் போயிடுவோம்னான். நான் அப்பறம் என்னத்தைச் சொல்றது? அன்னிக்கு சாயங்காலம் ரூமைக் காலி பண்ணிண்டு போய்ட்டான் . . ."

"ம் . . ." என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

"அந்தப் பய என்னை மிஸ்டேக் பண்ணினூட்டான். கவர்மெண்ட் வேலை, குவார்டர்ஸ் - எல்லாம்."

"அவன் மிஸ்டேக் பண்ணின்டானா? நிலைமையைப் புரிஞ்சுண்டானா? எது சரி?"

"என்ன நிலைமை?"

"உங்க ஜுரம், ஜலதோஷ ஜுரம் இல்லேங்கற நிலைமைதான்."

"நீயும் ஆரமிச்சுட்டியா?"

"குஞ்சாளி அம்மணி - ரண்டு பேர்தானா உங்களுக்கு? இதேமாதிரி அங்கங்கே இருக்கறது தெரியுமே எனக்கு. நான் கோச்சுக்கலியே! எங்கிட்ட எதுக்கு மறைக்கணும்."

"நீயா கண்டுபிடிச்சே இப்ப? நானாத்தானே நடந்ததைச் சொன்னேன்."

"நடத்தி வச்சுது எதுன்னு சொல்லலியே. ஜுரமான்னு பார்க்க கண்ணாடி மேஜை ட்ராயர்லெ தர்மாமீட்டர் இருக்கே."

"அவ கையை வச்சு பார்த்துச் சொல்லணும்போல இருந்தது. அதனாலெ என்ன?"

எனக்கும் அதனால் என்ன என்று தோன்றிற்று. ஆனால் கோபம் மட்டும் வந்துகொண்டிருந்தது. முகம் கொடுத்துப் பேசுவது கஷ்டமாயிருந்தது.

பேசாமல் உட்கார்ந்திருந்தேன். கோபாலிக்கு ஆவல் - எங்கே எல்லாம் போனேன், என்னவெல்லாம் பார்த்தேனென்று தெரிந்துகொள்ள.

"அதுதான் கடுதாசி எழுதினேனே - போறபோது - இரான்லேர்ந்து எழுதினேன்; ரோம்லேர்ந்து எழுதினேன். ப்ராஹாவிலேர்ந்து எழுதினேன். பாரிஸிலிருந்து, நீஸ்லேர்ந்து, லண்டன்லேர்ந்து எழுதினேன்."

"கச்சேரி கிச்சேரி பண்ணலியா?"

"அங்கங்க மேஞ்செலவுக்குப் பணம் வேணும்னா ஆடினேன். பாடினேன். டெலிவிஷன்கூட ஆடினேன். ஆனா சும்மா அலையணும்னுதானே போனேன். கச்சேரி கிடைக்காட்டா, நான் எப்படி சம்பாதிச்சிண்டிருப்பேன்னு தெரியாதா உங்களுக்கு?"

"அதுதான் தெரியுமே எனக்கு. வேற என்னென்ன பண்ணினேன்னு உன் வாயாலெ சொல்லேன்."

"அது உங்களுக்கு முழுக்க எப்படித் தெரியும்? நான் இந்த மாதிரி இருந்தா, என் கிநேகிதியும் அப்படியே இருப்பள்னுதானே நினைப்பு உங்களுக்கு?"

"எந்த சிநேகிதி?"

"மரகதம்."

"ஓகோ! சிநேகிதியாயிட்டாளா அவ!"

"எப்படியிருந்தா என்ன? உங்களுக்குத் தெரிஞ்சது, தெரிஞ்சுக்க முடியறது - எல்லாம் அவ்வளவுதான்."

"சரி, நான் அயோக்யன். ஜாட்மாரி. அதுக்காக நீ என்ன பண்ணினே, என்னல்லாம் பார்த்தேன்னு கேக்க ஆசைப்படப் படாதா?"

"உரக்கச் சிரித்தேன். என் வழக்கமான சிரிப்பைக் கேட்ட பிறகுதான் எனக்கும் சிறிது தெம்பு வந்தது. சிரிக்காமல் இருந்தால் எவ்வளவு சுமையாக இருக்கிறது?

"உனக்கு ஏன் திடீர்னு என்மேலே இப்படி அசூயை வந்துது?" என்றது கோபாலி. என் சிரிப்பில் அதற்கு தன் நிதானமே போய்விட்டது. இல்லாவிட்டால் இப்படி கேட்கிற வழக்கம் இல்லை அதற்கு.

"அசூயையை£? உங்க மேலேயா? எதுக்கு? உங்க மாதிரி பாட முடியலியேன்னு குறைதான். மற்றபடி என்ன இருக்கு அசூயைப்பட ஒரு பொம்மனாட்டிக்கு இங்கே?"

எனக்கும் வெறிமாதிரிதான் இருந்தது - எப்படியாவது நோக அடிக்க வேண்டும் என்று ஒரு வெறி. அடக்க முடியவில்லை.

எழுந்துபோய் பெட்டியைத் திறந்தேன். கோபாலிக்காக வந்த நான்கு சட்டைகள், விஸ்கி பாட்டில், கைகடிகாரம், செண்டு பாட்டில் இரண்டு, ஒரு சுருதிக் குழல், அவர் சம்சாரத்திற்காக வாங்கி வந்த சிவப்புப் படவை, பையனுக்கும் பெண்ணுக்கும் வாங்கி வந்திருந்த புடவை, பேனாக்கள் - எல்லாவற்றையும் வைத்தேன்.

"இதெல்லாம் உங்களுக்கு . . ." என்று பிரித்துப் பிரித்துச் சொன்னேன்.

"மரகதத்திற்கும் பச்சையப்பனுக்கும் கூட புடவை சட்டை, அடுக்களை சாமான்கள் ரண்டு மூணு வாங்கிண்டு வந்திருக்கேன் . . ."

"உனக்கு ஒண்ணும் வாங்கிக்கலியா?" என்றது கோபாலி.

"ம்" என்று கைப் பையைத் திறந்தேன்.

நீடித்திருக்கிற தலை சாயக் குழாய் ஒரு டஜனையும் வெளியே கொட்டினேன். சொன்னேன்.

"என்னது! பொம்மனாட்டிகள் போனா கல்லுகல்லா நகையும் முத்துமா கொண்டு வராளே. பிரசாத் பொண்டாட்டி போய், வில்லை வில்லையா இருபது வில்லை தங்கமும், வைரமுமா ஒளிச்சிண்டு வந்தாளே."

"நானும் கொண்டு வந்திருக்கேன்" என்று முப்பது கினி நோட்டுகளை எடுத்து முன்னால் நீட்டினேன்.

"என்னது இது!"

"முப்பது கினி."

"பணம் மாதிரி இருக்கே!"

"பணம்தான். கிட்டத்தட்ட அறுநூறு ரூபா பொறும். ஒரே நாளில் சம்பாதிச்சுது . . . ஒருநாள் ராத்திரி நானும் சுபலாவும் பிக்காடிலியிலே நின்னுண்டிருந்தோம், குறும்பா."

"சுபலா யாரு?"

"நான்தான் எழுதியிருந்தேனே. மேலே படிக்கிறத்துக்காக லண்டனுக்கு வந்திருக்கா, முரட்டு கம்யூனிஸ்ட்டுன்னு. கறுப்பு மநுஷாளெல்லாரையும் கிளப்பி விட்டிண்டேயிருப்பள்னு . . . அவளும் நானும் நின்னுண்டிருந்தோம் - ஏதாவது விஷமம் பண்ணலாம்னு. ஒரு நாளைக்கு விபசாரி மாதிரி நடிச்சுப் பார்ப்பமேன்னு - உடனே முன்னாடியே அப்படி இல்லையான்னு கேட்கவாண்டாம். தெருவிலே நிக்கிறவா மாதிரி நடிக்கணும்னு ஆசை. நின்னோம். ரண்டு பேர் வந்தா . . ."

ப்ரூஸ் கதை முழுவதையும் ஒன்றுவிடாமல் சொன்னேன். அவனுடைய குடி, எச்சில் பயம், சமயத்தில் ஈடு கொடுக்க மறுத்த ஆண்மை, காலையில் அவன் வைத்துவிட்டுப் போயிருந்த முப்பது கினி, ஸ்ட்ராப்ஃபோர்ட், அந்த இரவு, மறுநாள் நடந்த பேச்சு, பெண்கள் பன்னிரண்டாயிரம் வருஷம் முன்னால் படுக்கையில் மேல இருந்த கதை - ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

முடித்துவிட்டு முப்பது கினி நோட்டை நீட்டினேன். "இதை மாத்தவே மாட்டேன். எல்லாம் இதிலே அடங்கிப்போச்சு. இனிமே முப்பதாயிரம், முப்பது லட்சம் கினி கொடுத்தாலும் அந்த உள்ளுக்குப் போகமாட்டேன். இதுக்குக்கூட" என்று கோபாலியின் மார்பை ஒரு தட்டுத் தட்டினேன். சிரித்தேன். கோபாலியின் அதிர்ச்சியை மழுப்புவதற்காகச் சிரித்தேன் போலிருக்கிறது.

கோபாலி பைத்தியத்தைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தது. தனக்கு எட்டாத ஒன்றைப் புரிந்துகொள்ள முயல்வது போலவும் பார்த்தது. ப்ரூஸ் பார்த்த பரவசத்துடன், பயத்துடன், ஏமாற்றத்துடன். நான் சிரித்துக்கொண்டிருந்தேன். "கினி - தனி - கினி - தனி - நல்ல மந்திரமில்லை?" என்று கேட்டுச் சிரித்தேன். "கினி - தனி. கினி - தனி. கினி - தனி, கினி - தனி - கேக்கறதுக்கு நன்னால்லே . .? உங்களுக்கும் அறுபத்தொண்ணு முடிஞ்சு போயிட்டுது. எனக்கும் முப்பத்தெட்டு முடிஞ்சு போச்சு. எப்பவும் எனக்கு அசூயை கிடையாது - இனிமே

துளிக்கூட கிடையாது. இனி - கினி - தனி - எவ்வளவு அழகா அமைஞ்சிருக்கு - பெரிய வாக்கேயக்காரர் சாஹித்யம் மாதிரி!"

கோபாலிக்குப் பெரிய விழி. மேட்டு விழி. அந்த இரண்டு விழிகளாலும் என்னைப் பார்த்துக்கொண்டே யிருந்தது. அதனுடைய உடல் ஆண்மை அனைத்தும் உரிய இடங்களை யெல்லாம் விட்டு அந்த விழிகளில் திரண்டு நின்றது – எப்போதும் போல - இப்போது முழுவதும். சிறிது நேரம் கழித்துச் சொல்லிற்று. "டில்லி பம்பாய்னு கச்சேரிக்கு ப்ளேன்லெ போறபோதெல்லாம், எனக்கு பயம்மாயிருக்கும். அதற்காக, வீட்டிலேர்ந்து கிளம்பற போதே அரை பாட்டிலாவது சாப்பிட்டுட்டுப் போயிடுவேன் - போய் இறங்கற வரைக்கும் தெளியப்படாதுன்னு. அந்த மாதிரி உனக்கும் பயமாயிருந்துதோ . . . முன்னே ஒரு தடவை புடாவெஸ்ட்டிலேர்ந்து வந்தியே, அந்த மாதிரி?"

"அப்படின்னா உப்புமா வாசனையையும் மீறிண்டு அடிச்சிருக்குமே. கஸ்டம்ஸிலே ரண்டு மணி நேரம் ஆறப் போட்டிருந்தானே - கால் இத்துப் போகப் போக."

"நிதானத்தோடதான் பேசறியே."

மூன்று கினி நோட்டுகளையும் மறுபடியும் விரலில் பிடித்து அசைத்தேன்.

"அப்ப நான் அஸ்தமனம் ஆனவுடனேயே உத்தரவு வாங்கிக்க வேண்டியதுதானாக்கும்."

"இஷ்டம்."

"என்ன இஷ்டம்?"

"இது கோபாலி வீடு."

"வீடுதான் என்னுது?"

"எனக்குக் களைப்பா இருக்கு. கொஞ்ச நாழி தூங்கினாத் தேவலை போலிருக்கு" என்றேன்.

"திருச்சினாப்பள்ளியிலே நாளைக்குக் கச்சேரி. இன்னிக்கி ராத்திரி போறதாயிருந்தேன். உன் தந்தி வந்ததும், கான்சல் பண்ணி தந்தி கொடுத்தேன்."

"இப்ப மறுபடியும் வரேன்னு தந்தி கொடுத்துடறது."

"யோசிக்கணும்."

"நிஜம்மா எனக்கு தனியா இருக்கணும் போல்ருக்கு. கச்சேரி பண்ணிவிட்டு வாங்கோ. அப்பறம் பேசிக்கலாம். அப்பறம் . . . நான் வந்தாச்சுன்னு யாருக்கும் சொல்ல வாண்டாம், ரண்டு மூணு நாளைக்கு. மொல்லு மொல்லுனு பேச வந்துடும் எல்லாம். எனக்கு அலுப்பாயிருக்கு."

"நான்கூட வரவாண்டாமா?"

"நாலஞ்சு நாளைக்குத்தான்."

கோபாலி சூன்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. விரலால் இரண்டு மூன்று நிமிஷம் பாய்மீது தாளம் போட்டது. "ஸத்குரோ" என்று கையை ஊன்றி எழுந்துகொண்டது. மீண்டும் தாழ்வாரத்தில் நின்று இரும்புப் கிராதி வழியாக தெருவைப் பார்த்தது. வானத்தைப் பார்த்தது.

"வரேன்."

மாடிக் கதவைத் தாழிட்டு வந்து படுத்துக்கொண்டேன்.

"நண்பர்கள் கிடையாது - பழுதையென்றும் மிதிக்க முடியாது, பாம்பென்றும் மிதிக்க முடியாது என்னை - உறவு, நண்பர்கள் ஒன்றும் கிடையாது. அப்படி அப்படியே அந்தந்த இடத்தில் போட்டுட்டுப் போய்விடுவேன் . . ." ப்ரூஸிடம் சொன்னது ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகிறது. அவன் நினைவு வந்து கழுத்தை அறுக்கிறது. கினி நோட்டுகளை மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது. எடுத்துப் பார்த்துக்கொண்டே யிருந்தேன் - தூங்கினேன்.

எழுந்தபோது - இருட்டு - இரவு. விளக்கைப் போட்டு மணி பார்த்தேன். பத்து மணிக்கு மேலாகிவிட்டது. குளியல் அறையில் நின்று தலைக்கு முழுகினேன். தலைமயிரை சோப்புப் போட்டு ஷாம்ப்பூ போட்டு, பல தடவை போட்டு, சாயம் போகிறவரையில் போட்டுத் தேய்த்துக் குளித்தேன். துவட்டிவிட்டு கண்ணாடி முன் வந்து நின்றேன்.

சாயம் உயர்ந்த சாயம். இன்னும் முழுவதும் கரையவில்லை. ஆனால் கிட்டத்தட்ட எல்லா மயிரும் வெளுப்பு என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. விரலால் கோதிக் கோதிப் பார்த்தால், எப்போதாவது ஒரு

கறுப்புத் தென்படும்.

இப்படி மூன்று நாள் ஷாம்பூ போட்டு, சோப்பைப் போட்டு கழுவியதும் முழு வெளுப்பும் வந்துவிட்டது. என்ன ரம்யமாக வெளுப்பு! எழுத்தில் முப்பத்தெட்டு, முகத்தில் நாற்பத்தெட்டு, தலையில் எழுபத்தெட்டு. எத்தனை அழகு இந்த வெளுப்புக்கு! இரண்டு மடங்கு கனத்தை எப்படி இந்த முகம் தூக்கிக்கொண்டு நிற்கிறது. சமமான கனமுள்ளவர்களையே தூக்குவது சிரமம். கோபாலியை வேடிக்கையாகத் தூக்க முயன்றிருக்கிறேன். அது காலைக் காலை மடித்துக்கொள்ளும் ஆனால் தூக்கும்போது வயிறுதான் சரியும். மரகதத்தைத் தூக்கிப் பார்த்திருக்கிறேன். அவள் உயரம், அதற்கேற்ப வடிவான சதைப்பற்று. தூக்க முடியாது. குலுங்கிக் குலுங்கி முந்தானையால் மூக்கை மறைத்துக்கொண்டு சிரிப்பாள். ஆனால் இந்த முக முப்பத்தெட்டு, எவ்வளவு சுலபமாக தலையின் எழுபத்தெட்டைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது!

மூன்று நாளும் வெளியே கிளம்பவில்லை. கீழ் வீட்டுப் பையனை மட்டும் கூப்பிட்டு, பால்காரன் வந்தால் நான் வந்தேன் என்று சொல்லச் சொன்னேன். அவன் என் தலையைப் பார்த்து சற்று குழம்பிவிட்டு சரியென்று சொன்னான். பால்காரன் வருமுன்னமே, பால் ஏனத்தையும் மூடியையும் மாடிப்படி நிலையில் வைத்துவிட்டு அவன் போட்டுவிட்டுப் போனதும் எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறது.

மற்றபடி மூன்று நாள் வெளியே தலை நீட்டவில்லை. உள்ளே உட்கார்ந்தபடியே கொல்லைப் பக்கத்துத் தென்னையையும், வான விள்ளல்களையும் பார்த்தேன். ஜன்னல்களின் நீல, சிவப்பு, பச்சைக் கண்ணாடிகள் வழியே மர இலைகளையும் பார்த்தவாறு உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

நானே வீட்டைப் பெருக்கினேன். சமைத்தேன். பாத்திரம் கழுவினேன்.

கண்ணாடி முன் நின்றேன். என்ன அழகான உணர்ச்சிகள் மாறி மாறி மின்னுகிற முகம்! எத்தனை தொல்லிய தலை!

இரவு வேளைகளில் -

இந்தப் படுக்கையில் தனியாகப் படுத்திருந்தேன். பால்கனி அறை படுக்கை - இந்த இடது பக்க அறையின் இருகட்டில் படுக்கை -

இரண்டிலும் மாறி மாறி தனியாகப் படுத்திருந்தேன். எத்தனை நாள் இந்தப் படுக்கைகளில் தனியாகப் படுத்திருக்கிறேன்! எண்ணிப் பார்ப்பது சிரமமாக இல்லை. இத்தனை வருஷங்களுக்காக மொத்தம் வருஷத்து நாலைந்து நாள் தனியாகப் படுத்திருப்பேனோ, என்னவோ. அப்போது கூட மறுநாள் தனியாக இல்லாமல் இருக்கப் போகிற நினைவு துணைக்குப் படுத்திருப்பதுபோல ஒரு தெம்பு - ஒரு கிளர்ச்சி.

இப்போது!

நாளை, நாளை மறுநாள் - பிறகு, பிறகு?

கிர்ச் கிர்ச் என்று இரவுப் பூச்சிகள் தனிமைக்குப் பச்சை குத்துகின்றன. சுவர்க்கோழி தங்க அரைஞாண் பின்னுகிறது. நட்சத்திரங்கள் ஜிகினா பதிக்கின்றன. மேகங்களும் என் தலையும் வெண்மை பூசுகின்றன.

செவியையும் கண்ணையும் யாரோ சாணையில் இடுகிறார்கள்.

எத்தனை தெளிவாக வருகின்றன ஒலிகள்! எத்தனை தெளிவாகத் தெரிகிறது எல்லாம். மூக்குக்கு எத்தனை மோப்பம் - நாயாகி விட்டதுபோல்.

ப்ரூஸ் இடித்து இடித்து நினைவில் வந்துகொண்டிருக்கிறான். அவன் சொற்கள் நினைவில் தடம் புரளாமல் ஓடுகின்றன.

நான் அவனிடம் அப்போது சொன்னது பொய். எதையும் தேடி அலையவில்லை - சும்மா அலைகிறேன் என்று. இப்போது தான் தெரிகிறது. எதையும் தேடவேண்டாம். அவ்வப்போது வருகிறதைப் பார்த்துக்கொண்டேயிருக்கத் தோன்றுகிறது. அதுவும் எவ்வளவு தீக்ஷண்யமாக!

சமைக்கும்போது பாத்திரங்களின் ஒலி எப்படி இசைக்கிறது!

ப்ரூஸ்! நீ அந்த உச்சத்தில் கொண்டு வைத்திராவிட்டால்கூட, அவ்வளவு நோவைக் கொடுக்காவிட்டலாகூட இந்த மூன்று நாள் தனிமை நீ சொன்னதையெல்லாம் சொல்லியிருக்கும்.

நாலாவது நாள் காலையில் குளித்துவிட்டு, தலைக்கு சாயம் போட்டுக்கொண்டேன். லேசாக, துளி வெள்ளை தெரியும் படியாக. மரகதத்தைப் பார்க்க வேண்டும். திடீர் என்று அவள்

பயந்துபோய்விடுவாள். எனக்கு என்னமோ ஆகிவிட்டது என்று அரளவும் செய்யலாம்.

வடபழனிக்கு பஸ்ஸைப் பிடித்துக்கொண்டு ஏறினேன்.

"யம்மா!" என்றாள் என்னைப் பார்த்ததும். தெருவிலேயே இறுக அணைத்துக்கொண்டு என்னை மேலும் கீழும் பார்த்தாள். தலையைப் பார்த்தாள்.

"எப்பம்மா வந்தீங்க?"

"நாலு நாளாச்சு . . . நீ வாசல்லெ வந்து எனக்காகக் காத்திண்டிருப்பேன்னு நினைச்சேன். இப்படித்தான் பண்றதா?"

"நீங்க என்னென்னல்லாம் சொல்லப் போறீங்கன்னு மனப்பாடம் பண்ணிவச்சிருக்கிறேன். உள்ளே வாங்கம்மா."

"பச்சையப்பன் எங்கே?"

"கோயிலுக்குப் போயிருக்குறாங்க."

"எதற்கு? வேலைக்குக் போகலியா?"

"வேலைக்கு எப்படி போவாங்க? உங்களைக் கேக்காம?"

"என்னது!"

"ஆமா. அம்மா வந்தப்பறம் கேட்டுகிட்டு வேற வேலைக்குப் போறேன்னு உட்கார்ந்திருக்காங்க - ஊட்டோட . . . நீங்க உள்ர வாங்கம்மா."

"உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு வந்தியாமே! இதுதானா அது?" என்று கூடைப் புளியைப் போட்டு, அரிவாள் களையில் கொட்டை எடுத்துக்கொண்டிருந்த கிழவியைப் பார்த்தேன்.

மரகதம் சிரித்தாள்.

சற்றுக் கழித்து, பச்சையப்பனும் வந்துவிட்டான். கோபாலி மாதிரியே செய்தி கேட்கத் தொடங்கினான் அவன்.

"இப்ப என்னோட வீட்டுக்கு வந்தா சொல்றேன். இல்லாட்டா டீத் தண்ணிகூட சாப்பிடமாட்டேன் இங்கே!"

மூவரும் பார்த்துக்கொண்டார்கள், ஒருவரையொருவர். "வாண்டாம்மா."

"அதெல்லாம் முடியாது. பேசாம வாங்க. ஐயா ஊர்லெ இல்லெ. எனக்குப் பேச ஆளில்லை."

அவர்கள் இருவரையும் கிளப்ப அரைமணி ஆயிற்று!

"நீங்க சொல்லுங்கம்மா. நாங்க என்ன சொல்றதுக்கு இருக்கு?" என்றான் மாடிப்படியேறியதும் பச்சையப்பன்.

# 14

"நான் திரும்பி வரதுக்குள்ள என்ன அவசரம் வேலையைவிட்டுப் போக? குவார்ட்டர்ஸ் கொடுக்க றாங்க, கவர்ன்மெண்ட் வேலை அது இதுன்னு பொய்யெல்லாம் சொல்லிண்டாவது போகணுமா?" -

குரலைக் கடுமையாக மாற்றிக்கொண்டுதான் கேட்டேன்.

"எது பொய்யி, எது நிஜம் . .? சும்மா சும்மா ஏம்மா கிண்டிக்கிட்டேயிருக்கிறீங்க? விடுங்களேன் ஒரு பாடா."

"யார் வேலையைவிட்டு நிக்கறதுன்னு தீர்மானம் பண்ணினது? எனக்கு அது முதல்லெ தெரியணும்."

"நான்தான்" என்றாள் மரகதம்.

"நானும்தான்" என்றான் பச்சையப்பன்.

"பச்சையப்பா, உன்னை நான் இன்னிக்கிக் கொஞ்ச நேரமாவது வேலைக்கு வச்சுக்கலாமா?"

பச்சையப்பன் சிரித்தான். "யார் வாண்டாம்ங்க றாங்க, நீங்கதான் எனக்கு கவர்மெண்டு."

"சரி. முதல்லெ மார்க்கெட்டுக்குப் போயிட்டு வா. நான் மரகதத்தோட கொஞ்ச நேரம் பேசணும்."

அவன் போன பிறகு மரகதம் முணுமுணுத்தாள். "திடீர்னு வேலையைவிட்டு நின்றது அம்மாவுக்குக் கோபம் போல்ருக்கு."

"கோபம்தான்."

"பின்ன என்னம்மா செய்யறது?"

"முழுக்கச் சொல்லு."

"யாரும் இல்லாம இருக்கறப்ப, ஐயாவைப் பார்க்கணும் நான் குறுக்கியும் நெடுக்கியும் போறப்ப! இருபது வயசு புள்ளெ மாதிரி நடுங்குவாங்க - குழறுவாங்க. என்னா பேசறதுன்னு தெரியாம திணறுவாங்க. தண்ணி கொண்டாம்பாங்க. குடிக்கிறப்ப கை குல்லு குல்லு குல்லுன்னு ஆடும் - நடுங்கும். தண்ணி வாய்க்குள்ளார போவுதா, மோவா, மாரு, கழுத்தெல்லாம் இறையுதா - அவங்களுக்கே தெரியாது. இத்தினி வருஷமா எனக்கு அவ்வளவா தெரியலெ, ரண்டு மூணு வருசமா புரிய ஆரம்பிச்சுது . . ."

"ரண்டு மூணு வருஷமா?"

"ஆமா. ரண்டு மூணு வருசம் எங்கிட்ட சொல்லாம எப்படி மறச்சு வச்சுக்கினு இருந்தேன்னு கோபப்படாதிங்க."

"உனக்கே மறச்சுது தப்புன்னுதானே படறது?"

"சரிம்மா. நான் சொல்ல நீங்க ஐயாவைக் குதறுவீங்க. அய்யாவை நெனச்சாலும் கஷ்டம், உங்களை நெனச்சாலும் கஷ்டம் எனக்கு. நீங்க இந்தத் தடவை ஊருக்குப் போனப்பறம் நான் மெதுவா தப்பிச்சுக்கிடப் பார்த்தேன். முடியாது போல ஆயிட்டுது. அய்யா என்னை ஒண்ணும் செய்துட முடியாது. எனக்கு அந்தமாதிரி எல்லாம் பயம் இல்லை. அய்யா கஷ்டப் படறதைப் பார்க்கறப்பதான் எனக்குக் கஷ்டமாயிருக்கு. நான் அவங்க கஷ்டப்படறதை நினைச்சு நினைச்சுப் பார்த்துக் கிட்டேயிருப்பேன் அடிக்கடி. கடைசீலே ஒரு நாளைக்கு ரொம்ப இளகிப் போயிட்டேன்னு வச்சுங்க. அப்பவும் விபரீதமால்ல ஆயிடும்? அய்யா இனிமே என்னைப் பார்க்காம இருக்கறதுதான் சரின்னு தோணிச்சு. அன்னிக்கு ரொம்ப நேரம் யோசிச்சுதான் நாம ஊட்டைக் காலி பண்ணிடலாம்னு சொன்னேன் எங்க ஊட்டுக்காரங்ககிட்ட. வேலையை விட்டு நிக்கச் சொன்னது நான்தான். உங்களை விட்டிட்டுப் போறது எனக்கு எல்லாத்தையும்விட கஷ்டம்மா. ஆனா அய்யா என்னைப் பார்க்கறதும் நல்லதில்லெ. நான் குடித்தனக்காரி. அதனாலெதான் எனக்கு பயம்மாருக்கு. பிச்சைக்காரனுக்கு காசு, சோறு போடற கணக்கா, எதினாச்சும் செய்யணும்னு தோணிச்சின்னு வச்சுங்க, எனக்கு. அப்புறம் இவரு கதி என்ன? என் கதி என்ன? அதான் நின்னாச்சு. நீங்க சும்மா சும்மா இதுக்கு மேல ஒண்ணும் கேக்காதிங்கம்மா. உங்களுக்குப் புண்யம் உண்டு."

நான் ஒன்றும் கேட்கவில்லை. சொல்லத் தெரியாமல், சொல்

கிடைக்காமல் அவள் தவித்த தவிப்பை, கோபாலிக்காக அவள் பட்ட பரிவை, நுணுக்கமான சோகத்தை, பச்சையப்பனுக்காக அவள் கொண்ட உரிமையை, குறுகுறுப்பை, அவள் வேறு எப்படித்தான் சொல்லியிருப்பாள்! அவள் என்னைப் பார்க்காமல் பேசின குனிவுதான் பேசிற்று. நகக் கிள்ளல் பேசிற்று.

நானும் பேசாமல் அவளைக் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருந்தேன். வெட்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நான் இருபது முப்பது நூறு இருநூறு என்று நெருக்கம் கொண்டது, துணிச்சலா, சுயேச்சையா, மரப்பா, தடித்தனமா, பிறர் மனதில் புக மறுக்கிற, புக முடியாத கல்லாங்காய்ப் பட்டுப் போன கரளையா - புரியவில்லை. எனக்கு இத்தனை நுணுக்க புத்தியுண்டா, உண்டா இத்தனை நுட்பம், இத்தனை பரிவு சாத்தியமா? பச்சையப்பனிடம் எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கிற எல்லையற்ற கற்பனையும் பாவனையும் சாதாரணப் பெண்ணின் கட்டுப்பாடு மாதிரி தோன்றுகிறது. ஆனால் நினைத்து நினைத்து, அந்த உணர்வில் புகுந்து பார்க்க முயன்றபோது, புகுந்து பார்க்க சற்று முடிந்தபோது, முதுகுத் தண்டு ஒரு கணம் சுண்டிச் சிலிர்த்தது.

காய்கறி வந்தது. சேர்ந்து சமைத்தோம். சாப்பிட்டோம். இருவரும் சேர்ந்து பாத்திரங்களைத் தேய்த்தோம்.

தூங்கினேன்.

கண்ணைத் திறந்து பார்த்தபோது மரகதம் கூடத்தில் ஒரு ஓரத்தில் படுத்து அயர்ந்திருந்தாள். பச்சையப்பன் வெளியே கிராதிக்குக் கீழ் உறங்கிக்கொண்டிருந்தான். மரகதம் ஒரு கையைத் தலைக்கு பாரம் வைத்து ஒருக்களித்திருந்தாள். கோபாலி நல்ல பித்து! இருக்கிற சொத்தையெல்லாம் இவளுக்கு நிச்சயம் எழுதி வைக்கும். ஸ்வாமி ஸ்வாமி என்று சம்பாதித்தவற்றில் முக்கால்வாசிக்கு மேல் தியாகையருக்கும் எனக்கும் செலவழித் திருக்கிறது அது. இருக்கிற மிச்சத்தை, குஞ்சாளியை மறந்து, பிள்ளையை மறந்து, பெண்ணை மறந்து, இவளுக்கே கொடுக்கத் தவறாது. அப்படியிருந்தாள் மரகதம்.

அவளைப் பார்த்தேன்.

பச்சையப்பனைப் பார்த்தேன்.

ப்ரூஸைப் பார்த்தேன். ஸ்ட்ராட்ஃபோர்டிலிருந்து திரும்பிவந்த அன்று

ப்ரூஸ் கேட்டான்: "இப்படியே போய்க்கொண்டிருந்தால், வயதான பிறகு என்ன ஆகும்?"

"வயதான பிறகு என்றால்? நீ என்ன சொல்கிறாய்?"

"இளமை போன பிறகு; உடம்பு இரண்டாம் பொருளாக, மூன்றாம் பொருளாக, கண்ணாடியில் பார்க்க விரும்பாத பொருளாக, ஆகும் வயதில், என்ன ஆகும்? உன்னை யார் கவனித்துக்கொள்வார்கள்?" என்று நீலக் கண்ணால் கரைந்தான் ப்ரூஸ்.

கேள்வியைப் பார்த்து வியப்பாக இருந்தது. உடம்பு இரண்டாம் பொருளாக, மூன்றாம் பொருளாக, கண்ணாடியில் பார்க்க விரும்பாத பொருளாக, எப்படிக் கற்பனை செய்து பார்க்க முடிந்தது இந்தச் சின்ன பையனால்?

அவனைச் சிறிது உற்றுப் பார்த்தேன்.

கிட்டத்தட்ட எண்பது வயதில் என்னை அவன் பார்ப்பது போலிருந்தது. இளமையின் தோழமை, வாடிக்கை எல்லாம் பார்க்க விரும்பாமல் விலகிப்போன தனிமையிலும் தாளாமையிலும் என்னை அவன் பார்த்துக்கொண்டிருந்திருக்க வேண்டும். கண்ணில் அவ்வளவு தொலைவு! அவ்வளவு வேதனை! அவன் கண்ணை நானும் சற்று அணிந்து பார்த்துக்கொண்டேன். எல்லாம் ஒரு தெரு மாதிரி இருந்தது. ஓரத்தில் ஒரு பசு அசையாமல் கிடக்கிறது. யார் யாரோ தெருவில் போகிறவர்கள் வந்து நின்று நின்று பார்த்துப் போகிறார்கள். த்தா, த்தா என்று குரல் கொடுத்து எழுப்புகிறார்கள். உசிரு இல்லையே என்கிறார்கள். நடந்து போகிறார்கள். "எத்தனை பால் கொடுத்தா என்ன? மரக்கா மரக்காவா பாலு பொழிஞ்சிருக்கும். எவனாவது தூக்கறானா பாருங்க? யாருது, என்ன, இப்படி கெடக்குதேன்னு கேக்கிறானா பாருங்க. உடையவன் எங்கடா கார்த்தாலெ போன பிராணியைக் காணும்னு தேடிக்கிட்டு வந்து, இனங்கண்டு தூக்கினாத்தான் உண்டு" என்று கும்பலில் ஒருவன் சொல்லிக் கொண்டே நகர்கிறான். அவனும் உடையவனைக் கண்டுபிடிக்க முயன்றதாகத் தெரியவில்லை. அவன் சொன்ன சொல்லும் குறையும் ஏதோ இயந்திரத்திலிருந்து வரும் சத்தம் மாதிரி ஒலிக்கின்றன. செத்துப்போன பசு அப்போது நினைக்கிறது - நான் ஏன் மரப்பசுவாக இல்லை. பாலும் கொடுத்திருக்க வேண்டாம் - இப்படி நடுத்தெருவில் செத்திருக்கவும் வேண்டாம். ஈயும் மொய்த்திருக்க வேண்டாம். தூக்குவதற்காக முகந்தெரியாத சம்பள ஆட்களுக்குக் காத்திருக்க

வேண்டாம்.

சிரித்தேன். மெதுவாகச் சிரித்தேன்.

"நான் கேட்கிறது பரிகாசமாகத் தோன்றுகிறதா?" என்றான் ப்ரூஸ்.

"உன்னால் எப்படிப் பரிகாசம் பண்ண முடியும்? நீ உன் வயசு மாதிரி அவ்வளவு சின்னப் பையன் இல்லை. எங்கோ ஒரு மூலையில் கம்யூனிசத்தைப் பிடுங்கி எறியப் போகிறேன் என்று உங்கள் தலைவர்கள் பதினாயிரக் கணக்கில் உங்களை அனுப்பியிருக்கிறார்கள். லட்சம் பேர்களைக் கொன்ற பிறகு, உங்களுக்கு, எங்கேயோ வருகிற கம்யூனிசத்தைத் தடுக்க இவர்கள் யார் என்று உங்கள் நாட்டுக் கிழவர்களைப் பார்த்துக் கேட்கத் தோன்றியிருக்கிறது. நீ எப்படிப் பரிகாசம் பண்ண முடியும்?"

"நீ சொல்வது நூற்றுக்கு நூறு சரி. இந்தக் கிழவர்கள் யார் கம்யூனிசத்தைத் தடுக்க? அதுகூட சரியான கேள்வி இல்லை. எந்த 'இசம்' வந்தாலும் இவர்களுக்குக் கவலையில்லை. இவர்கள் பண்ணுகிற துப்பாக்கி, பீரங்கி, குண்டு, விமானம், டாங்கி எல்லாம் எங்கே விற்காமல் அழுகிப்போய்விடப் போகிறதோ என்று ஒரே கவலைதான் அவர்களுக்கு. முட்டைகோசு அழுகுவதைவிட, விமானம் அழுகிப்போவது அவர்களுக்குப் பொறுக்காது. எனக்கு ஒரே ஒரு வைத்தியம்தான் இதற்கெல்லாம் தோன்றுகிறது. நாற்பது வயதுக்கு மேல்பட்டவர்கள்தான் பட்டாளத்தில் சேரலாம் என்று சட்டம் கொண்டுவந்தால், ஒரு இடத்திலும் துப்பாக்கியே முளைக்காது. வெடி மருந்தே முளைக்காது. அரிசியும் தக்காளியும்தான் முளைக்கும்."

"இப்படி பதினெட்டு வயது, இருபது வயதெல்லாம் கண்காணாத இடத்தில் போய் நாதியில்லாமல் செத்துக் கிடக்காது. நானும் மரப்பசுவாக ஏன் இருந்திருக்கக் கூடாது என்று வருத்தப்பட்டிருக்க மாட்டேன்."

"என்னது! மரப்பசுவா?"

"ஆமாம். மரப்பசு பால் கொடுக்காது. யாரும் பாலையும் குடித்துவிட்டு, கொல்லவும் மாட்டார்கள். நடுத்தெருவில் விழுந்து சாக வேண்டியதில்லை. அழுக வேண்டியதில்லை. மேஜையில் வைத்து அழகு பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். மூப்பு வராது. முடி நரைக்காது. யார் கவனிப்பார்கள் என்ற பயமும் இராது."

ப்ருஸ் சிரித்தான். மறுகணம் நாக்கைக் கடித்துக்கொண்டது போலிருந்தது. சட்டென்று மறைந்த சிரிப்பு. "உங்களுக்கு மன வேதனையாக ஏதாவது சொல்லிவிட்டேனா?" என்று கேட்டான்.

"ஒரு வேதனையும் இல்லை. வயசான பிறகு உன்னை யார் சீந்துவார்கள் என்று கேட்டாய் - நாசூக்காக. அதைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தேன்" என்று கண்ணில் சற்று முன் தோன்றிய தெருப்பசுக் கோலத்தை அப்படியே சொன்னேன்.

மீண்டும் சிரித்தான் ப்ரூஸ்.

"ஓ! பசுவுக்கு உடைமைக்காரன் வேண்டும் என்று நீயும் நினைக்கத் தொடங்கிவிட்டாயா? இல்லாவிட்டால் கௌரவ மாகப் புதைக்கமாட்டார்கள்."

"கௌரவம் என்ன? அகௌரவம் என்ன? புதைக்கிறதை ரெண்டு வகையாகச் செய்யலாம். கண்ணீர் விட்டுக்கொண்டே புதைக்கலாம். கூலி ஆட்களிடம் கொடுத்து புதைக்கச் சொல்லி விட்டு அழுகல் நாறி ஊரைத் தொந்தரவு செய்யாமல் அப்புறப் படுத்தியாகிவிட்டது என்று ஈரமில்லாமல் ஊருக்கு நன்மை செய்துவிட்ட கல்லாங்காய்ப்போடு ஹாயாக இருக்கலாம்."

ப்ரூஸ் அந்தப் பேச்சை மேலே தொடரவில்லை. நான் வேதனைப்படவில்லை என்று சொன்னது வெறும் ஒப்புக்கு என்று அவன் நினைத்திருக்க வேண்டும்.

"என்னைப் பற்றிக் கவலைப்படாதே. நான் உயிருள்ள பசுவாக இருந்தாலும், நான் மரப்பசுதான். மூப்பு வந்தாலும் முடி நரைத்தாலும், என்னை வைத்துக்கொண்டு அழகு பார்க்க எத்தனையோ பேர் இருப்பார்கள். இருநூறு முன்னூறு பேரில் இரண்டு மூன்று பேராவது தேறுவார்கள். நான் உடம்பைக் கொடுத்ததெல்லாம், உலகத்தில் பிறந்த அத்தனை பேருக்குமாக என்று நம்புகிற இரண்டு மூன்றுபேர் இருப்பார்கள். அத்தனை பேருக்கும் கொடுக்கிற எண்ணம் இருந்திருக்கிறது. ஆனால் நடைமுறையில் முடியாமல் முந்நூறோடு நின்றுவிட்டது. இது, முந்நூறு கோடி மூவாயிரம் கோடிக்கு சமம் என்று நினைக்கிற ஓரிரண்டு பேர் இருப்பார்கள்" என்று ப்ரூஸிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது. சொல்லவில்லை.

மரகதம் எழுந்துகொண்டாள். பச்சையப்பனும் எழுந்துவிட்டான்.

காபி சாப்பிட்ட பிறகு இருவரையும் நானே வடபழனியில் டாக்சியில் கொண்டுவிட்டேன்.

பேசிக்கொண்டிருந்துவிட்டு, வீட்டுக்கு வெளியே வந்தபோது, சூரியன் மறைந்து அந்தியும் மறைகிற நேரமாயிருந்தது. சூரியன் மறைந்த இடத்திற்கு மேல் ஒரே சிந்தூரக் கடலாக ஒரு செம்மை.

சற்று மேலே பிறைச்சந்திரன் மூன்றாம் பிறையோ நாலாம் பிறையோ - அதற்கும் மேலே நீலவெள்ளையாக ஒரு நட்சத்திரம் கூடத் தெரிந்தது. ஊர்ச்சத்தம் கார்ச்சத்தம் இல்லாத இடம். ஒரே மௌனமாக இருந்தது. அடிவானத்தை விட்டுக் கண்ணை எடுக்க முடியவில்லை. அத்தனை மௌனம். அத்தனை . . . அத்தனை . . . அத்தனை . . . என்னவென்று சொல்வது. பேசாமல் பார்த்து ஒன்றுவதைத் தவிர ஒன்றும் செய்ய முடியவில்லை. நடுநடுவே இந்த மயக்கின், இந்தக் காட்சிக்கொள்ளையின் அர்த்தம் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. ஒரு அர்த்தமும் இல்லை. சும்மா பார்த்துக்கொண்டு நிற்பதுதான் அர்த்தம்.

"முந்தாநத்தா - அதுக்கு முந்நாளா அம்மாசி?" என்று வானத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டான் பச்சையப்பன்.

"த்ஸ" என்று மூச்சுக்கொட்டி அவனை அடக்கினாள் மரகதம்.

கொஞ்சம் கொஞ்சமாக செக்கரும் மறைந்து கறுத்துவிட்டது.

"நீங்க சொல்லுங்கம்மா" என்றாள் மரகதம்.

"என்ன?"

"மறுபடியும் வேலைக்கு வான்னு நீங்க சொன்னா நாங்க என்னத்தைச் சொல்லக் கிடக்கு."

"வேலையோ என்னமோ - நான் உங்களோடதான் இருக்கப்போறேன். பச்சையப்பா, சாலிக்கிராமம், இல்லாட்டா அந்தாண்டை ஒரு சின்ன வீடாப் பாரு."

"யாருக்கு?"

"நம்ம எல்லாருக்கும்தான்."

"எதுக்கு?"

"குடியிருக்க. இனிமே நான் அய்யாவோடு இருக்கப் போறதில்லெ."

". . ."

"ஆமா."

"நாங்க என்னமோ சொன்னோங்கறதுக்காகவா?"

"சும்மா லொடலொடன்னு பேசாதேயேன். பேசாம சொல்றதைக் கேளு."

வீட்டுக்குத் திரும்பினபோது ஒரு கடுதாசி மாடிப்படி அடியில் கிடந்தது - நீலமாக.

மேலே போய் அவசர அவசரமாகப் பிரித்தேன். ப்ரூஸ் எழுதியிருந்தான். பழைய இருநூறு முந்நூறு பேர்களைப் போல அதே புலம்பல். அதே முகமன். நான் ஆச்சரியமான மனுஷியாம். காணக்கிடைக்காத பிறவியாம். நான் அங்கு வர அனுமதித்துவிடு. உடனே புறப்பட்டு வந்துவிடுகிறேன். இரக்கமில்லாமல் நீ வேண்டாம் என்று சொன்னால், அதையும் இரக்கமின்மை என்ற அர்த்தம் கொள்ளப் போவதில்லை நான். நீ எப்போதும் என்னோடு இருக்க முடியும். நான் எங்கு போனாலும் இருக்க முடியும். நான் திரும்பி ஊர் சேர்ந்து, நீ சொன்னாற்போல ஒருக்கால் கலியாணம் செய்து குடும்பஸ்தனாக இருந்தால்கூட, நீ என்னோடு இருப்பாய். அதனால் நீ அனுமதிக்க வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் நான் உன்னோடு அடைந்த அனுபவங்களை உணர்வுகளை மீண்டும் பெறப் போவதில்லை. அதனால்தான், கொஞ்சம் மறுபடியும் உன் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று ஒரு சபலம். அது கிடைக்கா விட்டாலும் நான் வருத்தப்பட மாட்டேன். உன்னோடு இருந்த நினைவே போதும் . . ."

மாற்றி மாற்றி சொன்னதையே சொல்லியிருந்தான் ப்ரூஸ்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், நானும் எழுதினேன். ப்ரூஸுக்கு இல்லை. ப்ரூஸ் அங்கேயே இருக்கட்டும்.

"பட்டாபி!"

நான் ஊருக்குத் திரும்பிவிட்டேன். போன கடிதத்தில் எழுதினேன், இன்னும் ஆறு மாதம் எட்டு மாதம் கழித்து ஊர் திரும்ப உத்தேசம் என்று. ஆனால் இந்த மரகதத்தையும் பச்சையப்பனையும் நினைத்து ஊர் திரும்பிவிட்டேன். உன் மாதிரியே ப்ரூஸ் என்று ஒரு பயலைப் பார்த்தேன். ஒரு அரைமாத காலம் அவன் ரொம்ப நெருங்கிப் பழகிவிட்டான். அதற்குப் பிறகு ஒன்றும் பொருட்டாகத் தோன்றவில்லை . . .

இங்கு வந்ததும் தலையெல்லாம் ஷாம்ப்பூ போட்டுவிட்டு, கண்ணாடியில் பார்த்துக்கொண்டேன். பொல்லென்னு எண்பது வயது மயிர் தலையில் கிடக்கிறது. இதை நீ ஒருவன்தான் பார்த்து சகித்துக்கொண்டிருப்பாய்.

பட்டாபி, கல்கத்தா உனக்குப் பெரிய சொர்க்கமாகத் தோன்றலாம். சோற்றுக்குத் தாளமடித்த நானும் பிரதம டிசைனர் என்ற பெயரில் மாசம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கத் தொடங்கிவிட்டேன் என்றால் நீகூட நம்ப மாட்டாய் என்று எழுதியிருந்தாய். எதற்காக அப்படி எழுதினாய்? உன்னைப் பற்றி எழுதும்போது ரூபாயைப் பற்றி ஏன் பேசினாய்! பட்டாபி, உன்னளவில் நான் எதையும் நம்பத் தயார். இந்த வேலையை விட்டுவிட்டு, இங்கு வந்து என்னோடு வந்து இரு என்று சொன்னால், நீ வரத்தான் போகிறாய். எனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது.

பட்டாபி, நான் இப்போது ஸூப்பர் கம்யூனிஸ்ட் ஆக, அதீத கம்யூனிஸ்ட் ஆகிவிட்டேன். அதாவது உடைமையில் நம்பிக்கை வந்துவிட்டது. ஆனால் கல்யாணச் சடங்கில்தான் நம்பிக்கை வரவில்லை. நான் உன் உடைமை - நீ என் உடைமை என்று ஒரு பிடிவாதமும் நிச்சயமும் மட்டும் என்னை ஆட்டிவைக்கின்றன.

என்னுடைய மூப்பை, நரைத் தலையை உன்னால்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்.

இனிமேல் நான் கோபாலி மாமாவின் அபிமானம் என்று பெயரளவில்கூட இருக்கப்போவதில்லை என்று நிச்சயம் முளைத்து பூதாகாரமாக நிற்கிறது. கோபாலி மாமா கொடுத்த நகைகள், புடவைகள், மேஜைகள் எல்லாம் அவரிடம்தானிருக்கும். தன்னைச் சேர்ந்தவள் என்று ஒரு பழைய நினைவை வேண்டுமானால் அவர் வைத்துக்கொள்ளட்டும்.

பச்சையப்பனை சாலிக் கிராமத்திற்கு மேற்கே ஒரு சின்ன வீடாகப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன். மூன்றுபேர் தாராளமாகப் பழகிக்கொள்ள

வசதியான வீடாகப் பார் என்று சொன்னேன். சிறிது முன்புதான் நான்கு பேருக்கு என்று தீர்மானம் வந்தது. எத்தனையோ பேர் என் வாழ்வில் வந்துபோய் விட்டார்கள். அப்போதெல்லாம் பட்டாபி இந்த சமயம் என்ன செய்துகொண்டிருப்பான் என்று நினைத்துக்கொண்டே யிருந்திருக்கிறேன். இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அந்தந்த சமயத்தில் அந்தந்த மனிதர்கள் என்று அப்படி அப்படியே போட்டுவிட்டு வரும் ஜீவன் என்று என்னைப் பற்றி பீற்றிக்கொள்வது ஒரு வழக்கமாகிவிட்டது எனக்கு. என்னை அணைத்துக்கொண்டு கிடந்தவர்களை என் பக்கத்தில் கிடக்கும் கணவர்கள் என்றும் நீடித்துக்கொண்டே யிருக்கப்போவதாகக் கரைந்து தங்கள் இருப்பை, தங்கள் சத்தை அழித்துக் கிடந்தவர்களையெல்லாம், அப்படிச் சொல்லி பயமுறுத்தி வந்திருக்கிறேன். நான் சொன்னது வீண் ஜம்பம் என்று சில நாட்கள் வரை உறுத்திக்கொண்டேயிருக்கும். பிறகு நான் சொன்னது பொய்யில்லை என்று அவர்களுக்குத் தெரியும். எனக்கும் நிச்சயம் வந்துவிடும். ஆனால் உன்னிடம் மட்டும்தான் நான் இந்த பீற்றலைப் பீற்றிக்கொள்ளவில்லை. மறந்துகூட அப்படிச் சொன்னதில்லை.

நீ பார்ப்பதற்கு அழகாக இல்லை. வளவளவென்று அறிவுப் பேச்சு பேச நீ சரியான தோழனில்லை. ஆனால் ஏழைகளைக் கடைத்தேற்ற உனக்கு விஸ்கி வேண்டியதில்லை; சொந்த வீடும் காரும் நிலங்களும் தேவையில்லை. பணக்கார வீட்டுப் பிறவி தேவையில்லை. தியாகய்யரையும் ராமனையும் பாடிக் கொண்டு நீ ஊர்ப் பெண்டுகளை மேயமாட்டாய். மூன்று நாள் தன்னந்தனியாக இருந்ததில் எனக்கு ஏதோ ஒரு கவலை பிடித்தக்கொண்டிருக்கிறது. மரகதத்தின் மீது கோபாலி, சிறு பாம்பு தூங்குகிறவர்களின் மீது ஊர்வதுபோல ஊரக் காத்திருந்தது.

நான் வந்தது இன்னும் யாருக்கும் தெரியாது. இரண்டு மூன்று நாளில் தெரிந்துவிடும். பழைய கதை தொடங்கிவிடுமோ என்று பயமாயிருக்கிறது. விஸ்கி ஏப்பத்தோடு தியாகய்யர் கீர்த்தனம் கேட்க வேண்டாம். ரம் வாடையில் மார்க்ஸீயம் கேட்க வேண்டாம். கதர் மீட்டிங்குக்கு விமானத்தில் டில்லி போய் வந்து என் மார்பைப் பார்த்துக்கொண்டே செய்தி சொல்கிற வாயைப் பார்க்கவேண்டாம். பேசாமல் உட்கார்ந்திருக்கிற உன்னைப் பார்த்துக்கொண்டிருந்தால் போதும். உன் முட்டைக் கண் போதும். உன் மௌனம் போதும். கால் வலிக்கிறது என்று சொன்னால், மாடிப்படியேற விடாமல் என்னைத் தூக்கிக்கொண்டு வருகிற உன் கை போதும். வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பினால் உட்கார்ந்து பேச மரகதம் போதும், பச்சையப்பன் போதும் . . . ஆனால் எனக்கு என்ன வேலை தெரியும்? ஒரு வேலைதான்

தெரியும்! நீ வந்தால் பிழைக்கக் கற்றுக்கொடுப்பாய். நீ வருகிற வரையில் என்ன செய்யப் போகிறேன்? ஒரு கடலைத் தாண்டியாக வேண்டும். புடவை நகை பீரோ பெட்டிகளைப் பூட்டி, வீட்டைப் பூட்டி கோபாலியிடம் சாவியைக் கொடுக்கும்போது அது என்ன பாடுபடுத்தப்போகிறதோ! அது என்னிடம் உயிரை வைத்திருக்கிறது. ஆனால் கணவனின் சடலம் நாலு பேர் தோளில் ஏறிப்போகும்போது மடேர் என்று வாசலில் விழுந்து அடித்துக்கொண்டு வீறிடும் மனைவி ரகம் . . . ஆ, இப்போது தோன்றுகிறது. புடவை, நகை, மேஜை பீரோக்களை எல்லாம் பட்டியல் போட்டு சாவிக்கொத்தைத் தபாலில் அனுப்பிவிட்டு, அரைப் புடவையோடு கிளம்பிவிடலாம். பச்சையப்பனின் விலாசம் பின்னால் கொடுத்திருக்கிறேன் . . ."

கடிதத்தைத் தபாலில் சேர்க்கக் காலை வரையில் காத்திருக்க முடியவில்லை. அவசர அவசரமாக வெளியே வந்து, ஒரு டாக்சியைப் பிடித்து மௌண்ட் ரோட் தபாலாபீசுக்குப் போய் பெட்டியில் சேர்க்கிறவரையில் இருப்பாக இருக்கவில்லை.

திரும்பி வந்து பகல் சமையல் மிச்சத்தைச் சாப்பிட்டுவிட்டு, ஒவ்வொரு பீரோவாகத் திறந்து, பட்டுப்புடவைகளை மடித்து அடுக்கி, நகைகளை எடுத்து பத்திரப்படுத்தி, வெள்ளி டம்ளர்களைத் தனியாக அடுக்கிக் கணக்குப் பார்த்து பட்டியல் போடும்போது . . .

எல்லாம் உதட்டைப் பிதுக்கிப் பிணங்குகின்றன.

நானில்லாமல் எப்படி மார்க்சீயம் பேசுவாயாம்!

நானில்லாமல் எப்படி ஏழைகளை நினைத்து அழப் போகிறாயாம்!

நானில்லாமல் எப்படி புரட்சி பண்ணப் போகிறாயாம்!

நானில்லாமல் எப்படி மனுஷியாகப் போகிறாயாம்!

நானில்லாமல் எப்படி பணக்காரர்களைத் திட்டப் போகிறாயாம்!

என்ன சொல்ல?

பட்டாபியைக் கேட்டுச் சொல்கிறேன்.

"உனக்கு எதைப் பார்த்தாலும் சிரிப்பாக இருக்கிறது."